நீ தந்தன் வானம்...!

பிரேமலதா பாலசுப்ரமணியம்

நீ எந்தன் வானம்



மாங்கல்யம் தந்துனானேனா

மம ஜீவன ஹேது நா

கண்டே பத்நாமி ஸுபகே

த்வம்ஜீவ சரதஸ் சதம்

''இதுக்கு அர்த்தம், மங்கல வடிவாகத் திகழும் பெண்ணே! இன்று நாம் துவங்கும் இல்லற வாழ்வு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று உறுதி அளித்து, இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக் கிறேன். என் இல்லத் துணைவியாக, என் சுக துக்கங் களில் பங்கேற்று, நிறைந்த யோகத்துடன் நீ நூறாண்டு காலம் வாழ்வாயாக!''

"நியாயப் படி மணமகன்தான், மணமகளைப் பார்த்து இதைச் சொல்லி, தாலி கட்டணும். சொல்லுங்கோ..." என்றபடியே, ஐயர் மாங்கல்யத்தை எடுத்து தர, அந்த நேரத்தில் அவர் பேச்சை மீற மனமில்லாமல், அவர் சொன்ன மந்திரத்தைச் சொல்லி, மணப்பெண்ணுக்கு உரியவையாக கருதப்படும் எந்த வெட்கமும், பட படப்பும் கொஞ்சம் கூட இல்லாமல், முள் மேல் அமர்ந் திருப்பவள் போல், ஒரு வித அவஸ்தையுடன் அமர்ந் திருந்த பானுப்ரியாவின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தான் ஆகாஷ்.

தாலி கட்டி முடித்ததும், மீதம் இருந்த சம்பிரதாயங்கள் முடிந்து, சிறிது நேரத்தில், வரவேற்பும் ஆரம்பமாகி விட, பானுப்ரியாவுக்கு எப்போது எல்லாம் முடியும், கட்டி இருக்கும் பட்டுப் புடவையை மாற்றி, சௌகரிய மான உடை அணிவோம் என்று இருந்தது.

வந்திருந்த நண்பர்களும், உறவினர்களும் வாழ்த்து சொல்லி பரிசு அளிக்க, இன்முகத்தோடு பெற்றுக் கொண்டாலும், மணமக்கள் இருவர் மனதிலும் புது மணமக்களுக்கே உரித்தான எந்த மகிழ்ச்சியும், ஆர்வ மும், இனிய படபடப்பும் இல்லை!

இதே நாளில், முந்தைய முகூர்த்தத்தில், கணவன் மனைவி யான ஆனந்த் - பானுரேகா தம்பதியினர். இவர்கள் இருவருக்கும் நேர் எதிரான மனநிலையில் இருந்தனர்.

அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் பிரதிபலிக்க ஒருவரை ஒருவர் பார்வையால் வருடியபடி, கைகளை இணைத்து கொண்டு அமர்ந்திருந்தவர்களைப் பார்க்க, ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், "எல்லாம் இதுகளால் வந்தது!" என்ற எரிச்சலும் கூடவே வந்தது, பானுப்ரியாவுக்கு மட்டுமல்ல! ஆகாஷுக்கும்தான்!

பானுரேகா, பானுப்ரியாவின் தமக்கை! தமக்கை என்றால், வயதில் மூத்தவள் என்றில்லை! நிமிட அளவில் மூத்தவள்! அவளுடைய இரட்டை!

ஆனந்த், ஆகாஷின் அண்ணன்.

"தென்னை மரத்தில் தேள் கொட்டினதுக்கு, பனை மரத்தில் நெறி கட்டுச்சாம்!"

எரிச்சலை மறைத்துக் கொண்டு பானுப்ரியா முணு முணுக்க, ஆகாஷ் ஆச்சரியமாக, கொஞ்ச நேரம் முன்பு தன் மனைவியானவளைத் திரும்பி பார்த்தான்.

"என்ன ஆச்சு? கோபமா இருக்கியா?"

ஆகாஷ் கேட்டதும், ப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. யாராவது பார்ப்பார்கள் என்று முகத்தில் எரிச்சலைக் கூட வெளியே காட்டவில்லையே அவள்! இவன் எப்படி அவள் கோபமாக இருக்கிறாள் என்று கண்டு பிடித்தான்?

அவளது ஆச்சரியமான பார்வைக்கு பதிலாக, "இல்ல... பழமொழி சொல்றாயே... அதான் கேட்டேன்!" என்றான் அவன் புன்னகையுடன்!

"யூ மீன்... கோபமா இருக்கும்போது நான் பழமொழி சொல்வேனா? அப்படி இல்லையே! அடிக்கடி சொல் வேனே!"

ப்ரியா சொன்னதும், புன்னகை விரிய, "யெஸ்! அதைத்தான் நானும் சொன்னேன்!" என்றவனது கண்கள் சிரிப்பில் பளபளத்தது.

"ஓ! எனக்கு அடிக்கடி கோபம் வரும் என்று சொல்றா யாக்கும்!" என்று கோபத்துடன் சொன்னவள், "ப்ச்... நீ சொல்றது சரிதான்! இப்போ எல்லாம் எனக்கு அடிக்கடி கோபம் வருது!" என்று தனக்குத்தானே சலித்துக் கொண்டாள்.

தான் அப்படி சொன்னதற்கு, காய்ச்சி எடுக்க போகிறாள் என்று அவன் நினைத்திருக்க, அவளது சலிப்பு அவனுக்கு ஆச்சரியம் அளித்தது.

அதே ஆச்சரியத்துடன் அவன் அவளை நோக்க, ''ஆனா... முன்னாடி இப்படி இல்ல தெரியுமா? எதுக்கும் அவ்வளவு ஈசியா கவலைப் பட மாட்டேன்! இந்த கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சதில் இருந்துதான் எரிச்சல், கோபம் என்று எப்ப பாரு டென்ஷன் ஆகறேன்! அதை வெளியில் வேற காட்ட முடியலையா? அது இன்னும் கொடுமையா இருக்கு!'' என்று ஆதங்கப் பட்டவளின் முகத்தில் மீண்டும் எரிச்சல் படர்ந்தது.

''ப்ரியா... முகத்தை சரியா வைச்சுக்கோ... யாரோ வராங்க பாரு!'' என்று ஆகாஷ் சொல்ல, பானுப்ரியாவுக்கு எரிச்சல் அதிகமாகியது.

'இதுதான்! யாரும் இப்படி எல்லாம் அதிகாரம் செய்யக் கூடாது என்றுதானே திருமணமே வேண்டாம் என்று நினைத்தேன்!' என்று நினைக்கும்போதே, ஆகாஷ் அதிகாரமாக சொல்லவில்லை என்று அவளது நியாய மனம் அறிவுறுத்த, தானாக அவள் முகம் சரியானது.

பக்கத்தில் வந்த அவளது தூரத்து சொந்த அத்தை, ''ஹப்பா... இப்பவாவது கல்யாணமே வேண்டாம் என்று பினாத்தி கொண்டிருந்ததை விட்டுட்டு கல்யாணம் செஞ்சுகிட்டேயே! சந்தோஷம்டி! சீக்கிரமே குழந்தை பெத்து சந்தோஷமா இரு!'' என்று வாழ்த்தியபடி, பரிசுப் பொருளைக் கொடுக்க, உள்ளுக்குள் எரிச்சல் பட்டாலும், வெளியே சிரிப்புடன் பரிசை வாங்கிக் கொண்டவள்

முகம், அவர் நகர்ந்ததும், எரிச்சலைப் பூசிக் கொள்ள, லேசாக புன்னகைத்த ஆகாஷ்,

''லீவ் இட், ப்ரியா... இன்னைக்கு ஒரு நாள் இப்படித் தான் இருக்கும்! அதுக்காக எரிச்சல் பட ஆரம்பிச்சால், நாள் முழுக்க அப்படித்தான் இருக்க வேண்டி இருக்கும்! டேக் இட் ஈசி!'' என,

''யூ ஆர் ரைட்!'' என்ற பானுப்ரியா, ''இந்த கூத்தெல்லாம் எப்போ முடியும் ஆகாஷ்? எனக்கு ட்ரஸ் சேஞ் செய்யணும் போல இருக்கு!'' என்றாள்.

அவள் ஆகாஷிடம் பேசுவதைக் கேட்டுக் கொண்டே, அருகில் வந்த பானுப்ரியாவின் அன்னை வசந்தி, ''பானு! இப்படி எல்லாம் பேசக் கூடாது! இப்போதைக்கு பட்டுப் புடவையை எல்லாம் மாற்றக் கூடாது! சம்மந்தி வீட்டுக்கு போகணும். அப்புறம் நம்ம வீட்டுக்கு வரணும்! அப்புறம் வேணும்னா, சிம்பிளா வேற பட்டுப் புடவை கட்டிக்கலாம்!'' என்று மெல்லியக் குரலில் சொல்ல, பானுப்ரியாவுக்கோ, ''கடவுளே! மறுபடியும பட்டுப் புடவையா!'' என்று எரிச்சல் அதிகமானது.

''அம்மா... இதெல்லாம் அநியாயம்...'' என்று ஆரம்பித்த மகளிடம், ''ப்ச்... நல்ல நாள் அதுவுமா இப்படி எல்லாம் பேசக் கூடாது! நம்ம ரேகாவைப் பாரு, எவ்வளவு சந்தோஷமா சிரிச்ச முகத்தோடு உட்கார்ந்திருக்கா... இப்படி இஞ்சி தின்ன குரங்கு மாதிரி முகத்தை உர்ருன்னு வைச்சுக்காமல், கொஞ்சம் சிரிச்ச மாதிரி இரு!'' என்று மேலும் மெல்லிய குரலில் அவளை அதட்டி விட்டு வேகமாக அங்கிருந்து நகர்ந்தார் வசந்தி.

இதற்கு மேல் நின்றால், பெண்ணின் சுயரூபத்தை பார்க்க வேண்டி இருக்குமே என்ற பயம் அவருக்கு!

பானுப்ரியாவிடம் இவ்வளவு பேசியதே அதிகப் படி! இதுவே வீட்டில் என்றால், ஒரு வார்த்தைக்கு பத்து வார்த்தை சொல்லி, பெண் தன் வாயை அடைத்திருப் பாள் என்பதை அவர் அறியாதவரா என்ன?

''ச்சே!'' என்று திரும்பிய பானுப்ரியாவின் கண்களில் ஆகாஷின் புன்னகை பட, ''என்ன? என்ன சிரிப்பு?'' என்று அதட்டினாள்.

''உங்க அம்மா சொல்லிட்டு போனதை நினைச்சேன்! சிரிச்சேன்!''

அவனும் தயங்காமல் விடை சொல்ல, தன்னை இஞ்சி தின்ன குரங்கு என்று அன்னை சொல்லிச் சென்றதைச் சொல்கிறான் என்பதை உணர்ந்தவள், ''கொழுப்பா?'' என்று அவனை முறைக்க,

''உனக்கு மட்டும் கொழுப்புக்கு குறைச்சலா என்ன? என் போட்டோவை பார்த்துட்டு என்ன சொன்னே? ஆடு திருடினவன் மாதிரி முழிச்சிட்டு நிக்கிறேன்னு சொன்னே இல்ல?'' என்று ஆகாஷ் பழையதைக் கிளற,

''சரி... விடு ஆகாஷ். எல்லாரும் நம்மையே பார்க் கிறாங்க!'' என்று பானுப்ரியா அந்தப் பேச்சை முடிக்க முயல, ஆகாஷின் புன்னகை விரிந்தது. ப்ரியாவுக்கும் தான் அவனை அந்த மாதிரி சொன்ன அந்த தருணத்தை பற்றிய நினைவில், அவளையும் அறியாமல் முறுவல் மலர்ந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொள்ள, அவர்களது மனம் பின்னோக்கி நகர்ந்தது.

கொஞ்ச தூரம் போன பிறகு, இருவரையும் திரும்பி பார்த்த வசந்திக்கு, அவர்கள் முகத்தில் இருந்த முறுவல் நிம்மதியைத் தந்தது.

மன நிறைவுடன் மகளையும் மருமகனையும் பார்த்துக் கொண்டு நின்ற வசந்தியின் அருகில் வந்த முத்துக் குமரன், ''என்ன வசு, வைச்ச கண் வாங்காமல் உன் சின்ன பெண்ணையும், மாப்பிள்ளையையும் பார்த்துட்டு இருக்கே?'' என்றார். அவரது குரலிலுமே உற்சாகம் பொங்கி வழிந்தது.

''எவ்வளவு அழகா இருக்கில்ல ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம்!'' என்று பெருமிதத்துடன் சொன்ன வசந்தி, ''கடவுள் புண்ணியத்தில் ரெண்டு பேரும் ஒற்றுமையா, நல்லா இருக்கணும்!'' என்று பிரார்த்தனை செய்ய, அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்ய தாங்கள் போராடியது அவரது மனதில் நிழலாடியது.

* * *

முத்துக்குமரன்-வசந்தி தம்பதியினரின் சீமந்த புத்திரிகள் பானுரேகாவும், பானுப்ரியாவும்! இரட்டைப் பிறவிகள்.

பிறப்பில் தான் இருவரும் இரட்டைப் பிறவிகளே தவிர, உருவத்திலும் குணத்திலும் இருவருக்கும் கொஞ்சம் கூட சம்மந்தம் இருக்காது.

பானுரேகா இளம் ரோஜா நிறம் என்றால், பானுப்ரியா மாநிறத்தவள்.

பானுரேகாவுக்கு இடையைத் தாண்டி கூந்தல் நீளும். பானுப்ரியாவோ, 'இதுதான் எனக்கு வசதி' என்று தனது நீண்ட கூந்தலை, தோள் வரை வெட்டி வைத்துக் கொண்டிருப்பவள்.

பானுரேகா இயல்பிலேயே அமைதியான சுபாவம் படைத்தவள் என்றால், பானுப்ரியா தைரியமான பெண்.

பானுரேகா, தனக்கு வேண்டியதைக் கூட வாய் விட்டு கேட்கவே யோசிக்கிறவள் என்றால், பானுப்ரியாவோ 'நமக்கு தேவையானதை நாம்தானே கேட்டு பெற வேண்டும்!' என்ற எண்ணம் கொண்டவள்.

பானுரேகா பாட்டு வகுப்புக்கு சென்றபோது, பானுப்ரியா கராத்தே வகுப்பு செல்ல வேண்டும் என்று அடம் பிடித்து அதில் சேர்ந்தாள்.

தந்தையின் விருப்பப்படி பானுரேகா, பொறியியல் எடுத்து படித்து, அதற்கேற்ற வேலைக்கு செல்ல, பானுப்ரியாவோ, அப்பாவின் எதிர்ப்பையும் மீறி ஜர்னலிசம் படித்து, ஒரு பிரபலமான பத்திரிகையில், நிருபராக (Investigative Journalist) பணிக்கு சேர்ந்தாள்.

என்னதான் சகோதரிகளுக்குள் எண்ண ஓட்டத்திலும், செயல்களிலும் வேற்றுமைகள் இருந்தாலும், இருவரும் ஒருவர் மீது, ஒருவர் வைத்திருக்கும் பாசத்தில் மட்டும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

பானுரேகாவுக்கு ஒரு சின்ன துன்பம் என்றாலும், பானுப்ரியா துடித்து போவாள். அதே போலத்தான் பானுரேகாவுக்கும்!

பானுரேகா, எந்த விஷயத்திலும் பெற்றோர் சொல்படி நடக்க, பானுப்ரியாவுக்கென்று தனிப்பட்ட கொள்கைகள் இருந்தன.

பானுப்ரியாவின் கொள்கைகளில் முதன்மையானது, பெண் என்பவள் சுதந்திரமானவளாக, யாரையும் சார்ந்திருக்காமல் இருக்க வேண்டும் என்பது!

''இந்த அப்பா எப்ப பாரு, உங்களை அதட்டிட்டு இருக்கிறதை பார்க்கவே எனக்கு எரிச்சலா இருக்கும்மா!

அவர் ஸ்கூல் ஹெட் மாஸ்டர்தான்... இல்லை என்று சொல்லலை... அதுக்காக 'தண்ணீர் எடுத்துட்டு வா' என்பதைக் கூட 'பெஞ்சில் ஏறி நில்லு' என்று அதட்டற தொனியில்தான் சொல்லணுமா?'' என்று அன்னை வசந்தியிடம் அவள் குறை படுவதுண்டு.

''போடி லூசு! பார்க்கத்தான் முரடே தவிர, குழந்தை மாதிரி மனசு அவருக்கு! வெண்ணையா பேச தெரியாதே தவிர, அவருக்கு என் மேல் அவ்வளவு அன்புன்னு எனக்குதாண்டி தெரியும்!''

வசந்தி பெருமிதமாக சொல்லும்போது, பானுப்ரியாவுக்கு எரிச்சலாக இருக்கும்.

என்ன அன்போ? அப்பா முத்துக்குமரன் அம்மா வசந்தியிடம் அமைதியாகவோ, பொறுமையாகவோ பேசி பானுப்ரியா பார்த்ததில்லை. எப்போதும் அதட்டல் தான்! பானுப்ரியா அவரை 'அதட்டல் மன்னன்' என்றுதான் கிண்டலாக குறிப்பிடுவாள்.

அதற்கும் வசந்தியிடம் ஒரு பதில் இருக்கும். ''அடிக்கிற கைதான் அணைக்கும்!'' என்று தொடங்கி, வசந்தி கணவரின் புகழ் பாட ஆரம்பித்து விடுவார்.

''அம்மா, பூமாதேவி! நான் உங்க அருமை வீட்டுக்காரரை பத்தி எதுவும் சொல்லலை... ஆளை விடுங்க!'' என்று பானுப்ரியா அலுத்துக் கொண்டே நகர்ந்து விடுவாள்.

முத்துக்குமரனின் பேச்சுக்கு அவரது மனைவியும், மூத்த மகள் பானுரேகாவும் மறு பேச்சு பேசாமல் அடங்கிப் போக, பானுப்ரியாதான் அவரை எதிர்த்து பேசும் ஒரே ஜீவன்.

என்ன கோபம் வந்தாலும், முத்துக்குமரன் அதை தன் பெண்களிடம் நேரிடையாக காட்ட மாட்டார் மனைவி தான் அவரது வடிகால்!

''இங்கே பாருங்கம்மா... என் மேல் கோபம்னா அவரை என்கிட்ட காட்ட சொல்லுங்க. என்னமோ உங்க கிட்ட கோபம் காண்பிக்க மொத்தமா லைசென்ஸ் எடுத்த மாதிரி எதுக்கு எல்லாத்துக்கும் உங்ககிட்ட வள்ளுன்னு விழறாரு!'' என்று பானுப்ரியா அதற்கும் கொடி பிடிப்பாள்.

'வாயில ஒண்ணு போடுவேன்! அப்பாவை அப்படி எல்லாம் பேசக் கூடாதுன்னு எத்தனை முறை சொல்லி இருக்கேன்!'' என்று வசந்தி அதற்கும் அவளைத்தான் திட்டுவார்.

''அவரைச் சொல்லி குற்றமில்லை! உங்களைச் சொல்லணும்!'' என்ற எரிச்சலோடு முணுமுணுக்கும் பானுப்ரியாவுக்கு தான் திருமணம் என்னும் சிறைக்குள் மட்டும் சிக்கிக் கொள்ளவே கூடாது என்ற எண்ணம் உள்ளுக்குள் வேரூன்றி இருந்தது.

அதை அவ்வப்போது, அவள் வெளிப்படுத்தும் போதெல்லாம், ''வயசுப் பொண்ணு அப்படி எல்லாம் உளறிட்டு இருக்காதே!''

''அன்றைக்கு அப்படித்தான் உங்க அப்பாவோட ஒண்ணு விட்ட தங்கை வீட்டு கல்யாணத்தில் ஏதோ உளறிட்டு இருந்தே! கேட்கிறவங்களுக்கு என்னால் பதில் சொல்ல முடியலை! இனிமேல் கல்யாணம் செய்ய மாட்டேன் என்று சொல்லிப் பாரு!'' என்று வசந்தி அதட்டும்போதெல்லாம்.

''மேடம் பூமாதேவி! என்கிட்டே காட்டுற அதட்டலை எல்லாம் மிஸ்டர். அதட்டல் மன்னன் கிட்ட கொஞ்ச மாவது காட்டுங்க!'' என்று பானுப்ரியா, அவரது மிரட்டலை எல்லாம் காற்றில் விட்டு விடுவது வழக்கம்.

''ஆமாம்... நான் அதட்டி நீ பயந்துட்டாலும்!'' என்று வசந்தி அலுத்துக் கொள்வார்.

''தெரியுதுல்ல! அப்புறம் எதுக்கு எனர்ஜியை வேஸ்ட் செய்யறீங்க?'' என்று அவரது கன்னம் பிடித்து ஆட்டி, முத்தமிடுவாள், அவள்.

''விடுடி! இன்னும் சின்ன குழந்தை மாதிரியே!'' வெட்கத்துடன் வசந்தி சொல்லும்போது,

''ஏன்... நான் கொஞ்ச கூடாதா? மிஸ்டர்.ஏ.எம்முக்கு மட்டும்தான் அந்த உரிமையா?'' என்று வம்பிழுத்து விட்டு,

''எனக்கு ரொம்ப நாளா ஒரு டவுட்! மிஸ்டர். ஏ.எம்முக்கு, கொஞ்ச கூட தெரியுமான்னு!'' என்று அவள் மேலும் கேலியில் இறங்கும்போது, வசந்தியின் முகம் வெட்கத்தில் சிவந்து போகும்.

''ஹய்யோ! என்னமா வெட்கப்படறீங்க மா! இதெல்லாம் எனக்கு சுட்டுப் போட்டாலும் வராது!'' என்று பானுப்ரியா மேலும் அவரை வெட்கப்பட வைத்தாலும்,

''வாயை மூடுடி. அம்மாகிட்ட பேசற பேச்சை பாரு!'' என்று வசந்தி அதட்டவும் மறக்க மாட்டார்.

இப்படி, ப்ரியா வீட்டில் இருக்கும் நேரம் எல்லாம் கலகலத்துக் கொண்டே இருக்கும்போது, அவளுக்கு எதிர் மாறாக அமைதியாக இருக்கும் ரேகா, வீட்டில் இருக்கிறாளா இல்லையா என்பதே தெரியாது.

''ரேகா... அப்ப அப்போ, வாயைத் திறந்து கொஞ்சம் பேசும்மா... இல்லைன்னா மத்தவங்களுக்கு உனக்கு வாய் பேச வராதோ என்று சந்தேகம் வந்து விடும்!'' என்று தமக்கையை வம்பிழுக்கும்போது,

''அவளுக்கும் சேர்த்து நீதான் பேசறியே!'' எனும் வசந்தி,

''ரெண்டு பேரையும் ஒரே மாதிரிதான் வளர்த்தேன்! அதெப்படி தான் இப்படி சம்மந்தமே இல்லாமல் இருக்கீங்களோ?'' என்று அதிசயிப்பார்.

''நாங்க எல்லாம், யூனிக் பெர்சனாலிட்டிம்மா!'' என்று தான் அணிந்திருக்கும், சட்டையின் காலரைத் தூக்கிக் கொண்டு பெருமிதமாகச் சொல்வாள் பானுப்ரியா.

''அப்பப்போ நாங்க நாங்க என்று சொல்றயே பானு, அந்த மத்தவங்கல்லாம் யாரு?'' என்று வசந்தி கேலியாக வினவினால்,

''என் கூட சேர்ந்து உங்களுக்கும் வாய் பெரிசா போச்சு!'' என்று பானுப்ரியாவும் அன்னையை வம்பிழுப்பாள்.

இதை எல்லாம் ஒரு புன்னகையோடு பார்த்துக் கொண்டிருப்பதுதான் ரேகாவின் வழக்கம்.

''பாரு, இன்னைக்கு கோவிலில் விசேஷம்! கோவிலுக்கு போக ரேகா புடவை எல்லாம் கட்டி ரெடியா இருக்கா. நீ பாரு, இன்னும் இந்த ஆம்பளை புள்ளைங்க போடற பேண்ட் சட்டையை மாட்டிகிட்டு வாயடிச்சிட்டு இருக்கே! போ... போய் புடவை கட்டிட்டு வா கோவிலுக்கு போயிட்டு வரலாம்!''

அன்னை அழைத்தால், ''ஏன்... இந்த ட்ரஸ் போட்டுட்டு வந்தால், சாமி கண்ணை குத்திடுவாரா என்ன? இந்த ட்ரஸ்லதான் வருவேன்!'' என்று பானுவும் தன் பிடியில் நிற்பாள்.

''நீ எப்போ சொன்ன பேச்சை கேட்டிருக்கே! முகமாவது கழுவிட்டு வா!'' என்று வசந்திதான் விட்டு கொடுக்க வேண்டியதாயிருக்கும்.

பானுரேகா, அம்மாவிடம் விதம் விதமாக சமைக்க கற்றுக் கொள்ளும்போது, பானுப்ரியா, நெட்டை, விட்டுக்கொண்டு சாப்பிடுவதோடு சரி!

''பானு... கொஞ்சமாவது சமைக்க கத்துக்கோடா... இப்போ பரவாயில்லை! கல்யாணத்துக்கு பின்னாடி உனக்குத்தான் கஷ்டமா இருக்கும்!'' என்று வசந்தி சொல்லும்போது,

''கவலையை விடுங்க மாம்! நான்தான் கல்யாணமே செஞ்சுக்க போறதில்லையே! எப்போவும் உங்க கை சாப்பாட்டைத்தான் சாப்பிட போறேன்! சோ, டோன்ட் வொர்ரி!'' என்று அவரைக் கவலையில் ஆழ்த்துவதோடு,

''அத்தோட, எனக்கு தேவை என்று தோணும்போது நான் கத்துக்குவேன்! அதை விட்டு விட்டு பொண்ணுங்கன்னா சமையல் கத்துக்கிட்டுதான் ஆகணும் என்று பழைய பஞ்சாங்கம் மாதிரி பேசிட்டு இருக்காதீங்க!'' என்று அவரையே, அவர் சொல்வது தவறோ என்று நினைக்கும்படி செய்து விடுவாள்.

ஆனால் இதற்கெல்லாம் அசைந்து கொடுத்து விட்டால், அவர் ப்ரியாவின் அன்னை அல்லவே!

"சும்மா சும்மா கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன் என்று அச்சானியமா பேசாதே பானு!" என்று அதட்டி விட்டு,

"ஏண்டி... நீ மட்டும் சமைக்க கத்துக்க மாட்டே! ஆனால், நான் மட்டும் எப்ப பாரு உனக்கு சமைச்சு கொட்டணுமா?" என்று செல்ல கோபம் கொள்வார்.

"யூ ஆர் ரைட் மா! எப்ப பாரு நீங்களே எதுக்கு சமைக்கணும்? நாம ரெண்டு பேரும் ஏ.எம்.சாரை சமைக்க வைச்சு சாப்பிடுவோம்! எப்படி என்னோட ஐடியா?" என்று கண்ணை உருட்டி பானுப்ரியா சொல்லும் அழகில், ரேகா வாய் விட்டு நகைப்பாள்.

"வாயாடி... என் புருஷன் எதுக்குடி சமைக்கணும்? நீ வேணா கல்யாணம் செஞ்சுகிட்டு, உன் புருஷனை சமைச்சு போட சொல்லு!"

அன்னை மீண்டும் திருமணத்திலே வந்து நிறுத்த, "ஹப்பா! உங்க வீட்டுக்காரரை ஒண்ணு சொல்லிடக் கூடாதே!" என்று பானுப்ரியாவும் கழுத்தை நொடிப்பாள்.

பானு என்னதான் முத்துக்குமரனை அதட்டல் மன்னன் என்று வர்ணித்தாலும், தன் மகள்கள் மீது மிகுந்த பாசம் கொண்டவர் அவர். அதை வார்த்தைகளால் வெளிக் காட்ட மாட்டாரே தவிர, பெண்களுக்கு ஒன்று தேவை என்றால், எப்படியும் செய்து முடித்து விடுவார்.

தன் பேச்சை மீறி படிப்பு, வேலை என்று பானுப்ரியா நடந்து கொண்டாலும், தன்னுடைய ஒரு மகள் தைரியசாலியாக இருப்பதில் அவருக்கு எப்போதுமே சந்தோஷம்தான். என்ன, அதை வெளிக்காட்டிக் கொள்வதில் அவருக்கு தயக்கம்.

பெண்கள் படிப்பை முடித்ததும், திருமணத்துக்கு பார்க்கலாம் என்று வசந்தி சொன்ன போது கூட பெண் குழந்தைகள், வெளியுலகத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இரண்டு வருடங்களாவது வேலைக்கு போக வேண்டும் என்று மனைவியிடம் அறிவுறுத்தியவர்.

பெண்கள் இருவரும் சம வயதினர் என்பதால், இருவருக்கும் ஒரே நேரத்தில், திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்பது கணவன்-மனைவி இருவருக்கும் பொதுவான ஆசையாக இருந்தது.

முத்துக்குமரனுக்கு, பானுரேகாவுக்கு வரன் தேடுவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது என்று அசைக்க முடியாத நம்பிக்கை. நல்ல குடும்பம், நல்ல பையன் என்று பார்த்து தேர்ந்தெடுத்து விட்டு, இதுதான் மாப்பிள்ளை என்றால், அவள் ஒத்துக் கொள்வாள். அவளது அமைதியான சுபாவத்துக்கு, அவளை நல்ல படியாக வைத்து கொள்ளும் வரன் கிடைத்தால் போதும்.

ஆனால் பானுப்ரியாவுக்கு ஏற்ற வரன் தேடுவதுதான், அவருக்கு சவாலாக இருந்தது. சும்மாவே திருமணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பவள். அவள், அப்படி சொல்லிக் கொண்டிருப்பதால், அப்படியே விட்டு விட முடியுமா என்ன?

அவளே ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஒரு மாப்பிள்ளையைக் கண்டு பிடிக்க வேண்டும். நல்ல குடும்பம், நல்ல பையனாக இருந்தால் மட்டும் போதாது. பானுப்ரியாவின் சுதந்திர சிந்தனைகளை ஏற்றுக் கொண்டு, அவளை மதித்து நடக்கும் ஒரு வரன் கிடைத்தால்தான்,

அவளிடம் திருமணம் பற்றிப் பேசவே முடியும் என்பது அவருக்குத் தெளிவாகத் தெரியும்.

ஒரு வருடமாக தொடர்ந்து நடத்திய வரன் வேட்டையில், இரு வரன்கள் தங்கள் மகள்களுக்கு ஏற்ற வண்ணம் இருக்கிறது என்று முத்துக்குமரனும், வசந்தியுமாக ஏக மனதுடன் முடிவு செய்து, மகள்களிடம் அதைப் பற்றிப் பேசும்போதுதான் பிரச்சனை எழுந்தது.

பிரச்சனை எழுந்தது பானுப்ரியாவிடம் இருந்து அல்ல! சற்றும் எதிர்பாரா விதமாக, பானுரேகாவிடம் இருந்து!

''நான் ஒருத்தரை விரும்பறேன்! கல்யாணம் செய்து கிட்டால், அவரைத்தான் செஞ்சுப்பேன்!''

குடும்பத்தினர், அதுவரை அவளிடம் அறிந்திராத ஒரு அழுத்தத்துடன், பானுரேகா தன் காதலைச் சொன்ன போது, முத்துக்குமரனும் வசந்தியும் மட்டுமல்லாது, எதற்கும் அதிகம் அலட்டிக் கொள்ளாத பானுப்ரியாவே அதிர்ந்துதான் போனாள்.



2

ரேகா தன் காதலைச் சொன்னதை நம்பக் கூட முடியாமல், முத்துக்குமரன் திகைத்துப் போய் அமர்ந்து விட, வசந்திக்கு என்ன சொல்வது, என்ன செய்வ தென்றே புரியவில்லை.

முதலில் அதிர்ச்சியில் இருந்து மீண்டது, பானுப்ரியா தான்!

அதிர்ந்து போயிருந்த பெற்றோரை விடவும், அழுத்த மாக சொல்லி விட்டாலும், கண்களில் பயத்துடன் நின்று கொண்டிருந்த ரேகாவைப் பார்க்கப் பாவமாக இருக்க, தமக்கையை அவளது அறைக்குள் தள்ளிக் கொண்டு போனவள், ''ரேகா... நீ சொன்னது உண்மை யிலேயே உண்மைதானா?'' என்று விசாரித்தாள்.

''இதில யாராவது பொய் சொல்லுவாங்களா?'' மெல்லியக் குரலில் ரேகா பதில் அளிக்க,

''என்னால நம்பவே முடியலை ரேகா! ஆள் யாரு? என்ன செய்யறாரு? எப்போ பார்த்தே? யாரு முதல்ல லவ் சொன்னது?'' என்று ப்ரியா கேள்விகளை அடுக்கி ளாள்.

''எத்தனை கேள்விகள்? கொஞ்சம் மூச்சு விட்டுக்கோ பானு!'' என்று கேலியாக சொன்னாலும், அடுத்த கணமே, ''அப்பாக்கு ரொம்ப அதிர்ச்சியா இருக்கும் இல்ல?'' என்று ரேகா கவலைப் பட ஆரம்பிக்க,

''பின்னே? எனக்கே இன்னும் அதிர்ச்சி போகலை!'' என்ற பானுப்ரியா, ரேகாவின் கையில் அழுத்தமாக கிள்ள, ''ஸ்... ஆ... லூசு, ஏண்டி இப்போ என்னை கிள்ளினே?'' என்றாள்.

''இல்ல ரேகா... எனக்கு நடந்தது கனவோன்னு இருந்தது... அதான் கிள்ளி பார்த்துக்கிட்டேன்!'' என்ற பானுப்ரியாவிடம்,

''நீ கிள்ளியது என் கை!'' என்றாள், அவள் கையைத் தேய்த்து விட்டுக் கொண்டே.

''இப்போ யார் கை என்பதா முக்கியம்? நீ சொன்னது கனவில்லை என்று தெரிஞ்சதுதான் முக்கியம்!'' என்று

நியாயம் பேசியவள், மீண்டும் தமக்கையிடம் விவரம் கேட்டாள்.

''என் ஆபீஸ்ல என்னோட வேலை செய்யறவர் ரெண்டு வருஷமா பழக்கம். ஆறு மாசத்துக்கு முன்னாடி அவர்தான் முதல்ல வந்து என்கிட்டே அவர் விருப்பத்தை சொன்னார். அப்பாவுக்கு பிடிக்காதுன்னு. நான் யோசிக் காமல் உடனே நோ சொல்லிட்டேன். அவரும் என்னை வற்புறுத்தலை. ஆனா, தினமும் ஒரு எதிர்பார்ப்போடு என்னை பார்த்துட்டே இருப்பாரு!''

ரேகா இடைவெளி விட, ''அப்புறம்?'' என்று மீதி கதையைக் கேட்க சுவாரசியமாக தயாரானாள் தங்கை.

''அப்புறம், நம்ம வீட்டில கல்யாண பேச்சு ஓடிட்டு இருக்குன்னு உனக்கும்தான் தெரியுமே! அப்போதான், எனக்கும் அவரைத் தவிர வேற யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாதுன்னு புரிஞ்சுது. நானும்...'' என்று அவள் வெட்கத்துடன் நிறுத்த,

''நீயும், மனசு வந்து ஓகே சொல்லிட்டே! சரியா?'' என்ற பானுப்ரியா, ''ஆனாலும் ரேகா, பார்க்க ஒண்ணும் தெரியாத ஆள் மாதிரி இருந்துட்டு, இவ்வளவு வேலை செஞ்சுட்டு, என்கிட்டே கூட சொல்லாமல் மறைச் சுட்டே பார்த்தியா?'' என்று குறைபட்டாள்.

''இல்ல பானு. நானே உன்கிட்டே சொல்லணும் என்று நினைச்சிட்டுதான் இருந்தேன். உனக்குத்தான் கல்யாண பேச்சை எடுத்தாலே பிடிக்காதே. அதான்... கொஞ்சம் மெதுவா சொல்லலாம்னு! சாரிடி...'' என்று தங்கையின் தாடையைப் பிடித்து கொஞ்சியவள்,

''அப்பா... அப்பா ஒத்துப்பாரா பானு?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

''ஒத்துக்கலைன்னா என்ன செய்வே?'' என்று எதிர்கேள்வி கேட்டாள் தங்கை.

பயத்துடன் தங்கையை ஏறிட்ட ரேகா, ''அவர் ரொம்ப நல்லவர் பானு. அவரை வேண்டாம்னு அப்பா சொல்ற துக்கு காரணம் இல்லைன்னுதான் எனக்கு தோணுது!'' மெல்லிய குரலில் சொல்ல,

''அவர் என்ன அவர்? இன்னும் பேர் கூட சொல் லலை நீ என்கிட்டே!'' என்று பானுப்ரியா மீண்டும் குறைபட ஆரம்பிக்க, ரேகா முழு விவரத்தையும் சொன்னாள்.

ப்ரியாவுக்கு தனக்கு திருமணம் என்பதே வேண்டாம் என்ற எண்ணம் இருந்ததே தவிர, அதை மற்றவரிடம் திணிக்கும் எண்ணம் எப்போதும் இருந்ததில்லை!

எல்லாவற்றையும் விட, ஒவ்வொரு விஷயத்திலும் தனக்கு பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, தந்தையின் சொல்படி நடக்கும் பழக்கம் கொண்ட ரேகா, தனது திருமண விஷயத்தில் தானே முடிவெடுத்திருப்பது ப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், தமக்கையின் வாழ்வு நல்லபடியாக அமைய வேண்டும் என்ற அக்கறை நிறையவே இருந்தது.

ரேகா சொன்னதைக் கேட்டவரை, நல்ல ஆளாகத் தான் ரேகா தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்று பானுப்ரியா வுக்குத் தோன்றியது.

இருந்தாலும், தந்தை இதை எப்படி எடுத்துக் கொள் வாரோ என்று தோன்ற, ''சொல்லு ரேகா... ஒரு வேளை அப்பா ஒத்துக்கலைன்னா என்ன செய்வே?'' என்று மீண்டும் வினவினாள்.

"அப்பா சம்மதம் இல்லன்னா கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன்!" ரேகா அழுத்தமாக சொன்னதும்,

"அப்போ... அப்பா சொல்றவரை கல்யாணம் செஞ்சுப் பாயா?" என்று கேட்டாள்.

"ம்ஹூம்... கல்யாணம் செஞ்சிட்டா ஆனந்தைத் தான் கல்யாணம் செஞ்சுப்பேன்! அதுவும் அப்பா சம்மதம் கிடைச்சால்... இல்லைன்னா கல்யாணமே செஞ்சுக்க மாட்டேன்!"

உறுதியாக ரேகா சொன்னதும், பானுப்ரியாவின் இதழில் முறுவல் மலர்ந்தது.

தான் நினைத்த அளவு, ரேகா ரொம்பவும் பயந்தவள் இல்லை!

காதல் வந்தால் மாற்றங்களும் கூடவே வரும் போல என்று எண்ணியவளுக்கு, ஒரு விதத்தில் தமக்கை தன் காதலில் உறுதியாக இருப்பது பிடித்திருந்தது.

அடுத்த நாளே, ப்ரியா தன் நண்பர்களின் மூலம், ஆனந்த் பற்றி விசாரிக்க, நல்ல பையன் நல்ல குடும்பம் என்று நல்ல விதமாகவே விவரம் கிடைத்தது. தந்தை மறுப்பு சொன்னாலும், தன்னால் ஆன உதவியை தமக்கைக்கு செய்ய வேண்டும் என்று முடிவெடுத் தாள்.

ரேகா தன் மனதில் இருந்ததைச் சொல்லிய பிறகு, அடுத்த இரண்டு நாட்களுக்கு வீட்டில் அதைப் பற்றி எந்தப் பேச்சும் எழவில்லை.

முத்துக்குமரனுக்கு, ரேகா சொன்னதை ஜீரணிக்கவே இரண்டு நாட்கள் பிடித்தது.

அமைதியும் பயந்த சுபாவமும் கொண்ட தன் மகளை, யாரோ ஆசை வார்த்தை காட்டி ஏமாற்ற பார்க்கிறார்கள் என்றுதான் அவருக்குத் தோன்றியது.

மூன்றாம் நாள், மகளை அழைத்தவர், "பாரு ரேகாம்மா இதெல்லாம் இந்த வயசில வருவதுதான்! அப்பா மேல் உனக்கு நம்பிக்கை இருக்கில்ல? அதனால், இந்த மாதிரி எண்ணங்களை எல்லாம் தூர போட்டுட்டு, அப்பா சொல்ற மாப்பிள்ளையை கல்யாணம் செஞ்சுக்கோ, அதுத்தான் உனக்கு நல்லது!" என்று பொறுமையாகவே அறிவுரை கூறியவர்,

"இந்த வாரம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வர சொல்லி இருக்கேன்!" என்றும் சொல்ல, கண்களில் கலக்கத்துடன் ரேகா கேட்டுக் கொண்டு இருந்தாலும், ப்ரியாவால் அப்படி இருக்க இயலவில்லை.

"என்னப்பா இது? அவள் என்னமோ காலேஜ் படிக்கிற வயசில காதலிச்ச மாதிரி பேசறீங்க?" என்று இடையிட்ட பானுப்ரியாவை,

"பானு! நீ இதில் தலையிடாதே! அவளுக்கு என்ன வேணும் என்று பார்த்துப் பார்த்து செய்த எனக்கு, அவளுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை கொண்டு வரணும் என்றும் தெரியும்!" என்று அவர் அழுத்தமாகச் சொல்ல,

"உங்களுக்குத் தெரியும் என்பது எனக்கும் தெரியும்! ஆனால், உங்களுக்கு மட்டுமே தெரியும் என்று நினைச் சிட்டு இருக்காதீங்க! கல்யாணம் என்பது அவளோட வாழ்க்கையில் ஒரு முக்கியமான விஷயம்! அதில் முடிவெடுக்கிற உரிமை அவளுக்கும் இருக்கு!"

அவரை விட அதிகமான அழுத்தத்துடன் பானு ப்ரியாவின் வாதம் இருந்தது.

மகளது உரிமை பற்றிய பேச்சு கோபத்தைக் கிளறி விட, "நீ பேசாதே பானு! அவளுக்கு தனக்கு என்ன வேணும் என்று கூட கேட்கத் தெரியாது! நான்தான் எப்பவும் அவளுக்கு பார்த்துப் பார்த்து செய்வேன்!" என்று குரல் உயர்த்தியவரிடம்,

"அவளுக்கு என்ன வேணும் என்று நீங்க எப்போ சொல்ல விட்டிருக்கீங்க? அதுக்கும் முன்னாடி உங்களுக்கு விருப்பமானதை, நீங்கதான் அவள் மேல் திணிச்சிட்டே இருப்பீங்களே?"

எரிச்சலுடன் பானுப்ரியா சொன்னதும், "பானு..." என்று ரேகா தங்கையை மெல்ல அதட்ட, பெற்றவரோ அதிர்ச்சியுடன் பார்த்தார்.

அவரது அதிர்ச்சியை சற்றும் கண்டு கொள்ளாமல், "ஏதோ, இப்போதான் அவளுடைய விருப்பம் என்று ஒன்றை வாய் விட்டுச் சொல்லி இருக்காள். அதைப் பற்றிக் கொஞ்சம் கூட யோசிக்காமல், நீங்க செய்யறது தான் சரி என்று சொல்லிட்டு இருந்தா எப்படி?" என்று பானுப்ரியா, தன் வாதத்தைத் தொடர,

"என்ன செய்யச் சொல்றே? அவள் காதலிக்கிறேன் என்று வந்து நின்னதும், கண்ணை மூடிட்டு அவனுக்கே கல்யாணம் செஞ்சு வைக்கணும் என்று சொல்றியா?" என்று தந்தை சற்றும் குறையாத கோபத்துடன் எதிர் கேள்வி கேட்டார்.

"நான் அப்படி சொல்லலை! அவள் சொல்றவரைப் பற்றி விசாரிக்கச் சொல்றேன்! உங்களுக்கும் நல்ல

விதமாக தோணுச்சுன்னா கல்யாணம் செஞ்சு வைக்கச் சொல்றேன்! தவறா ஏதாவது இருந்தா, காரணத்தைச் சொல்லி மறுக்கச் சொல்றேன்!" என்றவள், கொஞ்சம் இடைவெளி விட்டு.

"இப்படி காரணமே இல்லாமல், வேண்டாம் என்று மறுக்காதீங்க என்று சொல்றேன்!" என்று முடித்தாள்.

இவ்வளவு நேரம் பானுப்ரியா சொன்னது எதையும் மறுக்காமல், அவள் சொன்னதை ஆமோதிக்கும் விதமாக அமர்ந்திருந்த வசந்தியையும், ரேகாவையும் கண்ட முத்துக்குமரன் மனதில் யோசனை படர்ந்தது.

எதுவும் பேசாமல், அவர் அறைக்குள் சென்று விட, "பானு... நீ வேற ஏன் அப்பாவோட கோபத்தைக் கிளறி விடற மாதிரி பேசறே?" என்று ரேகா தவிக்க,

"அடடா... இப்படி பயப்படறவ எதுக்கு காதலிக்கணும்? சரி. நான் இனிமேல் ஒண்ணும் பேசலை! நீ அப்பா சொல்றவரையே கல்யாணம் செஞ்சுக்கறியா?" என்று ப்ரியா எரிந்து விழ, ரேகா பரிதாபமாக விழித்தாள்.

"ம்க்கும்! இப்படி முழிக்கிறதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை! பயப்படாதே ரேகா... மிஸ்டர்.ஏ.எம் யோசிக்க ஆரம்பிச்சிட்டார் என்று நினைக்கிறேன். எல்லாம் நல்ல படியாவே நடக்கும்!" என்று தங்கை ஆசி கூறுவது போலக் கூற, ரேகாவுக்கும் லேசாக புன்னகை மலர்ந்தது.

நடந்தது அனைத்தையும் கண்களில் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த அன்னையின் அருகில் வந்த ரேகா, "அம்மா... என் மேல கோபமா அம்மா? ரெண்டு நாளா நீங்க என்கிட்டே எதுவுமே கேட்கலை... பேசலை..." என்று தவிப்புடன் வினவ,

"கோபம் எல்லாம் இல்லடா... கொஞ்சம் அதிர்ச்சி... உங்கப்பா கோபப்படுவாரேன்னு கொஞ்சம் பயம்! அவ்வளவுதான்!" என்றவர்,

"ஆனாலும் உனக்கெப்படி இந்த அளவுக்குத் தைரியம் வந்தது?" என்று ஆச்சரியப்பட்டார்.

"நல்லா கேளுங்கம்மா" என்று அன்னையின் அருகில் வந்த பானுப்ரியாவை அமைதியாக பார்த்தவரிடம், "என்ன ஆச்சு? உங்க ஹஸ்பண்டை லெஃப்ட் அண்ட் ரைட் வாங்கினதுக்கு, எனக்கு பயங்கர டோஸ் விழும்னு பார்த்தால், அமைதியாக இருக்கீங்க?" என்று கேலியாக விசாரித்தாள்.

"நீ சொன்ன எதுவும் தப்பில்லை! என்ன கொஞ்சம் அமைதியா சொல்லி இருக்கணும்!" என்று அவளை ஆச்சரியப் பட வைத்த வசந்தி, "உங்க அக்காகிட்ட நல்லா விசாரிச்சியா பானு? பையன் நல்லவன்தானே?" என்று தனிமையில் ப்ரியாவிடம் விசாரித்தார்.

"நானே என் ப்ரண்ட்ஸ் வழியா விசாரிச்சுட்டேன் மா! எல்லாரும் நல்ல விதமாத்தான் சொல்றாங்க. அதனால் தான் அப்பாகிட்டயும் அவ்வளவு ஸ்ட்ராங்கா பேசினேன். நீங்க பயப்படாதீங்க!"

அன்னையைத் தேற்றியவளிடம், "இதுவே நீ வந்து இப்படி சொல்லி இருந்தேன்னா நான் பயப்பட மாட்டேன்! ரேகாவுக்கு அந்த அளவுக்கு சூது வாது எல்லாம் தெரியாது. அதான் பயப்படறேன்!" என்று அவர் தன் பயத்தை வெளியிட்டார்.

"நானா? கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டு இருக்கேன்! இதில் காதல் வேறயா? குட் ஜோக்!"

"ப்ச்... பானு... இப்படி பேசறதை முதலில் நிறுத்து! இப்போ ரேகாவுக்கு முடிவாகிடுச்சுன்னா உனக்கும் நல்ல வரனா பார்த்து முடிக்க வேண்டியதுதான்!" என்ற அன்னையிடம்,

"அம்மா ப்ளீஸ்... இவ்வளவு நாள் நான் சும்மா விளையாட்டுக்கு சொல்றேன் என்று நினைச்சுட்டு இருக்கீங்களா என்ன? எனக்கு கல்யாணம் செஞ்சுக்கிற ஐடியாவே இல்லை... இல்லை... இல்லை... நான் சொல்வதெல்லாம் உண்மை... உண்மை... உண்மை!"

மகள் குரல் உயர்த்திச் சொல்ல, வசந்தி திகைத்து போய் அவளை நோக்கினார்.

அன்னையின் திகைப்பை கண்டு கொள்ளாமல், "எனக்கு கல்யாணம் என்று நினைச்சாலே, கவிஞர் தாமரையின் ஒரு கவிதைதான் நினைவுக்கு வருது!"

என் பெயரை மறந்து போனேன்!

என் மணவிழாவில்

நான் தொலைந்து போனேன்!

ஆனாலும் யாரும் என்னை தேடவேயில்லை!

"குடும்பம் நல்ல படியா இருக்கணும் என்று தன்னுடைய கனவு, ஆசை, விருப்பம் என்று எல்லாத்தையும் விட்டுக் கொடுக்க ஆரம்பிச்சு, கடைசியில், தன்னோட சுயத்தையே இழந்து நிற்கிற பெண்கள் அதிகம்! அந்த மாதிரி ஒரு நிலையைப் பற்றி என்னால் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது."

பானுப்ரியா வேகத்துடன் சொல்லிக் கொண்டிருக்க, "என்னடி? என்ன என்னமோ சொல்றே? கல்யாண

வீட்டில் கவனமா இல்லா விட்டால், செருப்பு தொலை யும் என்று தெரியும்! நீ சொல்றது எதுவும் எனக்கு புரியலை!'' என்று வசந்தியின் அங்கலாய்ப்பான குரல் இடையிட்டது.

அன்னையின் வார்த்தைகள் எரிச்சலைக் கிளப்பினாலும், அவர் சொன்ன விதம் புன்னகையை வரவழைக்க, ''ஹய்யோ அம்மா... நான் எவ்வளவு சீரியஸா பேசிட்டு இருக்கேன்! என்னை காமெடி பீஸ் ஆக்கறீங்களே?'' என்று செல்லமாக பல்லைக் கடித்தவள்,

அவர், ''உண்மையிலேயே நீ பேசறது எனக்கு புரி யலை, பானு!'' என்று சொல்லவும்,

''இதுதான்... இதுதான் பிரச்சனை... நான் என்ன சொல்ல வரேன் என்று புரியாமல் நீங்க சொல்றதை மட் டும் தான் கேட்கணும் என்று நீங்க எதிர்பார்க்கிறதுதான் பிரச்சனை!'' என்று எரிச்சலைக் காட்டி சொன்னவள்,

''என் வேலையைப் பற்றி உங்களுக்கே தெரியும்! எப்போ வேணும்னாலும் கிளம்பணும். சில சமயம் நைட் நேரம் கழிச்சு கூட வர வேண்டி இருக்கும்! சில சமயம் வெளியே கூட தங்க வேண்டி இருக்கும்! இப்ப, நீங்களே இதுக்கெல்லாம் எதோ சொல்லிட்டேதான் இருக்கீங்க! இதில கல்யாணம் செஞ்சுகிட்டால், என் வேலையைத் தொடரக் கூட முடியாது!'' என்று தன் மனதில் இருப்பதை உரைக்க,

மகளின் பேச்சில் இடையிட முயன்ற அன்னையை கை காட்டி நிறுத்தியவள், ''இருங்க... வேற வேலைக்கு போ என்று சொல்வீங்க! நான் வேலைக்கு போறது வெறும் சம்பளத்துக்கு மட்டும் இல்லைம்மா... என்

ஆத்ம திருப்திக்கு! நான் வேலை செய்யற பத்திரிகை யில் வெறும் பரபரப்புக்கு மட்டும் நியூஸ் செய்யறதில்லை! நடக்கிற அநியாயங்களை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டறோம். சில நேரங்களில் நாங்க கொடுக் கிற துப்பு மூலமா எத்தனை குற்றவாளிகள் பிடிபட் டுருக்காங்க தெரியுமா? இந்த மாதிரி ஒரு சவாலான வேலையை என்னால் விடவே முடியாது!'' என்று உறுதியுடன் உரைத்தவள்,

''எனக்கு நிறைய ஆசைகள் இருக்கும்மா... அதுல ஒண்ணு... என் உழைப்பால் சொந்தமா ஒரு பத்திரிகை ஆரம்பிக்கறது! அந்த ஆசைகள் எல்லாம் நிறைவேறுமா என்று எனக்குத் தெரியாது! ஆனால், கல்யாணம் செஞ்சுகிட்டால், அந்த ஆசைகள் நிறைவேற வாய்ப்பே இல்லை என்று மட்டும் கண்டிப்பா தெரியும்!'' என்று முடித்தாள்.

''என்ன பானு இது? எத்தனை பேர் கல்யாணத்துக்கு பிறகும் சாதிச்சு இருக்காங்க?'' என்ற தாயின் கேள்விக்கும் ப்ரியாவிடம் பதில் இருந்தது.

''அதெல்லாம் விதிவிலக்கு! விரல் விட்டு எண்ணிட லாம்!''

''பானு... எத்தனையோ பேர் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, வயசு போன பிறகு, அப்பவே கல்யாணம் செஞ்சுக்கலையே என்று வருத்தப் படறதை நான் பார்த்திருக்கேன்!''

''கவலைப் படாதீங்க! நான் அப்படி வருத்தப் பட மாட்டேன்!''

''பானு! இப்போ இள ரத்தம் அப்படிதான் தோணும்! ஆனால் ஒரு காலத்தில் பேச கூட துணைக்கு ஆள்

இல்லாமல், ஏன்... நாம பேசறதைக் கேட்க கூட ஆள் இல்லாத போதுதான், தப்பு செஞ்சுட்டோம் என்று தோணும்!''

பொறுமையாகவே வசந்தி பேச, ''ப்ச்... அம்மா... பின்னாடி கஷ்டப் படுவோம் என்று நினைச்சு, இப்ப என்னோட சுதந்திரத்தையோ சந்தோஷத்தையோ இழக்க நான் விரும்பலை! ப்ளீஸ் என்னை விட்டுடுங்க!'' என்று முடிவாக ப்ரியா கூற,

''அது எப்படி விட முடியும்? உன் வாழ்க்கையில் எங்களுக்கு உரிமை இல்லையா? வேண்டாம்னு சொன்னால் நாங்க விட்டுட முடியுமா?'' என்று அன்னையாய் அவர் அதட்டினார்.

''அம்மா... பெற்ற பெண்ணே என்றாலும், ஒரு அளவுக்கு மேல் நீங்க என்னை கட்டுப் படுத்த முடியாது. என் வாழ்க்கையை எப்படி வாழணும் என்று நான்தான் முடிவு செய்யணும். கல்யாணம் செஞ்சுகிட்டு, சமைச்சு போட்டுக்கிட்டு, குழந்தை பெத்துகிட்டு, இப்படி ஒரு ரெகுலர் வாழ்க்கை வாழ என்னால் முடியாதும்மா!

''என்னை ரொம்ப கல்யாணம் அது இதுன்னு வற்புறுத்துனீங்க என்றால், நான் ஏதாவது ஹாஸ்ட்டல்ல போய் தங்கிக்குவேன்!

''எனக்கு கல்யாணம் செய்யணும் என்ற ஆசை இருந்தால், அதை அப்படியே மூட்டை கட்டி திரும்ப எடுக்கவே முடியாத படி பரண்ல போட்டுடுங்க!''

தன் மனதில் இருப்பதை முழுவதுமாக கொட்டி விட்டு பானுப்ரியா நகர்ந்து விட, வசந்தி திறந்த வாய் மூடாமல் திகைத்து நின்றார். தன் அறையில் இருந்து வெளியே

வந்த முத்துக்குமரனின் செவிகளில் பானுப்ரியாவின் வார்த்தைகள் அறைந்து, அவரை ஸ்தம்பிக்க வைத்தது.

ஏற்கனவே, ஒரு மகள் காதல் என்று வந்து நிற்கிறாளே என்ற கவலை கூட, பானுப்ரியாவின் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்ற உறுதியான வார்த்தைகளில் பின்னுக்கு தள்ளப் பட்டது.

பானுப்ரியாவை, அவளுக்கு பிடிக்காத எதையும் செய்ய வைப்பது இயலாத காரியம் என்பதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் என்பதால், பெற்றோர் இருவரின் மனதையும், அவளைப் பற்றிய கவலையே அதிகமாக ஆக்கிரமித்தது.

''பாருங்க... ஒண்ணு கல்யாணமே வேண்டாம் என்று நிற்குது! இன்னொருத்திக்காவது அவள் விருப்பப்படி கல்யாணம் செஞ்சு வைக்க பார்க்கலாம்! நாளைக்கே பையனைப் பற்றி விசாரிக்க ஆரம்பிங்க!'' என்று வசந்தி கொடுத்த தூண்டுதலில், முத்துக்குமரனும் ஆனந்தைப் பற்றி விசாரிக்க, எல்லாம் திருப்திகரமாகவே இருந்தது.

இரு பெண்களின் திருமணத்தையும் ஒன்றாக நடத்த வேண்டும் என்ற தங்களது அவா இப்போதைக்கு நிறை வேறாது என்ற கவலை இருந்தாலும், இப்போதைக்கு ரேகாவின் திருமணத்தை முடிப்போம். பின், கொஞ்சம் கொஞ்சமாக சின்ன மகளின் மனதை மாற்றும் முயற்சியில் இறங்கலாம் என்று முத்துக்குமரனும் வசந்தியும் முடிவெடுத்தனர்.

முத்துக்குமரன், ஆனந்தின் தந்தை ரவிச்சந்திரனை ஒரு பொது இடத்தில் சந்தித்துப் பேசினார்.

ரவிச்சந்திரன் வருமான வரி துறையில் ஒரு முக்கிய பொறுப்பில் இருந்தார். மாப்பிள்ளையின் அப்பா என்ற பந்தா இல்லாமல், அவர் பழகிய விதமே, முத்துக் குமரனுக்கு பிடித்திருந்தது.

இருவரது பேச்சு வார்த்தைக்குப் பிறகு அடுத்த நாள், முத்துக்குமரன் மனைவியை அழைத்துக் கொண்டு ஆனந்தின் வீட்டுக்குச் செல்ல, வசந்திக்கும் ஆனந்தின் அன்னை தேவகியின் அன்பான உபசரிப்பில், உள்ளம் நிறைந்தது. சிறிது நேரத்திலேயே, இருவரும் நீண்ட நாள் பழகியவர்களைப் போல பேசத் துவங்கினர்.

''என் பிள்ளையைப் பற்றி நானே சொல்லக் கூடாது. இருந்தாலும் சொல்றேன். ஆனந்த் ரொம்ப பொறுப்பான பையன். உங்க பெண்ணை நல்ல படியா பார்த்துப் பான். எனக்கும் அவருக்கும் பெண் குழந்தை இல்லாத குறை எப்பவும் உண்டு. எங்களுக்கு வரப் போற மரு மகள் எங்களுக்கும் மகள் போலத்தான்!''

ஆத்மார்த்தமாக தேவகி சொன்னதும், வசந்தியின் உள்ளம் நெகிழ்ந்தது.

''ரேகாவும் ரொம்ப பொறுமையான பொண்ணு. உங்க குடும்பத்துக்கு ஏற்ற மாதிரி நடந்துப்பாள்!'' என்று தன் மகளைப் பற்றியும் சொன்ன வசந்தியிடம்,

''ரேகாவும் உங்க இன்னொரு பெண்ணும், ட்வின்ஸ் தானே, அவளுக்கும் ஏதாவது வரன் பார்க்கறீங்களா?' என்று தேவகி கேட்டதும், வசந்தியின் முகம் வாடியது.

''என்ன ஆச்சு? ஏன் திடீர்னு முகம் வாடி போச்சு?''

அக்கறையுடன் தேவகி வினவ, சம்மந்தி ஆக போகிறவர்கள்தானே என்ற உரிமையில், வசந்தியும் தன் மனக்குறையை அவருடன் பகிர்ந்து கொண்டார்.

''நீங்களே சொல்லுங்க... அவள் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னால் அப்படியே விட்டுட முடியுமா? ஊர் உலகம்தான் என்ன சொல்லும்? அதைக் கூட விடுங்க. இப்போ இள ரத்தம் அப்படி பேச வைக்குது. எத்தனை நாள் நாங்க அவளுக்கு துணையா இருக்க முடியும்? அவளுக்கென்று ஒரு துணை வேண்டும் இல்லையா? ஆனால், அவள் என்ன சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாள். எல்லாத்துக்கும் அவள் இஷ்டப்படி விட்டதுதான் தப்பா போச்சு!''

கவலையுடன் வசந்தி பேச, அவரது கையை ஆதர வாகப் பற்றிய தேவகி, ''வீட்டுக்கு வீடு வாசப்படி. உங்க வீட்டில் உங்க பொண்ணு அப்படி சொல்கிறாள். எங்க வீட்டில் எங்க ரெண்டாவது பையன் ஆகாஷ் அப்படித் தான் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டு இருக்கான்...'' என்று அவரது மனக்குறையைச் சொல்ல, வசந்தியின் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

விரைவில், முறையாக பெண் பார்க்கும் படலத்துக்கு ஏற்பாடு செய்து, அன்றே தாம்பூலம் மாற்றிக் கொள்ள லாம் என்று நிச்சயம் செய்து கொண்டு மன நிறைவுடன் முத்துக்குமரனும், வசந்தியும் வீடு திரும்பினார்கள்.

ரேகாவின் திருமணம் பற்றிய கவலை முற்றிலும் அகன்று விட, ''வசு, ரேகா கிட்ட இப்பவே எல்லாம் ஓகே என்று சொல்லிடலாமா? ஒரு வாரமா குழந்தை முகத் தில சிரிப்பே இல்ல!'' ஆதூரத்துடன் கணவர் சொல்ல, யோசனையில் ஆழ்ந்திருந்த வசந்திக்கு, பானுப்ரியாவை திருமணத்துக்கு சம்மதிக்க வைக்கக் கூடிய வழி இருக் கிறது என்ற நம்பிக்கை ஒரு சிறு பொறியாகத் தோன் றியது.

"வசு? என்ன ஆச்சு?" என்று கணவர், தோளைப் பற்றி லேசாக உலுக்கிய பிறகே, தன்னிலைக்கு வந்தவர், "ஏங்க... உங்க போனை கொஞ்சம் கொடுங்க!" என்று சொல்ல, மறு பேச்சின்றி எடுத்து கொடுத்த முத்துக்குமரன், "யாருக்கு போன் செய்யணும்?" என்று வினவ, "சம்மந்தி வீட்டுக்கு!" என்று பதிலிறுத்த வசந்தி, கணவரிடம் கேட்டு ஆனந்தின் வீட்டு எண்ணை கேட்டு விட்டு அழுத்த,

"என்ன வசு? இப்போ தானே அங்கிருந்து வந்தோம்? இப்போ என்ன பேச போறே?" என்றவரிடம்,

"கொஞ்சம் இருங்க... சொல்றேன்!" என்ற வசந்தி, எதிர்முனையில் தேவகி தொலைபேசியை எடுத்ததும், "அண்ணி நான்தான் வசந்தி பேசறேன்! இப்போதைக்கு உங்க பையன் கிட்ட நாங்க பேசிட்டு போனதையோ, சம்மந்தம் முடிவாக போறதைப் பற்றியோ எதுவும் சொல்ல வேண்டாம்!" என்று சொல்ல, முத்துக்குமரன் அதிர்ச்சியோடு மனைவி நோக்கினார்.

"வசு?" என்று ஏதோ பேச ஆரம்பித்தவரை கண்களால் அடக்கிய வசந்தி, தன் எண்ணத்தை தேவகியிடம் பகிர்ந்து கொள்ள, கேட்டுக் கொண்டிருந்த முத்துக்குமரனின் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்து, வசந்தி அழைப்பைத் துண்டிக்கும் தருவாயில், பாராட்டைத் தெரிவித்தன.

"வசு... இந்த போடு போடறே? இருந்தாலும் உனக்கு உடம்பெல்லாம் மூளை!"

"ம்ம் உங்களையும் உங்க செல்ல பொண்ணு பானுவையும் கட்டி மேய்க்கிறதுக்கு இந்த அளவு கூட

மூளை இல்லன்னா எப்படி?" என்று கணவரையும் பெண்ணையும் ஒரே நேரத்தில் வாரியவர், "எப்படி என்னோட ப்ளான்?" என்று வினவ,

"எல்லாம் சரிதான்... பானு ஒத்துக்கணுமே?" என்று அவர் கவலைப் பட, "அதெல்லாம் ஒத்துக்க வைச்சுடலாம்!" என்று வசந்தி தைரியம் சொல்ல, இருவரும் மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பற்றித் திட்டமிட்டபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

பெற்றோர் இருவரும் எங்கே சென்று வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததால், அவர்கள் வீட்டினுள் நுழைந்ததுமே அவர்களது முகத்தை ரேகா ஆவலுடன் நோக்க, அவர்கள் முகத்தில் இருந்து எதுவும் தெரிந்து கொள்ள இயலவில்லை.

ப்ரியா வந்ததும், ரேகா அவளின் காதைக் கடிக்க, நேராக தந்தையிடம் வந்த ப்ரியா, "என்னப்பா அவங்க வீட்டில் போய் பேசிட்டீங்களா? என்ன முடிவெடுத்து இருக்கீங்க?" என்று விசாரித்தாள்.

தந்தையின் வாயில் இருந்து வரப் போகும் வார்த்தைகளுக்காக, ரேகா காதைத் தீட்டியபடி காத்திருக்க, தன்னிடம் கேள்வி கேட்ட மகளை ஏறிட்ட முத்துக்குமரன், "பார்த்து பேசின வரை, எல்லாம் ரொம்ப திருப்தியா இருக்கும்மா!" என்று மகள்களைக் குளிர வைத்து விட்டு,

"ஆனால், இந்த கல்யாணம் நடக்கிறதும் நடக்காததும் உன் கையில்தான் இருக்கு பானு!" என்று புதிர் போட, ப்ரியா ஆச்சரியத்துடன் தந்தையை நோக்கினாள்.

தனக்கும் தமக்கையின் திருமணத்துக்கும் என்ன சம்மந்தம் என்று குழம்பிய ப்ரியா, ''என்னப்பா சொல்றீங்க?'' என்று குழப்பத்துடன் வினவ,

''ஆனந்துக்கு ஆகாஷ் என்று ஒரு தம்பி இருக்கார். லா படிச்சிட்டு வெற்றிகரமான லாயரா ப்ராக்டிஸ் செஞ்சுட்டு இருக்கார்...'' என்ற முத்துக்குமரன்,

மகளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தபடி, ''நீ அவரைக் கல்யாணம் செஞ்சுக்கிறதா இருந்தால், ஆனந்துக்கும் ரேகாவுக்கும் கல்யாணம் செஞ்சு வைக்கிறதில் எனக்கு எந்த ஒரு ஆட்சேபணையும் இல்லை!'' என்று முடிக்க, பானுப்ரியா அதிர்ச்சியில் வாய் பிளந்து நின்றாள்.

''என்னம்மா இது? ஒரு கேஸ் விஷயமா வெளியூர் போயிட்டு வந்தவனை பாசமா வரவேற்பீங்க என்று நினைச்சால், இப்படி ஒரு குண்டை போடறீங்களே? இது உங்களுக்கே நியாயமா தெரியுதா?''

எரிச்சலுடன் வினவிய மகனை, அலட்டிக் கொள்ளாமல் பார்த்த தேவகி, ''நீங்கதான் பெரிய வக்கீல் ஆச்சே சார்! உங்களுக்குத் தெரியாத நியாயமா?'' என்று எதிர் கேள்வி கேட்க, ஆகாஷுக்கு எரிச்சலை மீறி புன்னகை மலர்ந்தது.

''இந்த மாதிரி டபாய்க்கிற வேலையெல்லாம் என்கிட்டே வேண்டாம்! ஒழுங்கா சொல்லுங்க! எதுக்கு இப்போ இந்த மாஸ்டர் பிளான்?''

பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக இருந்தவரிடம், ''என்னை கல்யாணம் செஞ்சுக்க வைக்கத்தானே?'' என்று ஆகாஷ் வினவ,

''பரவாயில்லைடா கண்ணா... கரெக்டா பாயிண்டை பிடிச்சு நீ புத்திசாலி வக்கீல் என்று நிரூபிச்சிட்டே! சபாஷ்!'' என்று கை தட்டினார் அவனது அன்னை.

''உங்க பாராட்டுக்கு நன்றி!'' என்று புன்னகையுடன் சொல்லி விட்டு, ''ஆனால் இந்த மாதிரி ப்ளானுக்கெல்லாம் இந்த ஆகாஷ் சிக்க மாட்டான் என்று இந்த புத்திசாலி வக்கீலைப் பெற்ற என் புத்திசாலி அம்மாவுக்கு கண்டிப்பா தெரிஞ்சு இருக்கணுமே!'' என்றான்.

''ம்... என் பிள்ளை புத்திசாலி வக்கீல் மட்டுமில்லை, எந்த கேசையும் நியாயத்தோட அணுகிறவன் என்பதும் எனக்கு தெரியும்! தேவை இல்லாமல் ஒரு நிரபராதி தண்டிக்கப் படுவதற்கு, தான் காரணமாக இருக்க மாட்டான் என்றும் தெரியும்!''

அமர்த்தலாக சொன்ன அன்னையைப் பார்க்க, ஆகாஷுக்கு புன்னகை விரிந்தது.

அன்னையின் அருகில் வந்து அமர்ந்தவன், ''சுத்தி வளைச்சு பேசறதை விட்டுடலாம்! விஷயத்துக்கு வாங்க! இப்போ நான் கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வீங்க?'' என்று வினவ,

''அதான் முன்னாடியே சொன்னேனேடா... நீ பானுப்ரியாவை கல்யாணம் செஞ்சுக்கலை என்றால்,

உன் அண்ணனுக்கும் அவன் விரும்புகிற பெண்
ணுக்கும் கல்யாணம் நடக்காது!''

அழுத்தத்துடன் தேவகி சொல்ல, ''ரைட்! நீங்களாச்சு
உங்க பெரிய பையனாச்சு! என்ன வேணா செஞ்சுக்
கோங்க! ஆனால், என்னை விட்டுடுங்க!'' என்று சொல்லி
விட்டு, ஆகாஷ் எழ, தேவகியும் அவனை நிறுத்தி
வைக்க முயற்சி செய்யவில்லை!

தன் அறையின் வாசல் வரை சென்றவன், அன்
னையைத் திரும்பிப் பார்த்தான். அவரும் கண்களில்
சவாலுடன் அவனைத்தான் பார்த்து கொண்டிருந்தார்.

வேகமாக அன்னையிடம் திரும்பி வந்த ஆகாஷ்
''என்னம்மா இது? சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடி
சுட்டு?'' எனக்கு கல்யாணம் செஞ்சுக்க இஷ்டமில்லை
என்று எத்தனை முறை உங்ககிட்ட சொல்லி இருக்கேன்
இப்போ எதுக்கு ஆனந்த் கல்யாணத்துக்கும் எனக்கும்
முடிச்சு போடறீங்க?'' முடிந்த வரை அமைதியாகவே
கேட்டவனிடம்,

''போடா... உனக்கு எங்கே என் மனசில இருக்கி
தெல்லாம் புரியப் போகுது?'' என்று தேவகி அலுத்துக்
கொள்ள, அன்னையின் கைப் பற்றி தன் கையில்
வைத்துக் கொண்டு,

''அம்மா... அம்மா...'' என்று சலுகையாக அழைத்
தவன், ''தினமும் கோர்ட்டில் எத்தனை பேரை பார்க்
கிறேன் தெரியுமா? கல்யாணம் ஆகி ரெண்டே மாசம்
ஆனவங்கள்ள இருந்து இருபது வருஷம் குடும்பம்
நடத்துனவங்க வரைக்கும் டைவர்சுக்கு வருவதைப்
பார்த்த பிறகும், திருமணம் செஞ்சுக்க ஆசை வரும

சொல்லுங்க? எனக்கு கல்யாணம் என்ற அமைப்பின்
மேல் நம்பிக்கையே இல்லாமல் போயிடுச்சு! நான்
இப்படியே உங்களுக்கு மகனாவே இருந்துடறேன் மா!
ப்ளீஸ்... என்னை புரிஞ்சுக்க முயற்சி செய்யுங்க!''
எப்போதும் போல, அவன் பக்க நியாயத்தை ஆகாஷ்
எடுத்துரைக்க,

''போடா லூசு! எத்தனையோ பேர், கல்யாணம்
செஞ்சுட்டு சாகற வரை ஒண்ணா சந்தோஷமா இல்
லையா? ஏன் நானும் உங்க அப்பாவும் முப்பது வருஷம்
சந்தோஷமா இல்லையா? நீ ஏன் அதைப் பார்க்க
மாட்டேங்கிறே? எப்பவும் ஒரு விஷயத்தோட ஒரு பக்
கத்தை மட்டும் பார்க்கக் கூடாதுன்னு தெரியாத நீயெல்
லாம் எப்படித்தான் எடுக்கிற கேசை எல்லாம் வெற்றி
கரமா முடிக்கிறாயோ எனக்குத் தெரியலை!'' என்று
தேவகி அலுத்துக் கொள்ள,

''கொஞ்ச நேரம் முன்னாடிதான் என்னை புத்திசாலி
என்று சொன்னீங்க! இப்போ இப்படி சொல்றீங்க?''
என்று புன்னகைத்த மகன்,

''நீங்க சொல்ற மாதிரி இருக்கிறவங்க அதிர்ஷ்ட
சாலிங்க அம்மா! அதே மாதிரி எல்லாருக்கும் அமையணும்
என்று எதிர்பார்க்க முடியுமா?'' என்று வாதம் செய்ய,

''கணவன் மனைவி ரெண்டு பேரும் ஒருத்தருக்கு
ஒருத்தர் விட்டுக் கொடுத்து போனால், எல்லா
கல்யாணமும் வெற்றிகரமாதான் இருக்கும்!'' என்று தன்
கருத்தை தேவகி முன் வைத்தார்.

அதற்கெல்லாம் மசிந்து விடுவானா அவரது மகன்?

''யெஸ்! நீங்க இப்போ சொன்னது ரொம்ப சரி!
ரெண்டு பேரும் விட்டுக் கொடுத்து போகணும்!

உங்களுக்கே தெரியும்... எனக்கு தேவை இல்லாமல் விட்டு கொடுத்து போறது பிடிக்காது என்று! அப்படியே நான் விட்டுக் கொடுத்து போறேன் என்று வைங்க! அதே மாதிரி வரப் போற பெண்ணும் விட்டுக் கொடுத்து போகணும் இல்ல? அப்படி இல்லாத பட்சத்தில் பிரச்சனை வரும்தானே? ஒருத்தர் மட்டுமே விட்டு கொடுத்து போயிட்டே இருந்தால், கொஞ்ச நாளில் அது சலிச்சு போய் பிரச்சனை வரத்தானே செய்யும்? வரப் போற பெண் அப்படி விட்டுக் கொடுத்து போவாள் என்று என்ன நிச்சயம்?''

''கண்ணா, வாழ்க்கை என்பது கோர்ட்டில் நடக்கும் வழக்கு இல்லைடா... வார்த்தைக்கு வார்த்தை வாதம் செய்ய முடியாது. சிலதை நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையோடுதான் அணுகணும்! கல்யாணம் அந்த மாதிரி ஒரு விஷயம்!'' என்ற தேவகி, மகன் ஏதோ பேச வரவும், அவனைக் கை காட்டி நிறுத்தினார்.

''கண்ணா... யோசிச்சு பாரு... நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுட்டு, குழந்தை குட்டிகளோடு சந்தோஷமா இருக்கிறதைப் பார்க்கிறதை விட எங்களுக்கு வேறு என்ன ஆசை சொல்லு? அதை நிறைவேற்றி வைக்கிறது. மகனா உன் கடமை இல்லையா?'' என்று உணர்வுப்பூர்வமாகப் பேச, ஆகாஷ் வாய் விட்டே சிரித்தான்.

''சரியான ஆளும்மா நீங்க! செண்டிமெண்ட், ஆர்க்யுமென்ட் என்று கலக்கறீங்க! பட், நோ யூஸ்! எனக்கு இப்போ இப்படி இருக்கிறதே எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! கல்யாணம் செஞ்சுட்டு, கமிட்மெண்டில்

மூழ்கி, பிரச்சனை வந்து, அதை சரி செஞ்சு என்று வாழ்க்கை நடத்தறதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால், நீங்க சமத்தா ஆனந்தோட கல்யாண வேலைகளைப் பார்க்க ஆரம்பிங்க. அதில, உங்களுக்கு எந்த உதவி வேண்டுமோ சொல்லுங்க, கண்டிப்பா செய்யறேன்!'' என்று ஆகாஷ் முடிவாகச் சொல்லி விட்டு எழ, தேவகி முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

ஒரு தலை அசைவுடன், ஆகாஷும் தன் வேலையைப் பார்க்க சென்றான்.

இரண்டு நாட்களுக்கு பிறகு, காலை உணவின் போது ஆகாஷ், ஆனந்திடம் அவனது திருமணம் பற்றி விசாரிக்க, அவன் எதுவும் சொல்வதற்கு முன், தேவகி குறுக்கிட்டு,

''உனக்கென்னடா அக்கறை? அதான், அவன் எப்படி போனால் என்ன என்று உன் முடிவை செல்லிட்ட இல்ல... அப்புறம் என்ன?'' என்று சொல்ல, ஆகாஷ் குழம்பினான்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ள வைக்க, அன்னை எடுக்கும் ஒரு முயற்சி அது! தான் மறுத்து விட்டாலும், ஆனந்தின் திருமணம் நடை பெறும் என்று எண்ணி இருந்தவனுக்கு, அன்னையின் பிடிவாதம் அபத்தமாக பட்டது.

''என்னம்மா இது? எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடறீங்க?'' என்று எரிச்சல் பட்டவன், ''இந்தக் கல்யாணம் நடக்கலைன்னா ஆனந்த்துக்கு கஷ்டமா இருக்காதா?'' என்று அண்ணனுக்காகப் பரிந்து வர,

"அவ்வளவு அன்பு இருந்தால், நீ கல்யாணத்துக்கு ஒத்துக்கோ!" என்று அவர் பிடியிலேயே நின்றார் தேவகி.

"அப்பா... அம்மாதான் ஏதோ சொல்லிட்டு இருக்காங்க என்றால், நீங்களும் எதுவும் சொல்லாமல் இருந்தால் எப்படி?" என்று தன் தந்தையிடம் நியாயம் கேட்டான் ஆகாஷ்.

"நான் சொல்றதுக்கு என்ன இருக்கு ஆகாஷ்? அம்மா சொல்றதுதான் எனக்கும் சரி என்று தோணுது!"

ரவிச்சந்திரன் தெளிவாகச் சொல்லி விட, ஆகாஷுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

உணவு முடிந்ததும், அன்னையிடம் வந்தவன், 'சரிம்மா நீங்க சொல்ற மாதிரி நான் கல்யாணம் செஞ்சுக்கறேன்! ஆனால், இப்போ இல்லை. நீங்க மொதல்ல ஆனந்த் கல்யாணத்தை முடிங்க. அப்புறம் எனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணா பார்த்துக் கல்யாணம் செஞ்சுக்கறேன்! எதுக்கு அவசரம் அவசரமா கல்யாண முடிவை எடுக்கணும்? நீங்களே சொல்லுங்க!" என்று அமைதியாகச் சொல்ல, தேவகி அவனை ஆராய்ச்சிப் பார்வையோடு நோக்கினார்.

"என்னம்மா? ஏன் அப்படிப் பார்க்கறீங்க? என் மேல் நம்பிக்கை இல்லையா?" என்ற அவனது கேள்விக்கு,

"இல்லை!" என்று உடனடியாக பதில் வந்தது.

"என்னம்மா இப்படிப் பேசினால் என்ன அர்த்தம்?" என்றவனுக்கு

"உன் மேல் நம்பிக்கை இல்லை என்று அர்த்தம்! நீ இப்போதைக்கு என்னைச் சமாதானப் படுத்த பொய் சொல்றே என்று எனக்கு நல்லாவே புரியுது என்று

அர்த்தம்!" என்று அழுத்தமான பதில் வர, இருந்தாலும் இந்த அம்மாவுக்கு இவ்வளவு புத்திசாலித்தனம் இருந்திருக்க வேண்டாம் என்று தோன்ற, ஆகாஷுக்கு புன்னகை மலர்ந்தது.

"என்னடா சிரிப்பு? இந்த புத்திசாலித்தனம் கூட இல்லைன்னா, உங்க கூட எல்லாம் குப்பை கொட்ட முடியுமா?" என்று தேவகி சொல்ல,

"அம்மா... கலக்கறீங்க போங்க. மைன்ட் வாய்ஸெல்லாம் கேட்ச் பண்றீங்களே!" என்று மகன் அவரை சிலாகிக்க,

"இதென்ன பெரிய விஷயம்? நீ இனிமேல் என்ன செய்யப் போறே என்று கூட எனக்கு தெரியும்! பானுப்ரியாவை பார்த்து, எப்படி உங்க கல்யாணம் நடக்காமல் ஆனந்த்-ரேகா கல்யாணத்தை நடத்தறது எப்படி நடத்தறது என்று பேசப் போகிறாய்!"

வியப்புடன் புருவம் உயர்த்தி, "ம்... பெரிய ஆள்தான் நீங்க!" என்று என்ற ஆகாஷின் பாராட்டை கண்டு கொள்ளாமல்,

"இங்கே பாரு கண்ணா... எனக்கு ஆனந்த் மேல் இருக்கிற பாசத்தை பயன்படுத்தி தப்பிச்சுக்கலாம் என்று நினைக்காதே. நான் செய்யறது ப்ளாக்மெயில்தான். நானே ஒத்துக்கறேன்! ஆனால், நான் செய்யறது உங்க ரெண்டு பேர் நல்லதுக்காகத்தான்! நீ சம்மதம் சொன்னால், உங்க ரெண்டு பேர் கல்யாணமும் ஒரே நாளில் சந்தோஷமா நடக்கும். இல்லைன்னா, ஆனந்த் கல்யாணமும் நடக்காது! உனக்கு இரண்டு நாள் டைம் தரேன். அதுக்குள்ளே உன் முடிவை சொல்லு!"

உறுதியாக சொல்லி விட்டு தேவகி சென்று வி
ஆகாஷ் திகைத்து நின்றான்.

அன்று இரவு, ரவிச்சந்திரன், ''என்ன தேவிம்மா இது
நீயே ஆகாஷுக்கு ஐடியா கொடுக்கிறே? அவளும்
தானே கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிட்டு
இருக்கா? இவங்க ரெண்டு பேரும் சந்தித்து பேசி, ஏத
வது செஞ்சுட்டால் என்ன செய்யறது?'' என்று மனைவி
யிடம் வினவ, தேவகி புன்னகைத்தார்.

''இதுங்க ரெண்டும் சீக்கிரம் பார்த்து பேசினால்தான்
இதுக்கு ஒரு வழி பிறக்கும்!''

''எப்படி அப்படி சொல்றே?''

''இங்க பாருங்கங்க... என்னதான் ரெண்டு பேரு
அவங்க முடிவில் உறுதியா இருந்தாலும், இரண்டு
பேருமே பெரியவங்களை மதிக்கத் தெரிஞ்சவங்க..
கூட பிறந்தவங்க மேல் பாசம் இருக்கிறவங்க.''

''சரிம்மா... அதுக்கும் கல்யாணத்துக்கு சம்மதிக்கி
துக்கும் என்ன சம்மந்தம்? ஒரு விதத்தில, கொஞ்ச
கூட கல்யாணத்தில் இஷ்டமில்லாதவங்களை இப்ப
வற்புறுத்துவதே எனக்குச் சரியா தோணலை!''

''நீங்க சொல்றது சரிதான்! அதுக்காக இவங்கள
அப்படியே விட்டு விடுவதும் சரியா இருக்குமா? சொ
லுங்க?''

''சரிதான்... அப்படியே விட்டுவிட முடியாதுதான்
ஆனால், இவங்க ரெண்டு பேரும் சந்தித்துப் பேசினால்
எப்படி கல்யாணத்துக்குச் சம்மதிப்பாங்க என்று நினை
கிறாய்?''

''எல்லாம் ஒரு கணக்குதான்! யோசிச்சு பாருங்க.
தங்களால் தங்கள் கூட பிறந்தவங்க கஷ்டம் அனுபவிக்
கிறதை ரெண்டு பேருமே விரும்ப மாட்டாங்க. ரெண்டு
பேருக்கும் ஒரு முக்கியமான பொருத்தம் வேற
இருக்கு!'' என்று சொல்லி விட்டு, தேவகி இடைவெளி
விட,

''என்ன? கல்யாணமே வேண்டாம் என்று சொல்றதா?
கல்யாணம் செய்ய ரொம்ப முக்கியமான பொருத்தம்
தான்!'' கேலியாக ரவிச்சந்திரன் சொல்ல,

''இல்லைங்க... ரெண்டு பேருமே மற்றவங்களை
சார்ந்து இருக்கக் கூடாது என்று நினைக்கிறவங்க! அத
னால், நாம வற்புறுத்தி கல்யாணம் செஞ்சு வைச்சாலும்,
ரெண்டு பேருக்குமே எதிர்பார்ப்புகள் இருக்காது!
அதனால் அவங்களுக்குள் கல்யாணத்துக்குப் பிறகு
பிரச்சனை வருவதற்கும் வாய்ப்பு குறைவு! என்று தேவகி
உறுதியாக உரைத்தார்.

''உன் கணக்கெல்லாம் சரிதான்! கல்யாணம் செஞ்சு
கிட்டால் மட்டும் போதுமா? அவங்க சந்தோஷமா வாழ்ந்
தால்தானே அந்த கல்யாணத்துக்கே ஒரு அர்த்தம்?''

கணவர் சொன்னதை ஆமோதிக்கும் விதமாக தலை
யாட்டிய தேவகியிடம், ''இதுக்கும் ஏதாவது கணக்கு
வைச்சுருக்கியா?'' என்றார் அவர்.

''இதுக்கு கணக்கெல்லாம் சரி வராதுங்க! கடவுள் மேல்
நம்பிக்கை வைக்கிறதுதான் சரியான வழி!'' என்று தேவகி,
விரைவில் ஆகாஷும் பானுப்ரியாவும் நல்ல முடிவு
சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக்க ஆரம்பித்தார்.

* * *

அம்மாவின் பேச்சில் இருந்தே அவரது பிடிவாதத்தை உணர்ந்த ஆகாஷ், ''எல்லாம் உன்னால் வந்தது! ஃப்ரீயா பேச்சிலரா இருக்கிறதை விட்டுட்டு எதுக்குடா காதல் என்று மாட்டிட்டு என்னையும் இப்படி மாட்டி விடறே?'' என்று அண்ணன் ஆனந்தின் மீது எரிச்சல்பட்டான்.

''போடா... நானே கடுப்பில் இருக்கேன்! நீ வேற கடுப்பேத்தாதே! அண்ணன் கல்யாணம் எப்படா முடியும்? நமக்கு எப்ப பார்ப்பாங்கன்னு எல்லா தம்பியும் இருப்பாங்க! எனக்குன்னு வந்து வாச்சிருக்கே பாரு!'' என்று தம்பியிடம் கடுப்படித்த ஆனந்திடம்,

''கவலைப்படாதே ப்ரோ... எந்த பிரச்சனையும் இல்லாமல் உங்க கல்யாணம் நடக்க என்கிட்டே ஒரு ஐடியா இருக்கு!'' என்றான் ஆகாஷ்.

''என்ன ஐடியா?'' ஆர்வமாக கேட்ட அண்ணனிடம்,

''நீ ஓடிப் போய் கல்யாணம் செஞ்சுக்கோ!'' என்ற ஆகாஷை, ''இதெல்லாம் ஒரு ஐடியா!'' என்று துப்பாத குறையாக ஆனந்த் பார்க்க,

''ஓடிப் போய் என்றால் ஓடி போய் என்றே ஏண்டா அர்த்தம் எடுத்துக்கறே? ரெஜிஸ்டர் மேரேஜ் செஞ்சுக்கோ... அப்புறம் வீட்டில் சொல்லு! அப்புறம், வேற வழி இல்லாமல், சம்பிரதாயப் படி கல்யாணம் செஞ்சு வைச்சுத்தானே ஆகணும்!'' என்றான் ஆகாஷ்.

''கிழிஞ்சுது போ! ரேகாவை லவ் சொல்ல வைக்கிறதுக்கே எனக்கு ஆறு மாசம் ஆச்சு! அவள் ஓகே சொல்லும் போது கூட, கல்யாணம் ரெண்டு வீட்டு சம்மதத்தோடு தான் நடக்கணும் என்ற கண்டிஷனோடுதான் ஓகேவே சொன்னாள்!'' என்று அலுத்துக் கொண்ட ஆனந்த்,

''இப்போ ரெண்டு பேர் வீட்டிலும் பெரியவங்களால் எந்த பிரச்னையும் இல்லைடா... எல்லாம் இந்த சின்னது களால்தான்!'' என்று சலித்துக் கொண்டதை காதில் வாங்காத, ஆகாஷ், அன்னையின் வார்த்தையைப் பொய் யாக்காமல் அடுத்த நாளே, பானுப்ரியாவை பார்க்க வேண்டும் என்று முடிவெடுத்தான்.

* * *

பானுப்ரியா தந்தையின் மேல் ஏக கடுப்பில் இருந்தாள்.

நிபந்தனை போட்ட அன்றே, தந்தையிடம் முடிவாக, திருமணம் செய்து கொள்வதெல்லாம் தன்னால் முடி யவே முடியாது என்று சொல்லி விட்ட பிறகும், அவளது கோபம் குறையவில்லை.

தன்னை மேலும் வற்புறுத்துவார் என்று அவள் எண்ணி இருக்க, அவளது மறுப்புக்கு அவரிடம் எந்த எதிரொலியும் இருக்கவில்லை!

சும்மா மிரட்டி இருக்கிறார் போல் என்று எண்ணி இருந்தவளுக்கு அடுத்த நாளே அன்னையிடம் இருந்து, ரேகாவின் திருமண ஏற்பாடுகளைத் தந்தை கவனிக்கப் போவதில்லை என்று தெரிய வர, கோபம் அதிகரித்தது.

''என்னம்மா இது? ஒண்ணு வாங்கினால் ஒண்ணு ஃப்ரீ என்கிற மாதிரி! உங்க வீட்டுக் காரருக்கு ஏன் இப்படி புத்தி போகுது?''

அன்னையிடம் தன் எரிச்சலையும் கோபத்தையும் காட்ட, இந்த நாடகத்தின் சூத்திரதாரியான வசந்தியோ, ''அவரைப் பற்றிதான் உனக்கு தெரியுமே! அவர்

சொன்னால் சொன்னதுதான்!'' என்று அப்பாவியாக சொல்லித் தப்பிக்கப் பார்த்தார்.

''அவர் சொன்னால் சொன்னதுதான்னா, அவரோட பொண்ணு நான்! நானும் அப்படித்தான்!'' என்று ப்ரியாவும் சிலிர்த்துக் கொள்ள,

''என்னவோ போ! நீதான் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிட்டு இருக்கே! ரேகாவுக்காவது கல் யாணம் ஆகறதைப் பார்க்கலாம் என்று ஆசையா இருந் தேன்!'' என்ற அங்கலாய்ப்போடு வசந்தி நகர்ந்து விட, ப்ரியாவுக்குதான் தர்ம சங்கடமானது.

இது திட்டமிட்ட ப்ளாக்மெயில்தான் என்று தெரிந் தாலும், அதில் தந்தை உறுதியாக இருக்கிறார் என்று அடுத்து வந்த நாட்களில், அவரது செயலில் இருந்தே தெரிந்து விட, ப்ரியாவுக்கு மண்டை காய்ந்தது.

தன் தவறு என்று எதுவும் இல்லாவிட்டாலும், ரேகாவைப் பார்க்கவே தர்ம சங்கடமானது.

இவள், தலையைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, ''பானு... எனக்காக நீ யோசிக்காதே! மற்றவங்களுக்காக எந்த வேலையையும் செய்யலாம். ஆனால், விருப்பம் இல்லாமல், கல்யாணம் மட்டும் செஞ்சுக்கக் கூடாது! நீ இப்படி டென்ஷனா இருக்கிறதை விட்டுட்டு எப்பவும் போல இரு! என் விஷயத்தில் என்ன நடக்குதோ அது நடக்கட்டும்!'' என்று ரேகா, தங்கையை சமாதானப் படுத்த, ப்ரியாவுக்கு இன்னும் கவலை அதிகரித்தது!

தன்னிடம் மட்டுமல்லாமல், தனக்காக அன்னை யிடமும் ரேகா பேசியதைக் கேட்ட பிறகு, ப்ரியாவுக்கு கவலை கூடியதே தவிர குறையவில்லை.

''என்னம்மா இது? அப்பாதான் சொல்றாருன்னா நீங்களும் அவர் கூட சேர்ந்து பானுவை இப்படி வாட்ட றீங்க? அவள் கல்யாணம் செஞ்சுகிட்டால் எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஆனால், இப்படி வற்புறுத் தறது சரியா அம்மா? அவளுக்கு எடுத்து சொல்லி புரிய வைச்சு, அவளுக்குப் பிடிச்ச மாதிரி மாப்பிள்ளை பார்க் கிறதை விட்டுட்டு, இப்படி கண்டிஷன் போடறது எனக்குச் சரியாவே படலை! என் கல்யாணம் தள்ளி போகுதேன்னு இதை நான் சொல்லலைம்மா... எப்பவும் கலகலன்னு பேசிட்டு சந்தோஷமா இருக்கிறவள், இப்படி யோசனையும் கவலையுமா இருக்கிறதைப் பார்க்கவே எனக்குக் கஷ்டமா இருக்கு!''

''ரேகா, சில விஷயங்கள் நடக்கும்போது நமக்கு கஷ்டமா இருக்கும். ஆனால், கொஞ்ச காலம் கழிச்சு பார்க்கும்போது, எல்லாம் நல்லதுக்குத்தான் நடந்தது என்று உணர்வோம். இதுவும் அந்த மாதிரி ஒரு விஷ யம்தான்! அதனல் நீ கவலைப் படாமல் இரு. எல்லாம் நல்லபடியாவே நடக்கும்!'' என்ற அன்னையின் பேச்சைக் கேட்ட பிறகு, அன்னையிடமாவது பேசிப் புரிய வைக்க லாம் என்று நினைத்திருந்த ப்ரியாவின் எண்ணத்தில் மண் விழுந்தது.

என்னதான் தங்கையிடம், அவளுக்காக அவள் விருப்பத்துக்கு மாறாக எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என்று சொல்லி விட்டாலும், ரேகாவின் கண்களில் குடி கொண்டிருந்த நிராசையை உணர முடியாவிட்டால், இத்தனை வருட சகோதரப் பாசத்துக்கு அர்த்தம் இருக் கிறதா என்ன?

அடுத்து வந்த நாட்களில் தந்தையிடம் அவள் பேச முயல, ''பானு! நான் சொன்னது சொன்னதுதான்! அதில் எந்த மாற்றமும் இல்லை! இதைப் பற்றி விவாதிக்க வேற எதுவுமே இல்லை! முடிவு உன் கையில்!'' என்பதோடு, அவரும் எதுவும் பேசத் தயாராக இல்லை!

இவருடன் இதற்கு மேல் பேசுவது சரி வராது! வேறு வழிதான் பார்க்க வேண்டும் என்று யோசிக்க ஆரம் பித்தவளுக்கு, ஆகாஷிடம் பேசுவதுதான் சரியான தீர்வாகப் பட்டது.

அடுத்த நாள், ஆகாஷின் எண்ணைக் கண்டு பிடித்து, அவள் தயக்கத்துடன் அவனைத் தொடர்பு கொண்ட போது, முதல் மணியிலேயே அழைப்பு எடுக்கப்பட்டது.

''ஹலோ மிஸ்.பானுப்ரியா! உங்களுக்கு நூறு ஆயுசு! இப்போதான் உங்களுக்கு கால் செய்யணும் என்று நினைச்சுட்டு இருந்தேன்!''

எதிர்முனையில் இருந்து வந்த உற்சாகமான குரலில் திகைத்து நின்ற ப்ரியாவுக்கு, ''அடக் கடவுளே! இவ னுக்கு எப்படி என் நம்பர் தெரிந்தது?'' என்று கேள்வியை விட, ''இவ்வளவு உற்சாகமாக பேசறான் என்றால், இவ னிடம் இருந்து தனக்கு எந்த உதவியும் கிடைக்காதோ!'' என்ற கவலை பெரிதாகி விட, மௌனித்து நின்றாள்.

''ஹலோ? ஹலோ? லைன்ல இருக்கீங்களா?'' என்றதற்கும், அவளிடம் இருந்து பதில் வராமல் போக, ''அடக் கடவுளே! பாவம் காது கேட்காதோ? அப்புறம் எதுக்கு போன் செஞ்சாங்க?'' என்று அவன் வாய் விட்டே யோசிக்க, தன் கவலையில் இருந்து வெளியே வந்த ப்ரியா,

''ஹலோ! கொஞ்ச நேரம் பேசலைன்னா காது கேட்கலை என்று சொல்லிடுவீங்களா?'' என்று அதட்ட,

''சாரி மிஸ்.பானுப்ரியா! பேசலை என்றால், பேச வராதோ என்றுதான் சொல்லி இருக்கணும்! காது கேட் காதோ என்று சொன்னது தப்புதான்!'' என்று பவ்யமாக மன்னிப்பு வேண்டினான்.

அவனது கேலியில் கோபம் சுறுசுறுவென ஏறினாலும், இன்னும் பேசாமல் இருந்தால், இன்னும் வேறென்ன சொல்வானோ என்று எண்ணியவளாக, ''உங்க சாரி ஏற்றுக் கொள்ளப் பட்டது!'' என்று அமர்த்தலாகச் சொல்லி விட்டு,

''உங்களை கொஞ்சம் நேரில் பார்க்கணும்!'' என்றாள்.

அவள் தன் மன்னிப்பை ஏற்றுக் கொண்ட விதத்தில் புன்னகை மலர, மேலும் அவளை வம்பிழுக்க வேண் டும் என்று அவனுக்குத் தோன்றியது.

''நான் நீங்க நினைக்கிற அளவுக்கு கஞ்சன் எல்லாம் இல்லைங்க! கொஞ்சம் என்ன... நீங்க என்னை முழு சாவே பார்க்கலாம்!''

''ஷப்பா! முடியலை சார்! உங்களுக்கு நகைச்சுவை உணர்வு ஜாஸ்தி என்று கஷ்டப்பட்டாவது நான் ஒத்துக்கறேன்! ஆனா, பாருங்க, நீங்க உண்மையிலேயே நல்ல ஜோக் சொன்னாலும், இப்போதைக்கு அதை ரசிக்கிற மன நிலையில் நான் இல்லை! சோ, நாம எப்போ, எங்கே சந்திக்கலாம் என்று கொஞ்சம்...'' என்றவள், ''சாரி... முழுசா சொல்றீங்களா?'' என்று திருத்தி சொல்ல, ஆகாஷுக்கு புன்னகை விரிந்தது.

எங்கே, எப்போது சந்திக்கலாம் என்று முடிவு செய்த பிறகே அழைப்பை துண்டித்த ப்ரியாவுக்கு, எல்லாம் நல்ல படியாக நடக்க வேண்டுமே என்ற கவலை எழுந்தது.

ஆகாஷுக்கு பானுப்ரியா எதற்காக அவனை சந்திக்க எண்ணுகிறாள்? என்று தோன்றினாலும், அவன் காரணத்தை அவளிடம் கேட்கவில்லை! எப்படியும் அவன் பேச எண்ணுகிற விஷயம், நேரில் பேசியாக வேண்டிய விஷயம்!

அவளே அழைத்தது நல்லதுதான்! ஆனால் அழைத்தவள் எதற்கு பேசாமல் இருந்தாள்? ஒரு வேளை வெட்கத்தில் பேசாமல் இருந்திருப்பாளோ என்று தோன்ற, அதன் பிறகு அவள் அப்பளமாய் பொரிந்து பேசிய விதம் அப்படி இருக்காது என்று எண்ண வைத்தது.

அவளுக்கு இந்த திருமணம் நடப்பதில் ஒப்புதல் இருக்கும் பட்சத்தில், அவளிடம் எப்படி இந்த திருமணத்தைத் தடுப்பதுப் பற்றிப் பேசுவது என்ற கவலை ஆகாஷுக்கு எழத்தான் செய்தது. இருந்தாலும் பேசித்தான் ஆக வேண்டும் என்று முடிவு செய்தவன், அவளைச் சந்திப்பதற்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

4

வேலையில் இருந்து வீட்டுக்கு வந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வெளியே கிளம்பத் தயாரான

தங்கையையே பார்த்துக் கொண்டிருந்த ரேகாவிடம் வந்த ப்ரியா, "ரேகா... உன் ஆளோட தம்பியைத்தான் பார்க்கப் போறேன்! நல்ல முடிவோடு வரேன் பாரு!" என்று சொல்ல, ரேகா விழிகளை விரித்தாள். விழிகளில் ஆச்சரியத்தோடு பயமும் கலந்திருந்தது.

"பார்த்துப் பார்த்து... ரொம்ப முழிக்காதே! ஏதாவது ஏடாகூடம் செய்துடுவேனோ என்று பயப்படாதே!" என்று சொல்லி விட்டு, அதற்கு மேல் அவளிடம் பேச்சு கொடுக்காமல் வேகமாகக் கிளம்பினாள்.

ஆகாஷ் வரச் சொல்லி இருந்த உணவகத்துக்கு தன்னுடைய ஸ்கூட்டியில் வந்தவள், ஓரமாக இருந்த மேஜையின் அருகே வந்து அமர்ந்த நேரம், அவளுடைய கைப்பேசி அழைத்தது.

ரேகாதான் அழைத்திருந்தாள்.

"பானு... நீ கிளம்பின வேகத்தில் எனக்கு பேச்சே வரலை. ஆகாஷை எங்கே பார்க்கப் போறே! அவரை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பே? என்ன பேசப் போறே?"

படபடப்புடன் அவள் கேள்விகளை அடுக்க, "ரேகா... இப்போ எதுக்கு இப்படி படபடக்கிறாய்? நீ ஆனந்த் போட்டோஸ் காண்பிக்கும்போது, ஒரு போட்டால ஆடு திருடிட்டு முழிக்கிற மாதிரி கூட ஒண்ணு நின்னுட்டு இருந்ததே... அதானே ஆகாஷ்? எனக்கு ஞாபகம் இருக்கு! அடையாளம் கண்டுபிடிச்சுடுவேன்! பயப்படாதே! என்ன பேசப் போறேன் என்று இப்போ சொல்ல முடியாது!" என்று அவள் சொல்லி முடித்து அழைப்பைத் துண்டித்து, நிமிர்ந்த நேரம், அவள் எதிரே நின்று

கொண்டிருந்தான். ஆடு திருடியவன்... இல்லை... இல்லை... ஆகாஷ்.

ஒரு கணம், ப்ரியாவுக்கு தான் சொன்னதைக் கேட்டிருப்பானோ என்று ஐயம் தோன்றியது. அடுத்த கணமே, 'ஹ... கேட்டால் கேட்டுட்டு போகட்டும்!' என்ற அலட்சியம் தோன்ற,

''ஹலோ மிஸ்டர்.ஆகாஷ். நான்தான் பானுப்ரியா!'' என்று தன்னை அவனிடம் அறிமுகம் செய்து கொண்டாள்.

அவள் முகத்தில் தோன்றிய சின்ன அதிர்வு, பிறகு தோன்றிய அலட்சியம் இதெல்லாம் ஆகாஷின் கண்களுக்குத் தப்பவில்லை!

''ஆடு திருடினவன் மாதிரி இருக்கான் என்று சொல்லிட்டு, எதுவுமே தெரியாதவள் மாதிரி பேசறதைப் பாரு! கொழுப்பு பிடிச்சவள்தான்!'' என்று மனதுக்குள் கறுவிய ஆகாஷ்,

''நைஸ் மீட்டிங் யு! மிஸ்.பானுப்ரியா! ஆனந்த் பானுரேகாவோட போட்டோஸ் காண்பிச்சு இருந்தான். ஒரு போட்டோல அவங்க கூட இருந்தது அவங்க தம்பி என்று நினைச்சேன். இப்போதான் தெரியுது! அது நீங்கன்னு!''

கொஞ்ச நாள் ப்ரியா பாய் கட் வைத்திருந்தாள்.

''நீ போடற பேண்ட் சட்டைக்கும், இந்த ஹேர் கட்டிங்குக்கும் சட்டுன்னு பார்க்க ஆம்பளை புள்ளை மாதிரியே இருக்குடி!'' என்று தினமும் அன்னை பாட்டு பாடுவதை சகிக்க முடியாமல், மீண்டும் தோள் வரை முடி வளர்க்க ஆரம்பித்தாள்.

அப்போது எடுத்த புகைப் படத்தை ரேகா ஆனந்துக்கு கொடுத்திருக்கிறாள் போல!

அம்மா எப்போதும் சொல்வதுதான் என்றாலும், இவன் எப்படி சொல்லலாம் என்று ப்ரியாவுக்கு கோபம் வந்தது.

அவளுக்கு தோழிகள் யாராவது 'உனக்கு ஆம்பளை மாதிரி தைரியம் ஜாஸ்தி!' என்று புகழ்ச்சியாக சொன்னாலே, அதென்ன தைரியம் ஆண்களுக்கே உரித்தான சொத்து மாதிரி பேசுகிறார்கள் என்று கோபம் வரும்!

பழிக்குப் பழி வாங்கி விட்ட திருப்தியோடு ஆகாஷ் அமர, ப்ரியாவுக்கு கோபம் வந்தாலும், தான் அவனைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு விட்டான் என்று அவளுக்குப் புரிந்தது.

இப்போதைக்கு கோபத்தைக் காட்டுவதை விட, பேச வந்த விஷயம் தான் முக்கியம் என்று தோன்ற, அவள் கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு அமர்ந்த விதத்தைப் பார்க்க, ஆகாஷுக்கே என்னவோ போல் இருந்தது.

''சாரி... சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன்!'' என்று தழைந்த குரலில் அவன் சொல்ல, சட்டென்று அவனை நிமிர்ந்து நோக்கிய ப்ரியாவின் கண்களில் ஆச்சரியம் இருந்தது.

''சாரி... நானும் அக்கா கிட்ட சும்மா விளையாட்டுக்குத்தான் அப்படி சொன்னேன்!'' என்று அவளும் மன்னிப்பு கோர,

''விடுங்க... நீங்க சொன்னதுக்கும் நான் சொன்னதுக்கும் சரியா போச்சு! என்ன சாப்பிடறீங்க?'' என்று இயல்பான பேச்சு வார்த்தையை ஆரம்பித்தான் ஆகாஷ்.

''எனக்கு ஆரஞ்ச் ஜூஸ்!'' என்று அவள் சொல்ல அவன் தனக்கு ''பைன் ஆப்பிள் ஜூஸ்!'' என்று சொல்ல பேரரை அனுப்ப, ப்ரியா நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

''இங்கே பாருங்க மிஸ்டர்.ஆகாஷ். நான் ரொம்ப சுதந்திரமா இருக்கணும் என்று நினைக்கிறவ! கல்யாண அதுக்கு ஒரு தடையா இருக்கும் என்பதால், எனக்கு கல்யாணம் செஞ்சுக்கிற ஐடியாவே இல்லை! பட், எங்க வீட்டில் உங்களைக் கல்யாணம் செஞ்சுகிட்டால்தான் உங்க அண்ணனோட என் அக்கா கல்யாணம் நடக்கும் என்று கண்டிஷன் போடறாங்க!''

மடமடவென்று சொல்லிக் கொண்டே வந்த ப்ரியா ஆகாஷ் இப்போது உண்மையிலேயே விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, சற்றே நிறுத்தி, ''என்ன?'' என்று விசாரித்தாள்.

''இல்ல... எங்க வீட்டில்தான் அப்படி கண்டிஷன் போடறாங்க என்று நினைச்சேன்! இப்போதான் தெரியுது... இது ரெண்டு வீட்டு ஆளுங்களும் சேர்ந்து செய்யற சதி என்று!''

''உங்க வீட்டிலுமா? அடக் கடவுளே! என் நிலைமையை எடுத்துச் சொல்லி, உங்க வழியா இந்த பிரச்சனையைத் தீர்க்கலாம்னு நினைச்சேனே!'' என்று ப்ரியா தலையில் கை வைத்தாள்.

''யெஸ்! உங்களை மாதிரிதான் நானும்! எனக்கு இந்தக் கல்யாணம் என்றாலே அலர்ஜி! எனக்கு கல்யாணத்தில் விருப்பமில்லை என்பதை உங்களிடம் சொல்லி, உங்க வழியா இந்த கல்யாணத்தை தடு

கணும் என்று நினைச்சுதான் நானும் இங்கே வந்தேன்!'' என்ற ஆகாஷின் குரலிலும் கவலை இருந்தது.

சற்று நேரம் இருவரும், தாங்கள் எண்ணி வந்தது நடக்காதோ என்ற கவலையில் மௌனம் காத்தனர்.

ஆகாஷ்தான் மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

''நம்ம வீட்டு ஆளுங்க நம்ம உடன்பிறப்புகளின் காதலை, நமக்கு கல்யாணம் செஞ்சு வைக்க ஒரு வாய்ப்பா மாத்திகிட்டாங்க என்று தோணுது!''

''ஓ! ஏன் உங்களுக்கு கல்யாணம் என்றால் பிடிக்காது?'' தன்னைப் போலவே எண்ணம் கொண்ட ஒருவனை சந்தித்த சந்தோஷத்தில், ப்ரியா தன் கவலையைத் தற்காலிகமாக மறந்து வினவ,

''கல்யாணம் செஞ்சுக்கிறவங்களுக்கு என்ன பெரிசா காரணம் இருக்கு? கல்யாணம் வேண்டாம் என்று சொல்றதுக்கு மட்டும் ஏதாவது காரணம் இருக்கணுமா என்ன? எல்லாரும் செஞ்சுக்கிறாங்க என்று நானும் கல்யாணம் செஞ்சுக்கணுமா என்ன? எனக்கு இஷ்டமில்லை! உங்களை மாதிரியேதான்! எனக்கும், என் சுதந்திரத்தில் யாரும் தலையிடுவது பிடிக்காது! யாரும் என்னைக் கேள்வி கேட்கிறதும் எனக்குப் பிடிக்காது! சோ, கல்யாணமே வேண்டாம் என்று இருக்கேன்!''

''ஓ! கேள்வி கேட்கிறது பிடிக்காதா? அப்போ... கோர்ட்டில் ஜட்ஜ் ஏதாவது கேள்வி கேட்டால் என்ன செய்வீங்க?'' என்று கண்கள் பளிச்சிட வினவியவளைக் கண்டு அவனுக்கும் புன்னகை மலர்ந்தது.

''நான் ஏன் வக்கீல் தொழிலை எடுத்தேன் தெரியுமா?'' என்றவன், 'நான் என்ன வேலை செய்யணும் என்று

நானே தீர்மானிக்கணும் என்றுதான்! எனக்கு ஒரு
தருக்கு கீழே வேலை பார்க்கிறது எல்லாம் ஒத்து வரா
இந்த தொழிலில் யாரும் என்னைக் கட்டுப் படுத்
முடியாது! நான் யாருக்கு வாதாடணும் என்று நான்தா
முடிவு செய்வேன்! கல்யாணம் ஆகிவிட்டால், மனை
என்று வரும் ஒருத்திக்கு கேள்வி கேட்கிற உரி
எல்லாம் வந்துடும்! அதான்... இப்படியே தனிக்காட்
ராஜாவா இருக்க முடிவு செஞ்சிருக்கேன்! அது பொறு
காமல்தான் எங்க வீட்டில் இந்த கண்டிஷன் எல்லா
போடறாங்க!'' என்று ஆகாஷ் அலுத்துக் கொள்
ப்ரியாவின் முகம் மலர்ந்தது.

''சோ... கல்யாணம் வேண்டாம் என்று சொல்ற நம்
ரெண்டு பேரையும் சிக்க வைக்கத்தான் இந்த மிரட்டல்
இல்லையா? கல் அடித்து பார்ப்போம், விழுந்த
மாங்காய் போனால் கல்லு என்கிற மாதிரி? நா
ஒத்துக்கலை என்றாலும், உங்க அண்ணனுக்கும் எ
அக்காவுக்கும் கல்யாணம் நடக்கும்! அப்படித்தானே?'

உற்சாகமான படபடப்புடன், ப்ரியா வினவியதும்
''மேலோட்டமா பார்த்தால் அப்படித்தான்! ஆனால், இ
கொஞ்சம் சீரியசான மிரட்டல்! அவங்க பேச்சை மீ
ஆனந்தும், உங்க அக்காவும் எதுவும் செய்ய மாட்டாங்
என்பதுதான் அவங்க மிரட்டலுக்கு அஸ்திவாரமே!
என்று ஆகாஷ் பதில் சொல்ல, ப்ரியாவும் தலையாட்
அதை ஆமோதித்தாள்.

''கரெக்ட்! எங்க அக்கா அப்பா மேல் இருக்கி
பயத்தை மீறி காதலிச்சதே அதிசயம்! அதை அவர்கிட்
தைரியமா சொன்னது அதுக்கு மேல் அதிசயம்! இதுக்

மேல் அவள்கிட்ட இருந்து எந்த அதிசயத்தையும் எதிர்பார்க்க முடியாது!''

அலுப்புடன் சொன்ன ப்ரியா, ''பட், நம்ம ரெண்டு பேர் காரணமா, அவங்க கல்யாணம் தடைபடுவதோ, தள்ளி போறதோ எனக்கு கஷ்டமா இருக்கு!'' என்று தன் மனக்கவலையைப் பகர,

''எனக்கும்தான்!'' என்ற ஆகாஷ், ''இதுக்கு ஒரு வழி இருக்கு!'' என்றான்.

''என்ன? என்ன? சொல்லுங்க?'' என்று ப்ரியா பரபரத்தாள்.

''நாம ரெண்டு பேரும் கல்யாணத்துக்கு ஒத்துக் கலாம்!'' என்று சொல்ல ஆரம்பித்தவனை பார்வையால் ப்ரியா எரிக்க,

''வெய்ட்! முழுசா சொல்லி முடிச்சுடறேன்!'' என்றவன்,

''கல்யாண நாள் அன்று நானோ, இல்லை நீங்களோ இல்லை ரெண்டு பேருமோ, மண்டபத்தை விட்டு ஓடி போயிடலாம்!'' என்று முடிக்க, ப்ரியா அவனை வெறித்து நோக்கினாள்.

''என்ன?'' என்று புருவம் உயர்த்தியவனிடம்,

''நீங்க ஒரு வக்கீல்! எடுக்கிற கேசில எல்லாம் வெற்றி அடைகிறவர் என்று கேள்வி பட்டேன்!''

ப்ரியா சொன்னதும், ''சரியாதான் கேள்விப்பட்டிருக் கீங்க!'' என்று பெருமிதப் புன்னகையுடன் சொன்னவனை முறைத்தவள்,

''எடுக்கிற கேசில் எல்லாம் வெற்றி அடையணும் என்றால், கொஞ்சமாவது மூளை இருக்கணும் இல்ல?'' என்று வினவினாள்.

''அஃப் கோர்ஸ்!'' என்றவனுக்கு, அவள் அவனைக் கேலியாக ஏதோ சொல்லப் போகிறாள் என்று புரிந்து, கண்களில் சுவாரசியம் தோன்றியது.

பெருமிதமான பாவனையுடன் அவன் சொன்ன விதம் எரிச்சல் தர, ''நீங்க சொல்ற ஐடியாவை பார்த்தால், உங்களுக்கு அடியோடு மூளை என்பதே இல்லை என்கிற மாதிரி இருக்கு! ஒரு வேளை, அப்போ அப்போ அதை கழட்டி வைச்சுடுவீங்களோ? இப்போ அந்த மாதிரி ஒரு நேரமா?'' கடுப்பை மறைத்து அவள் அப்பாவியாக வினவ, தன்னைக் கேலி செய்கிறாள் என்பதையும் மீறி, அவளது பாவனையும் பேச்சும் அவனைச் சிரிக்க வைத்தது.

''வேற என்ன வழி இருக்கு? நீங்கதான் சொல்லுங்களேன்? அம்மா என்னோட எந்த பேச்சையும் கேட்கத் தயாரா இல்லை! அப்பா அம்மாக்கு ஃபுல் சப்போர்ட்! அண்ணனோ கல்யாணம் தள்ளி போற கடுப்பில் இருக்கான்!''

ஆகாஷ் தன் பக்கத்தை எடுத்துரைக்க, தானும் அதே நிலையில் இருப்பதை உணர்ந்தாலும் ''என்னதான் அப்பா சொல்றதில் எனக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அவரைத் தலை குனிய வைக்கிற மாதிரி ஒரு செயலை என்னால் எப்பவும் செய்ய முடியாது!'' என்று அவள் உறுதியாக உரைக்க, அவள் சொல்வதில் இருந்த நியாயம் புரிய அவனும் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான்.

''சரி ப்ரியா, ஒண்ணு செய்யலாம்! அவங்க பிடிவாதமா இருக்கிற மாதிரியே நாமளும் நம்ம முடிவில் பிடிவாதமா

இருக்கலாம்! எத்தனை நாள்தான் அவங்களும் காத்திருக்க முடியும்? ஏதோ ஒரு நேரம், இவங்களை மாற்ற முடியாது என்ற நிதர்சனம் புரிஞ்சு, ஆனந்த்-ரேகா கல்யாணத்தையாவது நடத்திடலாம் என்ற முடிவுக்கு வரத்தானே வேணும்?''

ஆகாஷ் சொன்னது சரியென்று தோன்றினாலும், ''அவங்களும் அவங்க பிடிவாதத்தைத் தொடர்ந்தால்?'' என்ற கேள்வி எழ, அதை அவனிடம் கேட்கவும் செய்தாள்.

''ஒரு மாசம் வரைக்கும் இப்படியே இருந்து பார்க்கலாம்! அப்புறமும், அவங்க பிடிவாதமா இருந்தால், வேற ஏதாவது வழி யோசிக்கலாம்!''

ஆகாஷ் சொல்வதைக் கேட்டதும், அதுவே சரி என்று தோன்றியது.

ஆனால், அடுத்த நாளே அவர்கள் மீண்டும் சந்திக்கும் நிலைமை உருவாகப் போவது தெரியாமல், இருவரும் விடை பெற்றுக் கொண்டனர்.

* * *

''ப்ளீஸ் பா... உங்களை மீறி எப்பவும் நான் பேசியதில்லை. ஆனால், இந்த விஷயத்தில் என்னால் அப்படி இருக்க முடியலை. நீங்க ஆகாஷை கல்யாணம் செஞ்சுக்க சொல்லி பானுவை கட்டாயப் படுத்தறது எனக்கு சரியாய் படலைப்பா... கல்யாணம் என்கிறது முழு மனசோட, முழு விருப்பத்தோட செஞ்சுக்க வேண்டிய விஷயம்பா...''

ரேகா தன் தந்தையிடம் ப்ரியாவுக்காகப் பரிந்து பேச, ''எனக்கும் புரியாதும்மா... ஆனால், அவளைக் கல்யாணம் செஞ்சுக்க வைக்க வேற என்ன செய்யறது

என்று புரியலை. அதான், இப்படி செய்ய வேண்டியதா போச்சு!'' என்ற முத்துக்குமரன் குரலிலும் கவலை இருந்தது.

தந்தை தன்னுடைய இந்தப் பேச்சில் கோபம் கொள் வார் என்று சற்றே பயத்துடனே பேச்சை ஆரம்பித்த ரேகா, அவரது வார்த்தைகளைக் கேட்டதும் தைரியம் வரப் பெற்று, தான் நினைத்ததை தைரியமாகப் பே ஆரம்பித்தாள்.

''பானு கல்யாணம் செஞ்சுக்கணும் என்பதுதான் என்னோட ஆசையும்பா. ஆனால், அது அவளோட முழு ஒப்புதலோடு நடக்கணும் என்பதுதான் என்னோட ஆசை'' என்றவள்,

''இவ்வளவு நாள் கல்யாணம் வேண்டாம் என்று நினைச்சிட்டு இருந்தவளை திடீர்னு கல்யாணம் செ சுக்கோ... அதுவும், பார்த்து பழகாத ஆளைப் பார்த்து கல்யாணம் செஞ்சுக்கோ என்று சொல்றது சரியா வராது அதனால்...'' என்று தயங்கியவள்,

''இந்தப் பிரச்சனைக்கு எனக்கு ஒரு வழி தோணுது நான் சொல்லட்டுமா?'' என்று வினவ.

''சொல்லும்மா... நீயும் பானுவும் கல்யாணம் செஞ் கிட்டு சந்தோஷமா இருக்கணும் என்பதைத் தவிர எ களுக்கு வேற என்ன வேண்டும் சொல்லு?'' என்ற தந்தை.

''பானு கல்யாணம் செஞ்சுக்க சம்மதித்தால்தான், எ கல்யாணம் என்று சொன்னீங்களே, அது அப்படி இருக்கட்டும்!'' என்று தந்தையை திகைக்க வைத்தவ

''ஆனால், உடனே பதில் சொல்லணும் என்றோ, இல்லை ஆனந்த் தம்பியைக் கல்யாணம் செஞ்சுக் கணும் என்றோ வற்புறுத்தாதீங்க!'' என்று அவரைக் குழப்பத்தில் ஆழ்த்தினாள்.

''வேற என்னம்மா செய்யணும்?''

''அவளுக்கு ஒரு வருஷம் டைம் கொடுங்கப்பா... அவளுக்கும் பிடிச்ச மாதிரியான ஆளைக் கல்யாணம் செஞ்சுக்க ஒரு வாய்ப்பு கொடுங்க! ஒரு வருஷம் கழிச் சும் அவள் மனசு மாறலைன்னா, உங்க விருப்பப்படி நடக்கணும் என்று ஒரு கண்டிஷன் போடுங்க!''

தெளிவாக ரேகா சொல்ல, தனக்குத் தேவையானதைக் கூட, சொல்லத் தயங்கும் ரேகாவா இப்படி பேசுகிறாள் என்று முத்துக்குமரன் வாயைப் பிளந்தார்.

''சரிம்மா... நீ சொல்றதும் சரியாதான் தோணுது. ஆனால், ஒரு வருஷம் என்பது ரொம்ப அதிகம். ஆறு மாசம் டைம் கொடுக்கிறேன்! அதுக்கு மேல என்றால், மாப்பிள்ளை வீட்டிலும் தப்பா எடுத்துப்பாங்க இல்ல?'' என்றவர்,

தங்கள் முடிவை ஆனந்தின் தந்தை மற்றும் அன்னை யிடம் சொல்ல, முதலில் தயங்கினாலும், அவர்களுக் குமே அதுவே சரி என்றே தோன்றியது. இதையே, ஆகா ஷிடம் சொல்ல வேண்டும் என்று இருவரும் தீர்மானித் தனர்.

* * *

ஆகாஷுடன் பேசி விட்டு, கொஞ்சமே கொஞ்சம் தெளிந்த முகத்துடன் வீட்டினுள் நுழைந்த பானுப்ரியா, ''வா பானு! உன்கிட்ட பேசணும் என்றுதான் காத்துட்டு

இருக்கேன்!'' என்று தந்தை சொன்னதும், ஆச்சரியத்துடன் தந்தையை நோக்கினாள்.

''சாரிம்மா பானு... உன்னை ஆகாஷை கல்யாணம் செஞ்சுக்க சொல்லி வற்புறுத்தியது தப்புதான்!''

முத்துக்குமரன் சொல்ல, ப்ரியாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

தந்தை சாரி சொன்னது ஒரு புறம் ஆச்சரியமாக இருக்க, தான் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்ளும் தந்தையின் வார்த்தைகள் அவளது ஆச்சரியத்தை அதிகப்படுத்தின.

'ஹப்பா! பிரச்சனை தீர்ந்தது!' என்று அவள் பெரு மூச்சை வெளியேற்றிய நேரம், அடுத்து தந்தை சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அவள் தலை சுற்றிப் போனாள்.

ஆறு மாசம் அவகாசம்! அதற்குள், அவளுக்கு பிடித்தமான துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம்! அதற்கான முழு உரிமையும் அவளுக்குத்தானாம்! சகோதரிகள் இருவரின் திருமணமும் ஒரே நாள், ஒரே மண்டபத்தில் நடைபெற வேண்டுமாம்!

என்ன பேத்தல் இது! திருமணமே வேண்டாம் என்கிறவளுக்கு சலுகை தருகிற மாதிரியான அவரது பேச்சு எரிச்சலைத் தர, ரேகாவையும் அன்னையையும் நோக்கியவளுக்கு, அவர்கள் முகத்தில் இருந்த புன்னகை, இது அவர்களுக்கும் ஒப்புதல்தான் என்பதைப் பறைசாற்றியது.

திகைத்து நின்றவளைக் கண்டு கொள்ளாமல், மூவரும் அவரவர் வேலையைப் பார்க்க சென்று விட,

தனித்து நின்ற ப்ரியாவுக்கு, 'இதென்ன புது பிரச்சனை!' என்ற கவலை தொற்றிக் கொண்டது.

யாரிடமும் பேசத் தோன்றாமல், மொட்டை மாடிக்கு சென்று அமர்ந்தவளுக்கு, ஆகாஷிடம் பேசிய பிறகு, பிரச்சனை தீர்ந்து விடும் என்று நம்பி இருந்தது நினைவுக்கு வர, அவளது கை அவளையும் அறியாமல், ஆகாஷின் எண்களை அழுத்தியது.

''என்ன ப்ரியா?''

அவனது அழைப்பில் சொல்ல வந்தது மறந்து, எரிச்சல் மண்டியது!

ரொம்பவும் உரிமையாக அதென்ன ப்ரியா என்று அழைக்கிறான்? நேரில் சந்தித்த போதும் இப்படி அழைத்தது நினைவுக்கு வந்தது! அப்போதிருந்த மன நிலையில் அது மனதுக்குள் செல்லவில்லை!

''என் பேர் பானுப்ரியா!'' என்றவள் குரலில் கடுப்பு நிரம்பி வழிய,

''முழு பெயரையும் நீட்டி முழக்கணுமா என்று நினைத்தேன்!'' என்று அவன் பதில் சொல்ல,

''எல்லாரும் என்னை பானு என்று கூப்பிடுவாங்க!'' என்றவள் குரலில் கடுப்பு சற்றும் குறையவில்லை!

''ம்... அண்ணி பேரிலும் பானு என்று இருப்பதால், இப்படி கூப்பிட்டேன்! சரி இனிமேல் ஷார்ட்டா BP என்று கூப்பிடறேன்!'' என்று சொல்லி அவளது BPயை உண்மையிலேயே ஏற்றி விட்டான்.

எரிச்சலில் பல்லைக் கடித்து விட்டு, இப்போது இருக்கும் பிரச்சனையில் இந்தப் பேச்சு தேவையா என்று

தோன்ற, ''ப்ரியா என்றே கூப்பிட்டு தொலைங்க!'' என்று கடுப்புடன் அனுமதி வழங்கியவளிடம்,

''ஏன் BP நல்லா இருக்கே? உங்களுக்கு பொருத்தமாகவும் இருக்கு!'' என்று வம்பு வளர்த்தவள்,

''கொஞ்சம் வாயை மூடிட்டு நான் சொல்றதைக் கேட்கறீங்களா?'' என்று அவள் வெடித்ததும், அமைதியானான்.

அப்படி சத்தம் போட்டுப் பேசிய பிறகே, தான் அப்படி பேசியது தவறு என்று உறைக்க, ''சாரி! நானே கடுப்பில் இருந்தேன்! நீங்க அப்படி சொன்னதும்... சாரி!'' என்று மெல்லியக் குரலில் அவள் மன்னிப்பு வேண்ட,

அவள் குரல் உயர்த்தி பேசியதில் கோபம் இருந்தாலும், அவளது சாரி அவனை இளக்கவும் செய்து, ''வீட்டில் என்ன நடந்தது?'' என்று விசாரிக்கவும் வைத்தது.

''ஆகாஷ்... உங்க கிட்ட பேசிட்டு வீட்டுக்கு வந்தால், இன்னொரு பிரச்சனை காத்திட்டு இருக்கு!'' என்றவள், தன் வீட்டில் நடந்ததைப் பகர,

''வாவ்! குட் ந்யூஸ் சொல்லி இருக்கீங்க! தேங்க்ஸ்! தேங்க்ஸ் எ லாட்!'' உற்சாகத்தோடு சொல்லி மீண்டும் அவளது இரத்த அழுத்தத்தை உயர்த்தினான் அந்த புண்ணியவான்!

''இங்கே ஒருத்தி மண்டை காய்ஞ்சு போயிருக்கேன்! நீ என்னடான்னா, குட் ந்யூஸ் என்று உளறிட்டு இருக்கே! உனக்கு மூளையே இல்லை என்று நான் சந்தேகப் பட்டது சரிதான்!'' ஏக வசனத்தில், ப்ரியா திட்ட ஆரம்பித்ததும், ஆகாஷும் கடுப்பானான்.

''அது உன் பிரச்சனை! எனக்கென்ன வந்தது?'' என்று தானும் ஒருமைக்கு மாறியவன்,

''எனிவே, ஆல் தி பெஸ்ட்! சீக்கிரம் நல்ல பையனா பார்த்து, எங்க அண்ணன் கல்யாணம் சீக்கிரம் நடக்க உதவி செய்ங்க!'' என்று அழைப்பைத் துண்டித்து விட, ப்ரியாவுக்கு வயிறு எரிந்தது.

''இவன் மட்டும் தப்பித்து விட்டானா? ச்சே! பெண்கள் என்றால் எல்லாருக்கும் இளப்பம்தான்!''

தனக்குள் பொருமியவள், 'இவர்களுக்கு மட்டும்தான் மிரட்ட தெரியுமா? இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால், வீட்டை விட்டு வெளியேறி, ஏதாவது விடுதியில் போய் தங்கிக் கொள்ள வேண்டியதுதான்!' என்று முடிவெடுத்த படி கீழே இறங்கி வந்தாள்.

இரவு உணவு நேரம் அமைதியாக கழிய, அமைதியாக தனது படுக்கை அறைக்குள் நுழைந்த தங்கையின் பின்னோடு வந்த ரேகா, ''பானு... அப்பா கிட்ட நான்தான் பேசினேன்! இப்போ நீ அவசர அவசரமா முடிவெடுக்க வேண்டிய அவசியம் இல்ல. சந்தோஷம்தானே?'' என்று புன்னகையுடன் வினவ, ப்ரியாவுக்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது.

'அந்த ஐடியா கொடுத்த புண்ணியவதி நீதானா? இதற்கு நீ எப்போதும் போல் பேசாமலே இருந்திருக்கலாம்!' என்று தோன்றினாலும், ஆனால், ரேகாவின் இந்த முயற்சி, அவளது அன்பையே பறைசாற்ற, அவளிடம் கோபம் கொள்ளவும் இயலவில்லை.

கொஞ்ச நேரம் முன்பு, ''ஆல் தி பெஸ்ட்!'' என்று ஏளனமாக சொன்ன ஆகாஷின் குரல் செவியில்

எதிரொலிக்க, ''ஆகாஷ் வீட்டில் சொல்லியாச்சா?'' என்று விசாரித்தாள்.

''ம்... சொல்லியாச்சு. அவங்களுக்கும் இதுதான் சரி என்று தோணுது. ஆகாஷ் கிட்டயும் இதே கண்டிஷன் போடப் போறதா, தேவகி ஆன்ட்டி சொன்னாங்க!'' என்று ரேகா சொல்ல, ப்ரியாவின் முகம் மலர்ந்தது.

''அப்படியா விஷயம்?'' என்றவள், ''சரி ரேகா. நான் முடியவே முடியாது என்று சொல்லிவிட்டால், உன் கல்யாணத்தை எப்படியும் அப்பா நடத்திதானே ஆகணும்?'' என்று விசாரித்தாள்.

''இல்ல பானு! நானும் முடிவு செஞ்சிட்டேன்! நீ கல்யாணம் செஞ்சுகிட்டால்தான் நானும் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்! இல்லைன்னா, நானும் உன்னை மாதிரி இருந்துட போறேன்!''

ரேகா உறுதியாக சொன்னதும் இவளும், அம்மா அப்பாவுடன் சேர்ந்து கொண்டாளா? என்று ப்ரியாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''லூசா நீ? அப்பாதான் அப்படி பேசறார் என்று பார்த்தால், நீயும் இப்படி உளறி கொட்டுறாயே?''

''நான் லூசாவே இருந்துட்டு போறேன்! ஆனால், என்னுடைய முடிவில் எந்த மாற்றமும் இல்லை!'' என்று சொல்லி விட்டு ரேகா சென்று விட்டாள்.

ரேகாவின் அன்பு புரிந்தாலும், ஒரு பெண் கண்டிப்பாகத் திருமணம் செய்து கொண்டே ஆக வேண்டும் என்று ஏன் இவர்கள எல்லாம் நினைக்கிறார்கள். ஒரு பெண் சுதந்திரமாக இருப்பதில் என்னதான் தவறு கண்டார்கள்?

பெண் என்பவள் திருமணம் செய்து கொள்ளவே பிறந்தவள் என்ற எண்ணத்தில் ஊறி இருப்பவர்களிடம், தன் எண்ணத்தைப் புரிய வைக்க முடியாது என்ற எண்ணம் சோர்வைத் தர, உள்ளம் புழுங்கியது.

அறையை விட்டு வெளியே வந்தவள், சிட் அவுட்டில் போடப் பட்டிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தாள்.

தீண்டி சென்ற காற்று, உடலைக் குளிர வைத்தாலும், மனதில் இருந்த சூடு அடங்கவில்லை!

உங்கள் பேச்சை கேட்க முடியாது என்று சொல்லி விட்டு, விடுதியில் போய் தங்கி கொள்ளலாம். ஆனால், அதுவும் அவளது பெற்றோருக்கு வேதனையைத் தான் தரும்.

இதுவரை, எத்தனையோ விஷயங்களில் பெற்றோரின் பேச்சை மீறி நடந்திருந்தாலும், அவர்களை வேதனைப் படுத்தும் எந்த செயலையும் அவள் செய்ததில்லை. அது, அவளால் இயலாத காரியம்.

ஆனால், அவர்களுக்காக, கொஞ்சம் கூட விருப்பமே இல்லாமல் திருமண பந்தத்தில் சிக்கி தன் சுதந்திரத்தை இழப்பதும் அவளால் இயலாத காரியம்தான்!

அவள் தன் யோசனையில் மூழ்கி இருக்க, அவளது கைப் பேசி அழைத்தது!

ஆகாஷ்தான்!

'சாருக்கும் வீட்டில் விஷயத்தைச் சொல்லி விட்டார்கள் போல!' என்று ஏளனமாக நினைத்தவள், 'மகனே! ஆல் தி பெஸ்ட் என்றா சொன்னே? இப்ப பாரு!' என்று மனதில் கறுவிக் கொண்டே அழைப்பை எடுத்து,

''ஆல் தி பெஸ்ட்... சார்!'' என்றாள், ஏளனமான குரலில்!

மறுமுனை மௌனம் சாதித்தது!

''சீக்கிரம் நல்ல பொண்ணா பார்த்து, எங்க அக்கா கல்யாணம் சீக்கிரம் நடக்க உதவி செய்ங்க சார்!''

ப்ரியா போலி பவ்யத்துடன் சொன்னதும், ''சாரி ப்ரியா!'' என்றது எதிர்முனை.

சற்று முன் ஏளனமாக பேசியவளுக்கு, அவன் மன்னிப்பு வேண்டியதும் மேலே என்ன பேசுவதென்று புரியவில்லை!

அவளது நிலையில்தான் அவனும் இருக்கிறான் என்று உணர்ந்தவளுக்கு, அதற்கு மேல் கேலி செய்யவோ, ஏளனம் செய்யவோ மனம் வரவில்லை.

''ப்ரியா... நான் உங்ககிட்ட பேசணும்! இன்னைக்கு சந்திச்ச இடத்துக்கு நாளைக்கு சாயந்திரம் ஐந்து மணிக்கு வர முடியுமா?''

ஆகாஷ் வினவியதும், ப்ரியாவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

இனிமேல், இவனிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

இனிமேல், அவர்களது பிரச்சனையை, அவரவர்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்!

அவள் மௌனம் சாதிக்க, ''ப்ளீஸ் ப்ரியா! நம்ம ரெண்டு பேர் நல்லதுக்காகவும்தான் சொல்றேன்!'' என்று ஆகாஷ் சொல்ல, ஏன் என்று புரியாவிட்டாலும், அவளுக்கு மறுப்பு சொல்லத் தோன்றவில்லை!

''வரேன்!'' என்று சொல்லி விட்டு அழைப்பைத் துண்டித்தவளுக்கு, அப்படி என்ன பேசப் போகிறான் என்று தோன்றியது.

இரண்டு பேருடைய நல்லதுக்காகவும் என்றானே!

இனிமேல், அவன் எப்படி தனக்கு உதவ முடியும்? இல்லை அவளால்தான் அவனுக்கு எப்படி உதவ முடியும்?

பல்வேறு யோசனையோடு வந்து படுத்தவள், கனவில் கூட, ''நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்கலாம்!'' என்று ஆகாஷ் சொல்வான் என்று நினைக்கவில்லை!

ஆனால், அடுத்த நாள் ஆகாஷ் அப்படித்தான் சொன்னான்!

''வா ஆகாஷ்! ரொம்ப நாள் ஆச்சு உன்னை பார்த்து! எப்படி இருக்கே?''

அன்புடன் வரவேற்ற தன் சீனியர் விஸ்வநாதனுக்கு வணக்கம் சொல்லி அமர்ந்த ஆகாஷ், ''நான் நல்லா இருக்கேன் சார்! நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று விசாரித்து விட்டு, ''ஒரு கேஸ் விஷயமா வெளியூர் போயிருந்தேன் சார்! அப்புறம் ஒரு வாரமா கொஞ்சம் பெர்சனல் வேலைகள் இருந்தது! அதான் உங்களைப் பார்க்க வர முடியலை!'' என்றான்.

தன் படிப்பை முடித்த பிறகு, இரண்டு வருடங்கள் விஸ்வநாதனிடம்தான் ஆகாஷ் உதவியாளனாகப் பணியாற்றினான்.

விஸ்வநாதனுக்கும் ஆகாஷுக்கும் இடையே, சீனியர், ஜூனியர் என்ற உறவைத் தவிர ஒரு நல்ல நட்பு இருந்தது. தனியாக வழக்குகளைக் கையாண்ட புதிதில், ஆகாஷுக்கு ஏதாவது வழக்கில் வழிகாட்டுதல் தேவைப் பட்டால், அவரிடம்தான் வருவான். அவரும் அக்கறை யாக அவனுக்கு உதவுவார். சட்ட நுணுக்கங்களை விரல் நுனியில் வைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு திறமை யானவர் அவர்!

அதன் பின்னர், அவனுக்கு வழிகாட்டுதல் அதிகமாக தேவைப்படவில்லை என்றாலும், அவரை அடிக்கடி சந்திக்க வருவான். அவருக்கும் அவனது அந்த வருகைகள் பிடித்தமான விஷயமே!

"என்ன ஆகாஷ்? என்ன விஷயம்? டல்லா இருக்கிற மாதிரி இருக்காயே? நீ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லையே?"

விஸ்வநாதன் அக்கறையுடன் விசாரிக்க, "வீட்டில் கல்யாணம் செஞ்சுக்கச் சொல்லி வற்புறுத்தறாங்க!" என்று ஆகாஷ், தன் மனக்கவலையைப் பகிர்ந்தான்.

"நல்ல விஷயம்தானே மேன்? அதுக்கேன் இப்படி முகத்தைத் தொங்கப் போடறே?"

"ப்ச்... உங்களுக்குத்தான் தெரியுமே சார்? எனக்கு இதில் எல்லாம் இஷ்டம் இல்லை என்று!"

"அப்போ வீட்டில் சொல்ல வேண்டியதுதானே?"

"சொல்லியாச்சு! அவங்க கேட்கிறதா இல்லை!" என்றவன், அவரிடம் முழு விவரங்களையும் கூறினான்.

"ம்... நல்லா திட்டம் போட்டிருக்காங்க உங்க வீட்டில்!" என்று சிரித்தவர்.

"நானும் அவங்க சொல்றதையே சொல்றேன் என்று நினைக்காதே! நீ கல்யாணம் செஞ்சுக்கறது நல்லதுதான் என்று எனக்கும் தோணுது!" என்று சொல்ல,

"உங்களுக்கே தெரியுமே சார்! எனக்கு எப்போதுமே கல்யாணத்தில் ஆர்வம் இருந்ததில்லை! என் லாயர் பிரண்ட் ஒருத்தன் எப்பவும் பயங்கர பிசி! அவன் பார்க் கிறது எல்லாம் வெறும் டிவோர்ஸ் கேஸ் மட்டும்தான்! அந்த அளவுக்கு விவாகரத்து ஜாஸ்தி ஆகிட்டு வருது!

எனக்கு கல்யாணம் என்றாலே பிரச்சனை என்று மனதில் பதிந்து போச்சு!" என்று அவன் தன் மனதை உரைத்தான்.

"என்ன ஆகாஷ் இது? கல்யாண வாழ்க்கை சரியாய் அமையுமா இல்லையா என்ற சந்தேகம் இருக்கு என்பதால் கல்யாணத்துக்கு மறுக்கிறாய் என்றால், நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்! A great marriage is not when the 'perfect couple' come together. It is when an imperfect couple learns to enjoy their differences. இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால், எல்லா கல்யாணமும் வெற்றிகரமான கல்யாணமாதான் அமையும்!"

விஸ்வநாதன் சொன்னதும், ஆகாஷ் அமைதியாக இருக்க, "இது ஊருக்கு உபதேசமாக நான் சொல்லலை! என் அனுபவத்தில் இருந்து சொல்றேன்! எனக்குக்

கல்யாணமாகி இருபது வருஷம் ஆச்சு! எங்களுக்குள் இதுவரை பிரச்சனை வந்ததே இல்லை என்று சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால், கல்யாணம் ஆன ஒரு வருஷத்துக்குள் விவாகரத்து வரை எங்க கல்யாணம் போயிட்டு வந்தது!'' என்றவர், ஆகாஷின் ஆச்சரியப் பார்வையைக் கண்டு கொள்ளாமல், தன் அனுபவத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

''நான் அப்போ பிசியா ப்ராக்டிஸ் செஞ்சுட்டு இருந்தேன். என் மனைவி இன்டீரியர் டிசைனிங் முடிச்சுட்டு வேலை பார்த்துட்டு இருந்தாங்க. அவங்களுக்கு அவங்க கேரியரில் நிறைய சாதிக்கணும் என்று ஆசை! எனக்கு அதில் எந்தப் பிரச்னையும் இருந்ததில்லை! ஆனால், பல விஷயங்களில் எங்க ரெண்டு பேருக்கும் இடையே மாறுபட்ட கருத்துக்கள் இருந்தது!''

''எனக்கு சட்டம் சம்மந்தப்பட்டதைத் தவிர, ஸ்போர்ட்சில் மட்டும்தான் ஆர்வம்! வேறு எதிலும் பெரிசா ஈடுபாடு இருந்ததில்லை! அவங்களுக்கு இசை, கவிதை, ஓவியம் என்று வேரியஸ் இன்ட்ரெஸ்ட்! முதலில் எனக்கு அவங்க அந்த மாதிரி இசை நிகழ்ச்சிகள் ஓவிய கண்காட்சி எல்லாம் போறது நேர விரயம் என்று தோன்றும்! அவங்களுக்கு நான் ஸ்போர்ட்ஸ் கிளப் போறது பிடிக்காது. ரசனை இல்லாத ஜென்மம் என்று என்னைத் திட்டி இருக்காங்க!''

இதைச் சொல்லும்போது ஆகாஷ் லேசாக புன்னகை புரிய, ''என்ன மேன்? என் மனைவி என்னைத் திட்டியது உனக்கு சிரிப்பா இருக்கா?'' என்று மிரட்டினாலும், அவரும் புன்னகைத்து விட்டு,

''அவள் போற இடத்துக்கு நானும் வரணும் என்று எதிர்பார்ப்பாள்! நானும் அவள் அங்கே போறதை விட்டு நான் வீட்டில் இருக்கும் சமயம் என்னோடு இருக்கணும் என்று எதிர்பார்த்தேன்!''

''கொஞ்ச நாளில், இந்த எதிர்பார்ப்புகள், அது நிறைவேறாத காரணத்தால் மேலும் பிரச்சனைகள் என்று எங்களுக்குள் நிறைய பிரச்சனைகள் வர ஆரம்பித்தது! இப்படி ஒத்த ரசனை இல்லாதவங்க சேர்ந்து வாழ முடியாது என்று விவாகரத்து செய்யலாம் என்று முடிவெடுத்தோம்!''

''முடிவெடுத்து விட்டாலும், அதைச் செயல்படுத்த ரெண்டு பேருக்குமே அவ்வளவு சுலபமா மனசு வரலை! சோ, கொஞ்ச நாள் பொறுத்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்தோம்! அந்த இடைப்பட்ட காலத்தில், உண்மையில் எங்களுக்குள் என்னதான் பிரச்சனை என்று பொறுமையாக யோசித்த போதுதான், மற்றவர் விருப்பத்தை மதிக்க தவறியதுதான் பிரச்சனைக்குக் காரணம் என்று புரிந்தது.''

''அதை சரி செய்யணும் என்று தோன்றியது! எனக்காக அவளோ, இல்லை அவளுக்காக நானோ மாறனும் என்று எதிர்பார்ப்பதை விட, இருவரும் மற்றவரின் விருப்பத்தை உணர்வை மதிக்கக் கற்றுக் கொள்ளணும் என்று முடிவு செய்து, அதைச் செயல்படுத்த ஆரம்பிச்சோம்! ஆரம்பத்தில் கஷ்டமாதான் இருந்தது. ஆனால்... கஷ்டப்படாமல் வாழ்க்கையில் எதுவும் கிடைக்காதே! அதனால் தொடர்ந்து முயன்றோம்! அவ்வளவுதான்... எங்களுக்குள் இருந்த எதிர்பார்ப்பு குறைந்தது!

பிரச்னையும் குறைந்தது! இதோ இருபது வருஷம் கழிச்சு எங்கள் குடும்ப வாழ்க்கை வெற்றிகரமா போயிட்டு இருக்கு!''

''நானும் என் மனைவியும் அதிகம் ஒண்ணா சேர்ந்து வெளியே போனதில்லை! வெளியே இருந்து பார்க்கிற வங்களுக்கு எங்களுக்குள்ள அன்னியோன்யம் கம்மியா இருக்கு என்று தோணும்! ஆனால், அப்படி இல்லை! எனக்கு எப்போ அவளோட மாரல் சப்போர்ட் தேவையோ, அவளுக்கு எப்போ என் அருகாமை தேவையோ, அந்த சமயத்தில் கண்டிப்பா நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையா இருப்போம்!''

''சேர்ந்து வாழணும் என்பது எவ்வளவோ முக்கியமோ, அதே அளவு தங்கள் சுதந்திரத்தை ஒரு அளவுக்கு மேல் விட்டுக் கொடுக்காமல் இருப்பதும் முக்கியம்! Mutual freedom is necessary to keep the marriage sound!''

விஸ்வநாதன் சொன்ன விஷயங்கள் ஆகாஷுக்கு ஆச்சரியத்தை அளித்தன.

''நீங்க சொல்றதைக் கேட்டால், வெற்றிகரமான கல்யாண வாழ்க்கை அவ்வளவு ஒண்ணும் பெரிய விஷயமில்லை என்று தோணுது! ஆனால்... ஏன் சார் இவ்வளவு பேர் தினமும் விவாகரத்து கேட்டு வராங்க?''

ஆகாஷ் தன் சந்தேகத்தை வினவ, ''காரணம் ஒவ்வொருத்தருக்கும் மாறுபடுது ஆகாஷ். சில பேர் விஷயத்தில் விவாகரத்துதான் சரியான தீர்வா இருக்கும். ஆனால், கருத்து வேறுபாடு காரணமா விவாகரத்து என்றால், அதுக்கு அடிப்படை ஒரே விஷயம்தான்!'' என்றவர், அதைப் பற்றி விரிவாகச் சொல்ல ஆரம்பித்தார்.

''நிறைய பேருக்கு அடுத்தவங்களை நிறை குறையோடு ஏற்றுக் கொள்கிற பக்குவம் இருக்கிறதில்லை. கணவனோ மனைவியோ, தனக்காக தன்னுடைய துணை எல்லா விஷயத்திலும் தன்னை மாற்றிக் கொண்டால்தான் அது அன்பு என்று நினைக்கிறாங்க. கணவன் மனைவி என்பதைத் தவிர்த்து, அடுத்தவங்களும் ஒரு தனி மனிதன் / மனுஷி, அவங்களுக்கென்று ஒரு எண்ணம் விருப்பு - வெறுப்பு இருக்கும் என்பதை நினைக்க தவறுவதுதான், இந்த மாதிரி பிரச்சனைகளுக்குக் காரணம்.''

''கல்யாணம் ஆன உடன், ஆணோ பெண்ணோ முழுமையா தன்னை மாற்றிக்கணும் என்ற அவசியம் இல்லை! எந்த அளவுக்கு விட்டுக் கொடுத்துப் போவது முக்கியமோ, அதே அளவு அவங்களுக்கான பெர்சனல் ஸ்பேசை இழக்காமல் இருக்கிறதும் ரொம்பவே முக்கியம்!''

''தங்களுக்காக தங்கள் விருப்பத்துக்காக என்று கணவனோ / மனைவியோ ஒரு நேரம் எடுக்கிறது நம்ம சமூகத்தில் சுயநலமா கருதப்படுது! அதை அப்படி எடுத்துக்காமல் கணவன் மனைவி ரெண்டு பேரும், அடுத்தவரோட விருப்பங்களுக்கு, உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க கற்றுக் கொண்டாங்க என்றால், எந்தப் பிரச்சனையையும் சமாளிக்கலாம்!''

விஸ்வநாதனின் நீண்ட விளக்கம் புரிந்தாலும், ''ஆனாலும் இது ஒருத்தரால் மட்டும் நடக்கிற விஷயமில்லைதானே சார்?'' என்று கேள்வி எழுப்பினான்.

''நீ சொல்றது நூற்றுக்கு நூறு உண்மை! ஒருத்தர் விட்டுக் கொடுத்துப் போறதால் மட்டும் எதுவும்

நடக்காது! இரண்டு கையும் தட்டினால்தான் ஓசை வரும் என்கிற மாதிரி இதுவும் கூட்டு முயற்சிதான்! ஆனால், பூனைக்கு யார் மணி கட்டுவது என்பது மாதிரி, யாராவது ஒருத்தர் தங்கள் ஈகோவை விட்டுட்டு, முதல் அடியை எடுத்து வைக்கணும்!'' அவனது கேள்விக்கான பதிலைப் பகர்ந்தவர்.

''கல்யாணம் ஒரு மனுஷனை நிலைப்படுத்துகிற ஒரு விஷயம் ஆகாஷ்! எப்பவும் நாம் யாரையும் சாராமல் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது! நான் மனம் உடைந்து போகும்போது, சாய்ந்து ஆறுதல் தேட ஒரு தோள் இருக்கு என்ற நம்பிக்கையைத் தரும் விஷயம்தான் திருமணம்! அதனால், ரொம்ப குழப்பிக்காமல், அம்மா அப்பா சொல்ற பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கோ. இல்ல, உனக்குப் பிடிச்ச மாதிரி யாராவது ஒரு பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கோ! ஆனால், கண்டிப்பா கல்யாணம் செஞ்சுக்கோ!'' என்று அவன் நலம் விரும்பியாக அறிவுரை கூறவும் செய்தார்.

விஸ்வநாதன் சொன்ன வார்த்தைகள், ஆகாஷின் திருமணம் பற்றிய எண்ணத்தைப் பெரிதாக மாற்றவில்லை என்றாலும், அவர் சொன்ன விஷயங்கள் அவன் மனதில் ஆழமாகப் பதிந்து போயின. அப்போதைக்கு அவன் அதை உணரவில்லை!

ஆனால், எப்போதும் போல, விஸ்வநாதனிடம் பேசிய பிறகு, அவனது மனக் குழப்பம் அகன்று போனது. ப்ரியாவிடம் என்ன பேச வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்து வைத்திருந்தான் என்றாலும், கூடவே ஒரு தயக்கம் இருந்து கொண்டே இருந்தது. இப்போது அந்த

தயக்கம் அகன்று விட, தெளிவான மனதுடன் ப்ரியாவைச் சந்திக்கக் கிளம்பினான்.

* * *

''எனக்கு நிச்சயமா தெரிஞ்சு போச்சு!''

உறுதியான குரலில் ப்ரியா சொல்ல, ''என்ன? எனக்கு மூளை இல்லை என்பதா?'' என்றான் ஆகாஷ் அலட்டிக் கொள்ளாமல்!

''வாவ்! கரெக்டா கண்டுபிடிச்சுட்டாயே! அப்போ, மூளை கொஞ்சமாவது இருக்கத்தான் செய்யுது!''

ப்ரியாவின் கடுப்பான குரல், அவள் பயங்கரமான கோபத்தில் இருக்கிறாள் என்பதைத் தெளிவாக உணர்த்தியது.

''ப்ரியா... உன் கோபம் எனக்குப் புரியுது! இது நான் யோசிக்காமல் எடுத்த முடிவு இல்லை. நல்லா யோசிச்சு எடுத்த முடிவுதான்!''

ஆகாஷ் சொன்னதும், ப்ரியாவுக்கு கண் மண் தெரியாமல் கோபம் வந்தது!

''இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம்!'' என்று இவன் சொன்னது யோசித்து எடுத்த முடிவாமே? இவன் யார் எனக்கும் சேர்ந்து முடிவெடுக்க என்ற ஆத்திரம் தோன்ற,

''நீ யோசிச்சு முடிவு எடு! இல்லை... யோசிக்காமல் முடிவெடு! எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால், உன்னோட முடிவுல என்னை நுழைக்கிற அதிகாரத்தை உனக்கு யார் கொடுத்தா? ம்? நான் கிளம்பறேன்!'' என்று எழுந்த ப்ரியாவின் குரலில் சூடு பறந்தது.

தன்னிடம் இப்படி உளறுகிறவன், அவன் வீட்டில் என்ன உளறி வைத்திருக்கிறானோ? ஏற்கனவே இருக்கும் பிரச்சனை போதாது என்று இவன் வேறு! என்று எரிச்சல் அடைந்தபடி, அவன் பேச்சை மீறிக் கொண்டு அவள் கிளம்ப ஆரம்பிக்க, அவள் கையைப் பற்றி தடுத்தவன்,

"ப்ரியா... நான் சொன்னதுக்கான காரணத்தை முழுசா கேட்காமல் இப்படி பறந்தா எப்படி? முழுசா கேளு! இது நான் மட்டும் முடிவெடுக்கிற விஷயமில்லை என்று எனக்கும் தெரியும்! நான் சொல்றதை முழுசா கேட்டுட்டு உனக்கும் விருப்பம் இருந்தால்தான் நான் சொன்னது நடக்கும்! ப்ளீஸ் உட்கார்!" என்று வேண்ட, அவள் எரிச்சலோடு மீண்டும் இருக்கையில் அமர்ந்தாள்.

"நான் உன்கிட்ட ஒரு கேள்வி கேட்கிறேன்! அதுக்கு நீ சொல்ற பதிலைப் பொறுத்துதான் நான் இந்த விஷயத்தை தொடரலாமா வேண்டாமா என்று முடிவு செய்யணும்!" என்றவன்,

அவள் வேண்டா வெறுப்பாகத் தலையாட்டியதும், "உங்க அப்பா கொடுத்திருக்கிற இந்த ஆறு மாசத்துக்குள்ள, உன்னால் கல்யாணம் செஞ்சுக்க சம்மதிக்க முடியும்னு உனக்குத் தோணுதா?" என்று அவன் கேட்ட முதல் கேள்வியே அவளைக் கடுப்பாக்கியது.

அதை மறைக்காமல், அவள் அவனிடம் காட்ட "ப்ளீஸ்! கோபப் படாமல் பதில் சொல்லு!" என்றான் அவன்.

"நிச்சயமா இல்லை! ஆறு மாசம் என்ன? ஆறு வருஷம் என்றாலும், என்னால் அது முடியாது!"

உறுதியாக உரைத்தாள் அவள்.

"சரி! உங்க வீட்டினரை சமாளிக்க என்ன முடிவு செஞ்சிருக்கே?" என்று அடுத்த கேள்வியை முன் வைத்தான் அவன்.

"அதுதான் புரியலை! அவங்களை வேதனைப் படுத்தற மாதிரி நடந்துக்கவும் என்னால் முடியாது! பட், அதுக்காக கல்யாணம் செஞ்சுக்கவும் முடியாது" என்றவளது குரலில் சோர்வு அப்பட்டமாய் வெளிப்பட்டது.

"இதே நிலைமைதான் எங்க வீட்டிலும்! ஒருத்தர் என்றால் சமாளிக்கலாம்! எல்லாரும் சேர்ந்து ஒரே கட்சியில் நிற்கிறாங்க! அவங்க கண்ணோட்டத்தில், நாம நல்லா இருக்கணும் என்றுதான் இதைச் செய்யறாங்க. சோ, அவங்க கிட்ட நம்மோட மனசைப் புரிய வைக்கிறது கஷ்டம்! இந்த எமோஷனல் ப்ளாக்மெயில், நாம் கல்யாணத்துக்கு ஒத்துக்கிற வரை தொடரும்! நமக்கு மட்டுமில்லை, எல்லாருக்குமே மன உளைச்சல்! நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுகிட்டால், இதுக்கு முடிவு கட்டலாம்!" என்றவன், ப்ரியாவின் கண்களில் மீண்டும் கனல் பறப்பதைக் கண்டதும்,

"இரு... நான் முழுசா முடிச்சுடறேன்!" என்று விட்டு தொடர்ந்தான்.

"உனக்கும் எனக்கும் கல்யாணம் என்கிற கமிட்மெண்டில் சிக்கிக்காமல், நாம் நினைக்கிற மாதிரி அவரவர் கொள்கைப் படி சுதந்திரமாக வாழணும் என்று எண்ணம்! இதுதான் நாம் ரெண்டு பேருக்கும் இருக்கும் முக்கியமான தொடர்பு! நீயும் நானும் கல்யாணம் செஞ்சுகிட்டாலும், மற்ற கணவன் மனைவி மாதிரி

இருக்க வேண்டியதில்லை. நான் என் வேலையையும், நீ உன் வேலையையும் பார்க்கலாம்! நான் உன்கிட்ட கணவன் என்கிற முறையில் எந்த எதிர்பார்ப்பும் வைத்துக் கொள்ள மாட்டேன்! நீ எப்பவும் போல் இருக்கலாம்!'' என்றவன், அவள் எதுவும் பேசாமல் அமைதியாக இருப்பதைக் ண்டதும்,

''என்ன... இரண்டு பேரும் ஒரே வீட்டில் இருக்க வேண்டி இருக்கும்!'' என்று தன் மனதில் இருப்பதை வெளியிட்டதும், ப்ரியாவின் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

'இவன் சொல்வதைக் கேட்க, எல்லாம் சரியாக இருப்பது போலத்தான் தோன்றுகிறது! ஆனால், நடைமுறையில் இது சாத்தியமா?'

''நீ என்கிட்டே எந்த உரிமையும் எடுத்துக்க மாட்டே, சரி உங்க வீட்டைப் பொறுத்த வரைக்கும், நான் உன் மனைவி எங்க அக்காவும் உன் அண்ணனும் குடும்பம் நடத்துவதைப் பார்க்கிறவங்களுக்கு, நானும் நீயும் நடந்துக்கிற முறை வித்தியாசமா தோணும்தானே?''

ப்ரியா தன் சந்தேகத்தை வெளியிட, ''ப்ரியா... கல்யாணம் முடிஞ்சதும், எங்க ரெண்டு பேரையும் தனிக்குடித்தனம் வைக்கணும் என்பதுதான் எங்க அம்மா அப்பாவோட முடிவு! அதனால், உனக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது!'' என்று நம்பிக்கை அளித்தான்.

அப்போதும் ப்ரியாவின் முகம் குழப்பத்தையே காட்ட, ''நீ நல்லா யோசிச்சுச் சொல்லு ப்ரியா! அவசரம் இல்லை! என்னைப் பொறுத்தவரை, நம்ம ரெண்டு பேர் பிரச்சனைக்கும் இதுதான் சரியான தீர்வு!'' என்று ஆகாஷ் சொன்னதும்,

''நீ வக்கீல் என்றுதான் நினைச்சேன்! பெரிசா ஜட்ஜ் மாதிரி தீர்ப்பெல்லாம் வேற சொல்றே?'' சற்றே கேலியான குரலில் ப்ரியா சொல்ல,

''பின்னே! எதிர்காலத்தில் நான் ஒரு ஜட்ஜா வர வாய்ப்பு பிரகாசமா என் முன்னே தெரியுதும்மா!'' என்றான் அவன்.

''எங்கே? எங்கே? எனக்கு ஒண்ணும் தெரியலையே?'' என்று அவள் அங்குமிங்கும் பார்வையை ஓட விட, ''அதெல்லாம் மூளை இருக்கிறவங்களுக்குத்தான் தெரியும்!'' என்று கேலியில் இறங்க,

''அப்போ எப்படி உனக்குத் தெரியுது?'' என்று அவள் அவனை வார, இருவருக்குமே லேசாக புன்னகை மலர்ந்தது.

''ஏதோ? எனக்கு மூளை இருக்கப் போய்தான், யோசிச்சு ஒரு தீர்வு சொல்றேன்! உன்னை மாதிரி என்ன செய்யறதுன்னு குழம்பிட்டே இருக்காமல்!'' என்றவனை லேசாக முறைத்தாலும், அவள் எதுவும் பேசவில்லை!

மேலும் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, ''ஓகே ஆகாஷ்! நான் கிளம்பறேன்! என் முடிவை யோசிச்சுச் சொல்றேன்!'' என்று கிளம்பினாள்.

வீட்டுக்கு வந்து, அமைதியாக இரவு உணவை முடித்துவிட்டு, படுக்கையில் விழுந்ததும், மனதை ஆகாஷ் சொன்னதே ஆக்கிரமிக்க, அவன் சொன்னதின் சாதக பாதகங்களை மனம் அலச ஆரம்பித்தது.

அவன் சொல்வதில் ஒரு விஷயம் ஒப்புக் கொள்ளக் கூடியதே! அவள், திருமணத்துக்குச் சம்மதம் என்று சொல்லும் வரை, எல்லாருக்குமே மன உளைச்சல்தான்!

எல்லாரையும் வேதனைக்குள்ளாக்கி விட்டு, என் விருப்பம்தான் முக்கியம் என்று எவ்வளவு நாள் இருக்க முடியும்?

அவளைப் போலவே, திருமணம் என்பதைத் தேவை இல்லாத ஒன்று என்று நினைக்கும் ஆகாஷைத் திருமணம் செய்வதால், எல்லாருடைய மன உளைச்சலுக்கு ஒரு முடிவு கட்டுவதோடு, அவளும் அவளது எண்ணம் போல, சுதந்திரமாக இருக்க இயலும் என்றால், ஏன் இதை ஒப்புக் கொள்ளக் கூடாது என்று மனம் கேள்வி கேட்டது.

"சரி என்று சொல்லி விடலாமா?" என்று யோசிக்கும்போதே, "இப்போது மனைவி என்ற உரிமையைக் கோர மாட்டேன் என்று சொல்லும் ஆகாஷின் மனம் எதிர்காலத்தில் மாறினால்?" என்ற கேள்வி எழ, அவளுக்கு மூச்சடைத்தது.

ஒரு சராசரி மனைவியாக தன்னால் நடந்து கொள்ள முடியாத பட்சத்தில், இந்த முடிவை எடுப்பது, 'வாணலிக்கு பயந்து அடுப்பில் விழுவதற்கு ஈடானதுதானே?' என்று எண்ணியவளுக்கு, சந்தேகம் தோன்றியதுமே அதை நிவர்த்தி செய்து கொள்ளும் வேகமும் தோன்ற, நேரம் என்ன என்பதைக் கூட பார்க்காமல், ஆகாஷை அழைத்தாள் அவள்.

"என்ன ப்ரியா? இந்த நேரத்தில?" லேசான பதட்டத்துடன் அவன் கேட்டதுதான், மணியைப் பார்த்தாள் அவள்.

மணி ஒன்றாகி இருந்தது!

"சாரி ஆகாஷ்! நான் நாளைக்குக் கூப்பிடறேன்!" என்று அவள் அழைப்பைத் துண்டிக்கப் போன

நேரத்தில், "ஹே! பரவாயில்லை! என்ன விஷயம் சொல்லு!" என்று அவளைத் தடுத்து நிறுத்தினான் அவன்.

சந்தேகம் தோன்றிய உடன் அதை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றி, அவனை அழைத்து விட்டாலும், இப்போது அவன் கேட்டவுடன் சட்டென்று எப்படி அதைக் கேட்பது என்ற தயக்கம் தோன்றியது.

"சொல்லு ப்ரியா... எதுவா இருந்தாலும் கேட்டுடு!" என்று அவன் ஊக்க,

"வந்து... இப்போ... இந்த மாதிரி இருக்கலாம்னு சொல்றே... சரி... வந்து... அப்புறம் நீ வந்து...?" என்று அவள் தன் வழக்கத்துக்கு மாறாக தடுமாற்றத்துடன், சம்மந்தமில்லாமல்... வார்த்தைகளை உதிர்க்க,

"இந்த நேரத்தில என்னால் வந்து போயிட்டு இருக்க முடியாது மேடம்!" என்று கேலி பேசினாலும், "எதோ சொல்லணும் என்றுதானே கூப்பிட்டே? அப்புறம் என்ன? நேரிடையா சொல்லு ப்ரியா!" என்றான்.

"எப்பவாவது உன் மனசு மாறிடுச்சுன்னா?" என்று அப்போதும் அவள் தெளிவாக தான் கேட்க வந்ததைக் கூறாமல் கேள்வி எழுப்ப,

"என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குப் புரியலை!" என்றான் அவன்.

"கழட்டி வைச்சிருக்கிற மூளையை எடுத்து மாட்டிக்கோ! புரியும்!" என்று அவள் கடுப்புடன் முணுமுணுக்க, "வாட்?" என்றான் அவன்.

"ம்ம்ம்... சுரைக்காயில் உப்பில்லை என்று சொன்னேன்!" என்றாள் அவள் அதீத கடுப்புடன்!

''உப்பு இல்லைன்னா போட்டுக்க வேண்டியது தானே? அதுக்கா எனக்கு போன் செஞ்சே?'' என்று மேலும் அவளைக் கடுப்பேற்றியவன், அவள் முன் சொன்ன வாக்கியத்தையும் இப்போது கேட்ட கேள்வியையும் தொடர்பு படுத்தி விட்டு, சிரிக்க ஆரம்பித்தான்.

''என்ன சிரிப்பு?'' என்று அவள் கேட்டதும், அவன் சிரிப்பு இன்னும் அதிகமாகியது.

''ஆகாஷ்! எரிச்சலை கிளப்பாதே!'' என்று அவள் இடைப்புக, அவனது சிரிப்பு மேலும் கூடியதே தவிர குறையவில்லை.

''டேய்! நிறுத்துடா!'' என்று அவள் கோபத்துடன் குரல் உயர்த்த,

''எப்ப பாரு உர்ருன்னு இருக்கிற உனக்குள்ள, இப்படி ஒரு சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை, ப்ரியா!'' என்றவன் குரலில் சிரிப்பு இன்னும் மிச்சமிருந்தது.

'அடக் கடவுளே! நான் சொன்னதில் என்ன நகைச் சுவையைக் கண்டான் இவன்?' என்று ப்ரியா குழம்ப,

''ஒரு மனுஷிக்கு கான்ஃபிடன்ஸ் இருக்கலாம்! ஆனால், ஓவர் கான்ஃபிடன்ஸ் இருக்கக் கூடாது!'' என்றவன் மீண்டும் சிரிக்க ஆரம்பிக்க,

''லூசு! இப்ப எதுக்கு திரும்ப சிரிக்கிறே?'' என்று எரிச்சலுடன் அவள் வினவ,

''பின்னே! நான்... உன் மேல...'' என்று மீண்டும் சிரித்தவன், ''எனக்கு உன் மேல் லவ் வந்துடுமோ என்று நீ யோசிக்கிறது ஓவர் கான்ஃபிடன்ஸ்தானே?'' என்று

வினவ, ப்ரியாவுக்குக் கோபம் வந்தாலும், அவன் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால், தன்னுடைய பதிலும் இப்படித்தான் இருந்திருக்கும் என்று தோன்ற, அமைதியானாள் அவள்.

கொஞ்ச நேரம் அவனும் அமைதியாக இருந்தான்.

''சாரி ப்ரியா! நீ அப்படிக் கேட்டதும்... என்னால் சிரிப்பை அடக்க முடியலை!'' என்றவன், கொஞ்சம் இடைவெளி விட்டு ''கவலைப் படாதே ப்ரியா! அப்படி எல்லாம் நடக்காது!'' என்றான்.

''இல்ல... ஒரு வேளை வந்துட்டா?'' என்றவளுக்கே, தான் கேட்பது அபத்தமாகத் தோன்றினாலும், சந்தேகம் என்று வந்த பிறகு கேட்காமல் இருக்க முடியவில்லை.

''நீ சொல்ற மாதிரி எனக்கும் உன் மேல் காதல் வரலாம்!'' என்று அவளை அதிர வைத்தவன்,

''பிப்ரவரி மாதத்தில் முப்பதாம் தேதி வந்தால்!'' என்று முடிக்க, அவளுக்கு நிம்மதியாக மூச்சு விட முடிந்தது!

''அப்படியே பிப்ரவரியில் முப்பதாம் தேதி வந்து, எனக்கு உன் மேல் காதல் வந்தாலும், அதை உன்கிட்ட சொல்ல மாட்டேன் போதுமா?'' என்று அவளை சமாதானப் படுத்தியவன் குரலில் கேலி இருக்கிறதோ என்று தோன்றினாலும், இப்போதைக்கு அவன் சொல்வதை நம்புவதைத் தவிர, அவளுக்கும் வேறு வழி இருக்கவில்லை.

''ஓகே! நான் வைக்கிறேன்!'' என்றவளிடம், ''ப்ரியா... உன் சந்தேகத்தைக் கேட்ட பிறகு, எனக்கும் அதே சந்தேகம் வந்துடுச்சு!'' என்றவன்,

''கல்யாணத்துக்குப் பிறகு, உனக்கு என் மேல...'' என்று சொல்ல ஆரம்பித்தவனை, ''ரப்பிஷ்! அந்த மாதிரி என் கனவில கூட நடக்காது!'' என்று உடனடி பதில் வந்தது அவளிடமிருந்து!

''ஒரு வேளை... ஒரு வேளை வந்துடுச்சுன்னா?'' என்ற அவனது கேள்வியில் ப்ரியாவுக்கு எரிச்சல் வந்தது.

அவள் கேட்டதைத்தான் அவனும் கேட்கிறான். அவன் பதில் சொல்லி விட்டான். இவள் பதில் சொல்லாமல், கோபம் காட்டினால், அதற்கும் ஏதாவது சொல்வான் என்று நினைத்தவளாக, ''அப்படி உன் மேல ஏதாவது வந்தாலும், நானும் அதை உன் கிட்ட சொல்ல மாட்டேன்! போதுமா?'' எரிச்சலை மறைத்த குரலில் அவள் சொல்ல,

சின்ன சிரிப்புடன், ''ஓகே! பை!'' என்று அவன் அழைப்பைத் துண்டிக்கப் போன நேரத்தில், ''ஹே... இரு... இரு... நமக்கு இந்த...'' என்றவளுக்கு ஏனோ தொண்டை அடைக்க, செருமிக் கொண்டு, ''இந்தக் கல்யாணத்தில் சம்மதம் என்று எப்போ வீட்டில் சொல்றது?'' என்று ப்ரியா வினவ,

''முடிவு எடுத்த பிறகு எதுக்குத் தள்ளி போடணும்? நாளைக்கே சொல்லிடு! நாளைக்கு வெள்ளிக்கிழமை, நல்ல நாள்! காலண்டரில் கூட குட் ஃப்ரைடே என்று போட்டிருக்கு!'' சீரியசாக பதில் சொன்னான் அவன்.

''முடியலை!''

''என்ன முடியலை?''

''இல்ல, ஜோக் அடிச்சாயேன்னு சிரிக்க முயற்சி செஞ்சேன்! முடியலை!'' என்று அவனைக் கேலி

செய்தாலும், ப்ரியாவுக்கு தன்னையும் மீறி அவன் சொன்ன குட் ஃப்ரைடேவில் புன்னகை மலர்ந்தது.

புன்னகையுடன் கைப்பேசியை படுக்கையில் வைத்த வளுக்கு, 'குட் ஃப்ரைடே எங்கே இருந்து டிசம்பரில் வரும்?' குட் ஃப்ரைடே நல்ல நாளாமா?' என்ற கேள்வி எழுந்தது. 'சரியான லூசு! என்னை வெறுப்பேற்ற சொன்னான் போல!' என்று நினைத்தாலும், புன்னகை வாடாமல் உறங்கப் போனாள் அவள்.



காலையிலேயே வீட்டில் தன் சம்மதத்தைச் சொல்லி விடலாம் என்று எண்ணியவள், தகுந்த நேரம் பார்த்துக் காத்திருக்க, மனம் காரணம் தெரியாமல் ஏகத்துக்கும் படபடத்தது.

அவள் அருகில் வசந்தி, ''என்ன பானு? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று அக்கறையுடன் வினவ, ''அம்மா... நான் உங்ககிட்ட... அப்பாகிட்ட...'' என்று தடுமாறியவள், 'பானு! ஸ்டெடி! ஸ்டெடி!' என்று தன்னை ஒரு நிலைப் படுத்திக் கொண்டு, ''ஒரு முக்கியமான விஷயம் பேசணும்!'' என்று சொல்ல, நால்வரும் வரவேற்பறையில் கூடினார்கள்.

''அப்பா... நீங்க என் கல்யாணத்தைப் பற்றி சொல்லி இருந்தீங்க இல்ல?'' என்று ப்ரியா ஆரம்பிக்க, முத்துக்

குமரன் அவள் மீண்டும் எதிர்மறையாக பேச ஆரம்பித்து விடுவாளோ என்று எண்ணியவராக,

''அதுதான் ஆறு மாசம் டைம் இருக்கே பானு. இப்போ என்ன அவசரம்?'' என்று இடைப் புகுந்தார்.

''இல்லப்பா... ஆறு மாசம் டைம் எல்லாம் வேண்டாம்! இப்பவே என் முடிவை சொல்லிடறேன்!'' என்று உறுதியாகச் சொன்னவளுக்கு, திருமணம் பற்றிய தன் முடிவைச் சொல்ல திடீர் என்று தயக்கம் எழுந்தது.

மூவரும், அவளையே நோக்க, தன்னை சமாளித்துக் கொண்டவளாக, ''அப்பா... நீங்க முதலில் சொல்லி இருந்த மாதிரி, நான்... நான் ஆகாஷையே கல்யாணம் செஞ்சுக்கறேன்!'' என்று வேகமாகச் சொல்லி முடித்தவள், தந்தையை நோக்க, அவரது முகத்தில் குழப்பம் இருந்தது.

சட்டென்று அவளது பார்வை, தாயிடமும், தமக்கையிடமும் பாய, அவர்களும் குழம்பி இருப்பது, புரிந்தது.

தான் சம்மதத்தைச் சொன்னதும், சந்தோஷத்தில் பூரித்துப் போவார்கள் என்று அவள் எதிர்பார்த்திருக்க, இந்தக் குழப்பம் அவளுக்கு குழப்பத்தை அளித்தது.

முதலில் தன்னைச் சமாளித்துக் கொண்டு பேச ஆரம்பித்தவர், முத்துக்குமரன்தான்!

''பானு! நீ வேலைக்குக் கிளம்பு! இதைப் பற்றி நாம் சாயந்திரம் பேசிக்கலாம்!'' என்றவர், சொன்ன கையோடு எழுந்தும் போய்விட, பானுவும் எழுந்து தன் அறைக்கு வந்தாள்.

அவள் பின்னோடு வந்த ரேகா அவளை ஆராய்ச்சிப் பார்வையுடன் நோக்க, ''என்ன? ஏன் அப்படிப் பார்க்கிறே?'' என்றவளிடம், ''இல்ல நேற்று இல்லாத மாற்றம் இன்னைக்கு எப்படி வந்தது என்று யோசிச்சுட்டு இருக்கேன்!'' என்ற ரேகா, வேறு எதுவும் தோண்டித் துருவும் முன், ப்ரியா வேகமாக வேலைக்குக் கிளம்பி விட,

''என்னடி இது? அதிசயமா இருக்கு! நேற்று வரைக்கும் கல்யாணமே வேண்டாம்னு சொல்லிட்டு இருந்தவ, ஆறு மாசம் டைம் கொடுத்த பிறகு, இப்படி சொல்றாள்?'' என்று வசந்தி தன் வியப்பை ரேகாவிடம் பகிர்ந்து கொள்ள,

''எனக்கும் அதான் புரியலைம்மா... எல்லா விஷயத்தையும் நாங்க ரெண்டு பேரும் ஷேர் செஞ்சுக்கறோம்! ஆனால், இந்தக் கல்யாணம் விஷயத்தைப் பற்றி மட்டும் என்கிட்டே அவள் எதுவும் பேசறதில்லை'' என்றவளுக்கு சட்டென்று தங்கை நேற்று முந்தின நாள், ஆகாஷைச் சந்திக்க போனது நினைவுக்கு வந்தது.

''அம்மா... நேற்று முந்தின நாள், பானு ஆகாஷைப் பார்க்கப் போறேன் என்று சொல்லிட்டுப் போனாள். அன்னைக்குதான் நானும் அப்பாகிட்ட அவளை இப்படி வற்புறுத்த வேண்டாம் என்று சொன்னேன். அப்புறம் தான் இந்த ஆறு மாச அவகாசம் பற்றி முடிவெடுத்தோம். அந்த விஷயத்தில், நான் ஆகாஷோட அவள் என்ன பேசினாள் என்று கேட்கவே மறந்துட்டேன்!''

ரேகா சொன்னதும், வசந்திக்கு சந்தேகம் எழுந்தது.

''ரேகா... அந்த பிள்ளையும் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டு இருந்தது. நம்ம பானுவும் அப்படித் தான்! ரெண்டு பேருமா சேர்ந்து எதாவது ப்ளான்

போடறாங்களோ?'' என்று வசந்தி சொல்லிக் கொண்டிருக்கும்போது, அருகில் வந்த முத்துக்குமரன்,

''என்ன வசந்தி? யார்... என்ன ப்ளான் போடறாங்க?'' என்று விசாரிக்க, வசந்தியும் தன் சந்தேகத்தை கணவரிடம் பகிர்ந்து கொள்ள, அவருக்கும் அதே சந்தேகம் எழுந்தது.

''இல்லைம்மா... எனக்கு அப்படித் தோணலை. உங்களை வேதனைப் படுத்தற மாதிரியோ, இல்ல... தலை குனிய வைக்கிற மாதிரியோ பானு எதுவும் செய்ய மாட்டாள்.''

ரேகா உறுதியுடன் கூற, ''எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கு ரேகா. ஆனால், கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டு இருந்தவள், திடீர்னு இப்படிச் சொல்றாளே என்றுதான் குழப்பமா இருக்கு!'' என்று முத்துக்குமரன் சொல்ல, ரேகாவுக்கும் அதே குழப்பம் இருந்தது.

''நேற்றுதான் சம்மந்தி வீட்டில், பானு - ஆகாஷ் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னோம் இப்போ போய், அவங்ககிட்ட எப்படிப் பேசறது'' என்று வசந்தி சொல்ல,

''இப்போதைக்கு அவங்க கிட்ட எதுவும் பேச வேண்டாம் வசந்தி. சாயந்திரம் பானு கிட்ட, அவ மனசில் என்ன இருக்கு என்று தெளிவா பேசின பிறகு அவங்க கிட்ட பேசலாம்!'' என்று முத்துக்குமரன் சொல்ல, அவர்கள் வீட்டு தொலைபேசி அழைத்தது.

ஆகாஷின் வீட்டில் இருந்துதான் அழைப்பு வந்திருந்தது. அவனது தந்தை ரவிச்சந்திரன்தான் அழைத்திருந்தார். அவர் சொன்னதைக் கேட்டு திகைத்துப்

போன முத்துக்குமரன், ஒரு வழியாக அவரிடம் பேசி முடித்து, விவரத்தை மனைவியிடமும் ரேகாவிடமும் சொல்ல, அவர்கள் இருவருமே அவருக்கு இணையாக திகைத்துப் போயினர்.

* * *

தான் திருமணத்துக்கு சம்மதம் என்றதும் ஏன் வீட்டில் எல்லாரும் சந்தோஷப் படாமல், ஆராய்ச்சியாகப் பார்த்தனர் என்ற குழப்பத்தோடு வேலைக்கு வந்த ப்ரியா, வேலையில் இறங்கியதும் தன்னுடைய பிரச்சனைகளை மறந்து வேலையில் மும்முரமானாள்.

உணவு இடைவேளையின்போது, ஆகாஷ் வீட்டில் சொல்லி இருப்பானா? அவர்கள் என்ன சொல்லி இருப்பார்கள் என்ற கேள்வி தோன்ற, அவனுக்கு அழைக்கலாம் என்று அவள் கைப்பேசியை எடுத்த நேரம், ஆகாஷிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

அழைப்பை எடுத்து, ''சொல்லு ஆகாஷ்? வீட்டில் சொல்லிட்டாயா? என்ன சொன்னாங்க?'' என்று அவள் வினவ, அவளது கேள்விகளுக்கு பதில் சொல்லாமல், ''ப்ரியா... இப்போ நீ ஃப்ரியா இருந்தா, உன் ஆபீசுக்கு பக்கத்தில் இருக்க ரெஸ்டாரண்ட்டுக்கு வர முடியுமா?'' என்றான் அவன்.

அப்போதைக்கு முக்கியமாக எந்த வேலையும் இல்லாததால், வருவதாக ஒப்புக் கொண்டு அவள் பக்கத்தில் இருந்த உணவகத்துக்கு செல்ல அலுவலகத்தை விட்டு வெளியே வந்தபோது, வாயிலில் ஆகாஷ் நின்று கொண்டிருந்தான்.

"ஹே! நீ இங்கே வந்து நின்னுட்டுதான் என்னை வரச் சொன்னாயா? நான் வர முடியாது என்று சொல்லி இருந்தால் என்ன செஞ்சிருப்பே?"

"சிம்பிள்! நான் உன்னைப் பார்க்க உள்ளே வந்திருப் பேன்!"

இருவரும் உணவகத்தின் உள்ளே சென்று அமர்ந்து உணவுக்குச் சொன்ன பிறகு, ஆகாஷ் ப்ரியாவிடம், "சொல்லு! உங்க வீட்டில் என்ன சொன்னாங்க?" என்று விசாரித்தான்.

"சந்தோஷப் படுவாங்க என்று பார்த்தால், எல்லாரும் என்னை ஒரு மார்க்கமா பார்த்தாங்க. அப்பா, சாயந்திரம் பேசலாம்... நீ வேலைக்கு போம்மா என்று சொல்லிட் டார்."

ப்ரியா சொல்ல, ஆகாஷ், "ம்ம்ம்... இதை நான் எதிர் பார்த்தேன்!" என்றான்.

ப்ரியா வியப்புடன் அவனை நோக்க, "உங்க வீட்டில் மார்க்கமா பார்த்ததோடு நிறுத்திட்டாங்க. எங்க அம்மா என்னைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைச்சு எடுத்துட்டாங்க" என்றான்.

"ஏன்? என்ன கேள்வி?"

வியப்பு குறையாமல் அவள் வினவ, அவளை விசித் திரமாகப் பார்த்தவன், "வாய்க்கு வாய் அடுத்தவங் களுக்கு மூளை இல்லை என்று சொல்ல வேண்டியது! உனக்குத்தான் அது இல்லை!" என்று சொல்ல, அவனை முறைக்க ஆரம்பித்து, எதோ சொல்ல ஆரம்பித்தவளைத் தடுத்து,

"இரு. நான் சொல்லி முடிச்சுடறேன். நீ யோசிச்சு பாரு. நேற்று வரைக்கும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிட்டு திடீர்னு இன்னைக்கு வந்து நீங்க சொன்ன படியே கல்யாணம் செஞ்சுக்கறேன் என்று சொன்னால், அவங்களுக்கு சந்தேகம் வருமா? வராதா? இதுங்க ரெண்டும் என்ன ப்ளான் போடுதுங்களோ என்று பயம் வருவதும் நியாயம்தான்!" என்று ஆகாஷ் சொன்னதும், ப்ரியாவின் கண்கள் விரிய,

"மேடம்க்கு இப்போ புரிஞ்சுதா?" என்றவனிடம்,

"இப்போ வீட்டில் என்ன சொல்றது?" என்றாள் அவள்.

"நான் எங்க வீட்டில் சொன்னதையே, நீயும் உங்க வீட்டில் சொல்லிடு!" என்றான் அவன்.

"நீ உங்க வீட்டில் என்ன சொன்னே என்று எனக் கெப்படி தெரியும்?"

கடுப்புடன் வினவியவளிடம், "சொல்றேன்! ஆனால், நீ திரும்பவும் உன்னோடு முட்டைக் கண்ணை வைச்சு முறைக்கக் கூடாது!" என்றவனிடம்,

"எனக்கு? எனக்கு முட்ட கண்ணா?" என்று சண்டைக்கு வந்தவளைக் கண்டு கொள்ளாமல், "இப்ப அது முக்கியமா? இல்ல... நான் எங்க வீட்டில் என்ன சொன்னேன் என்பது முக்கியமா?" என்று அவன் பேச்சை மாற்ற,

"அப்பப்போ பேச்சை திசை திருப்பி, நீ வக்கீல் என்று நிருபிக்கிறே!" என்று எரிச்சலுடன் மொழிந்தவள், "உங்க வீட்டில் என்ன சொன்னே என்று சொல்லித் தொலை!" என்று சொல்ல, ஆகாஷ் சொன்னதைத்தான்.

''ப்ரியா... நாம் சந்திச்சுப் பேச ஆரம்பிச்சு ஒ
இரண்டு நாள் இருக்குமா? அதுக்குள்ளே என்னை ஏ
வசனத்தில் பேசறே! மிரட்டறே! உனக்கே இதெல்லாம்
ஓவரா தெரியலை?''

ஆகாஷ் கேட்டதும்தான், ப்ரியா தான் அவனிட
பேசும் விதத்தை உணர்ந்தாள். அலுவலக நண்பர்க
பெரும்பாலானோர் ஒரே வயதினர் என்பதால், ஒ
மையில் விளித்துப் பேசுவது அவர்களுக்குள் இயல்பா
விஷயம்! அதே போல இவனிடமும் வந்து விட்டதோ
அப்படியே இருந்தாலும், அவன் அவளுக்கு உத
செய்யத்தான் முயல்கிறான். அவனிடம் தன் வீட்டி
ரிடம் காட்ட முடியாத கோபத்தையும் எரிச்சலையு
காட்டுவது சரியில்லைதானே?

''சாரி ஆகாஷ்! எனக்கிருந்த பிரச்சனையில் நா
உங்ககிட்ட அப்படிப் பேசியதையே நான் உணரவே
இல்லை! சாரி!''

''ஹே! இட்ஸ் ஓகே! நீ என்னை நீ வா போ என்
கூப்பிடலாம்! இட்ஸ் ஃபைன் பை மீ'' என்றவன்
தாங்கள் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கு வந்தான்

''எங்க அம்மாகிட்ட கல்யாணத்துக்கு சம்மதம் என்
சொன்னதும், அவங்களுக்கு ஒரே ஷாக் வேண்டாம்,
எங்களோட வற்புறுத்தலுக்காக கல்யாணத்துக்
சம்மதிக்க வேண்டாம். இன்னும் ஆறு மாசம் டை
இருக்கு. உனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ண
பார்த்து, முழு மனசோட சம்மதம் சொல்லு என்
உறுதியா சொல்லிட்டாங்க'' என்று சொல்ல,

ப்ரியா ''அப்புறம் என்ன ஆச்சு?'' என்று கண்களா
வினவ,

''இப்போதான் பொண்ணு வீட்டிலும் இந்தக் கல்
யாணம் வேண்டாம் என்று சொன்னாங்க. அவங்க கிட்ட
போய் இப்போ திரும்ப இதைப் பற்றி பேச முடியாது
என்று உறுதியா சொல்லிட்டாங்க.''

''கடவுளே! அப்புறம்?'' என்றபடி ப்ரியா தலையில்
கை வைக்க,

''அப்புறம் நான் ஒரு விஷயம் சொன்னேன்! வேற
வழி இல்லாமல், ஒத்துக்கிட்டாங்க'' என்றவனிடம்,

''ஹப்பா! சாமி! இன்னும் நீ என்ன சொன்னே என்று
சொல்லவே இல்லை! கம் டு தி பாயிண்ட்!'' என்று
ப்ரியா கறாராகச் சொல்ல,

''யெஸ் யுவர் ஹானர்!'' என்றவன், சொன்ன பதிலில்,
ஒரு கணம் திகைத்து விழித்த ப்ரியா, அடுத்த கணம்
அவனைப் பார்வையால் எரிக்க ஆரம்பிக்க,

''வேற வழி தெரியலை ப்ரியா! அதான், அப்படிச்
சொல்லிட்டேன். வேற எந்த உள்நோக்கமும் இல்லை!
ப்ளீஸ்... என்னை நம்பு!'' என்று நயந்த குரலில் சொன்ன
ஆகாஷ்.

''நீயே சொல்லு! அவங்களோட வற்புறுத்தலுக்காக
சம்மதம் சொல்றோம் என்று நினைச்சு அவங்க இந்தக்
கல்யாணம் வேண்டாம் என்று சொல்றாங்க. ஆறு
மாசத்துக்குப் பிறகு, நீ வேற ஆளையோ, இல்லை நான்
வேற ஒரு பெண்ணையோ கல்யாணம் செஞ்சுக்க
முடியுமா? அதான் அப்படிச் சொல்ல வேண்டியதாப்
போச்சு! இப்படி சொல்றது உனக்குப் பிடிக்கலைன்னா
சொல்லு! இந்த விஷயத்தை இத்தோட விட்டுடலாம்''
என்று விளக்கம் சொல்ல,

''ஆமா! ஏற்கனவே அவங்களுக்கு நம்ம மேல் ச
தேகம்! இதில நீ ஒரு பேச்சு, நான் ஒரு பேச்சு பேசினால்
விளங்கிடும்!'' என்று எரிச்சலுடன் மொழிந்த ப்ரியா,

''விடு! நானும் அதையே சொல்லித் தொலை
கிறேன்!'' என்று அலுப்புடன் சொல்லி விட்டு உணவை
மெல்ல,

''ப்ரியா... என்கிட்டே சொன்ன இதே டோன்ல வீ
டில போய் சொல்லாதே. கொஞ்சமே கொஞ்சம் வெ
கத்தோடு சொல்லு!'' என்று ஆகாஷ் சொன்னதும்
ப்ரியாவின் முகம் போன போக்கைப் பார்த்து வா
விட்டே சிரித்தவன்,

''அம்மா... தாயே! வெட்கப்படலை என்றாலும் பர
யில்லை. இப்போ என்கிட்டே காண்பிச்ச எக்ஸ்ப்ரஷ
மட்டும் வீட்டில் காண்பிச்சிடாதே!'' என்று விட்
சிரிப்பைத் தொடர,

''போதும் சிரிச்சது! பல்லு சுளுக்கிக்கப் போகுது!
என்ற ப்ரியாவுக்குமே, தான் இப்படி சுளித்த முகத்
வைத்துக் கொண்டு வீட்டில் அந்த விஷயத்தை
சொன்னால், எப்படி இருக்கும் என்ற கற்பனையில்
சிரிப்பு வரத்தான் செய்தது.

ஆகாஷிடம் பேசி விட்டு அலுவலகத்துக்கு வந்தவளை
அவளது தோழி நேஹா பிடித்துக் கொண்டாள்.

''ஹே! பானு! என்ன நடக்குது? யார் அந்த ஹீரோ?
என்று வினவ,

'ஹீரோவா?' என்றவளுக்கு தான், அவனை அ
திருடி விட்டு விழிக்கிறவன் மாதிரி இருக்கான் என்
கேலி செய்தது நினைவுக்கு வந்து புன்னகை மலர்ந்தி

அவளது புன்னகையைக் கண்ட நேஹா, ''ஹே...
என்ன லவ்ஸா? என்கிட்டே கூட சொல்லவே இல்ல?''
என்று கேள்விக் கணைகளை வீச, ''லவ் எல்லாம் இல்ல.
ஆனால், லவ் மாதிரி! நான் அவனைத்தான் கல்யாணம்
செஞ்சுக்கப் போறேன்!'' என்று ப்ரியா பதில் சொல்ல,
நேஹா விழிகளை விரித்தாள்.

''பானு ளஉளஉளஉளஉளஉளஉளஉளஉளஉள?'' என்று கத்தியவள்,

''நான் லவ்வா என்று கேட்டதற்கு தையா தக்கா என்று
குதிப்பே என்று பார்த்தால், கல்யாணம்னு சொல்லி
எனக்கு இப்படி ஷாக் கொடுக்கறே? என்னடி நடக்குது?''
என்று தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக
வினவினாள்! பின்னே... அவளுக்குப் ப்ரியாவின் திரு
மணம் பற்றிய கொள்கை எல்லாம் அத்துப்படி ஆயிற்றே!

ப்ரியா எப்போதுமே எந்த விஷயத்தையும் குடும்பத்
தினருக்கு ஒளித்து மறைத்து செய்ததில்லை! எதையும்
நேரிடையாக கையாள்பவள்! ஆனால், அவள் செய்து
கொள்ளப் போகும் ஒப்பந்த திருமணத்தைப் பற்றி
வீட்டில் சொல்ல முடியுமா என்ன?

அதனால், அவளுக்குமே தன் மனதில் இருப்பதை
யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று
தோன்றியது!

நேஹா அவளுக்கு நெருங்கிய தோழி! ஒன்றாகப்
படித்து ஒன்றாக இந்த வேலையில் சேர்ந்தவர்கள்!
முக்கிய வேலைகள் எதையும் ஒன்றாக சேர்ந்து செய்
பவர்கள்! அவளிடம், ஆகாஷின் விஷயம் தவிர வேறு
எல்லாவற்றையும் அவள் பகிர்ந்து கொண்டதுண்டு!
இப்போது, தன் திருமண விவரத்தை அவளிடம்

சொல்லா விட்டால், தலை வெடித்து விடும் போலத் தோன்ற,

''நேஹா... நான் எல்லாத்தையும் சொல்றேன்! ஆனால், நீ யார்கிட்டையும் அதைப் பற்றி சொல்ல மாட்டேன் என்று ப்ராமிஸ் செய்!'' என,

''பானு! என்னைப் பற்றி உனக்குத் தெரியும்! சொல்லாதே என்றால் நான் சொல்ல மாட்டேன்! எதுக்கு ப்ராமிஸ் எல்லாம் போடச் சொல்றே?'' என்று விட்டு,

''பானு! ஆர் யூ ஓகே? ஒரு வாரமாவே நீ சரியில்லை! கேட்டாலும் எதுவும் சொல்லலை! என்ன ஓடுது உன் மண்டைக்குள்ள?'' என்று அக்கறையாக வினவ,

ப்ரியா மூச்சு விடாமல், அவள் வீட்டில் திருமணப் பேச்சு ஆரம்பித்தது முதல், கொஞ்ச நேரம் முன்பு தனக்கும் ஆகாஷுக்கும் நடந்த உரையாடல் வரை சொல்லி முடித்தாள்.

ப்ரியாவின் பேச்சை எந்த தலையீடும் இன்றி கேட்டு முடித்த நேஹாவுக்கு திகைப்பாக இருந்தாலும், ''பானு! ஒரு வழியா நீ கல்யாணம் செஞ்சுக்கப் போறதே எனக்கு சந்தோஷம்தான்! வாழ்த்துக்கள்!'' என்று தோழியைச் சந்தோஷமாக வாழ்த்த,

''ஹே லூசு! நான் சொன்னதை முழுசா கேட்டுட்டு வாழ்த்து வேற சொல்றயா நீ? உன்னை!'' என்று ப்ரியா அவளை முறைத்தாள்.

''எனக்கு நம்பிக்கை இருக்கு பானு! இந்த ஒப்பந்த திருமணம், நிஜ திருமணமா மாறும் என்று!'' என்று கண் சிமிட்டிய நேஹாவின் தோளில் ஒரு அடி வைத்த ப்ரியா,

''உன்கிட்ட போய் சொன்னேன் பாரு!'' என்று சலித்துக் கொண்டாள்.

* * *

ஏற்கனவே ஆகாஷின் வீட்டில் இருந்து விவரம் வந்து விட்டாலும், தன் மகளின் விருப்பத்தையும் அறிந்து கொள்ளும் பொருட்டு, காலையில் அவள் திருமணத்துக்கு சம்மதம் சொன்னதைப் பற்றி முத்துக்குமரன் தன் மகளிடம் விசாரித்தார்.

''அப்பா... எனக்கு ஆகாஷை பார்த்தவுடன் பிடிச்சுடுச்சு. அவருக்கும் அப்படித்தான். வி லவ் ஈச் அதர்! முழு மனசோடுதான் இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன்!''

ப்ரியா பெரும் பாடுபட்டு இயல்பாக முகத்தை வைத்துக் கொண்டு, ஒரு வழியாக வீட்டில் விஷயத்தைச் சொல்ல, வீட்டினருக்கு நம்புவதற்கு கடினமாக இருந்தாலும், அவளது சம்மதம் ,வீட்டில் மகிழ்ச்சியைக் கொண்டு வந்ததென்னமோ உண்மை!

அன்று இரவு முத்துக்குமரன் தனிமையில் மகளிடம் பேச வந்தார். ''பானு... நீ நல்லா இருக்கணும் என்றுதான், நான் கல்யாண விஷயத்தில் உன்னை வற்புறுத்தறேன். மற்றபடி நீ இப்பவே கல்யாணத்துக்கு ஒத்துக்கணும் என்று அவசியம் இல்லைம்மா... நீ இன்னும் கூட யோசிக்க அவகாசம் எடுத்துக்கலாம்! நீ சந்தோஷமா இருக்கணும் என்பதுதான் எங்க ஆசை!''

தந்தைக்கு தன் மேலும், ரேகா மேலும் அதிக பாசம் என்பது அவளுக்குத் தெரிந்ததுதான். ஆனால்... இப்படி எல்லாம் தந்தை இதுவரை பேசியதில்லை என்பதால், அவர் பேச்சில் ப்ரியாவுக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

''இல்லப்பா... உண்மையாவே நான் மு
மனசோடுதான் இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன்
நீங்க கவலைப் படாதீங்க!'' என்று அவள் உறுதியுட
சொன்ன பிறகே, முத்துக்குமரன் முகத்தில் தெளி
பிறந்தது.

* * *

''நம்பவே முடியலை, பானு! நீ... காதல்... அதுவு
பார்த்தவுடனே!''

ஆயிரமாவது முறையாக ரேகா இதையே சொல்
வியக்க, ''ஏன்? ஏன் நம்ப முடியலை!'' என்ற ப்ரியா
''காதல் உனக்கு மட்டும்தான் வரணும் என்று ஏதாவ
ரூல் இருக்கா என்ன?'' என்று தான் ஏற்கனவே சொன்
பதிலையே சொல்லி படபடக்க,

தங்கையின் அருகில் வந்து அமர்ந்த ரேகா, ''கோச்
காதடி... ஆனால், ஆகாஷைப் பார்த்துட்டு வந்த அன்
எதுக்குக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை என்றால் அப்
என்ன செய்வார் என்று கேட்டே?'' என்று வினவ,

'இவள் என்ன இப்படி மடக்கி மடக்கி கேள்வி எல்லா
கேட்க ஆரம்பிச்சுட்டாள்?'' என்று எண்ணினாலும்,

''அது... அது வந்து...'' என்று முதலில் தயங்கி பிற
தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''திடீர்னு ஒ
தயக்கம்! அன்னைக்குத்தானே அவனைப் பார்த்தே
அதுக்குள்ளே கல்யாணம் வரைக்கும் போகணுமான்
ஒரு தயக்கம்! அதான் அப்படிக் கேட்டேன்!'' என்
சமாளித்தவள்,

''அப்புறம் தோணுச்சு! நீயும் முதல்ல வே
டாம்னுதானே ஆனந்த் கிட்ட சொன்னே? அப்புற

ஆறு மாசம் கழிச்சு ஓகே சொல்லிட்டே! சரி... எப்படியும்
ஓகேதான் சொல்லப் போறோம்! அதுக்கு எதுக்கு ஆறு
மாசம் ஓட்டணும்! அத்தோட, இப்பவே ஒத்துக்கிட்டால்
உன் கல்யாணமும் தள்ளிப் போக வேண்டாம், இல்ல?''
என்று உருக்கமாகச் சொன்ன பிறகு, ரேகாவுக்கு வேறு
எந்த கேள்வியும் எழவில்லை!

''நீயும் நானும் ஒரே வீட்டுக்கு மருமகள்களா போகப்
போறோம் என்ற நினைப்பே எனக்கு எவ்வளவு சந்
தோஷமா இருக்கு தெரியுமா? அதுவும் நீ முழு மன
சோடு சம்மதிச்சு! ஐ அம் சோ ஹேப்பி!'' என்று ரேகா
தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள, அவளது சந்
தோஷம் மனதை நெகிழ்த்த, ''எனக்கும்தான்!'' என்றபடி
ப்ரியா சகோதரியை அணைத்துக் கொண்டாள்.

இருவரும் திருமணத்துக்கு சம்மதம் என்று சொன்ன
உடன், இவர்கள் மனம் மாறுவதற்கு இடம் கொடுக்கக்
கூடாது என்று குடும்பத்தினர் விரைவாக திருமண ஏற்
பாடுகளில் இறங்க, தை மாதம் பிறந்ததும் முதல் முஹூர்த்
தத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டது.

திருமணத்துக்கு சம்மதம் என்று சொல்லி விட்
டாலும், ப்ரியாவுக்கு ஏனோ மனதில் ஒரு படபடப்பும்,
பாதுகாப்பற்ற உணர்வும் தோன்றி அவளை அலைக்
கழித்தது.

அந்த மாதிரி நேரத்தில், அவள் ஆகாஷை அழைத்துப்
பேசுவதும், அவன் சமாதானமாக ஏதாவது பேசுவதும்,
மனம் லேசாக அமைதிப் படுத்துவதுமாக இருந்தது.

''ப்ரியா... எப்ப பாரு முகத்தை டென்ஷனாவே
வைச்சுக்காதே. உன்னைப் பார்த்தாலே எல்லாருக்கும்

சந்தேகம் வரும் போல. நேற்று தாலி வாங்கப் போகும் போது, உன் முகம் இருந்த விதத்தைப் பார்த்துட்டு, எங்க அம்மா என்கிட்ட கேள்வி மேல் கேள்வி கேட்கிறாங்க. உண்மையிலேயே அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம்தானா? நீ ஏதாவது அவளை மிரட்டி வைச்சுருக் காயா? அப்படி இப்படின்னு? உன்னை மிரட்டணும்னா இனிமேல் ஒருத்தன் பிறந்துதான் வரணும் என்று அவங்களுக்குத் தெரியலை பாரு!''

அவளைக் கேலி செய்தே, இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவன், அடுத்த நாள் முஹூர்த்த சேலை எடுக்கச் செல்லும் போது, அவளைச் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும் என்று சொல்ல, ப்ரியாவும் தலையாட்டினாள்.

அடுத்த நாள், இரு குடும்பத்தினரும் ஒரு பிரபல துணிக்கடையின் பட்டுச் சேலைப் பிரிவுக்குள் அமர்ந் திருந்தனர்.

ரேகா ஆர்வமாக சேலைகளை ஆராயத் துவங்க, புடவை என்றாலே அலறும் ப்ரியாவுக்கு, கனம் அதிக மான புடவைகளைத் தூக்கிப் பார்க்கவே மலைப்பாக இருந்தது. இதை கட்டிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பே, பயத்தைக் கிளப்ப, யாருக்கோ கல்யாணம் என்பதைப் போல ஆர்வமின்றி அமர்ந்திருந்தவளை வசந்திதான் அதட்டினார்.

''பானு... முஹூர்த்த புடவை எடுக்க வந்துருக்கோம் என்பதே மறந்து போச்சா? பாரு... உனக்கு பிடிச்ச மாதிரி எடு!'' என்று தூண்ட,

''நீங்களே ஏதாவது எடுங்கம்மா!'' என்று சலிப்புடன் சொல்ல வந்தவளின் அருகில் வந்த ஆகாஷ், ''ப்ரியா...

நான் வேணா உதவி செய்யட்டுமா?'' என்று அவளது கையைப் பற்ற, கோபத்துடன் நிமிர்ந்த ப்ரியா, அவனது பார்வை காண்பித்த சைகையில் லேசாகத் திரும்பி பார்க்க, தேவகி ஆராய்ச்சி பார்வையுடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருப்பது தென்பட்டது.

சட்டென்று திரும்பி, ''தேங்க்ஸ்... ஆகாஷ்!'' என்று புன்னகையுடன் சொன்ன ப்ரியா, சேலைகளை ஆர்வத் துடன் எடுத்து புரட்ட ஆரம்பித்ததும், தேவகியின் பார்வையும் திசை திரும்ப, ஆகாஷ் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அடுத்த அரை மணி நேரத்தில், ப்ரியா இளம் ரோஜா வண்ணத்தில், இரு புறம் பார்டர் வைத்த ஒரு பட்டுச் சேலையைத் தேர்ந்தெடுக்க, வசந்தியோ, ''பார்டர் ரொம்ப சின்னதா இருக்கு பானு. கலர் வேற லைட்டா இருக்கு! இது பிடிச்சிருந்தா எடுத்துக்கோ, ஆனால் முஹூர்த்தம் முடிஞ்ச உடனே அப்படியே ரிசப்ஷன் வைக்கிறதா ப்ளான் செஞ்சிருக்கோம். அதனால், கல்யாணத்துக்கு இன்னும் கொஞ்சம் ப்ரைட்டா, பெரிய பார்டர் இருக்கிறதா எடு!'' என்றார்.

சேலையின் நிறம், வடிவமைப்பை விட, இருக்கிற சேலைகளில் இதுதான் கொஞ்சம் கனம் குறைவாக இருக் கிறது என்று எண்ணித்தான் ப்ரியா அதை எடுத்ததே! அன்னை வேறு எடுக்க சொல்லவும், முகம் சுணங்க ஆரம்பிக்க,

''இருக்கட்டும் அத்தை. இது ரொம்ப அழகா இருக்கு! அவளுக்கும் பிடிச்சிருக்கு! லைட் கலர்தான் இப்போ ஃபேஷன்! கட்டிக்கிற அவளுக்குப் பிடிக்கணும் என்பது

தான் ரொம்ப முக்கியம்! சோ, இதுவே இருக்கட்டும்!'' என்று ஆகாஷ் சொல்லி விட, வசந்தி அரை மனதாக தலையாட்டி விட்டு நகர்ந்தார்.

''பாரேன்! மாப்பிள்ளை நீ சொன்னவுடன் சரி என்று சொல்லிட்டாங்க! என்கிட்டே என்றால் இன்னும் ஆர்க்யூ செஞ்சுருப்பாங்க!'' என்று ப்ரியா பொறும,

''விடு ப்ரியா... யாருக்காக என்றால் என்ன? உன் விருப்பம் நிறைவேறுச்சா... அதை மட்டும் பாரு!'' என்று எப்போதும் போல் அவளைத் திசை திருப்பினான் அவன்.

அவன் சொன்னதில் இருந்த உண்மையை உணர்ந்து அவளும் புன்னகையுடன், ''தேங்க்ஸ்!'' என்று சொல்ல, இருவரையும் புன்னகை கலந்த முகத்தோடு கண்ட இரு பெற்றோர்களுக்கும் மனம் நிறைந்தது.

நாட்கள் வேகமாக நகர, ஒரு சுபயோக சுப தினத்தில், இருவரும் கணவன் மனைவி ஆனார்கள்!



திருமணமும் வரவேற்பும் முடிந்து, ஆகாஷின் வீட்டுக்குச் சென்று விளக்கேற்றி விட்டு இரு புதுமணத் தம்பதிகளும், முத்துக்குமரனின் வீட்டுக்கு வந்திருந்தனர்.

புது மணமக்களுக்கு அன்று இரவே, சாந்தி முஹூர்த்தத்துக்கு ஏற்பாடு ஆகி இருந்தது.

ஆனந்த்தும் ரேகாவும், காதல் மணம் புரிந்த புது தம்பதிகளுக்கே உரிய சந்தோஷத்தோடு வளைய வர, ஆகாஷும் ப்ரியாவும் எந்தவித, படபடப்பும் இல்லாமல் இயல்பாக இருந்தனர்.

ரேகாவின் அறையில், கட்டிலில் அமர்ந்த ஆனந்த் நிம்மதி பெருமூச்சுவிட, ''என்ன?'' அப்படி ஒரு பெரு மூச்சு?'' என்று ரேகா விசாரித்தாள்.

''எல்லாம் நம்ம கல்யாணம் நல்லபடியா முடிஞ்ச திருப்திதான்! இந்த ஒரு மாசமா, கல்யாணம் நடக்குமா நடக்காதா என்று ஒரே டென்ஷன்!'' என்றவனை ஆச்சரியத்துடன் நோக்கியவள்,

''ஏன்? ஏன் அப்படி நினைச்சீங்க?'' என்று வினவினாள்.

ஆனந்த், ''ம்... என் தம்பியும் உன் தங்கையும் என்ன தில்லுமுல்லு செய்வாங்களோ என்ற பயத்தில்தான்!'' என்றதும், அவளது ஆச்சரியம் கூடியது.

அவளது ஆச்சரியத்தைப் பார்த்தவன், மனைவியை இழுத்து தன் மேல் சாய்த்துக் கொண்டு, ''நீ சரியான அப்பாவிடா செல்லம்! இதுங்க ரெண்டும் கல்யாணமே வேண்டாம் என்று இருந்ததுங்க அப்புறம், கல்யாணம் செஞ்சுக்கறோம் என்று சொல்லுச்சுங்க. வீட்டில் ஆறு மாசம் டைம் கொடுத்ததும், லவ் என்று பல்டி அடிச்சுதுங்க. இதெல்லாம் நம்பற மாதிரியா இருக்கு? வேறு ஏதோ கணக்குப் போடறாங்களோ என்று அம்மாக்குக் கூட சந்தேகம் இருந்தது!

இப்போ எல்லாம் சரியா நடந்துடுச்சு என்றதும்தான் எனக்கு நிம்மதியா இருக்கு!'' என்றவன் கரங்கள்

மனைவியை அணைக்கத் துவங்கி, அவளைத் த
வசமாக்கத் துடித்தன.

''பானு எதுவா இருந்தாலும் ஸ்ட்ரைட் ஃபார்வேர்ட
செஞ்சுடுவா. நீங்க எப்படி அவளை தில்லுமுல்லு
செய்வா என்று சொல்றீங்க?'' என்று ரேகா கோப
கொண்டாள்.

''ஏய் செல்லக்குட்டி, இன்னைக்கு நமக்கு முத
இரவும்மா! இப்போ செல்லமா கூட கோச்சுக்கக் கூடாது
எது எப்படி இருந்தாலும், அவங்க ரெண்டு பேர் க
யாணம் செஞ்சுக்கிட்டதில் எனக்கு சந்தோஷம்தான்!
என்றவன் அதற்கு மேல் பேச்சுக்கு தடை விதித்து
மனைவியின் கோபத்தைக் குறைக்கும் வேலையை, த
இதழ்களுக்குக் கொடுக்க, அங்கே அதற்குப் பிற
நிலவிய மௌனம், இனிமையான இல்லறம் துவங்க
பட்டதற்கு சாட்சியாகிப் போனது.

* * *

இரவு உணவு முடிந்ததும், ''பானு... மாப்பிள்ளைய
உன் ரூமுக்குக் கூட்டிட்டுப் போ!'' என்று வசந்த
சொன்ன பிறகுதான், இனிமேல் அவனோடு ஒ
அறையில் தங்க வேண்டிய நிதர்சனம் ப்ரியாவுக்
உரைத்தது.

பேசும்போது சாதாரணமாகத் தெரியும் எதுவுமே
நடைமுறைக்கு வரும்போது கடினமாக இருப்பத
இயல்புதானே?

ஆகாஷ், அவளது அறைக்குள் சுவாதீனமாக நுழைந்
நோட்டமிடுவதை உணர்ந்த ப்ரியாவுக்கு ஏனோ
எரிச்சலாக இருந்தது.

''ம்... உன் அறையை ரொம்ப சுத்தமா வைச்சிருக்கே!''
என்று ஆகாஷ் பாராட்டியதும்,

''தேங்க்ஸ்!'' என்று வாய் தானாக முணுமுணுத்
தாலும், இவனை எப்படிக் கீழே படுக்கச் சொல்வது
என்று அவள் மனம் யோசித்துக் கொண்டிருந்தது.

சட்டமாக ஆகாஷ் கட்டிலில் வந்து அமர்ந்து கொள்ள,
இதற்கு மேலும் அமைதியாக இருந்தால், இவன் கட்
டிலில் படுத்தே விடுவான் என்று எண்ணி, ''எனக்குக்
கீழே படுத்துப் பழக்கமில்லை!'' என்று அறிவித்தாள் அவள்.

''சேம் பின்ச்! எனக்கும் கீழே படுத்துப் பழக்க
மில்லை!'' என்றான் அவன்.

''சேம் பின்ச்சாம் சேம் பின்ச்! சதையைக் கிள்ளி எடுக்
கிற இவனைக் கிள்ளினால் என்ன?' என்று காரணம் புரி
யாமல், எரிச்சலும் கோபமும் பொங்கியது அவளுக்கு.

அவள் முகத்தில் இருந்தே அவளது எண்ண ஓட்
டத்தைப் படித்தவனாக, ''என்ன ப்ரியா! என்ன ஆச்சு?
நீ அந்தப் பக்கம் படுத்துக்கோ! நான் இந்தப் பக்கம்
படுத்துக்கறேன்!'' என்று இயல்பாக அவன் சொல்ல,
அவள் அப்போதும் தயங்கினாள்.

''பயப்படாதே! கை காலெல்லாம் போட மாட்டேன்!''
என்று லேசான புன்னகையுடன் அவன் சொல்ல,
''பயமா? எனக்கா?'' என்று மனசுக்குள் பொருமியபடி,
வேகமாக அவளும் கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

''பயங்கர டயர்டா இருக்கு! நான் படுக்கறேன்!''
என்று சொல்லி விட்டு, ஆகாஷ் அடுத்த ஐந்து நிமிடங்
களில் உறங்கியும் விட, ப்ரியாதான் கொட்ட கொட்ட
விழித்திருந்தாள்.

அவனிடம் அவளுக்கு பயமில்லை! பயமெல்லாம் அவளைப் பற்றித்தான்! ஏனென்றால் அவளது படுக்கும் பழக்கம் அப்படி! எப்போதும், கட்டிலின் ஒரு புற படுக்கிறவள், அடுத்த புறம்தான் எழுவாள்.

விருந்தினர் யாராவது வந்து ஒரே அறையை பகிர்ந்து கொள்ள நேரும்போது, ரேகா இவளுடன் படுக்க பயப்படுவாள்.

''அம்மா தாயே! நான் கீழேயே படுத்துக்கிறேன் இல்லைன்னா, காலைக்குள்ள என்னை சட்னி செ சுடுவே! பார்க்கத்தான் ஆள் ஒல்லி! கை போட்டா என்னமோ பத்து கிலோ கட்டையை போடற மாதி இருக்கும்!'' என்று அலுத்துக் கொள்வாள்.

தூக்கத்தில் இவன் மேல் கையை காலை போட்டால் என்ன நினைப்பான் என்ற எண்ணமே, அவளை உறங்க விடாமல் செய்ய, மாலையில் இருந்து ஓய்வுக்கு கெஞ்சிய உடல், உறக்கத்துக்கு ஏங்கியது.

கீழே படுத்து விடலாமா என்று யோசித்தவள் அவனை நம்பாமல் படுத்து விட்டேன் என்று எண்ணி கொள்வானோ என்று எண்ணி அதையும் கை விட்டாள்.

உறக்கத்தை விரட்ட, ஒரு புத்தகத்தை எடுத்து வைத்து படிக்க ஆரம்பித்தவள், அதனுள் மூழ்கி போனாள் அதுவும் கொஞ்ச நேரத்துக்குத்தான்!

மீண்டும் உறக்கம் கண்களை அழுத்த கட்டிலின் ஒ புறத்தில் ஒடுங்கி படுத்தவளுக்கு, ''ச்சே! கல்யாண நடந்த ஒரே நாளில், என் அறையிலேயே என்னா நிம்மதியாக உறங்க கூட முடியாமல் போகுதே!'' என் எண்ணம் எரிச்சல் வர, இன்னும் என்ன என்

பிரச்சனைகள் வருமோ என்ற அச்சம் தோன்றி, நெஞ்சில் கலக்கம் தோன்றியது.

''பானு! நோ நெகடிவ் ஃபீலிங்க்ஸ்!'' என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு, லேசாகத் திரும்பி அயர்ந்து உறங்கி கொண்டிருந்த ஆகாஷைக் கண்ட வளுக்கு லேசாக பொறாமை கூட எழுந்தது.

எல்லாம் இவனால் வந்தது! ஏதேதோ சொல்லி அவளைக் குழப்பி, திருமணம் செய்துவிட்டு இவன் மட்டும் அலட்டிக் கொள்ளாமல் உறங்குகிறானே என்ற கோபம் எழும்போதே, இந்த திருமணம் அவளுடைய சம்மதத்தோடும்தான் நடந்தது என்று அவளது நியாய மனம் அறிவுறுத்த, மனதை அமைதிப்படுத்திக் கொண்டு உறங்க முயற்சி செய்தவளுக்கு அதிகாலை யில்தான் உறக்கம் பிடித்தது.

காலையில் எப்போதும் போல் ஐந்தரை மணிக்கு கண் விழித்த ஆகாஷுக்கு, கை கால்களை சுருக்கி மடக்கி கொண்டு உறங்கிக் கொண்டிருந்த ப்ரியாவைக் கண்டதும், 'ஏன் இப்படி படுத்துக் கொண்டிருக்கிறாள்?' என்று தோன்றியது.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, ஜாகிங் செல்ல அறையில் இருந்து வெளியே வந்தவனை, ''இவ் வளவு சீக்கிரம் எழுந்துட்டீங்களா? காபி எடுத்துட்டு வரட்டுமா?'' என்று வசந்தி படபடப்புடன் விசாரித்தார்.

''எதற்கு இவ்வளவு படபடப்பு?'' என்று ஆச்சரியமாக இருந்தாலும், ''இல்ல ஆன்ட்டி! இப்போ வேண்டாம்! நான் ஜாகிங் போயிட்டு வந்த பிறகு குடிக்கிறேன்!'' என்று விட்டு அவன் கிளம்பி விட,

"அவர் எழுந்துட்டார். அவருக்கு ஏதாவது வேணுமா என்று கேட்காமல் இந்த பொண்ணு இன்னும் தூங்கு கிறாள் பார்!" என்று படபடத்து கொண்டே வசந்தி, தன் வேலையைப் பார்க்கப் போனார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், ஆகாஷ் ஜாகிங் முடிந்து வர, ஆனந்த்தும் ரேகாவின் அறையில் இருந்து வெளியே வந்தான்.

"என்னடா? இன்னைக்குமா ஜாகிங்?" என்ற ஆனந் துக்கு ஒரு புன்னகையை மட்டும் பதிலாக கொடுத்த ஆகாஷ், பத்திரிகை எடுத்து படிக்க ஆரம்பித்தான்.

வெளியே அரவம் கேட்டு, மாப்பிள்ளைகள் இரு வருக்கும் காபி எடுத்து வந்து கொடுத்த வசந்தி, "ரேகா எங்கே, மாப்பிள்ளை?" என்று ஆனந்திடம் விசாரிக்க, "குளிச்சிட்டு இருக்கா, அத்தை!" என்றான் அவன்.

"இந்த பானு இன்னும் என்ன செய்யறா?" என்று முணுமுணுத்துக் கொண்டே ப்ரியாவின் அறைக்கு வந்த வசந்தி, அவள் இன்னும் உறங்கி கொண்டிருப்பதைக் கண்டதும், "பானு... எழுந்திரு!" என்று எழுப்ப,

"தூக்கமா வருதும்மா! இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேன்!" என்று தூக்க கலக்கத்துடன் சொல்லி விட்டு, அவள் உறக்கத்தைத் தொடர,

"பானு மாப்பிள்ளை எழுந்து ஜாகிங் போயிட்டே வந்துட்டாரு. நீ இன்னும் தூங்கிட்டு இருக்கே! எழுந்து சீக்கிரம் குளிச்சிட்டு வா!" என்று மெல்லியக் குரலில் அதட்டினார்.

அவர் மாப்பிள்ளை என்று ஆகாஷுக்கு கொடுத்த முக்கியத்துவத்திலும், அவன் எழுந்து விட்டான்

என்பதற்காக தன்னை எழுந்து கொள்ள சொன்னதிலு மாக, அன்னை மீது ப்ரியாவுக்கு கோபம் வந்தது.

இரவு முழுதும் உறங்காமல் இருந்தது எரிச்சலைத் தர, "போங்கம்மா... நைட் முழுக்க தூங்கவே இல்ல. காலையில்தான் கண் அசந்தேன்... இப்போ என்னால் எழுந்துக்க முடியாது!" என்று அவள் குரல் உயர்த்தி சொல்ல, அது வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஆகாஷ், ஆனந்த், அப்போதுதான் குளித்து விட்டு வந்த ரேகா வின் செவிகளில் விழுந்தது.

ரேகா வெட்கத்துடன் கணவனை நோக்க, அவன் அவளிடம் கண் சிமிட்டி விட்டு, விஷம பார்வையுடன் தம்பியை நோக்கினான்.

ஆகாஷுக்கு என்ன செய்வதென்ற புரியவில்லை! யாரையும் பார்க்காமல், மீண்டும் பத்திரிகையில் தலையை நுழைத்துக் கொண்டான்.

அங்கே, "கத்தாதடி! ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளரலை! சீக்கிரம் எழுந்திரு!" என்று அவளை அதட்டி உருட்டி எழுப்பி விட்டுத்தான் வசந்தி அங்கிருந்து நகர்ந்தார்.

காலை உணவை உண்ட கையோடு, ப்ரியா, "நான் கொஞ்ச நேரம் தூங்க போறேன்!" என்று தன் அறைக்கு செல்ல, அண்ணனின் பார்வையைத் தாங்க முடியாமல் ஆகாஷ்தான் திணறிப் போனான்.

"நீங்களும் போய் ரெஸ்ட் எடுங்க!" என்று வசந்தி சொன்னதுதான் தாமதம். தப்பித்தோம் பிழைத்தோம் என்று அறைக்குள் வந்தவனைக் கண்ட ப்ரியா, "நீ எதுக்கு இப்போ இங்கே வந்தே? நான்தான் நைட் சரியா

தூங்கலை! உன...'' என்று சொல்லிக் கொண்டிருந்த வளின் வாயைப் பொத்தியவன்.

''அம்மா... தாயே... நீ நல்லா தூங்கு! உன்னை நான் தொந்தரவு செய்யலை... ஆனால், இப்படி நைட் தூங் கலை தூங்கலை என்று சொல்லி என் மானத்தை வாங் காதே! ஆனந்த் வேற என்னை ஒரு மார்க்கமா பார்க் கிறான்!'' என்று அடிக்குரலில் சொல்ல,

அவனது கையைத் தட்டி விட்டு விட்டு, ''நான் தூங் கலை என்று சொன்னால், உன் மானம் ஏன் போகுது?'' என்று குழப்பத்துடன் கேள்வி கேட்டவளை, ஒரு பார்வை பார்த்தவன்,

''உனக்கு நிஜமாவே புரியலையா?'' என்று வினவினான்.

''ம்ஹூம்...'' என்று உதட்டைப் பிதுக்கி அவள் சொன்ன பதில், புன்னகையை வரவழைக்க, ''சரி... நீ தூங்கு!'' என்றவனிடம், ''என்ன... என்ன சிரிப்பு?'' என்று அவள் அதட்ட,

''ஒண்ணுமில்லை... நீ தூங்கு!'' என்றவன், அவளது புத்தக அலமாரியில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்து, அறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்து, படிக்க ஆரம்பித்தான்.

''ப்ச்... சொல்லலைன்னா போ... இப்போ எனக்கு தூக் கம் தான் முக்கியம்!' என்றவள், படுக்கையில் சரிந்தாள்.

கொஞ்ச நேரம் சென்ற பின், ஏதோ தோன்ற, படுக் கையை பார்த்தவன் கண்களில், வலது புறம் படுத் திருந்த ப்ரியா, இடது புறமாக வந்திருப்பது தெரிந்தது. அடுத்த அரை மணி நேரத்தில், மீண்டும் வலது புறம் படுத்திருந்தாள்.

காலையில், கை கால்களை சுருக்கி கொண்டு அவள் படுத்திருந்தது ஏன் என்று புரிய வர, ''ச்சே... அதான் நேற்று படுக்க அவ்வளவு தயங்கினாள் போல!'' என்று எண்ணியவனுக்கு பாவம் என்று தோன்றியது.

மதிய உணவு முடிந்து, மாலை வசந்தியின் வேண்டு தலின்படி கோவிலுக்கு சென்று வந்தனர்.

அன்று இரவு, ஒரு போர்வையையும், தலையணையை யும் எடுத்து கீழே போட முயன்ற ஆகாஷிடம், ''ஹே! என்ன செய்யறே?'' என்றாள் ப்ரியா.

''நான் கீழே படுத்துக்கறேன்! நீ மேல படு!'' என்றான் அவன்.

''இல்ல... நீ படு! நான் காலையில தூங்கிட்டேன்! இப்போ தூக்கம் வரலை! நான் அப்புறமா படுக்கறேன்!''

''அம்மா... தாயே... வேண்டாம்... வேண்டாம்.... நைட் தூங்காம, காலையில தூக்கம் வருதுன்னு சொல்வே! எல்லாரும் என்னை ஒரு மாதிரியா பார்ப்பாங்க! வேண் டவே வேண்டாம்..... தாயே! நீ படு! தூக்கம் வர லைன்னாலும் படு! கண்ணை மூடி படுத்தால், கொஞ்ச நேரத்தில் தூக்கம் வரும்!''

ஆகாஷ் அலறாத குறையாக சொல்ல, ப்ரியா அவனை விசித்திரமாக நோக்கினாள்.

''என்ன ஆச்சு உனக்கு? காலையிலயும் இப்படித்தான் உன் மானம் போச்சுன்னு சொன்னே! இப்பவும் எல்லாரும் உன்னை ஒரு மாதிரியா பார்ப்பாங்க என்று...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவளுக்கு, பேச்சு பாதியிலேயே நின்று, காலையில் தூங்கி எழுந்து வந்த தன்னை ரேகா குறுகுறுவென்று பார்த்தது நினைவுக்கு வந்தது.

''அச்சோ! ரொம்பவே உளறி விட்டேனோ? அதுதான் எல்லாரும் தன்னை ஒரு மாதிரி பார்த்தார்களோ!''

தலையைப் பிடித்துக் கொண்டு, விழித்து கொண்டு நின்றிருந்தவளைக் கண்டதும், 'மேடம்க்கு புரிந்து விட்டது போல!' என்று எண்ணியபடி, கீழே போர் வையை விரித்தான் ஆகாஷ்.

''ஆகாஷ்... உனக்கும் கீழே படுத்து பழக்கம் இல்லை தானே? நீயும் மேலேயே படு!''

''ஹய்யோ! வேண்டாம் வேண்டாம்! நீதான் படுக்கை யிலேயே அங்கப் பிரதட்சணம் செய்யற ஆளாச்சே! நீ படு! நான் இங்கேயே படுத்துக்கிறேன்!'' என்றபடி அவன் படுத்தே விட்டான்.

''ஹூம்! அதையும் பார்த்துவிட்டானா?'' என்றபடி, படுக்கையில் விழுந்தவளை, கொஞ்ச நேரத்திலேயே உறக்கம் தழுவியது.

அடுத்த நாள், தேவகியும் ரவிச்சந்திரனும், பிள்ளை களையும் மருமகள்களையும் தங்கள் இல்லத்துக்கு அழைக்க வந்தனர்.

''அண்ணி... ரேகாவை பற்றி கவலை இல்லை! அவள் நல்லபடியா குடும்பம் நடத்துவாள் என்ற நம்பிக்கை இருக்கு! பானுவை நினைச்சால்தான்...'' என்று இழுத்த வசந்தி,

''பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுவாளே தவிர, இன்னும் நிறைய விஷயங்களில் அவள் குழந்தை மாதிரிதான்! ஏதாவது தப்பு செஞ்சாலும்... நீங்கதான் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும்!'' என்று தேவகி யிடம் வேண்டுகோள் விடுக்க,

''நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க அண்ணி... அவங்க நாலு பேருமே ரொம்ப சந்தோஷமா இருப் பாங்க!'' என்று ஆறுதலாக சொன்ன தேவகி,

''ரெண்டு பேரையுமே தனிக் குடித்தனம் வைக்கத் தான் போறோம்! அவங்க அவங்க குடும்பத்தை அவங்க அவங்களே பார்த்துக்கிட்டால்தான் பொறுப்பும் வரும்! அதனால் நீங்க கவலைப்படாதீங்க!'' என்றவர், வசந்தி யின் ஆச்சரியப் பார்வையைக் கண்டு கொண்டவராக,

''தனியா இருக்க போறாங்களே தவிர, நம்ம வீட்டில் இருந்து ரெண்டு பேரோட பிளாட்டும் பக்கம்தான் அண்ணி! நாங்களும் போய் பார்க்க போறோம்! அவங்களும் வர போறாங்க. இது அவங்க வாழ்க்கை அவங்க இஷ்டப்படி வாழட்டுமே!'' என்ற தேவகியிடம்.

''எதுக்கு தனியா எல்லாம் அண்ணி? உங்க கூடவே இருந்தால், நல்லா இருக்குமே!'' என்று தயங்கியபடி வசந்தி சொல்ல,

''தனியா இருக்கும்போது, அவங்களுக்குள் புரிதல் இன்னும் நல்லா இருக்கும்! அந்த காலத்திலேயே எங்க மாமியார். எங்களை தனிக்குடித்தனம்தான் வைச்சாங்க. சண்டை போட்டாலும், சமாதானம் ஆனாலும் எங்களுக் குள்ளவே இருக்கணும் என்று!'' என்று தேவகி சொல்லி விட, வசந்திக்கு, தன் மகவுகள் நல்ல இடத்தில் வாழ்க்கை பட்டிருக்கிறார்கள் என்ற நிறைவு தோன்றியது.

''ஆனந்துக்கு புக் செய்திருந்த ப்ளாட் ரெடி ஆகிடுச்சு! அதனால், இன்னும் ரெண்டு மூணு நாளில் அவங்க கிரகப்பிரவேசம் செய்து அங்கேயே குடி போகலாம்! ஆகாஷுக்கு இப்போதான் ப்ளாட் புக் செய்திருக்கோம்!

அது ரெடி ஆக ஏழெட்டு மாசம் ஆகும். அதனால், அவங்களுக்கு ஆனந்த் அபார்ட்மெண்டிலேயே ஒரு பிளாட் பார்த்திருக்கோம். அவங்க ப்ளாட் ரெடி ஆகிற வரை, அவங்க அங்கே குடி இருக்கட்டும்!'' என்று தேவகி சொல்ல, வசந்தி மகள்களின் தனிக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்யும் வேலைகளைப் பற்றிய யோசனையில் மூழ்கினார்.

அன்று மாலை. ஆகாஷ் - ப்ரியாவுக்கு பார்த்திருந்த ப்ளாட்டுக்குள் வந்த ஆகாஷும், ப்ரியாவும் அதிர்ந்து போனார்கள்.

''ப்ச்... வீடு பார்க்கிறதில் இந்த அம்மாவை நம்பியது தப்பா போச்சு! ஒரே ஒரு பெட்ரூம்! ப்ரைவசியே இருக்காது!''

எரிச்சலுடன் முணுமுணுத்த ஆகாஷ், கைப்பேசியில் அன்னையை அழைத்தான்.

''என்னம்மா இது? இப்படி சின்னதா ஒரு வீடு பார்த்து இருக்கீங்க? உங்களால் முடியாது என்றால் என்கிட்டே முன்னாடியே சொல்லி இருக்கலாம் இல்ல?'' என்று படபடத்தவனிடம்.

''சின்னதாவா? நான் சொன்ன வீட்டைத்தானே பார்த்தே ஆகாஷ்? C-3, செகண்ட் ப்ளோர்?'' என்று விசாரித்தார் அவர்.

''அதே தான்.''

''ஒரு ஹால், ஒரு பெட்ரூம், ஒரு கிச்சன் என்று இருந்ததே! பெட்ரூம் கூட பெரிசா இருந்ததே? கூடவே பால்கனி வேற!'' என்று வீட்டின் அருமை பெருமைகளை அள்ளி விட்ட தேவகி,

''இந்த வீட்டுக்கே எவ்வளவு டிமேன்ட் தெரியுமா? ரெண்டு பேரும் வேலைக்கு போறீங்க! இதை விட பெரிசா இருந்தா மேனஜ் செய்யறது கஷ்டம்! இதுதான் உங்களுக்கு சரி!'' என்று சொல்லி விட்டு அழைப்பைத் துண்டிக்க முயல,

''ப்ச்... ப்ரைவசியே இருக்காதும்மா!'' என்றான் மகன்.

''ஆமாம்! இருக்க போறது நீங்க ரெண்டு பேர்தான்! இதுல ப்ரைவசி இல்லாமல் இருக்க என்னாடா இருக்கு?''

இதற்கு மேல் பேசினால், அன்னைக்கு சந்தேகம் வரும் என்று தோன்ற ஆகாஷ் அமைதியானான்!

தன்னையே பார்த்து கொண்டிருந்த ப்ரியாவிடம், ''ப்ரியா... கொஞ்சம் நாள் நாம எங்க வீட்டிலேயே இருக்கலாம். அப்புறம், வேற வீடு பார்த்துட்டு...'' என்று ஆகாஷ் இழுக்க,

''இல்ல... இல்ல... இப்போதைக்கு இதுவே இருக்கட்டும் ஆகாஷ். அப்புறம், வேற வீடு பார்த்துட்டு, இங்க சரிப்படலை என்று ஷிப்ட் செஞ்சுக்கலாம்!'' என்று ப்ரியா சொன்னதும், அடுத்த நாளே அங்கே குடி வருவது என்று இருவரும் முடிவு செய்தனர்.

ரவிச்சந்திரன் தன் மனைவியிடம், ''ஏன்மா... இதுக்கு முன்னாடி ஒரு டபிள் பெட்ரூம் ப்ளாட் பார்த்தோம் இல்ல? அதையே எடுத்துருக்கலாமே?'' என்று வினவ,

''ம்ஹூம்! ஆகாஷும் ப்ரியாவும் என்னதான் பார்த்த உடன் காதல் என்று கதை சொல்லி கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாலும், எனக்கு இன்னும் சந்தேகம் போக லைங்க. டபிள் பெட்ரூம், ஆளுக்கு ஒரு ரூமுக்குள்ள அடைஞ்சுகிட்டு இருப்பாங்க. அது சரிப்படாது!'' என்று யோசனையுடன் தேவகி சொல்ல

"ஏன் தேவிம்மா? உனக்கு இன்னுமா சந்தேகம்?" என்று ரவிச்சந்திரன் ஆச்சரியப்பட,

"ம்... ஆனந்த் - ரேகா ரெண்டு பேரும், கிரகப்பிர வேசம் முடிந்த கையோடு ஹனிமூன் கிளம்பறாங்க. ஆனால், ஆகாஷோ, ஒரு முக்கியமான கேஸ் ஹியரிங் இருக்கு என்று ஹனிமூன் போகலை என்று சொல்லிட் டான். ப்ரியாவும், அதைப் பற்றி கவலைப்பட்ட மாதி தெரியலை! இதுங்க இப்படி நடந்துக்கறதை பார்த்தால் சந்தேகம் வராமல் என்ன செய்யும்?" என்றார்.

"இப்படி இருக்கிறவங்களை தனியா வைக்கிறதுக்கு பதிலாக, அப்போ நம்ம வீட்டிலேயே இருக்க சொல்லி இருக்கலாம் இல்ல?" என்று கேள்வி எழுப்பினார் ரவிச்சந்திரன்.

"இல்லைங்க... இங்க இருந்தால், நமக்கு சந்தேகம் வரக் கூடாது என்று ரெண்டு பேரும் கவனமா நடந்துப் பாங்க. அது மாதிரி இல்லாமல், அவங்க இயல்புபடி இருக்கட்டும்! அப்போதான் நல்லது! ஒரு வேளை, எங் சந்தேகம் தப்பா கூட இருக்கலாம்! எது எப்படி இருந்தாலும், அவங்க ரெண்டு பேரும் தனியா இருக்கிறது தான் சரி!" என்று தேவகி முடிவாக சொல்லி விட,

தன் மனைவியின் முடிவுகள் எப்போதும் சரியானதாகவே இருந்திருக்கின்றன என்பதை அனுபவத்தில் உணர்ந்திருந்த ரவிச்சந்திரன், அதற்கு மேல் பேசாமல் அமைதியானார்.

அடுத்த நாளே, ஆகாஷும் ப்ரியாவும் பால் காய்ச்சி தங்கள் தனிக்குடித்தனத்தை துவங்கினர்.

ஆகாஷ் - ப்ரியாவின் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் எல்லாமே, இருவரின் அன்னைமார்களின் உதவியால் வீட்டில் குடி புகுந்திருந்தன.

இருவரும், திருமணத்துக்கு முன்பே, தாங்கள் எப்படி குடும்பம் நடத்த வேண்டும் என்று பேசி வைத்திருந்ததை மீண்டும் நினைவு படுத்திக் கொண்டனர்.

இருவரும் எந்த விஷயத்துக்கு ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கக் கூடாது! அவரவர் வேலைகளை அவரவரே செய்து கொள்ள வேண்டும்!

ஒருவர் விஷயத்தில் இன்னொருவர் தலையிடக் கூடாது!

கடமை, உரிமை என்ற பேச்சுக்கெல்லாம் இடமே இருக்க கூடாது!

நிபந்தனைகள் சொல்வதற்கு எளிதுதான்! ஆனால் அதை செயல்படுத்துவதில் வரும் பிரச்சனைகளை இருவரும் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்?



புது வீட்டுக்கு காலையில் பால் காய்ச்ச வந்திருந்த இரு அன்னைமாரும், தனித்தனியாக தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறியதோடு, பொருட்கள் அனைத்தையும் அடுக்கி கொடுத்து, அன்று இரவுக்கான உணவையும் சமைத்து வைத்து விட்டே சென்றனர்.

ஆகாஷும் ப்ரியாவும், இரவு உண்டு விட்டு, அவரவர் உபயோகித்த பாத்திரங்களை அவரவரே சுத்தம் செய்து விட்டு வந்தனர்.

படுக்கை அறைக்குள் நுழைந்த ஆகாஷ். ''இங்க பாரு ப்ரியா! என்னால் தினமும் கீழே படுக்க முடியாது! இந்த பெட் பெரிசாவே இருக்கு!'' என்றவன் கொஞ்ச இடைவெளி விட்டு, ஒரு புன்னகையுடன்.

''நீ என்னதான் பெட்ல அங்க பிரதட்சணம் செஞ் சாலும், தூக்கத்திலும் உனக்குள்ள ஒரு கண்ட்ரோ இருக்கு ப்ரியா!'' என்று சிலாகித்தான்.

என்னவோ ஏடாகூடமாக சொல்லப் போகிறான் என்பது புரிந்து என்ன என்பது போல ப்ரியா நோக்க, ''என்ன உருண் டாலும், பெட்டை விட்டு கீழே விழலை பாரு! அ னைக்கு கூட எங்கே உருண்டு, கீழே படுத்திருந்த எ மேல் விழுந்து விடுவாயோன்னு நான் பயந்துட்டேதா படுத்திருந்தேன். சோ, இந்த பெட்டிலும் உன் பெ அளவு வரைதான் நீ உருளுவேன்னு நினைக்கிறேன்!'' இப்படி சொன்னதற்கு அவளிடம் இருந்து முறைப்பு திட்டும் வரும் என்று தெரிந்தே, அவன் கேலி செய்ய அவன் சொன்ன விதத்தில் அவளுக்கு சிரிப்புதான் வந்தது

அவளது புன்னகையைக் கண்டவன், ''ஹேய்! இந்திய தொலைக் காட்சி வரலாற்றில் முதன் முறையாக நான் உன்னை கேலி செஞ்சாலும் நீ முறைக்கவில்லை திட்டவில்லை! ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் திஸ்'' என்று கையை விரிக்க,

''போதும்! அப்புறம் உன் ஆசையை நிறைவேற்ற உன்னை கன்னா பின்னா என்று திட்ட ஆரம்பி சுடுவேன்!'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டியவள்,

''நாளையில் இருந்து ஆபீஸ் போகணும்! சீக்கிர படுக்கலாமா?'' என்று கேட்டுக் கொண்டே, படுக்கை யில் ஒரு புறமாக வந்து படுத்தாள்.

முதலில், கை காலை சுருக்கி படுத்தவள், பின்பு, இப் படியே படுத்தால் உடம்பு வலிக்கும் என்பதை உணர்ந்த வளாக, படுக்கையில் உருளக் கூடாது என்று தனக்குத் தானே உருப்போட்டு கொண்டு உறங்க ஆரம்பித்தாள்.

காலையில் கண் விழித்த போது, தான் இரவு படுத் திருந்த இடத்திலேயே படுத்திருப்பதைக் கண்டதும், அவளுக்கே ஆச்சரியமாக போனது!

ஆகாஷ் எழுந்து விட்டான் போலும்! ஐந்தரை மணிக்கு எழுந்து அவன் ஜாகிங் போவான் என்பது தெரிந்ததால், அவள் எழுந்து அவளது வேலையைக் கவனிக்க போனாள்.

குளித்து முடித்து விட்டு, ப்ரட் டோஸ்ட் செய்து உண்டு விட்ட, ப்ரியா அலுவலகம் கிளம்பும் போது, ஆகாஷ் குளித்து விட்டு வந்தான்.

''எப்பவும் இவ்வளவு சீக்கிரம் கிளம்பிடுவியா?''

ஆச்சரியத்துடன் கேட்டவனிடம், ''இல்ல... இன் னைக்கு கொஞ்சம் சிட்டிக்கு வெளியே போகற வேலை இருக்கு! அதான்! பை!'' என்று விட்டு அவள் கிளம்பி விட, ஆகாஷும் தயாராகி தன் அலுவலகத்துக்கு கிளம்பினான்.

அலுவலகத்தில் ''என்னம்மா புதுப் பொண்ணு, அதுக் குள்ளே ஆபீஸ் வந்துட்டே? ஹனி மூன் போகலையா?'' என்று வினவிய நேஹாவை,

''நீ உதை வாங்கப் போறே!'' என்று ப்ரியா மிரட்ட,

''என்ன அநியாயம் இது? புதுசா கல்யாணம் ஆன வங்க கிட்ட என்ன கேட்கணுமோ அதைத்தான் நான் கேட்டேன்! அதுக்கு போய் அடிப்பேன் உதைப்பேன் என்று மிரட்டு றே?'' என்று நேஹா அலுத்துக் கொள்ள,

"எல்லாத்தையும் உன்கிட்ட சொன்ன பிறகும், இந்த மாதிரி கேள்வி கேட்டுட்டே இருந்தே, மிரட்ட மட்டும் மாட்டேன்... கண்டிப்பா உதைப்பேன்!" என்று அவளை அடக்கி விட்டு, ப்ரியா வேலையில் ஆழ்ந்தாள்.

அன்று இரவு அவள் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு கிளம்ப ஏழரை மணி ஆனது எப்போதும் போல், தன்னியல்பாய் அவளது வண்டி அவளுடைய வீட்டுக்குப் போகும் பாதையில் செல்ல, பாதி தூரம் சென்றதும்தான் ப்ரியாவுக்கு, தான் வேறு வீட்டில் வசிக்கிறோம் என்பதே நினைவு வந்தது.

'ஆஹா! வீட்டுக்குப் போனதும் அம்மா செய்து வைத்திருக்கும் உணவை உண்டு விட்டு படுத்து விடலாம். என்று நினைச்சேனே!' என்று அங்கலாய்த்துக் கொண்டவளுக்கு, இப்போது தானே போய் சமைக்க வேண்டும் என்று உணர்வே அலுப்பைத் தர, ஏற்கனவே இருந்த களைப்பு மேலும் அதிகமானது.

களைப்புடன் வீட்டுக்கு வந்தவளை, "ஹாய்!" என்று புன்னகையுடன் வரவேற்ற ஆகாஷ், சப்பாத்திக்கு மாவு பிசைந்து கொண்டிருந்தான்.

பதிலுக்கு "ஹாய்!" சொன்ன ப்ரியாவுக்கு, சப்பாத்தி மாவைக் கண்டதும், பசி வயிற்றைக் கிள்ளியது.

முகம் கழுவிக் கொண்டு வந்து இரண்டு பிரட் சாண்ட்விட்ச் செய்து உள்ளே தள்ளிய பிறகும், பசி அடங்க மறுக்க, குளிர் சாதனப் பெட்டியில் அன்னை வாங்கி வைத்து போயிருந்த பழங்களில் ஒரு ஆப்பிளை எடுத்து உண்டாள்.

அதற்குள், சப்பாத்தியும் பருப்பும் தயார் செய்து எடுத்து வந்து உண்ண ஆரம்பித்த ஆகாஷ், "வீட்டு

வேலைக்கு ஆள் சொல்லி இருக்கேன் ப்ரியா. ஆனால், நாம் ரெண்டு பேருமே ஒரே நேரத்தில் கிளம்பி, குறிப்பிட்ட நேரத்தில் வர முடியாது என்பதால், நமக்கேற்ற ஆள் கிடைக்கிறது கஷ்டம் என்று செகரட்டரி சொல்றார். கிடைக்கிற வரைக்கும் நாமேதான், செஞ்சுக்கணும்! நான் இன்னைக்கு வீட்டை பெருக்கிட்டேன்! நாளைக்கு உன்டர்ன்!" என்று சொல்ல, ப்ரியாவுக்கு தலை சுற்றியது.

அம்மா வீட்டில் இருந்தவரை இதெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை... என்று எண்ணியவளுக்கு, யாரையும் சார்ந்திருக்கக் கூடாது என்று எண்ணி இருந்தது தான் எத்தனை விஷயத்தில் அன்னையை சார்ந்து இருந்திருக்கிறோம் என்று தோன்றியது.

அடுத்த இரண்டு நாட்களும், அப்படியே செல்ல, அவள் எப்போதும் ரொட்டியை உண்பதைக் கண்ட ஆகாஷ், "எதுக்கு தினமும் கோதுமை ரொட்டியே சாப்பிடறே?" என்று விசாரித்தான்.

"ஏன் கோதுமை ரொட்டில நிறைய ஃபைபர் இருக்கு தெரியுமா? காய்கறி வைத்துதானே சாப்பிடறேன்! ஆரோக்கியமான உணவுதான்!"

"கண்டிப்பா! ஆனால், தினமும் அதையே சாப்பிட்டு போர் அடிக்கலை?"

தனக்கு, சமைக்க தெரியாது என்பதை அவனிடம் சொல்லப் பிடிக்காமல், ப்ரியா மௌனமாகவே இருக்க, அவள் முகத்தில் இருந்தே எதையோ கண்டு கொண்டவனாக, "ஹே! உனக்கு சமைக்க தெரியாதா? அதான் வீட் ப்ரட்டுக்கு விளம்பரம் ஓட்டிட்டு இருக்கியா?" என்று கேலியாக வினவினான்.

''ஆமா, எனக்கு சமைக்க தெரியாதுதான்! அதுக் கென்னே இப்போ?'' கடுப்புடன் ப்ரியா கேட்டதும், மேலும் கேலி செய்ய வாயெடுத்தவன், அவள் முகத்தில் இருந்த இயலாமையைக் கண்டதும், ''எதுவும் இல்ல!'' என்று தோளைக் குலுக்கி கொண்டு நகர்ந்து விட்டான்.

மூன்று நாட்களாக காலையும் இரவும் ரொட்டி சாப் பிட்டு அலுத்துப் போய், நாக்கு அன்னையின் ருசியான உணவுக்கு ஏங்கிக் கொண்டிருந்த வேளையில், ஆகாஷின் கேலி அவளுக்கு கோபத்தை வரவழைத்திருந்தது.

''இவன் வேற! எரியிற நெருப்பில எண்ணெயை ஊத்திட்டு இருக்கான்!' வாய் விட்டே எரிச்சல் பட்ட வளுக்கு, சற்று நேரம் பொறுத்து, தன் இயலாமைக்காக அவனிடம், அப்படி எடுத்தெறிந்து பேசியது தவறு என்று உரைத்தது! இருந்தும், அவனிடம் சென்று சாரி கேட்க மனமில்லாமல், அலுவலகத்துக்கு கிளம்பினாள்.

அன்று மாலை, வீடு வந்த ப்ரியாவை, சமையல் அறையில் இருந்து வந்த வாசம் இழுத்தது. சமையல் அறையில் வந்து நின்றவளிடம், ''ப்ரியா... மசால் தோசை செஞ்சுட்டு இருக்கேன்!. உனக்கு வேணுமா?'' என்று விசாரித்தான் ஆகாஷ்.

மசால் தோசை என்ற பெயரைக் கேட்டதுமே வேண் டும் என்று தலை தானாக ஆமோதிக்கத் துவங்க, ''இல்ல... இல்ல... நான் சாண்ட்விட்ச் செய்யப் போறேன்!'' என்று அவசரமாக சொல்லி விட்டு அங் கிருந்து நகர்ந்தாள்.

ஒரு தோள் குலுக்கலுடன் அவன் தோசையை சுட்டு எடுத்துக் கொண்டு வந்தான். அவன் அகன்றதும், ப்ரியா

சமையல் அறைக்கு சென்று, தனக்கு சாண்ட்விட்ச் தயாரித்து கொண்டு வந்தாள்.

ஆகாஷ் சோபாவில் அமர்ந்து கொண்டு தொலைக் காட்சியை பார்த்த வண்ணம், மசால் தோசையை ரசித்து ருசித்து சாப்பிட்டு கொண்டிருந்தான்.

அதைக் கண்ட ப்ரியாவுக்கு, உண்மையிலேயே மசால் தோசை ருசியாக இருக்கிறதா? இல்லை, இவன் ஓவர் பந்தா காண்பிக்கிறானா? என்று சந்தேகம் தோன் றியது.

வாசனை ஆளைத் தூக்குதே! ருசியும் நல்லாத்தான் இருக்கும்! என்று எண்ணியவள், அடுத்த கணமே, ''குரைக்கிற நாய் கடிக்கணும் என்று அவசியம் இல்லை!'' என்று சொல்லிக் கொண்டாள்.

''ப்ரியா... என்ன ஆச்சு? தனியா பேசிட்டு இருக்கே?'' என்ற ஆகாஷின் குரல் கேட்டு நினைவுக்கு வந்தாள்.

''கடவுளே! வாய் விட்டே பேசிட்டு இருக்கேனா!'' என்று விழித்து விட்டு, ''ஒண்ணும் இல்லை!'' என்று கூறி சமாளித்தாள்.

தோள் குலுக்கல் மன்னன், தன் ஆஸ்தான தோள் குலுக்கலோடு மீண்டும் உண்பதில் தீவிரமானான்.

தன் தட்டில் இருந்த சாண்ட்விட்ச் எதோ மரத்துண்டு போல தோன்ற, ஏக்கத்துடன் ஆகாஷின் தட்டைப் பார்த்த ப்ரியாவுக்கு நாவில் எச்சில் ஊறியது.

''ச்சே... அவன் வேண்டுமா என்று கேட்ட போதே பந்தா காண்பிக்காமல், வேண்டும் என்று சொல்லி இருக் கலாம்!'' என்று நொந்து கொண்டவள்,

"சரி... நான்தான் வேண்டாம்னு சொன்னேன்... இந்த மரமண்டையாவது இன்னொரு தரம் கேட்டிருக்கலாம் இல்ல?" என்று ஆகாஷ் மீது எரிச்சல் பட்டாள்.

சாப்பிட்டு முடித்த ஆகாஷ், தட்டில் இருந்த ரொட்டியைக் கொஞ்சம் கூட உண்ணாமல், யோசனையில் அமர்ந்திருந்த ப்ரியாவைக் கண்டு ஆச்சரியப்பட்டபடியே, "என்ன ப்ரியா? சாப்பிடலையா?" என்றான்.

"ம்ம்ம்ம்... சாப்பிடணும்!" என்றவளுக்கு உண்ண மனம் வரவில்லை. சாண்ட் விட்ச் அன்று குப்பைக்கு போனது.

உணவுக்குப் பிறகு ஆகாஷ், தன் மடிக் கணினியில் ஆழ்ந்து விட, ப்ரியாவுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

சமையல் அறைக்குள் நுழைந்தவள் கண்களில் கடாயில் மிச்சம் இருந்த உருளை மசாலா பட, கொஞ்சமாக எடுத்து சுவைத்து பார்த்தாள், சுவையாக இருந்தது.

"வாவ்! உண்மையிலேயே நல்லாத்தான் சமைக்கிறான்!"

குளிர்சாதனப் பெட்டியில் தோசை மாவும் இருந்தது.

உற்சாகத்தோடு அடுப்பை பற்ற வைத்தவள், அவளுக்கிருந்த பசியில் அடுப்பில் தோசைக் கல்லை வைத்ததுடன், மாவை எடுத்து ஊற்ற, ஐந்து நிமிடம் ஆகியும் தோசை வெந்த மாதிரியே தெரியவில்லை.

"ஆகாஷ் செய்யும்போது மட்டும், கொஞ்ச நேரத்திலேயே முறுகலா வந்ததே!' என்று யோசித்தவள், கரண்டியால் தோசையை எடுக்க முயல, மாவாகவே இருந்தது. தோசை பாதி கரண்டியிலும், பாதி தோசைக் கல்லிலுமாக ஒட்டிக்கொண்டு அவளைப் பார்த்து சிரித்தது.

வேகமாக அடுப்பில் இருந்து தோசைக் கல்லை எடுத்து கழுவியபோது, சூடு கையில் பட்டு விட, "ஸ்...ஆ..." என்று கையை உதறினாள்.

ஒரு வழியாக தோசைக் கல்லை கழுவி மீண்டும் அடுப்பில் வைத்து மீண்டும் மாவை ஊற்ற, இந்த முறையும் தோல்வியே மிஞ்சியது.

"ஹ்ம்... அம்மா சொல்லும்போது கொஞ்சமாவது சமைக்க கற்றுக் கொண்டிருக்கலாம்! இப்படி அல்லாட வேண்டி இருந்திருக்காது!" என்று நொந்து கொண்டவள்,

"கடவுளே! கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா? பசி உயிர் போகுதே!" என்று வாய் விட்டு புலம்பிக் கொண்டிருந்த போது,

"ப்ரியா? என்ன செஞ்சுட்டு இருக்கே?" என்ற ஆகாஷின் குரல் கேட்க, தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பிய வேகத்தில், கையில் இருந்த தோசைக் கரண்டி அவளது காலில் விழுந்தது.

"அவுச்..." என்று அவள் காலை உதற, வேகமாக அவள் அருகில் வந்தவன், "என்ன ஆச்சு? ரொம்ப பட்டுடுச்சா?" என்று பதறினான்.

"இல்ல... இல்ல... லைட்டாதான் பட்டுது!" என்றவள் அடுப்பை மறைத்துக் கொண்டு நிற்க, சந்தேகத்தோடு எட்டி பார்த்தவனுக்கு அவள் என்ன செய்து கொண்டிருந்தாள் என்று புரிந்தது.

அவன் கண்டு கொண்டதை உணர்ந்ததும், அசட்டு புன்னகையை உதிர்த்தவள், "எப்படி ஆகாஷ்? நீ ஊத்தும் போது மட்டும் தோசை முறுகலா வந்தது?" என்று விசாரித்தாள்.

ஆகாஷ் சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''ப்ரியா... எதை சமைக்கணும் என்றாலும், முதல்ல அடுப்பை பற்ற வைக்கணும்!'' என்றான் கிண்டலாக,

''ஹான்... அடுப்பை பற்ற வைச்சேனே!'' என்று சொன்னவள், அவசரமாக திரும்பி நோக்க, அடுப்பு எரிந்து கொண்டுதான் இருந்தது.

''யூ...'' என்று எரிச்சலுடன் நிமிர்ந்தவள், அவன் புன்னகையுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் கடுப்புடன், முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''சாரி... சாரி... நீ ரொம்ப டென்ஷனா இருந்த மாதிரி இருந்தது, அதான்...'' என்றவன்,

''ப்ரியா, முதல்ல தோசைக் கல் நல்லா சூடாகணும், அப்புறம் தான் மாவை ஊற்றணும்!'' என்று சொல்லிக் கொண்டே, தோசைக் கல்லை மீண்டும் கழுவி, அடுப்பில் வைத்து கல் தேவையான அளவு சூடானதும், தோசையை வார்த்து எடுத்தான்.

அவன் முறுகலாக தோசை வார்ப்பதைப் பார்த்தவளுக்கு, ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது போலிருந்தது.

இரண்டு தோசைகளை வார்த்தவன், மசாலாவை அதன் உள்ளே வைத்து, அழகாக மடித்து தட்டில் வைத்து அவளிடம் நீட்டினான்.

பசி வயிற்றைக் கிள்ளியதில், அவளும் தயக்கமில்லாமல் பெற்றுக் கொண்டாள்.

முதல் தோசையை பசிக்காக வேக வேகமாக உண்டவள், அடுத்த தோசையை ருசித்து மெதுவாக உண்பதை, ஆகாஷ் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருப்தியாக உண்டு முடித்த பிறகே, நிமிர்ந்து அவனை நோக்கிய ப்ரியா, ''தேங்க்ஸ் ஆகாஷ்!'' என்று நன்றி உரைத்து விட்டு, ''உண்மையிலேயே ரொம்ப நல்லா இருந்தது!'' என்ற பாராட்டவும் செய்தாள்.

''யூ ஆர் வெல்கம்!'' என்றவன், ''சோ... குரைக்கிற நாய் கடிக்கவும் செய்யும் போல இருக்கு! இல்ல ப்ரியா?'' என்றான் கண்ணில் சிரிப்புடன்,

''வாட்?'' என்றவள், ''கடவுளே! அதையும் வாய் விட்டுதான் சொன்னேனா?'' என்று விழிக்க அவன் வாய் விட்டு சிரித்தான்.

அவளும் அவனுடன் சிரிப்பில் இணைய ''முதல்ல கேட்ட போதே வேண்டும் என்று சொல்றதுக்கென்ன?'' என்று வினவினான்.

''இல்ல... அவங்க அவங்க வேலையை அவங்க அவங்க பார்த்துக்கணும் என்று சொன்னதே நான்தான்... அதான்...'' என்று அவள் இழுக்க,

''ப்ரியா! நிபந்தனை போட்டதில் தப்பில்லை! அந்த நிபந்தனையை காப்பற்றணும் என்று கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை!'' என்றவன்,

''ம்ஹூம்... அப்படி ஒரு ஒரு நிபந்தனையா தளர்த்திகிட்டே போனால் சரி வராது!'' என்று அவள் அழுத்தமாக சொன்னதும், வழக்கம் போல தோள் குலுக்கி விட்டு நகர்ந்து விட, ப்ரியாவுக்கு ஒரு மாதிரி ஆனது.

''ஆகாஷ்! நான் வந்து...'' என்று தடுமாறியவள், ''பானு! எதுக்கு இப்போ இந்த தயக்கம்!'' என்று தன்னையே திட்டிக் கொண்டு,

"ரொம்ப நல்லா இருந்தது மசால் தோசை! எங்கம்மா செய்யற மாதிரியே!" என்று மீண்டும் பாராட்ட, அவன் லேசாக தலை அசைத்து புன்னகைத்தான்.

'ம்க்கும்! ரொம்ப அலட்டிப்பானே!' என்று எண்ணியவள், "நீ எப்படி இதெல்லாம் செய்ய கத்துகிட்டே?" என்று விசாரித்தாள்.

"அம்மாவுக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ரொம்ப உடம்பு முடியாமல் போயிடுச்சு, அப்போ கத்துகிட்டது. அப்புறம் அம்மாவுக்கு ஒரு நாளாவது ரெஸ்ட் கொடுக்கணும் என்று சன்டேல நான்தான் சமைப்பேன்!"

"ஓ! தட்ஸ் வெரி நைஸ்!" என்றவளுக்கு, உண்மையிலேயே அவன் சொன்னது பிடித்திருந்தது.

"ப்ரியா... நான் ஒண்ணு கேட்கட்டுமா?" என்றவன், அவள் தலையாட்டவும்,

"நீ இந்த ஒரு வாரமா சரியாவே இல்லை! ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கே! என்ன விஷயம்?" என்று வினவினான்.

"இதுதான் காரணம் என்று சொல்லத் தெரியலை! ஆனால், ஏதோ ஒரு மாதிரி இருக்கு! இயல்பா இருக்கவே முடியலை!" என்று ப்ரியா தன் மனதில் இருப்பதை வெளிப்படுத்த,

"ப்ரியா... இட மாற்றம், பழக்கமில்லாத வேலை செய்யறது இதெல்லாம் முதலில் கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கும்!" என்று அவளது மனநிலைக்கு காரணம் சொன்னவன், அவள் அமைதியாக இருக்கவும்,

"முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? உன் சாப்பாடு சரி இல்லை! உங்க அம்மாவோட

சாப்பிட்டு வளர்ந்த நாக்குக்கு, நீ இப்போ சாப்பிடற ரொட்டி கொஞ்சம் கூட ஒத்து வராது! சரியான உணவு இல்லைன்னாலே, மனசும் உடம்பும் சரியா இருக்காது!" என்று தொடர்ந்து சொல்ல, ப்ரியாவும் தலையாட்டி அதை ஆமோதித்தாள்.

"ப்ரியா, நான் ஒண்ணு சொல்லட்டா?"

"ம்..."

"இனிமேல் உனக்கும் சேர்த்து, நானே சமைக்கிறேன்!"

"நோ..." என்று அவள் இடையிட, கை உயர்த்தி அவளைத் தடுத்து,

"லெட் மீ ஃபினிஷ்!" என்றவன்,

"நிரந்தரமா இல்லை! நீ சமைக்க கற்றுக் கொள்ற வரைக்கும்!" என, "ஹான்..." என்று அவள் வாயைப் பிளந்தாள்.

"வாட்? கத்துக்குற ஐடியாவே இல்லையா?"

"ஹான்... அப்படி இல்லை... கண்டிப்பா கத்துக்கணும்! வயிறுன்னு ஒண்ணு இருக்கு! அதில பசின்னு ஒண்ணு இருக்கு! அப்போ சமைக்கவும் கத்துக்கத்தானே வேணும்!"

அவள் சொன்ன விதத்தில், அவனுக்கு சிரிப்பு வந்தது,

"உனக்கும் சேர்த்து சமைக்க எனக்கொன்றும் பிரச்சனை இல்லை. பட், நீ அவங்க அவங்க வேலையை அவங்க அவங்க செய்யணும் என்று இன்சிஸ்ட் செய்யற யேன்னுதான்..."

"இல்ல ஆகாஷ். ஒரு வேளை சாப்பாடு இல்லைன்னா தான் அதோட அருமையே தெரியுது. சமைச்சு கொடுக்க ஆள் இல்லாத போது தான், சமையலோட

முக்கியத்துவமே புரியுது. ஆணோ, பெண்ணோ எல்லாருமே சமைக்க கத்துக்கறது ரொம்ப முக்கியம்னு தோணுது! சோ, கண்டிப்பா கத்துக்கறேன்!''

''தத்துவம்!'' என்று புன்னகையோடு புருவத்தை உயர்த்தியவன், ''தட்ஸ் குட்!'' என்றான்.

''நான் கத்துக்குற வரை, நீ சமைத்து கொடு!'' என்று சொன்னாலும், அவளது குரலில் தயக்கம் இருந்தது.

''நான் ஒண்ணும் உனக்கு சும்மா சமைச்சு கொடுக்கலை, நீ இந்த பாத்திரம் கழுவி வைக்கிறது, வீட்டை கிளீன் செய்யறதுன்னு வேலை செஞ்சுடு! சரியா போயிடும்!'' என்று அவளது தயக்கத்தை நீக்கினான் அவன்.

''ம்ம்...'' என்று யோசித்தவள், ''ரெண்டு வேளை சமைக்கிறதுக்கும், இதுக்கும் சரியா போகுமா? நான் நிறைய செய்யறது மாதிரி இருக்காது?'' என்று தீவிரமாக யோசிப்பது போல முகத்தை வைத்துக் கொள்ள, அவள் கேலியாக சொல்கிறாள் என்று புரிந்தாலும்,

''ப்ரியா உனக்கு சமைக்க வேற கத்து கொடுக்க போறேன் இல்ல? அதுக்கும் இதுக்கும் எல்லாம் சரியா வரும்! குக்கரி கிளாஸ் போனால் கூட நீ ஃபீஸ் கொடுக்க வேண்டி இருக்கும்!'' என்று அவளது யோசனைக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

அதன்படி, அடுத்த நாள் முதல், அவன் இருவருக்கும் சேர்த்து சமைக்க, இவள் மீதி வேலையைப் பார்த்துக் கொண்டாள்.

இடையே, அவன் சமைக்க கற்று கொடுப்பதும், அவள் முதலில் அலுப்புடனும், பின் ஆர்வத்துடன் கற்றுக் கொள்வதும், நடந்தேறியது. நாலைந்து நாட்களிலேயே

அவள் அடிப்படை சமையலை வேகமாக கற்றுக் கொண்டு அவனை ஆச்சரியப்படுத்தினாள்.

''ஹே! என்ன இவ்வளவு ஃபாஸ்டா கத்துக்கறே? நீ அலுத்துக் கொண்டதைப் பார்த்து ரொம்ப போராட வேண்டி இருக்கும் என்று நினைச்சேன்!'' என்று ஆகாஷ் சொல்ல,

''நாங்க எல்லாம் கண் பார்த்தால் கை செய்யும் கேட்டகரி ஆக்கும்!'' என்று அவள் பெருமிதத்துடன் சொல்ல,

''ஆமா... ஆமா... அதான் நீ தோசை சுட்ட அழகிலேயே தெரிஞ்சுதே!'' என்று அவன் கேலி செய்தான்.

''அதை விடு! அது ஏதோ பசி மயக்கத்தில் யோசிக்காமல் செய்தது! எனக்கு சமையல் கத்துக்க பிடிக்கும் ஆகாஷ் ஆனால், எங்க அம்மா, சமையல் கல்யாணத்துக்கான அடிப்படை தகுதி என்கிற மாதிரி சொல்லுவாங்களா? அதனாலேயே நான் கத்துக்காமல் அவங்களை வெறுப்பேற்றுவேன்!'' என்றவள்,

''நீ சுமாரா கத்துக் கொடுத்தாலும், நான் சூப்பரா கத்துக்கறேன் இல்ல?'' என்று அவனை வார, ''எல்லாம் நேரம்!'' என்று அவன் அலுத்துக் கொள்ள, சமையல் கற்றுக் கொள்ளும் பொழுதுகள் சுவாரசியமாக கழிந்தன.

* * *

அன்று, ஞாயிறு!

இருவரும் தனிக் குடித்தனம் நடத்த ஆரம்பித்து, பத்து நாட்கள் ஆகி இருந்தன.

காலை எழுந்ததில் இருந்தே, ப்ரியா தலையைப் பிடித்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

"என்ன ஆச்சு?"

ஆகாஷ் வினவ, "ப்ச்... தலை வலிக்குது!" என்ற ப்ரியா, "வாரா வாரம் அம்மா தலைக்கு எண்ணை வைச்சு மசாஜ் செஞ்சு விடுவாங்க! ரெண்டு வாரமா செய்யலையா? அதான்... தலை வலிக்குது!" என்று சொல்ல, அவள் குரலில் இருந்த ஏக்கம் ஆகாஷின் மனதை என்னவோ செய்தது.

"நான் நான் வேணா செஞ்சு விடட்டுமா?" தயக்கத்துடன் அவன் கேட்டதும், "இல்ல... வேண்டாம்!" என்று பட்டென்று பதில் வந்தது.

அவள் வேண்டாம் என்று மறுத்து விட, அவ்னும் அமைதியாகி விட்டாலும், அவள் சோர்வாகவே அமர்ந்திருப்பதைக் கண்டவனுக்கு ஏனோ இருப்பு கொள்ள வில்லை!

"ப்ரியா... உங்க அம்மா வீட்டுக்கு போய் மசாஜ் செஞ்சுட்டு வரியா?" என்று வினவிய ஆகாஷை ஆச்சரியத்துடன் நோக்கியவள்,

"கிழிஞ்சுது போ! இதுக்காக அங்கே போனால், ஆயிரத்தெட்டு கேள்வி வரும்! அதெல்லாம் வேண்டாம்!" என்று அதற்கும் அவள் மறுப்பு சொல்லி விட,

"சரி... பக்கத்தில் ஒரு பார்லர் இருக்கு! அங்கே போயிட்டு வா!" என்று அவன் அடுத்த வழியைக் கூற,

"ஒரு முறை வெளியே செஞ்சுருக்கேன்! எனக்கு தலைவலி அதிகமானதுதான் மிச்சம்!" என்று அவள் அதையும் மறுத்து விட,

"அட்போ... வா... நானே செஞ்சு விடறேன்! என் திறமை மேல் நம்பிக்கை இல்லன்னா, எங்க அம்மாகிட்ட

கேளு! என் திறமையின் பெருமையைப் பற்றி சொல் வாங்க!" என்று பெருமிதத்துடன் சொல்ல, அப்போதும் அவள் தயங்கினாள்.

"இப்போ வீட்டு வேலைகளில் நாம ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செஞ்சுக்கறதில்லையா? அது மாதிரி தான் இதுவும்! சும்மா இல்லை... நீ இதுக்கு பதிலா எனக்கு ஏதாவது ஒரு வேலை செஞ்சுடு!" ஓகேவா?"

அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்திய பிறகும், அவள் தயங்க, "சரி விடு! உனக்கு பயம் போலிருக்கு!" என்று அசட்டையாக சொல்லி விட்டு எழுந்து செல்ல,

"நில்லு! நில்லு! என்ன? எதுக்கு எனக்கு பயம்?" என்று குழப்பத்துடன் வினவினாள்.

"அதுவா? அது வந்து... வேண்டாம் விடு!" என்றான் அவன்.

"ஆகா...ஷ்!" என்று பல்லைக் கடித்தவள், "என்ன சொல்ல வந்தேன்னு சொல்லு!" என்று அதட்டினாள்.

"அடேங்கப்பா! இந்த அதட்டலுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை!" என்று அலுத்துக் கொண்டவன், அவள் முறைப்பு அதிகமாகவும், "மசாஜ் செய்யும்போது டச்சிங் டச்சிங்ல ஃபீலிங்க்ஸ் வந்துடுமோ என்று உனக்கு பயமா இருக்குன்னு சொல்ல வந்தேன்!" என்று அவளை சீண்டும் நோக்கத்துடன் சொல்ல,

"ஹ! ஃபீலிங்க்ஸ்? யாருக்கு? எனக்கு?" என்று அவள் அலட்சியமாக பதில் சொல்ல, "அப்புறம் எதுக்கு தயக்கம்?" என்றான் அவன்!

"ஒரு தயக்கமும் இல்ல! நீயே செஞ்சு விடு! ஆமா... இதுக்கு பதிலா உனக்கு ஏதோ செய்யணும் என்று

சொன்னாயே! அதென்ன?'' என்று அவள் அமர்த்தலாக வினவ, பதிலுக்கு பதில் செய்து விட வேண்டும் என்பதிலேயே குறியாக இருப்பதைக் கண்ட ஆகாஷுக்கு அவளை வம்பிழுக்க வேண்டும் என்று தோன்றியது.

''நான் சொல்ற வேலையை உன்னால் செய்ய முடியலைன்னா?'' என்றான்.

''அப்படி என்ன பெரிய வேலை சொல்ல போறே?''

''இல்ல. அந்த வேலை செய்யறதுக்கு நீ என் கை கால் எல்லாம் பிடிக்க வேண்டியதிருக்கும்!''

''ஹப்பா சாமி! பில்ட் அப் கொடுக்காமல் என்ன என்று சொல்லு!''

''எனக்கு கை கால் நகங்களை வெட்டி கிளீனா வைச்சுக்க பிடிக்கும்! ஆனால், அதை செய்ய பிடிக்காது! ஒரு அலுப்போடதான் செய்வேன்! அதை வேணா நீ செய்யறியா?''

அவள் நிச்சயம் முடியாது என்று சொல்வாள் என்று அவன் நினைத்திருக்க, ''ப்பூ... இவ்வளவுதானா? இதுக்கா இவ்வளவு பில்ட் அப் கொடுத்தே? யூ நோ, எங்க அம்மா என்னை லீவ் நாட்களில் சமையல் கத்துக்கோ கத்துக்கோ என்று சொல்லிட்டு இருப்பாங்க. அவங்க கிட்ட இருந்து தப்பிக்க, நான் தடால்னு அவங்க காலை பிடிச்சிடுவேன், பெடிக்யூர் வேலையைச் செய்ய! எங்க அம்மாவும் உன்னை மாதிரிதான். எல்லா வேலையையும் செய்யறவங்களுக்கு அதை செய்ய மட்டும் பிடிக்காது! அதை செஞ்சே எங்க அம்மாவோட நச்சரிப்புல இருந்து தப்பிச்சிடுவேன்! நீ எனக்கு தலைக்கு மசாஜ் செய்யறே! நான் நீ கேட்டதை

செய்யறேன்! டீல்!'' என்று அவள் கட்டை விரலை உயர்த்த.

''ஹே! நான் சும்மாதான் சொன்னேன்! நீ எதுவும் செய்ய வேண்டாம்!'' என்று மறுத்தவனிடம், ''இது வேண்டாம்னா, நீயும் எனக்கு ஹெல்ப் செய்ய வேண்டாம்!'' என்று அவள் முறுக்கிக் கொள்ள, ''ஓகே! ஓகே!'' என்று அவனும் ஒப்புக் கொண்டான்.

ப்ரியா, கூட பணிபுரியும் ஆண்களிடம் சகஜமாக பழகாத அளவுக்கு கட்டுப் பெட்டி இல்லை! அவளிருக்கும் வேலையில் ஆண்களிடம் இருந்து பத்தடி தள்ளி நின்று பேசுவதெல்லாம் இயலாத காரியம்! என்னதான் சகஜமாக பேசிப் பழகுவது போலத் தெரிந்தாலும், ஒரு அளவுக்கு மேல் எந்த ஆணிடமும் சொந்த விஷயங்களைப் பற்றி பேசுவதைக் கூட விரும்புவதில்லை!

நேஹா கூட, ''அதெப்படி பானு? எல்லார்கிட்டயும் நல்லாவும் பேசறே! அதே சமயம். இதுதான் உன் எல்லை... இதுக்கு மேல் வரக் கூடாது என்று வார்த்தையால் சொல்லாமலே புரிய வைக்கிறே?'' என்று ஆச்சரியப்படுவதுண்டு!

ஆனால், ஆகாஷை சந்தித்த முதல் நாளில் இருந்தே, அவனிடம் அந்த மாதிரி ஒதுக்கத்தை அவள் உணர்ந்ததில்லை! அவனைப் பற்றி நினைத்தாலே, நம்பகமானவன் என்ற உணர்வு அவளையும் அறியாமல் அவளது மனதில் பதிந்திருந்தது. அதற்கு காரணம் என்னவென்று எல்லாம் அவள் ஆராய முற்பட்டதில்லை!

அந்த நம்பகத் தன்மையே அவன் திருமணத்துக்கு பிறகு, நண்பர்களாக இருப்போம் என்று சொன்னதைக்

காப்பாற்றுவான் என்று அவளை நம்ப வைத்து, அவனை திருமணத்துக்கு ஒப்புதல் சொல்லவும் வைத்தது என்று அவள் அடிக்கடி எண்ணிக் கொள்வதுண்டு!

இப்போதும் அவன் 'ஃபீலிங்க்ஸ்' பற்றி பேசியது தன்னை சீண்டவே என்று புரிந்தாலும், அப்படி இல்லை என்று நிரூபிக்க தோன்றிய உத்வேகத்தில், தயக்கமில்லாமல் வந்து உட்கார்ந்து விட்டாலும், அவன் அவளது தலையில் விரல்களைச் செலுத்தி மசாஜ் செய்ய ஆரம்பித்ததும், அவளுக்கு முதலில் என்னவோ போலிருந்தது உண்மை!

அந்த உணர்வுக்கு பெயர் என்னவென்று புரியாவிட்டாலும், அவளால் இயல்பாக அமர்ந்திருக்க இயலவில்லை! அதைச் சொல்லி எழுந்து போனால், 'இந்த லூசு, பீலிங்க்ஸ் அது இது என்று உளறுவானே?'' என்று அமைதியாக அமர்ந்திருந்தவள், கொஞ்ச நேரத்தில் அவன் விரல்களில் இருந்த மாயம் தனது தலைவலியை மன அழுத்தத்தை குறைப்பதை உணர்ந்து அதை ரசிக்கத் துவங்கினாள். அவன் செய்து முடித்த பிறகு, 'அம்மா மாதிரியே செய்து விடறான் இல்ல?' என்ற உணர்வு மட்டுமே அவளிடம் எஞ்சி இருந்தது.

அந்த உணர்வு, ''ஹப்பா... இப்போதான் தலையில் இருந்த பாரம் இறங்கின மாதிரி இருக்கு! தேங்க்ஸ் ஆகாஷ்! அப்படியே எங்க அம்மா செஞ்ச மாதிரியே இருக்கு!'' என்று அவளை நன்றி சொல்லவும் வைத்தது.

''சரி... வா... நான் என் வேலையை செய்யறேன்!'' என்று அழைக்க, அவன் தயங்கினான்.

''இல்ல ப்ரியா... நான் சும்மாதான் சொன்னேன் விடு!'' என்று அவன் ஏமாந்து

''ஏன்? ஃபீலிங்க்ஸ் வந்துடும் என்று பயப்படறயோ?'' என்று அவன் போலவே கேலியாக அவள் வினவியதும், ''உன்னை...'' என்றவன், ''வா... உன்னோட திறமை எப்படி இருக்குன்னு பார்த்துடலாம்!'' என்று அவன் வந்து அமர்ந்தான்.

அவளும் அவன் செய்த உதவிக்கு நன்றி செலுத்தும் வகையில், தயக்கமில்லாமல் அவனது கால், கை நகங்களை சுத்தம் செய்து வெட்டி விட, அதுவே இருவருக்கும் வாரா வாரம் பழக்கமாயிற்று,

உன் வேலை, என் வேலை என்று பிரித்து செய்தது மாறி, இருவரும் தங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்ய ஆரம்பிக்க, இருவருக்குமே வீட்டு வேலை எளிதானது.

கடமை, உரிமை என்ற கட்டாயம் ஏதுமில்லாமல், ஒருவருக்கு ஒருவர் உதவிகரமாக இருந்த இருவருக்கும் இடையில், ஒரு நல்ல தோழமை உருவானது.

ஆகாஷ், வேலை முடிந்து தினமும் தன் பெற்றோரை பார்த்து விட்டு வர, ப்ரியா நேரம் கிடைக்கும்போதெல்லாம் தங்கள் வீட்டுக்கு சென்று வந்தாள்.

''இரண்டு பேரும் சேர்ந்து வாங்க!'' என்று ஒவ்வொரு முறையும் வசந்தி சொல்வதை ஆகாஷிடம் அவள் சொல்ல, அவனும் தன் தாயும் அதையே சொல்வதைச் சொன்னான்.

அன்றில் இருந்து மாதத்தில் ஒரு ஞாயிறு ஆகாஷ் வீட்டுக்கும், ஒரு ஞாயிறு ப்ரியா வீட்டுக்கு செல்வது என்று முடிவெடுத்து, அதன் படியே செல்லவும் ஆரம்பித்தனர்.

அந்த நேரங்களில், இருவரும் கேலியும் கிண்டலு
மாக, தோழமையுடன் பழகுவதைக் கண்ட பெற்
றோர்களுக்கும் மனம் நிறைவாக இருந்தது.

9

''ப்ரியா... என்ன ஆச்சு? பயங்கர யோசனையில்
இருக்கே?''

தான் உள்ளே நுழைந்தது கூட தெரியாமல், யோசனை
யில் ஆழ்ந்திருந்த ப்ரியாவின் அருகில் வந்து ஆகாஷ்
வினவ, ''ஹான்...'' என்று தன் யோசனையில் இருந்து
வெளி வந்த ப்ரியா,

''எங்க பத்திரிகையில் இலவச சட்ட ஆலோசனை
வழங்க என்று ஒரு பகுதி இருக்கு தெரியுமில்லை? அதுக்கு
ஒரு லெட்டர் வந்தது. அதைப் பற்றி யோசிச்சிட்டு
இருந்தேன்! பாவம் ஒரு லேடி, அவங்களோட கேஸை
எடுத்து வாதாட ஆள் இல்லாமல் ரொம்ப கவலைப்
பட்டு உதவி கேட்டு எழுதி இருந்தாங்க!'' என்று
விவரத்தை சொல்ல ஆரம்பித்தாள்.

அந்தப் பெண்மணியும் அவரது கணவரும் காதல்
திருமணம் புரிந்திருக்கிறார்கள் கணவனது வீட்டினர்
ஒத்துக் கொள்ளாததால், கோயிலில் பதிவு திருமணம்
செய்திருக்கிறார்கள்! கணவன் சொந்தமாக ஒரு
மெக்கானிக் ஷாப் வைத்து நடத்தி வந்திருக்கிறார். இந்த
ஐந்து வருடங்களில் சொந்தமாக ஒரு வீடு

கட்டி இருக்கிறார். ஆண் ஒன்று, பெண் ஒன்று என்று
இரண்டு குழந்தைகள் வேறு! ஒரு விபத்தில் அவர்
இறந்தது விட, அவர் பெயரில் இருந்த வீடும் கடையும்
அவர்களுக்கு போகக் கூடாது என்று அந்தப் பெண்ணின்
கணவரது பெற்றோர்கள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள்.

''அதெப்படி கோவில்ல கல்யாணம் செஞ்சிருந்
தாலும், அது பதிவு செய்யப் பட்டிருக்குதானே?''

ஆகாஷ் வினவ, ''அவங்க சொல்ற விஷயமே வேற
ஆகாஷ்! அதைக் கேட்டாலே, என்ன மாதிரி மனுஷங்க
இருக்காங்க என்று ஆத்திரம் வருது!'' என்ற ப்ரியா,

''அவங்க கணவருக்கு இவங்களை கல்யாணம்
செய்யறதுக்கு முன்னாடியே கல்யாணம் நடந்துடுச்சு.
அதனால், இவங்க கல்யாணம் சட்டப் படி செல்லாது
என்று அலிபி க்ரியேட் செஞ்சிருக்காங்க! முதல் மனை
விக்குதான் சொத்து சேரணும் என்று கேஸ் போட்டிருக்
காங்க. அவங்க முதல் மனைவி என்று சொல்ற பெண்.
அவங்களோட சொந்தக்கார பொண்ணாம்.''

''இப்போதைக்கு அந்தப் பெண்ணால், ஃபீஸ் என்று
எதுவும் தர முடியாது என்பதால், பாவம் அவங்களுக்கு
வாதாடவும் யாரும் முன் வரலையாம்! ரெண்டு
குழந்தைகளை வைச்சுகிட்டு இனிமேல் என்ன செய்ய
போறேன் என்று அந்தப் பொண்ணு எழுதி இருந்ததைப்
பார்த்து எனக்கு மனசே தாங்கலை!''

ப்ரியா வருத்தத்துடன் சொல்லி முடிக்க, ''ப்ரியா...
அவங்களை நாளைக்கு என்னை ஆபீசில் வந்து பார்க்க
சொல்லு! நான் இந்த கேசை எடுத்துக்கறேன்!'' என்று
ஆகாஷ் சொன்னதும்,

"வாவ்! உண்மையாவா சொல்றே ஆகாஷ்?" என்று சந்தோஷமடைந்த ப்ரியா, "அவங்களால் இப்போதைக்கு பீஸ் என்று எதுவும் தர முடியாது! பரவாயில்லையா?" என்று இழுக்க,

"இருக்கட்டும்! அப்ப அப்போ இது மாதிரி ஏதாவது செஞ்சு பணத்துக்கு பதிலா, புண்ணியமும் சேர்க்க வேண்டியதுதான்!" என்று கேலியுடனே அந்தப் பேச்சை ஆகாஷ் முடித்து கொண்டாலும், ப்ரியாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

அவனிடம் உதவியாக இதைக் கேட்க வேண்டும் என்று எண்ணி இருந்தாலும், அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற தயக்கமும் இருந்தது.

இப்போது, அவனே உதவி செய்ய முன் வந்தது சந்தோஷத்தைத் தர, "தேங்க்ஸ் ஆகாஷ்! ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்!" என்று அவன் கைப் பிடித்து குலுக்கி தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினாள்.

* * *

அன்று ஏதோ ஒரு விடுமுறை தினம்!

காலை உணவு உண்ணும்போது, எதையோ நினைத்து தனக்குள்ளேயே ப்ரியா சிரித்துக் கொண்டிருந்தாள்.

அதைக் கண்ட ஆகாஷ். "மேடம்... என்ன அப்படி வாய் கொள்ளாத சிரிப்பு? சொன்னால் நானும் சிரிப்பேன் இல்ல?" என்று விசாரித்தான்.

"நேற்று நீ வர லேட் ஆகிடுச்சு. நான் சீக்கிரம் வந்ததால், எனக்கும் ரொம்ப போர் அடிச்சுது. எதிர்த்த வீட்டு குப்தா ஆன்ட்டி கிட்ட ரெண்டு படத்தின் சீடி வாங்கிட்டு வந்தேன். அதுல ஒண்ணு. மராட்டி படம்

சரி எப்படி இருக்கும்ன்னு பார்த்தேனா? அந்த படத்தை நினைச்சு சிரிச்சிட்டு இருகேன்!"

"அப்படி என்ன காமெடி?"

"அதில ஹீரோ பிரக்னன்ட் ஆகறான்!"

"வாட்?"

"ஆமாப்பா... அவனுக்கு ரெண்டு குழந்தையும் பிறக்குது!"

"அட... இது அர்னால்டின் ஜுனியர் படம் மாதிரி இருக்கே?"

"ம்... இது அது மாதிரி இல்லை! வேற மாதிரி ஆங்கிளில் எடுத்திருக்காங்க! மார்னிங் சிக்னெஸ், பிரசவ வலி என்ற விஷயங்களோடு, சமுதாயத்தில் அவனைப் பற்றிய ஆர்வத்தையும், கேலியையும், மரியாதையையும் அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்கிற மாதிரியான கதை. நல்ல காமெடியா இருந்தது. கடைசில அது கனவு என்று முடிச்சிட்டாங்க அதான்... உண்மையிலேயே அப்படி நடந்தா, இந்த ஆண்கள் எப்படி ரியாக்ட் செய்வாங்கன்னு நினைச்சு நினைச்சு எனக்கு நேற்றில் இருந்து சிரிப்பா இருக்கு!"

ஆகாஷ் புன்னகைக்க, "யோசிச்சு பாரு! இப்போ பையன் வேணும் என்று லைனா குழந்தை பெற்றுக்கிற வங்க எல்லாம். நாமே இருவர் நமக்கேன் இன்னொருவர்? என்று இருப்பாங்க இல்ல?" என்ற ப்ரியாவின் சிரிப்பு விரிய.

"போதும்மா... வயிறு பல்லு சுளிக்கிக்கப் போகுது!" என்று கேலியாகச் சொல்லி விட்டு, "இயற்கையிலேயே பெண்களின் [illegible] ஒரு குழந்தையைப் பெற்று

கொள்கிற மாதிரி வடிவமைக்கப் பட்டிருக்கு! அதுவே மாறி, ஆண்களுக்கு அப்படி அமைத்திருந்தால், அவங்களும் குழந்தை பெற்றுக்கத்தான் செய்வாங்க!'' என்று ஆகாஷ் வாதம் செய்தான்.

''உன் வக்கீல் புத்தியை இதில் காட்டாதே! அதெல்லாம் சும்மா! ஆண்களுக்கு அந்த அளவு பொறுமையும் சகிப்பு தன்மையும் கிடையாது!'' என்று ப்ரியா எதிர் வாதம் செய்தாள்.

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை! ரொம்ப பொறுமையா இருக்கிற ஆண்களும் இருக்காங்க. பொறுமைன்னா என்ன என்று கேட்கிற பெண்களும் இருக்காங்க!'' என்று ஆகாஷ், ப்ரியா சொல்வதை ஒப்புக் கொள்ள மறுத்தான்.

''நீ சொல்றதை நானும் மறுக்கலை! நீ சொல்றது விதி விலக்குகள் பற்றி! நான் சொல்றது மெஜாரிடியைப் பற்றி!''

ப்ரியாவும் பிடிவாதமாக தன் கருத்தில் நிற்க, ''சரி... விடு... இப்போ எதுக்கு தேவை இல்லாத விவாதம்?'' என்று ஆகாஷ் சொல்லி விட,

''நீ சொல்றதும் சரிதான்!'' என்ற ப்ரியா, ''ஆகாஷ்! உனக்கு அந்த பொறுமையும் சகிப்பு தன்மையும் இருக்கா என்று டெஸ்ட் செஞ்சிடலாமா?'' என்று கண்கள் பளிச்சிட அவனை சவாலுக்கு அழைக்க,

''எப்படி? எப்படி?'' என்று அவனும் சவாலை எதிர்கொள்ள தயாரானான்!

''இரு வரேன்!'' என்று படுக்கை அறையின் உள்ளே சென்று வந்த ப்ரியாவின் கையில் ஒரு துணி மூட்டை இருந்தது.

''ஒரு பெண் பத்து மாதம் சுமந்து ஒரு குழந்தையை பெத்தெடுக்கிறாள். நீ ஒரு பத்து மணி நேரம். அட்லீஸ்ட் இந்த சின்ன துணி மூட்டையை சுமந்துட்டு எல்லா வேலையும் பார்க்கணும்! என்ன முடியுமா?'' என்று ப்ரியா சவால் விட்டாள்.

''ஷ்யூர்! அப்படி செஞ்சிட்டால், எனக்கு பொறுமை இருக்கு என்று ஒத்துக்கறியா?''

''முதல்ல உன்னால் முடியுதா என்று பார்க்காலம்!'' என்று ப்ரியா கண் சிமிட்ட,

''வேண்டாம் ப்ரியா... என்னைப் பற்றி முழுசா தெரியாமல் சீண்டாதே!'' என்று அவனும் சவாலுக்கு ஒப்புக் கொண்டான்.

''இப்போ பத்து மணி நைட் எட்டு மணிக்குதான் இதை அவிழ்க்கணும்! நடுவில் என்ன நடந்தாலும் அவிழ்க்கக் கூடாது! ஓகே?'' என்று சொல்ல,

''ஓகே! நீயே கட்டி விடு!'' என்று சொல்ல, பரியா அந்த சின்ன துணி மூட்டையை அவன் வயிற்றில் வைத்து இறுக கட்டினாள்.

கொஞ்ச நேரம் ஆகாஷுக்கு ஒன்றும் தெரியவில்லை! அரை மணி நேரத்துக்கு பிறகு ரொம்பவும் அசௌகரியமாக உணர்ந்தான்.

''இங்கே பாரு! சும்மா இப்படியே உட்கார்ந்துட்டு இருந்தா போதாது. வேலையும் செய்யணும்! அப்பத்தான் சுகப் பிரசவம் ஆகும்!'' என்று கேலி செய்த ப்ரியா.

''வா... முதல்ல என் தலைக்கு மசாஜ் செஞ்சு விடு!'' என்று அவனை ஏவினாள்.

அவன் அதை செய்து முடித்ததும், எப்போதும் போல், அவனது கை கால் விரல் நகங்களை சுத்தம் செய்தவள்,

"இன்னைக்கு வீடு கிளீன் செய்யறது உன்னோட டர்ன்! எழுந்து செய்! நான் போய் துணிகளை மெஷின்ல போடறேன்!" என்று எழுந்தாள்.

அவ்வப்போது அவன் வயிற்றைப் பிடித்து கொண்டு வேலை செய்வதைப் பார்த்து சிரித்து கொண்டிருந்தாள்.

"ஏய்! புள்ளதாச்சி பையன் கஷ்டப்பட்டு வேலை செய்யறதைப் பார்த்து கேலியா சிரிக்கிறது உனக்கே நியாயமா இருக்கா?" என்று அவனும் அவளோடு சிரிப்பில் இணைந்தான்.

அவன் இயற்கையின் அழைப்புக்காக குளியலறை சென்ற போதும், வெளியே இருந்து "உள்ளே போய் மூட்டையை அவிழ்த்து சீட்டிங் செய்யக் கூடாது!" என்று வெளியில் இருந்து ப்ரியா குரல் கொடுக்க,

"சீட்டிங்? அப்படின்னா என்ன ப்ரியா? உங்க ஆபீசில் எல்லாரும் கூட்டமா உட்கார்ந்து பேசுவாங்களே, அதானே?" என்று அப்பாவியாய் குரல் கொடுத்தான் ஆகாஷ்.

சிரிப்பினூடே இருவரும், மதிய உணவை செய்து உண்டும் முடித்த வேளையில், வாயில் மணி ஒலித்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"யாரோ வராங்க! என்ன செய்யறது?" என்ற ப்ரியாவிடம்,

"வரட்டும்! நானே இப்போதைக்கு மூட்டையை அவிழ்க்கிறதா இல்லை!" என்று ஆகாஷ் சொல்ல,

"ம்... தட் இஸ் தி ஸ்பிரிட்!" என்று சொன்னபடியே எழுந்து போய் கதவைத் திறந்த ப்ரியா ஆனந்தமாய் அதிர்ந்து போனாள்.

வெளியே, ப்ரியாவின் அன்னை வசந்தியும், ஆகாஷின் அன்னை தேவகியும் நின்று கொண்டிருந்தனர்.

"வாவ்! வாங்க! வாங்க! என்ன ரெண்டு பெரும் இப்படி ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுக்கறீங்க!" என்று உற்சாகமாக ப்ரியா வரவேற்பதைக் கண்டதும், ஆகாஷும் எழுந்து வர, அவனைப் பார்த்த இரண்டு அன்னைமார்களும் அதிர்ந்து போனார்கள்.

"என்னடா ஆகாஷ் இது? போன வாரம் வந்தப்போ கூட நல்லாதானே இருந்தே? அதுக்குள்ளே இவ்வளவு பெரிய தொப்பையை எங்கே இருந்துடா வளர்த்தே?" என்று தேவகி வியக்க, ப்ரியா நமட்டு சிரிப்பொன்றை உதிர்ந்தாள்.

வசந்தியும் கேள்வியுடன் நோக்க, "அது... எங்க ரெண்டு பேர் நடுவே ஒரு சவால் அம்மா!" என்று ஆகாஷ் விஷயத்தைப் பகர, வசந்தி தர்ம சங்கடத்துடன் நெளிந்தார்.

"ஹய்யோ! இந்தப் பெண் இப்படியா சம்மந்தி எதிரே மானத்தை வாங்குவாள்!" என்று இருந்தது வசந்திக்கு.

தேவகியோ, ஆகாஷ் சொன்னதைக் கேட்டதும் வாய் விட்டு சிரித்தார்.

"சூப்பர் ப்ரியா! எதுக்கு பத்து மணி நேரம் மட்டும் சொன்னே? பத்து நாள் என்று சொல்லி இருக்கலாமே?" என்று வசந்தியை வியக்க வைத்த தேவகி.

"இவங்க அப்பா இப்படித்தான்! நான் குழந்தைங்க கிட்ட டென்ஷன் ஆனால், உனக்கு பொறுமையே இல்லைம்மா என்று சொல்வார். ஆனால், அவருக்குத் தான் பொறுமையே கிடையாது. குழந்தைங்க நல்லா சிரித்து விளையாடுவதை அதுங்க கூட உட்கார்ந்து

விளையாடுவார். அழ ஆரம்பிச்சால் போதும், தேவி வந்து என்ன என்று பாருன்னு நழுவிடுவார்'' என்று அவர் பங்குக்கு, ஆண்களின் பொறுமை இன்மை பற்றி எடுத்து விட, வசந்தியும் தன் பங்குக்கு தன் கணவரைப் பற்றி சொல்ல ஆரம்பிக்க,

''அடடா! ப்ரியா, நீயே தேவலை என்று ஆக்கிடு வாங்க போல இருக்கு, இவங்க ரெண்டு பேரும்!'' என்று ஆகாஷ் முணுமுணுத்தான்.

அதற்குள், வெயிலுக்கு இதமாக, இருவருக்கு எலுமிச்சை சாறு கொண்டு வந்த ப்ரியா, ''என்னம்மா? போன் கூட செய்யலையே?'' என்று விசாரித்தாள்.

''இங்கே பக்கத்தில், ஒரு சீமந்த விழாவுக்கு வந்தேன். பார்த்தால், அண்ணியும் அங்கே வந்திருந்தாங்க. அதான். உங்களை பார்த்துட்டு போகலாம் என்று வந்தோம்!'' என்ற வசந்தியின் பார்வை வீட்டை நோட்டமிட்டது.

தேவகி, இரு பிள்ளைகளின் வீட்டுக்கும் சென்று வரலாம் என்று சொல்லும்போது, வசந்திக்கு ஒரே உதைப்புதான்.

ரேகாவைப் பற்றி கவலையில்லை. இந்தப் பெண் வீட்டை எப்படி வைத்திருக்கிறாளோ என்னவோ என்று பயந்து கொண்டே வந்தவருக்கு. வீடு சுத்தமாக இருந்ததைக் காண, மனதில் திருப்தி தோன்றியது.

தேவகியிடம், ''ஆன்ட்டி... ஆன்ட்டி'' என்று அன்பாக அழைத்து நல்ல விதமாகவே பெண் பழகுவதைக் கண்ட வருக்கு மனம் நிறைந்தாலும், மாப்பிள்ளையிடம் என்ன இப்படி ஒரு விளையாட்டு என்று மனதில் சங்கடம் தோன் றத்தான் செய்தது. தேவகி வெளியில் சாதாரணமாக

சொல்லி விட்டாலும், உள்ளே என்ன நினைக்கிறாரோ என்ற அச்சம் தோன்றாமல் இல்லை.

அவர் தன்னுடைய யோசனையில் ஆழ்ந்திருந்த போது, ''நைட் எனக்கு, சொன்ன நேரம் வரை இவன் இப்படியே இருந்தானா என்று சொல்லு ப்ரியா!'' என்று தேவகி ப்ரியாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஷ்யூர் ஆன்ட்டி! ஆனால், எனக்கென்னமோ இவர் நைட் வரைக்கும் தாக்கு பிடிப்பார் என்று தோணலை!'' என்று ஆகாஷைப் பார்வையால் சீண்ட, ''ஹும்! நாங்க எல்லாம் சொல்றதை செய்வோம் செய்யறதைத்தான் சொல்வோம்!'' என்று வசனம் பேசினான் அவன்.

''பார்க்கலாம்... பார்க்கலாம்!''

தேவகி கிளம்ப எத்தனிக்க, ''இருங்க ஆன்ட்டி, பால் காய்ச்சுட்டு போனதுக்கு அப்புறம் இப்போதுதான் வந்து இருக்கீங்க! ஏதாவது ஸ்நாக்ஸ் செய்யறேன்... சாப்பிட்டு போங்க!'' என்று ப்ரியா உபசரிக்க, வசந்திக்கு மயக்கமே வந்தது.

சமைக்க கற்று கொண்டேன் என்று அவள் சொல்லும் போதுகூட அவருக்கு நம்பிக்கை இல்லைதான். தான் தொண்டை வற்ற சொல்லும்போதெல்லாம் செய்யா தவள், இப்போது என்ன செய்கிறாளோ என்ற பயம் இருந்தாலும், மகள் எந்த சூழ்நிலையையும் தைரியமாக சமாளிக்கும் திறன் கொண்டவள் என்பதால், அதிகமாக கவலைப் பட்டதில்லை.

இப்போது பெண் சிற்றுண்டி செய்யப் போவதாக அறிவித்ததும், அவருக்கு இருந்து பெண் என்ன செய்யப் போகிறாள் என்று அறிய ஒரு பக்கம் ஆர்வம் எழுந் தாலும், மாமியார் எதிரே இவள் எதுவும் சொதப்பி விடக் கூடாது என்ற பயமும் எழுந்தது.

அன்னையின் எண்ணப் போக்கை பற்றி சற்றும் கவலைப் படாமல், ப்ரியா சமையலறை பக்கம் செல்ல, ஆகாஷும் உடன் சென்றான்.

அப்படி என்னதான் செய்யப் போகிறாள் என்று பின்னோடு வந்த வசந்தி, ஆகாஷ் காலிப்ளவரை எடுத்து அரிய ஆரம்பிக்கவும் பதட்டமானார்.

''இருங்க தம்பி. நான் செஞ்சு தரேன்!'' என்று வந்தவரிடம், ''அத்தை... நீங்க போய் உட்காருங்க. நானும் ப்ரியாவும் எவ்வளவு சீக்கிரம் செஞ்சு எடுத்துட்டு வரோம் என்று மட்டும் பாருங்க!'' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில், சுட சுட காலிப்ளவர் பக்கோடாவும், தேங்காய் சட்னியும் வந்தது.

பிள்ளைகள் செய்ததை சுவைத்த இரு அன்னை மார்களும், ''ம் ம்... ரொம்ப அருமையா இருக்கு!'' என்று ஒரே நேரத்தில் சொல்ல, ப்ரியாவும் ஆகாஷும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து கொண்டனர்.

இப்போது ஆனந்த் - ரேகா வீட்டுக்கு போக போகி றார்கள் என்று சொன்னதும், ஒரு டப்பாவில் பக்கோடாவை போட்டு கொடுத்தாள் ப்ரியா.

''தப்பா எடுத்துக்காதீங்க அண்ணி... ப்ரியா கொஞ்சம் விளையாட்டு பொண்ணு. அதான்... ஆகாஷ் தம்பிகிட்ட இந்த மாதிரி...'' என்று வசந்தி தயக்கத்துடன் கூற,

''ஹய்யோ... என்ன அண்ணி இது? இதில தப்பா நினைக்க என்ன இருக்கு? இவங்க ரெண்டு பேரை பற்றித்தான் நமக்கு கவலை அதிகமா இருந்தது! இப்போ இவங்க ரெண்டு பேரும்

இருக்கிறதைப் பார்க்க எவ்வளவு நிறைவா இருக்கு. தெரியுமா? இந்த ஜெனரேஷன் பசங்க இப்படித்தான் ஜோவியலா இருப்பாங்க இதெல்லாம் பார்த்து ரசிக்கணுமே தவிர, இதில தப்பா நினைக்க ஏதுவும் இல்ல!'' என்று தேவகி சொல்ல வசந்திக்கு நிம்மதியாக இருந்தது.

மன நிறைவுடன் இருவரும், ஆனந்த் - ரேகா வீட்டுக்கு செல்ல, அங்கே அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

வீட்டில் பொருட்கள் அங்கொன்றும் இங்கொன்று மாக இறைந்து கிடந்தன. கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்லும் வீட்டில் இது சகஜமானதுதான் என்று எடுத்து கொண்ட இருவருக்கும், ஆனந்த் - ரேகா வின் தெளிவற்ற முகங்கள் சஞ்சலத்தை ஏற்படுத்தின.

இவர்களைக் கண்டதும், முதலில் அதிர்ச்சி அடைந் தாலும், பின்னர் இருவரும் நல்ல படியாகவே இரு வரையும் உபசரித்தனர்.

''ரேகா... இன்னும் கொஞ்ச நேரத்தில் நாங்க கிளம் பிடுவோம். நீ எங்களுக்காக எதுவும் செய்ய வேண்டாம். இந்தா... பானு வீட்டுக்கு போயிட்டு வந்தோம். அவள் இந்த பக்கோடாவை கொடுத்து விட்டாள்'' என்று தேவகி தர, வாங்கி ஆனந்துக்கு கொடுத்து விட்டு, தானும் சுவைத்த ரேகாவின் கண்கள் விரிந்தன.

''பானுவா செஞ்சா? தினமும் போன்ல பேசும்போது அதை செஞ்சேன், இதை செஞ்சேன் என்று சொல்வாள். நான் கூட என்ன ரீல் விட்டுட்டு இருக்கியான்னு கேலி செய்வேன். இப்ப பார்த்தா மேடம் உண்மையிலேயே நல்லா சமைக்க ஆரம்பிச்சிட்டாங்க போலிருக்கே!''

என்று ஆச்சரியப் பட்டபடியே ரேகா தங்கை கொடுத்து அனுப்பியதைச் சுவைக்க,

''பானுவும் ஆகாஷ் தம்பியும் சேர்ந்துதான் செஞ்சாங்க!'' என்று வசந்தி பெருமிதத்துடன் சொல்ல, ரேகாவின் பார்வை ஆனந்திடம் பாய்ந்தது.

பேசிக் கொண்டே வசந்தி, சமையல் அறை தொட்டியில் குவிந்திருந்த பாத்திரங்களை தேய்க்க ஆரம்பிக்க, தேவகி சோபாவில் இருந்த துவைத்த துணிகளை எடுத்து மடிக்க ஆரம்பித்தார்.

''இருங்கம்மா... அத்தை நீங்க வைங்க. நான் அப்புறம் செஞ்சுப்பேன்!''

இருவரையும் தடுத்த ரேகாவை கண்டு கொள்ளாமல், பெரியவர்கள் இருவரும் தாங்கள் செய்ய துவங்கி இருந்த வேலையைச் செய்ய, ரேகாவுக்கு சங்கடமானது.

அடுத்த அரை மணி நேரத்தில் பிள்ளைகளிடம் விடை பெற்று கொண்டு வந்தவர்கள் இருவரும் கொஞ்ச நேரம் மௌனமாகவே நடந்தனர்.

''ஆனந்த் - ரேகா ரெண்டு பேர் முகமும் சரியாவே இல்லை. கவனிச்சீங்களா அண்ணி?'' என்று தேவகி தான் பேச்சை ஆரம்பித்தார்.

''ம்... பார்த்தேன். உண்மையைச் சொல்லணும்னா அண்ணி நீங்க ரெண்டு பேர் வீட்டுக்கும் போகலாம் என்று சொன்ன போது, நான் பானு வீட்டுக்கு போகத் தான் பயந்தேன். பொண்ணு எப்படி வீட்டை வைச்சுருக் காளோ அப்படின்னு பார்த்தால் அங்கே எல்லாம் சரியா இருக்கு. ரேகாவுக்கு என்ன ஆச்சுன்னு தெரியலை. எப் பவும் எல்லாத்தையும் சுத்தமா வைச்சிருக்க பொண்ணு... இப்போ...'' என்று கவலைப் பட,

''அதை விடுங்க அண்ணி... ரெண்டு பேர் வேலைக்கு போற வீடுகளில் இது நடக்கிறதுதான். எதோ ரெண்டு பேருக்கும் இடையில் சரி இல்லாத மாதிரி எனக்கு தோணுச்சு. என்ன இருந்தாலும், அவங்க ரெண்டு பேர் பிரச்சனையில் நாம எப்படி தலையிடுவது என்று அமைதியா வந்துட்டேன் என்றாலும் மனசுக்கு சங்கடமா இருக்கு!'' என்ற தேவகி தன் பங்குக்கு அவரது கவலையை வெளியிட, வசந்தியின் முகம் வாடுவதைக் கண்டதும்,

''ப்ச்... நான் ஒருத்தி உங்களை வேற குழப்பிட்டு இருக்கேன் அண்ணி... இதெல்லாம் கல்யாண வாழ்க்கையில் சகஜம். அடுத்த வாரம் உங்க வீட்டுக்கு வருவாங்க இல்ல? அப்பவும் சரியா இல்லைன்னா, என்ன என்று விசாரிக்கலாம்!'' என்று வசந்தியைத் தேற்றினார்.

* * *

''கிரேட் ஆகாஷ்! எங்க அம்மாவையும், ஆன்ட்டியையும் பார்த்த உடனே, எங்க நீ வெட்கப்பட்டு குழந்தையை இறக்கி வைச்சுருவியோன்னு நினைச்சேன்!'' என்று ப்ரியா பாதி கேலியும், பாதி ஆச்சரியமுமாக சொல்ல,

''அதெப்படி? சவால்னா ஜெயிக்க வேண்டாமா?'' என்ற ஆகாஷ்.

''அது சரி! ரெண்டு பேரிடமும் அவர் இவர் என்று யாரைப் பற்றியோ பேசிட்டு இருந்தாயே யார் அவர்?'' என்று விசாரித்தான்.

''கொழுப்பு?'' என்று சிரித்த ப்ரியா, ''உன்னைத் தான் அப்படி மரியாதையா சொல்லிட்டு இருந்தேன்!'' என்றவள் மரியாதையில் கொடுத்த அழுத்தத்தில்,

''ஹா ஹா...'' என்று வாய்விட்டு சிரித்த ஆகாஷ், ''என்னைத்தான் அப்படி சொன்னாயா? நான் கூட எதுக்கு இவள் சம்மந்தமில்லாமல் யாரைப் பற்றியோ பேசிட்டு இருக்கா என்று யோசித்தேன்! என்ன திடீர்னு அப்படி ஒரு மரியாதை?'' என்று அவனும் மரியாதையில் அழுத்தம் கொடுத்து விசாரித்தான்.

''எங்க அம்மா வீட்டுக்கு போகும்போது, நான் உன்னை, நீ வா போ என்று பேசறதைக் கேட்டு எங்க அம்மாவுக்கு B.P. ஏறிடுச்சு. மற்றவங்க எதிரில் அப்படி எல்லாம் கூப்பிட்டு விடாதே, அப்படி இப்படின்னு ஒரே அட்வைஸ். அதான்...'' என்றவள்,

''மற்றபடி... அதை தொடர்வேன் என்று நினைக்காதே!'' என்ற அமர்த்தலாக சொல்ல,

''ச்சே... ச்சே... யார் கிட்ட என்ன எதிர்பார்க்கணும் என்று கூடவே எனக்கு தெரியாது? எல்லாருக்கும் எழுதும்போது தான் ஸ்பெல்லிங் மிஸ்டேக் வரும்! உனக்குத்தான் பேசும்போது வருமே!'' என்று கேலியாக சொன்னான்.

''என்ன சொல்றே?'' என்று அவள் குழப்பத்துடன் வினவ,

''இந்த வாங்க போங்க என்று கூப்பிட வேண்டியதில், 'ங்க' 'ங்க' விட்டுடரே இல்ல, அதைச் சொன்னேன்!'' என்று அவன் கடிக்க,

''ஹப்பா... முடியலை!'' என்று அலுத்துக் கொண்டவள், ''ஆகாஷ்... நான் உன்னை ஒருமையில் கூப்பிடறதால் எனக்கு உன் மேல் மரியாதை இல்லை என்று நினைத்து கொள்கிறாயா என்ன?'' என்று சீரியசாக விசாரித்தாள்.

''என்ன ப்ரியா? எதுக்கு திடீர்னு இந்த கேள்வி நான் அப்படி எல்லாம் நினைக்கலை'' என்று ஆகாஷும் சீரியசாகவே பதில் சொன்னான்.

''பின்னே... எனக்கு உன் மேல் ரொம்ப மரியாதை என்று தப்பா நினைச்சிட்டு இருக்கியா?'' என்றவளின் விழிகள் குறும்பில் கூத்தாட,

ஒரு கணம் திகைத்த ஆகாஷ், மறு கணமே அவளின் கேலி புரிந்து, ''அதானே பார்த்தேன்!'' என்று புன்னகைத்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் கேலி செய்து பேசிக் கொண்டிருக்கும்போது ஆகாஷின் கைப்பேசி ஒலி எழுப்ப, வேகமாக அதை எடுக்க படுக்கை அறைக்கு சென்றவனிடம்,

''பார்த்து! பார்த்து! பிள்ளைத்தாச்சி பையன் இப்படியா வேகமா நடக்கிறது?'' என்று போலி அக்கறையுடன் ப்ரியா படபடக்க, அவளது போலியான படபடப்பில் சிரிப்பு வந்தாலும், ''வந்து பேசிக்கறேன்!'' என்று விட்டு போனவன், மீண்டும் வரவேற்பறைக்கு வரும்போதே, முகத்தில் ஒரு வித அவஸ்தை தெரிந்தது.

ஆறு மணி ஆனதும் ஆகாஷுக்கு வயிற்றில் எதோ அரிப்பது போலிருந்தது.

'இன்னும் இரண்டு மணி நேரம் பொறுத்து கொள்ளணுமே!' என்ற தவிப்புடன் அவன் அமர்ந்திருக்க, அவனது அவஸ்தையைப் புரிந்து கொண்ட ப்ரியா, ''ஆகாஷ் ரொம்ப கஷ்டமா இருந்தா எடுத்துடு!'' என்று நிஜமான அக்கறையுடன் சொல்ல,

"இல்ல... இருக்கட்டும்!" என்றவன், அடுத்த இரண்டு மணி நேரத்தை வெற்றிகரமாக கடந்த பிறகே, வயிற்றில் கட்டி இருந்த மூட்டையை அவிழ்த்து விட்டு நிம்மதி பெருமூச்சு விட்டான்.

"சூப்பர் ஆகாஷ்! நீ உண்மையிலேயே பொறுமைசாலி தான்!" என்று ப்ரியா பாராட்டு பத்திரம் வாசிக்க,

"தேங்க்ஸ் பட், ப்ரியா. எனக்குமே இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். எங்க ஸ்கூல்ல ஒரு ஆக்டிவிடி இருக்கும். ஒரு நாள் முழுக்க கண்ணை கட்டி விட்டுடுவாங்க. இல்லை பேசக் கூடாது என்று சொல்லிடுவாங்க. சில சமயம் காதில் பஞ்சை வைச்சுடுவாங்க. எல்லா புலன்களும் நல்ல படியா கிடைச்சிருக்க நாம் எவ்வுளவு கொடுத்து வைத்தவங்க என்று உணர்வதற்கும், புலன்களில் குறை இருக்கிறவங்களை கேலி செய்யக் கூடாது என்று உணர்வதற்கும் அந்த மாதிரி செய்வாங்க!"

"அந்த அனுபவம் மாதிரி இன்னைக்கு எனக்கு இருந்தது. ஒரு நாள்... ஒரு நாள் கூட இல்லை... ஜஸ்ட் பத்து மணி நேரத்துக்கே எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது. பட், ஒவ்வொரு பொண்ணும் குழந்தையைப் பத்து மாசம் சுமக்கிறாங்க. சுமக்கிறதோடு மட்டுமில்லாமல், குழந்தைக்கு என்ன ஒத்துக்கும் என்ன ஒத்துக்காது என்று யோசித்து யோசித்து சாப்பிடறது. அதற்கேற்ற மாதிரி நடந்துக்கிறது என்று எவ்வளவு கேர் எடுக்கிறாங்க. பெண்கள் உண்மையிலேயே ரொம்ப பொறுமைசாலிதான்!"

உணர்வுப் பூர்வமாக ஆகாஷ் சொன்னதும், ப்ரியாவும் நெகிழ்ச்சியுடன் அதை ஆமோதித்தாள்.



10

"என்னம்மா? என்ன ஆச்சு? ஏன் உங்க குரலே ஒரு மாதிரி இருக்கு?"

கைப்பேசியில் தன்னை அழைத்த அன்னையிடம், ப்ரியா விசாரித்தாள்.

"ரெண்டு நாளைக்கு முன்னாடி உன் வீட்டுக்கு வந்துட்டு, ரேகா வீட்டுக்கு போனோம் இல்ல? அப்போ அவள் முகமே சரியா இல்லை. அடுத்த நாள் போன் செஞ்சு ஜாடையா விசாரிச்சேன். அவள் பிடி கொடுத்தே பேசலை. எனக்கென்னமோ மனசுக்கு கஷ்டமாவே இருக்கு பானு."

கவலையுடன் அன்னை சொன்னதும், "ஹய்யோ! இப்போ எதுக்கு இவ்வளவு கவலைப்படறீங்க. ரெண்டு பேர் நடுவில் ஏதாவது சின்ன லடாயா இருக்கும். இதுக்கெல்லாமா இப்படி கவலைப் படுவீங்க?" என்ற ப்ரியாவிடம்,

"இல்ல பானு! அன்றைக்கு தேவகி அண்ணி, உங்க ரெண்டு பேர் வீட்டுக்கும் போகலாம் என்று சொல்லும் போது, உன்னை நினைச்சுதான் நான் கவலைப் பட்டேன்! ஆனால், நீயும் ஆகாஷும் சந்தோஷமா இருக்கிறதைப் பார்த்து சந்தோஷப் பட்டேன்! ஆனால், ரேகா வீட்டில் நினைச்சதுக்கு மாறாக எல்லாம் இருந்தது...

எனக்கு மனசே சரியில்லை!'' என்று வசந்தி தன் மன
கவலையைப் பகிர,

'தான் குடும்பம் நடத்தும் அழகு தெரிந்தால் இந்
அம்மா என்ன சொல்வார்கள்?' என்று தோன்றினாலும்
இப்போதைக்கு அன்னையின் மனக் கவலை
அகற்றுவதே முக்கியம் என்று உணர்ந்து, ''தேவ
இல்லாமல் கவலைப் படறதை விடுங்க' நான் ரே
கிட்ட பேசறேன்!'' என்ற ப்ரியா, அன்று மாலை
ரேகாவை அலைபேசியில் அழைத்தாள்.

''ரேகா... பார்த்து பத்து நாள் ஆச்சு. நீ எங்க வீட்டுக்
வாயேன்.''

''இல்ல பானு வீட்டில் நிறைய வேலை இருக்
இன்னைக்கு ஆனந்த் வர லேட் ஆகும். நீ வேண
வீட்டுக்கு வாயேன்!'' என்று அழைக்க, ப்ரியாவு
ரேகாவின் வீட்டுக்கு வந்தாள்.

அலங்கோலமாக இருந்த வீட்டைப் பார்க்க
ப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதையும் எடுத்
இடத்தில வைத்து, எப்போதும் தன் அறையை
சுத்தமாக வைத்திருக்கும் ரேகாவின் வீடா இது என்
தோன்ற, தங்கையின் பார்வையை உணர்ந்த ரேகாவுக்
சங்கடமாக இருந்தது.

அவசரமாக சோபாவில் இருந்த துணிகளை அப்புற
படுத்தி விட்டு, ''உட்கார் பானு. நான் உனக்கு குடிக்
எடுத்துட்டு வரேன்!'' என்று தங்கையை உபசரித்
வளின் கையைப் பிடித்து இழுத்து அருகில் அமர்த்தி
கொண்ட ப்ரியா, ''என்ன ஆச்சு? ஏன் உன் முக
இப்படி வாடி போயிருக்கு?'' என்று விசாரித்தாள்.

ரேகா அமைதியாக இருக்க, ''உனக்கும் ஆனந்துக்கும்
எதாச்சும் பிரச்சனையா?'' என்று விசாரித்தவள்,
ரேகாவின் கண்களில் சங்கடம் பரவுவதைக் கண்டதும்,
''ரொம்ப பெர்சனல் என்று நினைச்சால் சொல்ல
வேண்டாம்!'' என,

''இல்ல பானு உன்கிட்ட சொல்றதில என்ன
இருக்கு!''

''நீயே பார்க்கிற இல்லை. வீடு இருக்கிற லட்
சணத்தை வீட்டு வேலைக்கு ஆள் வைத்திருந்த வரை
பிரச்சனை இல்லாமல் இருந்தது. அப்புறம் அந்த அம்மா
வேலையை விட்டு நின்ற பிறகுதான் பிரச்சனையே
ஆரம்பிச்சது. சமையல், வீட்டு வேலை, ஆபீஸ் வேலை
என்று எல்லாத்தையும் நான் ஒருத்தியே செய்யணும்
என்றால் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. அம்மா
வீட்டில் இருந்தவரைக்கும், அம்மாவுக்கு அப்பப்போ
எதாவது சின்ன உதவி என்று செய்யறது கஷ்டமா
இல்லை. இப்போ எல்லாத்தையும் நானே பார்க்கணும்
எனும்போது ரொம்ப டென்ஷனா இருக்கு.''

''ஏன்... ஆனந்த் எதுவும் உதவி செய்ய மாட்டாரா?''

''செய்வார் ஆனால், நான் கேட்டால்தான் செய்வார்!''
என்ற ரேகாவின் குரலில் குறை இருந்தது.

''பரவாயில்லையே ரேகா... கேட்டால் செய்யறார்
தானே... அப்போ கேட்க வேண்டியதுதானே!''

''உனக்கே தெரியும் இல்ல பானு. எனக்கு... எனக்கு''
என்று ரேகா தயங்க,

''தெரியும்! உனக்கு ஒண்ணு தேவை என்றால், அதை
வாய் விட்டு கேட்க மாட்டே! உன் காதல் விஷயத்தை

அப்பாகிட்ட தைரியமா சொன்ன போது, உன்கிட்ட மாற்றம் வந்துடுச்சு என்று நினைச்சேன். இப்பவும் மாறவே இல்லையா? கடவுளே! ரேகா... உனக்கு என்ன தேவை என்று நீ சொல்லாவிட்டால், மற்றவங்களுக்கு எப்படி தெரியும் சொல்லு?'' என்று அலுப்புடன் சொன்ன ப்ரியாவிடம்,

''சும்மா சொல்லிட்டே இருப்பாங்களா பானு? தனியா ஒருத்தி எல்லாத்தையும் செய்யறாளே என்று அவருக்கே தெரிய வேண்டாமா? நான் அவர் எனக்கு உதவி செய்யலை என்று கோபமா இருக்கேன் பானு. அது கூட அவருக்கு புரியலை. ஏன் ரேகா கோபமா இருக்கே என்று கேட்டுட்டு இருக்கார். பொண்டாட்டி எதுக்கு கோபமா இருக்கா என்று கூட தெரியாதவர்கிட்ட என்னத்த சொல்ல?'' என்று ரேகா புகார் சொல்ல, அவள் சொன்ன விதத்தில் ப்ரியாவுக்கு சிரிப்பு வந்தது.

''ரேகா... ரேகா... ஒவ்வொருத்தர் ஒரு விதம்! நீ சொல்லாமலே உன் மனசில் இருக்கிறதை புரிஞ்சுக்கணும் என்று எதிர்பார்க்கிறாய். அவர் உனக்கு என்ன தேவை என்று சொல்லணும் என்று எதிர்பார்க்கிறார். உங்க எதிர்பார்ப்புகளை மூட்டை கட்டி வைச்சிட்டு, ரெண்டு பேரும் மனசு விட்டு உங்கள் தேவைகளை வெளிப்படுத்துங்க! அதை விட்டுட்டு ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சொல்றதால் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு இருக்காது!''

ப்ரியா அழுத்தத்துடன் சொல்ல, ரேகா அப்போதும் அமைதியா இருக்க, ''என்ன மேடம்? நான் சொன்னது புரிஞ்சுதா?'' என்று அதட்டினாள்.

''ம்... நீ சொல்றதும் சரிதான்! நான் அவர் கிட்ட வெளிப்படையா பேசறேன்!'' என்று ரேகாவும் ஒத்துக் கொள்ள, தமக்கைக்கு வீட்டு வேலையில் சில உதவிகளை செய்து விட்டு ப்ரியா தங்கள் வீட்டுக்கு கிளம்பினாள்.

அதே நேரம், ஆனந்தும் தன் தம்பியிடம் புலம்பிக் கொண்டிருந்தான்.

''ரேகா கல்யாணத்துக்கு முன்னாடி இருந்த மாதிரியே இல்லடா... அப்ப எல்லாம் எப்பவும் ஒரு புன்னகையோடவே இருப்பா... இப்பவெல்லாம். எப்ப பாரு கோபமாவே இருக்கா. வாய் விட்டு திட்டிட்டா கூட பரவாயில்லை. எப்பா பாரு பேசாமலே கோபத்தை காண்பிக்கிறாள். எதுக்கு கோபமா இருக்கா என்று கேட்டால் கூட சொல்ல மாட்டேங்கிறாடா... உனக்கே தெரியும் இல்ல? வீட்டில் நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன். ஆனால், அவள் சொன்னால், அவளுக்காக அதைக் கூட செய்யறேன்.''

''ஆனந்த்... நீ கல்யாணத்துக்கு முன்னாடி அண்ணியைப் பற்றி என்ன சொல்லிட்டு இருந்தே? ரொம்ப அமைதியான பொண்ணு தனக்கு, என்ன வேண்டும் என்று சொல்லக் கூட தெரியாது! நான்தாண்டா பார்த்துக் கணும் என்று பெருமையா சொன்னாயா இல்லையா?'' என்று ஆகாஷ் வினவ, ஆனந்தும் தலையாட்டினான்.

''அவங்க இப்பவும் அப்படித்தான் இருக்காங்க. நீதான் திடீர்னு அவங்க கிட்ட மாற்றத்தை எதிர்பார்க்கிறாய். வீட்டில் நீங்க இரண்டு பேர்தான் இருக்கீங்க. பிரச்சனை என்ன என்று உங்க ரெண்டு பேருக்குமே தெரிஞ்சுதான் இருக்கும். அவங்க சொல்லலை என்று புலம்பிட்டு இருக்காமல், உட்கார வைச்சு மனம் விட்டு பேசு

எப்பவும் சின்ன பிரச்சனைகளைக் கவனிக்காமல் விட்டுட்டால், அது பெரிய பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும். இன்னைக்கே அண்ணி கூட உட்கார்ந்து பேசு நிச்சயமா இதெல்லாம் சீக்கிரம் சரி ஆகிடும். ஆல் தி பெஸ்ட்!'' என்று அண்ணனுக்கு வாழ்த்து தெரிவித்து ஆகாஷ் வீடு வந்த நேரம், ப்ரியா கதவைத் திறந்து கொண்டிருந்தாள்.

அருகில் அரவம் கேட்டு திரும்பிய ப்ரியா, ''ஹே... நீயும் இப்போதான் வரயா?'' என்றபடி உள்ளே நுழைய, ''ம்... ஆனந்த் பார்க்கணும் என்று சொன்னான். அதான் அவனைப் பார்த்துட்டு வரேன்!'' என்றான் ஆகாஷ்.

''அப்படியா? நானும் ரேகாவை பார்த்துட்டு வரேன்!'' என்றவளிடம்.

''என்ன? ஒரே புகாரா?'' என்று ஆகாஷ் விசாரிக்க,

''உனக்கெப்படி தெரியும்?'' என்றவள், அவன் லேசாக புன்னகைக்கவும்,

''ஓ! அங்கேயும் அதேதானா?'' என்று சிரித்தவள், ''என்னவாம்?'' என்று விசாரித்தாள்.

''ம்... சொல்றேன்...'' என்றவன், ''ப்ரியா எனக்கு ரொம்ப பசிக்குது. தோசை மாவு இருக்குன்னு நினைக்கிறேன். நான் தோசை வார்க்கிறேன். நீ சட்னி அரைக்கிறாயா?'' என்றான்.

''ஆமா... எனக்கும் பயங்கர பசி. இதோ அரைக்கிறேன்!'' என்று விட்டு முகம் கழுவ சென்றாள்.

உணவின் போது, மீண்டும் ஆனந்த்-ரேகா பற்றிய பேச்சு வர, ''ரேகா மேலயும் தப்பு இருக்கு! நான் என்ன வேண்டும் என்று சொல்ல மாட்டேன். அவரே

புரிஞ்சுக்கணும் என்று நினைக்கிறாள். இதென்ன மடத்தனம்?'' என்று ப்ரியா சொல்ல,

''ஆனந்த் கிட்டயும் தப்பு இருக்கு, வீட்டில் ரெண்டு பேர் இருக்காங்க. இந்த காலத்தில் இரண்டு பேரும் வேலைக்கு போக வேண்டிய கட்டாயம் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொண்டால்தான் என்னவாம்? சொன்னால் செய்யறேன் என்று உட்கார்ந்துட்டு இருந்தால், தினமும் சொல்றதுக்கு அவங்களுக்கும் எரிச்சலாத்தானே இருக்கும்?'' என்று ஆகாஷ் சொல்ல,

இருவரும், தங்கள் உடன் பிறப்புகளுக்கு வக்காலத்து வாங்காமல், மற்றவருக்கு பேசுவதை உணர்ந்து இருவருக்கும் புன்னகை மலர்ந்தது.

''ஏன் இப்படி சின்ன விஷயங்களை கூட காம்ப்ளி கேட் செஞ்சுக்கிறாங்க ஆகாஷ்?''

''கணவன் மனைவி என்று வந்துட்டாலே பொஸஸிவ்னஸ், எதிர்பார்ப்பு எல்லாமே அதிகமா ஆகிடும் போலிருக்கு'' என்று தோளைக் குலுக்கியவன்,

''கல்யாண வாழ்க்கை என்றாலே பிரச்சனை இல்லாமல் இருக்காது ப்ரியா, அதை சரி செஞ்சு, பிரச்சனைகளைத் தாண்டி வரவங்கதான் கல்யாண வாழ்க்கையில் வெற்றி அடையறாங்க என்று எங்க சீனியர் அடிக்கடி சொல்வார்!'' என்றவன், அவர் தன்னுடன் திருமணம் பற்றி பேசிய விஷயங்களைப் பகிர்ந்தான்.

ப்ரியா, விஸ்வநாதன் சொன்ன விஷயங்களைப் பற்றி ஆகாஷ் சொன்னதை அசை போட்ட வண்ணம் அமர்ந்திருந்தாள்.

அவர் சொல்வது எவ்வளவு சரியான வாதம். ஒருவர் மேல் அன்பு இருக்கிறது என்பதற்காக, அவர்களுக்கு

ஏற்ற படி, தன்னை, தன் சிந்தனையை, தன் விருப்பத்தை மாற்றிக் கொண்டே ஆக வேண்டும் என்று என்ன கட்டாயம்? அப்படி எதிர்பார்க்கும் அன்பு எப்படி உண்மையானதாக இருக்க முடியும்? எந்த வித கட்டாயமும் இல்லாமல், அன்பின் காரணமாக சில விஷயங்களை விட்டுக் கொடுக்கலாம்! ஆனால், அது கட்டாயத்தின் பேரில் அமைந்தால், விட்டுக்கொடுப்பது மட்டுமே வாழ்க்கையில் தொடர்கதையானால், அந்த அன்பு உண்மையானதாக நிலைத்திருக்க முடியுமா என்ன?

ஒரு வேளை, உரிமையும் கடமையும் கலந்த ஒரு பந்தத்தில் சிக்கிக் கொண்டால், இது கட்டாயமாக்கப் படுமோ? நல்ல வேளையாக, தான் அந்த மாதிரி ஒரு சூழலில் சிக்கிக் கொள்வதில்லை என்று ப்ரியாவுக்குத் தோன்ற, அவளிடமிருந்து ஒரு நிம்மதி பெருமூச்சு வெளியானது.

"ப்ரியா.... என்ன யோசனை?" என்று அவளது தோளில் ஆகாஷ் லேசாக தட்ட, "ம்ம்ம்... என்ன சொன்னே?" என்று தன் சிந்தனையில் இருந்து மீண்டவளாக ப்ரியா வினவ.

"இந்த சன்டே அம்மா அப்பாக்கு வெட்டிங் டே அதைப் பற்றி சொல்லிட்டு இருந்தேன்!" என்றான் அவன்.

"வாவ்! என்ன கிஃப்ட் வாங்கலாம்?" என்று ஆர்வத்துடன் ப்ரியா வினவியதும்,

"அம்மாவுக்கு புடவை, நகை என்று பெருசா ஏடுபாடு கிடையாது! அதான் வேற என்ன வாங்கிறது என்று யோசிச்சுட்டு இருக்கேன். அப்பாக்கு இந்த கிஃப்ட் வாங்கறதெல்லாம் பிடிக்காது," என்று அவன் சொல்ல

"ஒரு சீடி ப்ளேயர் வாங்கலாம்! போன தடவை போன போதே சீடி ப்ளேயர் ரிப்பேர் ஆகிடுச்சு என்று சொல்லிட்டு இருந்தாங்க. ஆன்ட்டி ரொம்ப இஷ்டமா பாட்டெல்லாம் கேட்பாங்க இல்ல?" என்று வேகமாக யோசித்து திட்டமிட்டவளை புன்னகையோடு பார்த்தவன்,

"அதையே வாங்கிடலாம்! அவங்களுக்கு கண்டிப்பா பிடிக்கும்!" என்று முடிவு செய்து, அடுத்த நாளே இருவருமாக சேர்ந்து கடைக்கு போய் வாங்கினர். இசைத் தட்டு கருவியோடு, தேவகிக்கு என்ன மாதிரியான பாடல்கள் பிடிக்கும் என்று ஆகாஷிடம் கேட்டு தெரிந்து கொண்டு, ப்ரியா சில குறுந்தகடுகளையும் வாங்கினாள்.

சனிக்கிழமை மாலை, குடும்பத்தினர் அனைவருக்குமாக ரவிச்சந்திரன், தங்கள் வீட்டில் திருமண நாளுக்கான விருந்தை ஏற்பாடு செய்திருந்தார்.

தேவகி தானே உணவை செய்வதாக கூற, "இன்னைக்கு ஒரு நாள் நல்ல சாப்பாடு சாப்பிடலாம் தேவிம்மா!" என்று ரவிச்சந்திரன் தரமான உணவகத்தில் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

கணவர் கேலியாக கூறினாலும், தனக்கு சிரமம் வேண்டாம் என்றே சொல்கிறார் என்பதை உணர்ந்தாலும், "இருங்க... நாளையில் இருந்து உங்களுக்கு வெறும் கஞ்சிதான் ஊத்த போறேன்!" என்று தேவகி போலியாக மிரட்டினார்.

ஆனந்துக்கும், ரேகாவுக்கும் சனிக்கிழமை அலுவலக விடுமுறை என்பதால், அவர்கள் காலையிலேயே வந்து விட, ப்ரியா மாலை சீக்கிரம் வருவதாக சொல்லி இருந்தாள். ஆகாஷும் காலையிலேயே வந்து வீட்டில் எளிய அலங்காரங்களைச் செய்து கொண்டிருந்தான்.

ஆனந்த் - ரேகா இருவரின் முகங்களிலும் தெளிவைக் கண்டவனுக்கு, தானும் ப்ரியாவும் எடுத்த ட்யூஷன் வேலை செய்திருப்பதை உணர முடிந்தது.

ரேகா எதுவும் கேட்கும் முன்னரே, ஆனந்த் அவள் செய்யும் வேலைகளில் உதவியதையும், ரேகாவும் அவனைக் கூப்பிட்டு உதவி கேட்பதையும், கண்டும் காணாமல் கவனித்தவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

இவனும் ப்ரியாவும் சொன்ன அறிவுரை அவர்களுக்கு ஒன்றும் தெரியாததல்ல. ஆனால், யார் முதலில் துவக்குவது என்ற தயக்கத்தில்தானே, பெரும்பாலான பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே போகின்றன!

இவர்களது பிரச்சனை தீர தானும் ப்ரியாவும் ஒரு காரணமாக இருந்திருக்கிறோம் என்ற சந்தோஷம் மனதை நிறைக்க, ஆகாஷின் முகத்தில் இளநகை மலர்ந்தது.

''என்ன தனியா சிரிச்சுட்டு இருக்கே?'' என்றபடி உள்ளே நுழைந்த ப்ரியாவின் கையில் இரண்டு அட்டை பெட்டி இருந்தது.

''ஹே இதென்ன? கிஃப்ட் தான் நான் எடுத்துட்டு வந்துட்டேனே?'' என்று ஆகாஷ் விசாரிக்க,

''இது வேற! ஆன்ட்டிக்கு மைசூர் சில்க் புடவை என்றால் ரொம்ப இஷ்டம் என்று ஒரு முறை சொல்லி இருந்தாங்க. அதான், இதுவும் இருக்கட்டும் என்று வரும்போது வாங்கிட்டு வந்தேன்!'' என்று ப்ரியா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, முத்துக்குமரனும் வசந்தியும் உள்ளே நுழைந்தனர்.

வந்தவர்களை வரவேற்று உபசரிப்பு முடிய, இரு இளம் தம்பதியினரும், தங்களது இனிய இல்லறத்தில், முப்பது

ஆண்டுகளை இனிமையாக நிறைவு செய்த, ரவிச்சந்திரன் - தேவகி தம்பதியிடம் ஆசி பெற்றனர்.

முத்துக்குமரனும் தேவகியும் தங்கள் பரிசுப் பொருளைக் கொடுத்து அவர்களை வாழ்த்த, ஆனந்த் ரேகாவும் தங்கள் பரிசைக் கொடுத்தனர்.

ஆகாஷும் - ப்ரியாவும் தங்களது பரிசைக் கொடுக்க, பிரித்து பார்த்த தேவகிக்கு கொள்ளை சந்தோஷம். ''நினைவு வைச்சு வாங்கிட்டு வந்துருக்கியே ப்ரியா... நானே உங்க மாமாகிட்ட ஒரு வாரமா சொல்லிட்டு இருந்தேன்!'' என்றவருக்கு, அவள் வாங்கி வந்திருந்த குறுந்தகடுகளைக் கண்டதும் மேலும் சந்தோஷம்!

''அம்மா... இது அநியாயம்! பரிசை வாங்கினது நான். அவளுக்கு பாராட்டா?'' என்று ஆகாஷ் போலியாக அலுத்துக் கொள்ள,

''வாய்ப்பே இல்லை! இது கண்டிப்பா ப்ரியாவின் வேலையாதான் இருக்கும்! நீ எப்போடா எனக்கு கிஃப்ட் எல்லாம் வாங்கி கொடுத்திருக்கே? பணம் கொடுத்துட்டு உங்களுக்கு பிடிச்ச மாதிரி வாங்கிக்கோங்க என்றுதானே சொல்லுவா!'' என்று தேவகி வார,

''சரி... சரி... விடுங்க! இதை, அப்புறம் பேசி தீர்த்துக் கலாம்!'' என்று வாய்தா வாங்கினான் அந்த வழக்கறிஞன்!

''ஆன்ட்டி! இன்னொரு சின்ன கிஃப்ட்!'' என்று புடவை பெட்டியை தேவகியிடமும், ''அங்கிள்... இது உங்களுக்கு!'' என்று ரவிச்சந்திரனிடமும் ப்ரியா நீட்ட, வாங்கி பிரித்து பார்த்த இருவருக்கும் ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி உண்டானது.

"ப்ரியா... இந்த மைசூர் சில்க் புடவை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அதுவும் எனக்கு பிடிச்ச கிரீன் கலர்!" என்று தேவகி வாய் விட்டு பாராட்ட,

பரிசு பெற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டும் ரவிச்சந்திரனும், அவரது விருப்பமான பிராண்டில் அவள் வாங்க வந்திருந்த பெல்ட்டை கண்டதும் மகிழ்ச்சி அடைந்தார்.

"எப்பவோ பேச்சு வாக்கில் சொன்னதை எல்லாம் நினைவு வைச்சு, எங்க ரெண்டு பேருக்கும் பிடித்த மானதை வாங்கிட்டு வந்திருக்கியே?" என்று இருவரும் பாராட்ட, ப்ரியா மகிழ்ச்சி அடைந்தாளோ இல்லையோ, மாமியாரும் மாமனாரும் மெச்சும் விதத்தில் பெண் நடந்து கொண்ட முறை, வசந்திக்கும் முத்துக்குமரனுக்கும் மிகவும் பெருமிதத்தை அளித்தது.

கலகலப்பான பேச்சுக்கிடையில் உணவும் முடிய, வந்தவர்கள் மன நிறைவுடன் விடை பெற, தேவகிக்கும் ரவிச்சந்திரனுக்கும் மனம் நிறைந்திருந்தது.

"தேவி... ப்ரியாவையும் ஆகாஷையும் பார்த்தே இல்ல? ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கிண்டல் செய்றதிலும் சரி, விட்டுக் கொடுக்காமல் பேசுவதிலும் சரி, எவ்வளவு ஒத்துப் போறாங்க இல்ல? உனக்கிருந்த சந்தேகம் எல்லாம் போயிடுச்சா?" என்று மனைவியிடம் வினவினார் ரவிச்சந்திரன்.

"பார்த்தேங்க! ரொம்ப சந்தோஷமா இருக்கு. உங்க கிட்ட இன்னொரு விஷயம் சொல்லலையே! போன வாரம் ஆனந்த்-ரேகா நடுவில் ஏதோ சரி இல்லை என்று சொல்லிட்டு இருந்தேன் இல்ல? அதைப் பற்றி எதுவும் கேட்க கூடாது என்று நினைச்சாலும், இன்னைக்கு மனசு

கேட்காம அவள் கிட்ட என்ன பிரச்சனை என்று கேட்டுட்டேன். அதுக்கு அவள், இப்போ எந்த பிரச்னையும் இல்ல அத்தை, ப்ரியாவும்-ஆகாஷும் சொன்ன படி மனசு விட்டு பேசினதில், எல்லாம் சரியா போச்சுன்னு சந்தோஷமா சொன்னாள் இதுங்க ரெண்டும் பார்த்தீங்களா? மற்றவருக்கு அறிவுரை சொல்ற அளவுக்கு வளர்ந்து இருக்குதுங்க!" என்ற தேவகியின் குரலில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

அதே பெருமிதம், வசந்திக்கு முத்துக்குமரனுக்கும் இருந்தது. "பார்த்தியா வசு எப்ப பாரு இந்தப் பொண்ணு எப்படி குடும்பம் நடத்தறாளோ என்று புலம்பிட்டே இருப்பாயே! என் பொண்ணு எப்படி எல்லாரும் பாராட்டற மாதிரி நடந்து கொள்கிறாள் பார்த்தாயா?" என்று முத்துக்குமரன் பெருமை பட்டுக் கொள்ள, "உங்க பொண்ணாச்சே... வேற எப்படி இருப்பாள்?" என்று கணவரைக் கேலி செய்யும் குரலில் சொன்னாலும், வசந்திக்கும் தன் பெண்ணைப் பற்றி மனது கொள்ளாத பெருமையே!

* * *

"என்ன ப்ரியா? அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பிடிச்ச மாதிரி பரிசெல்லாம் கொடுத்து அசத்திட்டே?"

"எனக்கு எப்பவுமே மற்றவங்களுக்கு பரிசு கொடுக்கிறது ரொம்ப விஷயம்! அதுவும் அவங்களுக்கு பிடிச்ச மாதிரி பொருளா கொடுக்கிறது இன்னும் பிடிக்கும்! அதுவும் நமக்கு பிடிச்சவங்களுக்கு அவங்களுக்கு பிடிச்ச மாதிரியான பரிசு கொடுக்கிறது இன்னும் ரொம்ப பிடிக்கும்!"

''அடேங்கப்பா! அந்த அளவுக்கு எங்க அம்மாவை உனக்கு பிடிக்குமா என்ன?''

''பின்னே! உங்க அம்மாவாச்சே! பிடிக்காமல் போகுமா?'' என்றவளை விழி விரித்து ஆகாஷ் நோக்க,

கலகலவென சிரித்த ப்ரியா, ''இப்படி ஏதாவது சொல்லுவேன்னு நினைச்சியா என்ன?'' என்று விட்டு,

''எனக்கு அவங்களை முதல் நாள் பார்த்த உடனே பிடிச்சு போச்சு! பழகப் பழக இன்னும் பிடிச்சு போச்சு! தான் பெரியவள், எல்லா விஷயத்திலும் தலையிட உரிமை இருக்கு என்று நினைச்சு அநாவசியமா எல்லா விஷயத்திலும் தலையிடாமல், அதே சமயம் அக்கறையாவும் நடந்துப்பாங்க! இப்போ எத்தனை பேர்கிட்ட அந்த மாதிரி குணம் இருக்கு சொல்லு! சோ, ஐ லைக் ஹேர் சோ மச்!'' என்று உண்மையான குரலில் கூற, ஆகாஷுக்கு சந்தோஷமாக இருந்தது.

அடுத்த ஒரு வாரம் அமைதியாக கழிய, ஒரு நாள் ப்ரியாவிடம் ஒரு அழைப்பு வரவும், ஆச்சரியத்துடன் ஆகாஷ் எடுத்து பேசினான்.

வீட்டில் பேசிக் கொள்வதோடு சரி! வேலையில் இருந்து திரும்ப ரொம்பவும் தாமதமாகும் என்றால், தகவல் தெரிவிக்க பேசிக் கொள்வார்களே தவிர, அவர்களிடையே இந்த மூன்று மாதத்தில், பெரிதாக டெலிபோன் பேச்சு நடந்ததில்லை!

''ஆகாஷ்! எனக்கு காலில் அடி பட்டிருக்கு. நம்ம வீட்டுக்கு பக்கத்தில் இருக்கிற ஹாஸ்பிட்டல்லதான் இருக்கேன்! நீ வர முடியுமா?'' தயக்கத்துடன் ப்ரியா கேட்டதும்.

''என்ன ஆச்சு? எங்கே அடிபட்டது!'' என்று பதறிய ஆகாஷ், ''பக்கத்தில்தான் இருக்கேன். இன்னும் ஐந்து நிமிஷத்தில் வரேன்!'' என்று விட்டு வேகமாக மருத்துவமனைக்கு சென்றான்.

வலது கால் பாதத்தில் கட்டு போடப்பட்டு அமர்ந்திருந்த ப்ரியாவைக் கண்டதும், வேகமாக அருகில் வந்தவன், ''என்ன ஆச்சு ப்ரியா?'' என்று பதட்டத்துடன் வினவ,

''ஒண்ணுமில்ல வண்டி ஸ்கிட் ஆகிடுச்சு, பேலன்ஸ் செய்ய முயற்சி செஞ்ச போது, கொஞ்சம் பிசகிடுச்சு தனியா நடக்க முடியவில்லை. அதான் உன்னை கூப்பிட்டேன்!'' என்று சாதாரணமாக சொல்ல, ஆகாஷ் மருத்துவரிடம் செல்ல முற்பட்டான்.

''ஆகாஷ்! நான்தான் சொல்றேன் இல்ல? பெரிசா ஒண்ணுமில்ல!'' என்று சொன்னவளைக் கண்டு கொள்ளாமல், மருத்துவரிடம் சென்று விசாரித்து விட்டே வந்தான்.

அவளது தோளைப் பற்றிக் கொண்டு, அழைத்து வந்திருந்த ஆட்டோவில் ஏற்றியவன், தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

''ரெண்டு நாளைக்கு ஸ்ட்ரெயின் செய்யக் கூடாது என்று சொல்லி இருக்கார். நீ லீவ் போட்டுடு!'' என்று அக்கறை கலந்த படபடப்புடன் சொன்னவனிடம்.

''ஹே! நீ ஏன் இவ்வளவு பதட்டப்படறே?'' என்று ப்ரியா ஆச்சரியத்துடன் விசாரிக்க, ''அதெல்லாம் ஒண்ணுமில்ல!'' என்றவனுக்குமே தனது பதட்டம் ஆச்சரியத்தைத் தான் விளைவித்

தங்களது இருப்பிடம் இருக்கும் வளாகத்துக்கு வந்து
வர்களுக்கு அன்று மின் தூக்கி வேலை செய்யவில்லை
என்று தெரிய வர, அதிர்ச்சியானது.

இருவருமே அவசரத் தேவை தவிர எப்போதுமே மின்
தூக்கியைப் பயன்படுத்தியதில்லை. இரண்டு மாடி
களையும் படியேறி கடந்துதான் வழக்கம்! ஆனால்
இன்று ஒரு காலை கீழே வைக்கவே முடியாத லட்சணத்
தில் படிகளில் எப்படி ஏறுவது என்று ப்ரியா மலைக்க,
அவளை அங்கே போடப் பட்டிருந்த பெஞ்சில் அம
வைத்து விட்டு விசாரிக்க சென்ற ஆகாஷ், ''இன்னும்
இரண்டு மணி நேரத்துக்கு மேல ஆகுமாம்!'' என்று
வந்தான்.

''அச்சோ! எனக்கு இப்பவே பசிக்குதே!'' என்று
ப்ரியாவிடம், ''ப்ரியா... என்கிட்டே ஒரு வழி இருக்கு
எனக்கு கொஞ்சம் ரிஸ்க்தான்... இருந்தாலும் முயற்சி
செய்யலாமா?'' என,

என்ன என்று பார்வையால் வினவினாள் அவள்.

''நான் வேணா உன்னை தூக்கிட்டு போறேன்!''
என்று அவளை அதிர வைத்தான் அவன்!

''அடப்பாவி! இதில உன்னை விட எனக்குதான் ரிஸ்க்
அதிகம்! நடுவில் எங்கேயாவது போட்டுட்டேனா?''
என்று ப்ரியா அலராத குறையாக கூற,

''போனால் போகுதுன்னு உதவ வந்தால், இவ்வளவு
பேசற? நீ இங்கேயே இரு! இரண்டு மணி நேரம் ஆகும்
என்று சொல்றாங்க. லேட் ஆனாலும் ஆகலாம்
எனக்கும் பசிக்குது! நான் போறேன்பா!'' என்று ஆகாஷ்
கிளம்ப எத்தனிக்க.

''ஆகாஷ்...'' என்றழைத்த ப்ரியா, பாவமாக அவனைப்
பார்க்க, ''என்ன?'' என்றான் அவன்.

''ரொம்ப பசிக்குது எனக்கு!'' என்றாள் அவள்.
இன்னும் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு!

அவள் பாவனை புன்னகையை வரவழைத்தாலும்,
''அதுக்கு?'' என்றான் அவன் அலட்டிக் கொள்ளாமல்,

''இப்போ என்ன? உன்கிட்ட என்னை தூக்கிட்டு போ
என்று கெஞ்சணுமா?'' என்று அவள் முறைக்க,

''ஹப்பா! உதவி கேட்கிறதைக் கூட மேடம் எப்படி
கேட்கிறாங்க பாரு!'' என்று கேலியாக சொல்லிக்
கொண்டே குனிந்து, அவளைத் தூக்கப் போனவனிடம்,
''நடுவில் கிடுவில போட்டுட மாட்டாயே?'' என்று
அவள் கேட்டதும்,

''உன்னை...'' என்று முறைத்தவன், ''நீ இங்கேயே
பசியோடு இரு!'' என்று சொல்லி விட்டு நகர எத்தனிக்க,
''சரி...சரி... கோச்சுக்காதே!'' என்று அவள் தழைந்து
வந்தாள்.

அவளைக் கையில் ஏந்திய வண்ணம் அவன் படியேற,
மின் தூக்கி வேலை செய்யாததால், அவர்களைப்
போலவே படியேறி வந்த சிலர். இவர்களைப் பார்த்து
சிரிக்க, ''ப்ரியா... இவங்க நாம எதோ ரொமான்ஸ் செய்ய
றோம் என்று நினைக்கிறாங்களோ?'' என்று கேலி
செய்து சிரிக்கும்போது, அவன் கால் லேசாக இடற,

வேறு வழி இல்லாமல் அவனைத் தூக்க சொல்லி
விட்டாலும், அவன் ஸ்பரிசம் தன்னை பாதிப்பதை
அவள் உணரும் முன், அவனது கேலி அதை ஒன்று
மில்லாமல் ஆக்க, ''பார்த்து! பார்த்து! நீ என்னை கீழே

போட்டு இன்னும் என் காலை டேமேஜ் செஞ்சுடாதே!'' என்று ப்ரியா பயத்தடன் எச்சரித்தாள்.

''இப்படி எல்லாம் பேசினே... நடுவில இறக்கி விட்டுட்டு போயிடுவேன்!'' என்று மிரட்டியவாறே, தங்களது வீட்டுக்கு வந்தவன், மெதுவாக இறக்கி விட்டு விட்டு, கதவைத் திறந்து, அவளது கைப்பற்றி அழைத்து போன ஆகாஷ், அவளை சோபாவில் அமர வைத்து விட்டு, ''ரொம்ப பசியா இருந்தால், ஏதாவது குடிக்கிறாயா ப்ரியா? டிபனுக்கு சீக்கிரம் ரெடி ஆகற மாதிரி உப்புமா செய்யறேன்!'' என்று கேட்டபடி சமையல் அறைக்குள் நுழைந்தான்.

''இல்ல... ரொம்ப பசிக்குது... இப்போ ஏதாவது குடிச்சால், அப்புறம் சாப்பிட முடியாது.!'' என்று அவள் மறுத்து விட, விரைவாக உணவை சமைத்து எடுத்து வந்தவன், உண்டு முடித்தும்,

''நீ வந்து படு... நான் துணியை மெஷின்ல போட்டுட்டு வரேன்!'' என்று சொல்ல, ''இருக்கட்டும் ஆகாஷ். நாளைக்கு நான் வீட்டில்தானே இருக்க போறேன்! நான் செய்யறேன்! நீயும் டயர்டா இருக்கே வந்து படு!'' என்றவளிடம்.

''மேடம்! நீங்க நாளைக்கு லீவ் போடறது ரெஸ்ட் எடுக்க! இன்னும் ஸ்ட்ரெயின் செய்ய இல்ல!'' என்று அதட்டியவன், ''நாளைக்கு நான் வேலையில் இருந்து வந்து பார்த்துக்கறேன்!'' என்று விட்டு அவனும் படுக்க வந்தான்.

அவளிடம் தேவையான மாத்திரைகளைக் கொடுத்து விழுங்க செய்தவன், ''இப்ப வலி எப்படி இருக்கு?''

என்று வினவ, ''சுருக் சுருக் என்று வலிச்சிட்டுதான் இருக்க!'' என்றவள் முகம் வலியின் வேதனையில் லேசாக வாட,

''ஹே... டாக்டர் ஒரு ஆயின்மென்ட் கொடுத்தாங்க இல்ல? அதை வேணா தேய்த்து விடவா?'' என்று, அவளது கால் கட்டிகளை அவிழ்த்து மென்மையாக தேய்த்து விட்டான்.

''படு கொஞ்சம் இந்த தைலம் ட்ரை ஆனா பிறகு கட்டை கட்டிட்டு நானும் படுக்கறேன்!'' என்றவனைப் பார்த்தவள், ''தேங்க்ஸ்!'' என்றாள்.

''எதற்கு?'' என்றவனிடம்.

''என்னை கீழே போடாமல் தூக்கிட்டு வந்ததுக்கு'' என்று அவள் கண் சிமிட்ட, ''வாயாடி! படு!'' என்று அவன் புன்னகையுடன் சொல்ல, அடுத்த ஐந்து நிமிடத்தில், மருந்தின் தாக்கத்தில் அவளும் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

அடுத்த நாள் காலை, சீக்கிரமே எழுந்தவன், காலைக்கும் மதியத்துக்கும் உணவைத் தயாரித்து ஹாட் பேக்கில் வைத்து, உணவு மேஜையில் கொண்டு வந்து வைத்தான்.

எட்டு மணி ஆன பிறகும் ப்ரியா எழாமல் இருக்க, மெதுவாக அவளை எழுப்பியவன், அவள் காலை கடன்களை முடித்து கொண்டு வந்ததும், உணவைப் பரிமாறி விட்டு, ''மருந்து, மதிய சாப்பாடு, நொறுக்கு தீனி, தண்ணீர் எல்லாம் டைனிங் டேபிளில் வைச்சிருக்கேன்! எனக்கு இன்னைக்கு முக்கியமான ஒரு கேசுக்கு ஹியரிங் இருக்கு. அதனால் கண்டிப்பா போகணும்! நீ

ஜாக்கிரதையா இரு நான் அம்மாகிட்ட சொல்லி வரச் சொல்றேன். இல்ல, அத்தையை வரச் சொல்றேன்!'' என்றான்.

''இல்ல... இல்ல... அம்மாகிட்ட சொல்ல வேணாம். புலம்ப ஆரம்பிச்சுடுவாங்க. அப்புறம் டெய்லி பார்த்து போ... பார்த்து போ... உபதேசம் நடக்கும்! ஆன்ட்டி கிட்ட சொன்னால், கண்டிப்பா அம்மா கிட்ட சொல்லிடு வாங்க. இருக்கட்டும் நான் பார்த்துக்கறேன்! அதான் தேவையானது எல்லாம் வைச்சுருக்கியே!''

''ஓகே... நான் சீக்கிரம் வர பார்க்கிறேன்!'' என்றவன் கொஞ்ச நேரத்தில் ஒரு க்ரட்சுடன் வந்து, அதை ப்ரியாவிடம் கொடுத்து விட்டு, ''இது இருக்கு என்று சும்மா சும்மா நடக்காதே! தேவை என்றால் மட்டும் நட ஒழுங்கா சாப்பிடு!'' என்று ஆயிரம் அறிவுரை சொல்லி விட்டு கிளம்பினான்.

வேலை முடிந்து அன்று மாலை வீட்டுக்கு வந்தவ னுக்கு, ப்ரியாவின் விசித்திரமான நடவடிக்கைகள் புதிராகத் தோன்றின.



11

''ஹாய் ப்ரியா! கால் வலி இப்போ எப்படி இருக்கு?'' என்று விசாரித்து கொண்டே உள்ளே நுழைந்த ஆகா ஷிடம், ''ம் பரவாயில்லை!'' என்று அவனை நேருக்கு நேர் பார்க்காமல் ப்ரியா முணுமுணுக்க,

''என்ன ஆச்சு? ரொம்ப வலிக்குதா?'' என்று அக்கறை யுடன் கேட்டுக் கொண்டே அவன் அருகில் வந்து அமர, சட்டென்று நகர்ந்து அமர்ந்தாள் ப்ரியா.

''என்ன ஆச்சு? என்று அவன் வினவ, ''எதுவும் இல் லையே'' என்றவள், அப்போதும் அவனைப் பார்க்க வில்லை!

அவளைக் குழப்பத்தோடு பார்த்தவன், அவள் தன் கையில் இருந்த பத்திரிகையில் கவனமாக இருப்பதைக் கண்டு ஒரு தோள் குலுக்கலோடு எழுந்து போனான்.

சமையல் அறைக்குள் சென்று இருவருக்குமாக தேநீர் கலந்து எடுத்து வந்தவன், அவளை நோக்கி ஒரு குவளையை நீட்ட, ''டீபாயில் வைச்சிடு!'' என்றாள் அவள்.

புருவம் சுருக்கி அவளைப் பார்த்தவன், ''ஹே! என்ன ஆச்சு? ஏன் இவ்வளவு டல்லா இருக்கே?'' என்று வினவ, ஒன்றும் பேசாமல் தேநீரை எடுத்து ஒரு வாய் அருந்தியவள்.

''ஆகாஷ்!'' என்று மெல்ல அழைத்தாள்.

''என்ன?'' என்ற கேள்வியோடு அவளை நோக்கிய வனை நேருக்கு நேர் பார்க்காமல், ''நேற்று என்னை...'' என்று ஆரம்பித்தவள், தொண்டையை செருமிக் கொண்டு, ''நேற்று என்னை தூக்கிட்டு வந்தே இல்ல?'' என்று இழுக்க,

''அடக் கடவுளே தூக்கிட்டு வந்தே இல்ல என்று கேள்வி மாதிரி கேட்கிறே? என் ரெண்டு கையும் இப்ப வரைக்கும் வலிக்குதும்மா!'' என்று அவன் இரு கைகளையும் மாற்றி மாற்றி தானே அமுக்கிக் கொள்ள,

"ப்ச்... எப்ப பாரு பாதி பேச்சிலே புகுந்து குழப்பறதே உன் வேலை!" என்று எரிச்சல் கொண்ட ப்ரியா,

"என்னை... என்னை தூக்கிட்டு வரும்போது உன் மனசில ஏதாவது தோணுச்சா?" என்று ஒரு வழியா கேட்டு விட, அவன் குழப்பத்துடன் அவளை நோக்க "என்ன தோணனும்?" என்றான்.

"வந்து... அது... வந்து... உனக்கு... ஏதாவது..." என்று ப்ரியா தடுமாற, எப்போதும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பேசுபவளுக்கு இன்று என்ன ஆயிற்று என்று அவன் எண்ணும்போதே, அவள் என்ன கேட்க வருகிறாள் என்று லேசாக புரிய வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தான் அவன்,

"இப்போ எதுக்கு சிரிக்கிறே?" என்று முறைத்தவளிடம்,

"ப்ரியா... நீ ஒரு சந்நியாசி கதை கேள்வி பட்டிருக்கிறாயா?" என்றவன்.

அவள் எதோ சொல்ல வரவும் கையமர்த்தி தடுத்து விட்டு, "ரெண்டு சந்நியாசிகள் ஒரு ஆற்றை கடக்கும் போது, ஒரு பெண் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பதை பார்த்தாங்களாம். பெண்களைத் தீண்டக் கூடாது என்ற காரணத்தால் ஒரு சந்நியாசி அவளைக் காப்பாற்ற முயற்சி செய்யலையாம்! இன்னொருத்தர் ஒரு உயிரை காப்பாற்றுவது முக்கியம் என்று அவளைத் தூக்கி காப்பாற்றி கரையில் விட்டாராம்! அத்தோடு அதை மறந்தும் போனாராம்! ஆனால், அந்த இன்னொரு சந்நியாசி, கொஞ்ச தூரம் போன பிறகு, பெண்களைத் தீண்டக் கூடாது என்று துறவறம் பூண்ட பிறகு, எப்படி

ஒரு பெண்ணைத் தொட்டீர்கள் என்று கேட்டாராம்! அதுக்கு அவர், நான் அவளைத் தூக்கி காப்பாற்றி கரையில் விட்டதோடு அந்த நினைப்பையும் இறக்கி வைத்து விட்டேன். ஆனால்... நீ இன்னமும் மனதில் சுமந்து கொண்டு திரிகிறாய்! என்றாராம்!" என்று கதை சொன்னவன், "இதுல இருந்து என்ன தெரியுது?" என்று வினவ,

"எந்த கேள்விக்கும் நீ நேரிடையா பதில் சொல்ல மாட்டாய் என்று தெரியுது! இப்படி ஏதோ கதை சொல்லி, எதிர் கேள்வி கேட்டு குழப்பி குழப்பியே எடுக்கிற கேசில் எல்லாம் ஜெயிக்கிறாய் தெரியுது! அப்புறம்..." என்று தொடர்ந்தவளிடம்.

"அட அட.... குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலை என்று சாதிக்க எவ்வளவு பேச வேண்டி இருக்கு! இல்ல ப்ரியா?" என்று கேலியாக சொன்னவனிடம்.

"சரி நீ மனசில எதுவும் வைக்கலை.... நான் தான் வைச்சிருக்கேன் என்று சொல்ற? அதானே? அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை!" என்று சொல்லி விட்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள,

"பின்னே? நேற்று வராத சந்தேகம் இன்னைக்கு ஏன் வந்தது? ம்?" என்று புருவம் உயர்த்தி கேள்வி எழுப்பியவன் குரலில் கேலி குறைவதாக இல்லை!

"வேலை இல்லாமல் வீட்டில் இருக்க போர் அடிச்சுது! கொஞ்ச நேரம் டீவி பார்க்கலாம் என்று பார்த்தேனா?" என்று ப்ரியா சொல்லிக் கொண்டிருக்கும்போதே.

"அதுல சொன்னாங்களா? ஆகாஷுக்கு ஃபீலிங்க்ஸ் வந்திருக்குமோ என்று?" என்று ஆகாஷ் கேலியுடன் இடைப் பட

''வக்கீல் என்றால், குறுக்கே குறுக்கே பேசணும் என்று ஏதாவது சட்டமா என்ன? ஏன் இப்படி படுத்தறே? முழுசாத்தான் கேளேன்'' என்று கடிந்து கொண்டவள்.

''சானல் மாற்றி மாற்றி பார்க்கும்போது ஒரு சானலில் டாப் டென் ரொமாண்டிக் சீன்ஸ் என்று ஒரு நிகழ்ச்சி வந்தது. நமக்கும் ரொமான்சுக்கும்தான் சம்மந்தமே இல்லையே என்று சேனலை மாற்ற போகும்போது. சரி... அப்படி என்னதான் போடப் போறான் என்று தோன்றி அதைப் பார்த்தேனா?'' என்று அவள் இடைவெளி விட, ''மேலே சொல்லு!'' என்றான் அவன்.

''ஹப்பா... எல்லாம் சீன்லயும், ஹீரோயின் விழறா, ஹீரோ பிடிக்கிறான். கண்ணும் கண்ணும் நோக்கிக் குறாங்க. அவள் கண்ணு பட படன்னு அடிச்சுக்குது! அப்புறம் ரெண்டு பேரும் டூயட் பாட ஆரம்பிக்கிறாங்க. ஊப்ஸ்! அதைப் பார்த்தே நான் டயர்ட் ஆகிட்டேன்! அதான் திடீர்னு எனக்கும் ஒரு சந்தேகம் வந்துடுச்சு!'' என்று தன் சந்தேகத்தின் பின்னணியைக் கூற, ஆகாஷ் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

ப்ரியா அசடு வழிவதைக் கண்டதும், ''ப்ரியா... ப்ரியா... நீ அதிகம் சினிமா பார்க்கிறதில்லை என்று எனக்குத் தெரியும்! ஆனால், இப்படி சினிமாவில் வரும் காதல் காட்சிகள் பற்றி தெரிஞ்சுக்காம இருக்கே என்று இப்போதான் தெரியுது! சினிமா என்றாலே அதீத படுத்தி காண்பிக்கிறதுதான்! அதிலயும் காதல் காட்சிகளுக்கு அவங்க வைச்சிருக்கிற இலக்கணமே அலாதியானது!'' என்று சொல்லி விட்டு,

''நமக்குள்ள என்ன டீல்? ஒரு வேளை நல்லா கவனி... ஒரு வேளை பிப்ரவரி மாசத்தில் முப்பதாம் தேதி

வந்து, நமக்குள் யாருக்காவது ஃபீலிங்க்ஸ் வந்தாலும், அதை வெளியே சொல்லக் கூடாது என்பதுதான்! அப்புறம் எனக்கு ஃபீலிங்க்ஸ் வந்தா உனக்கென்ன? வராட்டி உனக்கென்ன?'' என்று வினவ,

''ஆமா இல்ல? நான் கொஞ்ச நேரத்துக்கு டென்ஷன் ஆகிட்டேன். அதான் அதை மறந்துட்டேன்!'' என்றவளிடம், ''இனிமேல் நினைவில் வைச்சுக்கோ!'' என்று சொல்லி விட்டு, அவள் முன்பு சொன்ன ஒரு வழக்கைப் பற்றி பேச ஆரம்பித்தான்.

''நீ சொன்ன அந்த கேஸ் பற்றி விசாரிச்சிட்டேன் ப்ரியா. முதல் மனைவி என்று சொல்ற அந்தப் பெண்ணைப் பற்றியும் முழுக்க விசாரிச்சாச்சு. அவங்க சொல்றது பொய் என்று தெளிவா தெரியுது. அந்தப் பெண்கிட்டயும் பேசியாச்சு. அவள் சொல்றது பொய் என்று முடிவானால், பெரிய தண்டனை கிடைக்கும் என்று பயமுறுத்தி வைச்சுருக்கேன். அதனால், அந்தப் பெண்ணே கோர்ட்டில் உண்மையைச் சொல்றேன் என்று சொல்லி இருக்கா. பாவம், ரொம்ப கஷ்டப்படற குடும்பம் போலிருக்கு. அதைத்தான் இவங்க பயன்படுத்தி இருக்காங்க. நானே ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யறேன் என்று சொல்லி இருக்கேன். கோர்ட்டில் வந்து சொல்ற வரை, அவங்க பக்கமே இருக்க சொல்லி இருக்கேன்! ரொம்ப இழுக்காமல் கேஸ் சீக்கிரமே முடியும் என்று தோணுது'' என்று ப்ரியா உதவி கேட்ட பெண்ணின் வழக்கின் விவரங்களைப் பகிர்ந்தவனிடம்.

''ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் ஆகாஷ்! நான் சொன்னேன் என்று இந்த கேசை எடுத்துக்கிட்டாயே!'' என்றவளிடம்,

"மேடம்! நான் தான் சொன்னேனே என் கணக்கிலு
புண்ணியம் சேரட்டும் என்றுதான் இந்த கே
எடுத்தேனே தவிர, நீ சொல்லித்தான் எடுத்தாய் என்
தப்பா நினைச்சுக்காதே!" என்று அவளை வம்பிழு
விட்டு,

"உதவி தேவைப்படுற எல்லாரும் தேடிப் போய் உத
செய்ய முடியாது. குறைந்த பட்சம், நம்மைத் தே
வரவங்களுக்கு, நம்மால் முடிந்தால், உதவி செய்யறதி
தப்பில்லையே!" என்று அந்தப் பேச்சை முடித்தவ
துணிகளை துணி துவைக்கும் இயந்திரத்தில் போட்
விட்டு, சமையல் வேலையில் இறங்கினான்.

"இப்போ எனக்கு பரவாயில்லை ஆகாஷ் நா
செய்யறேன்" என்று வந்தவளிடம், "போம்மா போ
ரெண்டு நாளாவது ரெஸ்ட் எடு..." என்று அவன் விரட்

"இல்ல... காலையில் சீக்கிரம் எழுந்து நீயே தான் எ
லாம் செஞ்சே! இப்பவும்..." என்று தயங்கியவளிட
"அடடா... உனக்கு முடியலை என்றுதானே செய்யறே
வேணும்னா, அடுத்த வாரம் நான் கையையே
காலையோ உடைச்சுக்கறேன். நீயும் என்னை இப்ப
உட்கார வைச்சு செஞ்சுடு சரியா போயிடும்!" என்
பேச்சு வாக்கில் சொன்னவனை முறைத்து விட்டு,

"சரியான லூசுடா நீ!" என்றாள் அவள்.

"டா வா? உதை பட போறே?"

"சாரி சாரி ப்ளோல வந்துதுடுச்சுடா... இனிமே
அப்படி டா போடாமல் பார்த்துக்கறேண்டா..." என்
வார்த்தைக்கு வார்த்தை டா போட்டவளைத் திரும்
பார்த்து சிரித்து விட்டு,

"பாவம்... ஏற்கனவே வலியோட இருக்கியேன்னு
பார்க்கிறேன்! இல்லைன்னா, ஒவ்வொரு டாக்கும் ஒரு
உதை நிச்சயம் கிடைச்சிருக்கும்!" என்று மிரட்டியபடி,
சமையலை முடித்தவன் செய்து வைத்திருந்தது எல்
லாமே அவளுக்கு பிடித்தமானவை!

"ஹே! என்ன இது? எல்லாமே எனக்கு பிடிச்ச டிஷ்!"
என்று முதலில் சந்தோஷப் பட்டவள், "நீ என்னை
ரொம்ப சோம்பேறி ஆக்கறே! இந்த ரெண்டு நாளுக்கு
அப்புறம், நீயே செஞ்சால் நல்லா இருக்கும்னு நினைக்க
போறேன்!" என்று குறைபட,

"ப்ரியா... நீ அப்படி எல்லாம் செய்ய மாட்டே. எப்படி
தேவை இல்லாமல் ஒருத்தங்களுக்கு விட்டு கொடுக்க
மாட்டாயோ, அதே மாதிரி யாரையும் எக்ஸ்ப்ளாய்ட்
செய்யவும் மாட்டே!" என்றான் ஆகாஷ்.

அவன் என்னமோ சாதாரணமாகத்தான் சொன்னான்!
ஆனால், ப்ரியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு
நுல்லியமாக அவளைப் பற்றி தெரிந்து வைத்திருக்
கிறான்!

அதையே அவள் வாய் விட்டும் சொல்லி விட, "பின்னே...
ஒண்ணா நான்கு மாசம் குப்பை கொட்டறோம்! இந்த
அளவு கூட தெரிஞ்சுக்க முடியாதா?" என்று அதற்கும்
அவன் சாதாரணமாகவே பதில் சொல்லி விட, அவனைப்
பற்றி அவள் என்ன தெரிந்து வைத்திருக்கிறாள் என்று
அவள் மனம் யோசனையில் ஆழத் துவங்கிய நேரம்.

"ப்ரியா, உன்னை தூக்கிட்டு வரும்போது என்ன
நினைச்சேன்னு கேட்டே இல்ல?" என்ற ஆகாஷின்
கேள்வி அவளது யோசனையைத் தடுத்து நிறுத்தியது.

"சந்நியாசி கதை எல்லாம் சொல்லி வாயை அடி
சிட்டு, இப்போ எதுக்கு அந்தப் பேச்சை நீயே ஆர
பிக்கிறே?"

அதைக் கேட்டு விட்டு, தான் அசடு வழிந்தது
நினைவு வர, லேசான முறைப்புடன் கேட்டவளிடம்,

"ம்ஹூம்! நீ நினைக்கிற மாதிரி இல்ல! இது வேற..."
என்று கண் சிமிட்டியவன், அவள் அதே முறைப்புட
அவனையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும்,

"எனக்கு எப்பவுமே ஒரு சந்தேகம் இருக்கும்! நீ மூணு
வேளையும் நல்லாவே கொட்டிக்கிறே... நடு நடுவில்
நொறுக்கு தீனி வேறு! இவ்வளவு சாப்பிட்டும். பார்க்க
ஒல்லியா இருக்கியேன்னு!" என்று தொடர, அவளது
முறைப்பு அதிகமானது.

"ஹ... இதுக்கே முறைச்சா எப்படி மேடம்?" என்று
மேலும் அவளை வம்பிழுத்தவன்.

"அந்த தைரியத்தில்தான், தூக்கிட்டு வரேன் என்று
சொல்லிட்டேன்! தூக்கின பின்னாடிதான் தெரிஞ்சது
'ஆளைப் பார்த்து எடை போடக் கூடாது!' என்று
சொல்றது எவ்வளவு சரி என்று!" என்றவன் எலுமிச்
கொடுத்த அழுத்தமும், இரு கைகளையும் நீட்டி ம
செய்த பாவனையும் சிரிப்பை வரவழைத்தாலும்,

"ரொம்ப அலட்டிக்காதே! நான் ஒண்ணும் நீ சொல்
அளவுக்கு அதிக எடை இல்ல ஜஸ்ட் 56 கே ஜி தான்
என்று அமர்த்தலாக சொல்ல,

"ப்ரியா, 56க்கு முன்னாடி பின்னாடி ஏதாவது நம்ப
சொல்ல விட்டு போயிடுச்சா?" என்று கேட்டு, மேலும்
ஒரு முறைப்பை பரிசாக வாங்கி கொண்டான்.

என்னதான் அவனை முறைத்தாலும், அவளுக்கும் அவன் சொல்லிய விதத்தில் சிரிப்பு வரத்தான் செய்தது!

"சரி... நம்ம இப்போ ஃபீலிங்க்ஸ் விஷயத்துக்கு வருவோம்! உங்க காலேஜில் யாருக்குமே உன்னை பார்த்து ஃபீலிங்க்ஸ் வந்ததில்லையா?"

கேள்வியைக் கேட்ட பிறகு, அவனைப் பார்வையால் எரிக்கவே போகிறாள் என்று அவன் எண்ணி இருக்க, அதற்கு நேர் மாறாக அவளது முகம் மலர்ந்தது.

'புயலுக்குள் பூவா?' என்று அவன் ஆச்சரியப் படும் போதே, "அந்த சான்சை நான் யார்க்கும் கொடுக்கவே இல்லை தெரியுமா?" என்று ஆரம்பித்தவள், 'அதானே பார்த்தேன்!' என்று அவனது பாவனையை ஒதுக்கி தொடர்ந்தாள்.

"ஃபர்ஸ்ட் இயர் படிக்கும்போது, ரேகிங் எல்லாம் நடக்கும்! காலேஜில் எதுவும் வில்லங்கம் எடுத்துட்டு வராதே என்று அம்மா ரொம்ப கெஞ்சி கேட்டதால், நானும் அடக்கியே வாசிச்சேன்! அப்படியும் யாராவது என்னை கிண்டல் செய்யும்போது, ஒரு சீனியர் வந்து நடுவில் புகுந்து எனக்கு உதவி செய்வான். நானும் கண்டுக்காமல் விட்டுட்டேன்! அப்புறம் ஒரு நாள் என் ப்ரண்ட் வந்து சொன்னாள், அந்த சீனியர் என்னை அவனோட ஆளுன்னு சொல்லிட்டு திரியறான் என்று!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே.

"அச்சோ! ஆழம் தெரியாமல் காலை விட்டுட்டானே!" என்று அந்தப் பையனுக்காக ஆகாஷ் பரிதாபப் பட,

"ப்ச்... குறுக்கே குறுக்கே பேசாதே!" என்று அவள் அதட்ட,

"ஆமா! இந்த அம்மா கதா காலட்சேபம் நடத்தறாங்க! குறுக்கே பேசாதே என்று ஆர்டர் போடறத பாரு!" என்று அவன் அலுத்துக் கொண்டதை சட்டை செய்யாமல், அவள் தன் கதையைத் தொடர்ந்தாள்.

"நான் நேரா அவன்கிட்ட போனேன்! நீ இந்த மாதிரி என்னை உன் ஆளு என்று சொல்லிட்டு இருக்கிறதை நிறுத்து! ஏதோ ஹெல்ப் செய்தே என்று சும்மா இருந்தால், உடனே இப்படி சொல்ல ஆரம்பிச்சுடுவியான்னு அவனை லெப்ட் அண்ட் ரைட் வாங்கிட்டேன்! என்னை பாதுகாத்துக் கொள்ள எனக்கு தெரியும். நீ உன் வேலையைப் பாருன்னு சொல்லிட்டு வந்துட்டேன்! அவன் கூட சும்மா இருந்தான்! கூட இருந்த ஒரு எடுப்பு என்ன செஞ்சான் தெரியுமா?" என்று அவள் இடை வெளி விட,

"மச்சான் நீ தப்பிச்சிடா என்று அவன் ப்ரண்ட் கிட்ட சொல்லி இருப்பான்! கரெக்டா?" என்று ஆகாஷ் காலரைத் தூக்கியபடி வினவ,

அவனை மேலும் கீழும் உதாசீனமாகப் பார்த்தவள், "உன்னை பாதுகாத்துக்க தெரியுமா? இப்போ என்ன செய்யப் போறே? என்று என்கிட்டே... பிளாக்பெல்ட் வாங்கின என்கிட்டே அவரோட கராத்தே ஸ்ட்ரோக் ஒன்றை எடுத்து விட முயற்சி செஞ்சானா? அடுத்த நிமிஷம் நான் கொடுத்த உதையில் கீழே கிடந்தான்!" என்று தன் வீர தீர ப்ரதாபத்தை எடுத்து விட்டாள்.

"வாவ்! சூப்பர் ப்ரியா!" என்று ஆகாஷ் உண்மையாகவே பாராட்ட, ஒரு தலை அசைப்புடன் அந்த பாராட்டை ஏற்றவள்,

"அப்புறம் ஜூனியர்ல இருந்து சீனியர் வரைக்கும் எல்லாரும் என்னை பார்த்து அக்கா அக்கா என்றுதான் கூப்பிடுவாங்க!" என்ற பெருமிதமாக சொல்லி முடிக்க, ஆகாஷ் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்கத் துவங்கினான்.

"ஹே! இப்போ எதுக்கு இப்படி சிரிக்கறே?"

தான் சொன்னதில், இவன் அப்படி என்ன ஹாஸ்யத்தைக் கண்டு விட்டான் என்ற குழப்பத்துடன் ப்ரியா வினவ. அவன் பதில் சொல்லாமல் மேலும் மேலும் சிரித்துக் கொண்டே இருக்க, ப்ரியாவுக்கு எரிச்சல் மூண்டது.

"லூசு! சொல்லிட்டு சிரி!"

அவள் அதட்டியதும், சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தவன், "சரி... அவங்க அக்கா அக்கா என்று கூப்பிடறதில உனக்கென்ன அவளோ பெருமை?" என்று புன்னகையுடன் விசாரித்தான்.

"அதுல ரெண்டு விஷயம் இருக்கு ஆகாஷ்?" என்று பரம ரகசியம் பகர்பவளைப் போன்ற குரலில் தொடங்கியவள். அவனது கேலி நிறைந்த பார்வையைக் கண்டதும், "சொல்ல மாட்டேன் போ!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"ப்ளீஸ்... ப்ளீஸ்... சொல்லு ப்ரியா! எனக்கு ரகசியம் மாதிரி யாராவது சொல்ல வந்து சொல்லாமல் நிறுத்திட்டா, தலை வெடிச்சுடும்!" என்று கெஞ்ச,

"சரி... தலை வெடிச்சு உன்னை முண்டமாக பார்க்க சகிக்காது என்பதால், சொல்றேன்!" என்று அலட்டலாக மொழிந்தவள், சொல்ல ஆரம்பித்தாள்.

"ஒண்ணு... அக்கான்னு கூப்பிட்ட பிறகு. இந்த காதல் கத்திரிக்காய் என்று யாரும் கிட்ட வர மாட்டாங்க என்று ஒரு சந்தோஷம்!"

"அப்புறம்... அக்கா என்று கூப்பிட்டால் மரியாதையா தானே கூப்பிடறாங்க என்று ஒரு சந்தோஷம்!"

ப்ரியா சொல்லி முடித்ததும், ஆகாஷ் மீண்டும் தன் சிரிப்பைத் தொடர, "உதை வாங்க போறே" என்று ப்ரியாவின் மிரட்டலைக் கொஞ்சம் கூட கண்டு கொள்ளாமல், அவன் தொடர்ந்து சிரிக்க, கோபத்துடன் வேகமாக எழுந்த ப்ரியாவின் காலில் சுருக்கென்று வலித்தது.

"ஸ்...ஆ..." என்ற முனகலுடன் மீண்டும் அமர்ந்த வளிடம் வேகமாக வந்தவன், "ப்ச்... காலில் பிரச்சனை என்று தெரியுமில்ல? பார்த்து எழுந்துக்கக் கூடாதா? என்ன அவ்வளவு கோபம்!" என்றவன், வேகமாக சென்று கை கழுவி விட்டு வந்தான்.

மருத்துவர் கொடுத்திருந்த தைலத்தை எடுத்து வந்து அவளது காலில் மென்மையாக தேய்த்து விட்டவன், "இப்போ பரவாயில்லையா?" என்று அக்கறையுடன் வினவ,

"பிள்ளையையும் கிள்ளி விட்டுட்டு தொட்டிலையும் ஆட்டுவதைப் பார்!" என்று அவளிடம் இருந்து பதில் வந்த விதத்தில் அவளது எரிச்சல் இன்னும் தீரவில்லை என்று உணர்ந்தவன், "சாரி!" என்றான்.

"சாரி... பூரி எல்லாம் வேண்டாம்! ஏன் சிரிச்சேன்னு சொல்லு!"

"வேண்டாம் ப்ரியா! உனக்கு இன்னும் கோபம் ஜாஸ்தி ஆகிடும்!"

"பரவாயில்லை சொல்லு!" என்று மேலும் மேலும் தூண்டுவ,

"அக்கா அக்கான்னு கூப்பிட்டதுக்கு மரியாதை காரணம் இல்லை ப்ரியா..." என்றவன் கொஞ்சம் இடை வெளி விட்டு, "சொர்ணா அக்கா என்பதைத்தான் ஷார்ட்டா அக்கா என்று கூப்பிட்டு இருக்காங்க!" என்று சொல்லி முடிக்க,

"அது யாரு சொர்ணா அக்கா?" என்று குழப்பத்துடன் விசாரித்தவளை, ஆச்சரியத்துடன் பார்த்தவன், "ஹே! உனக்கு உண்மையாவே தெரியாதா?" என்று எதிர் கேள்வி கேட்டான்.

"தெரிஞ்சா ஏன் தெரியலை என்று சொல்லப் போறேன்?"

"சரி விடு ப்ரியா!" என்று அவன் பேச்சை முடிக்க முயல, "கண்டிப்பா உதைக்கப் போறேன்! அது யாரு என்ன என்று ஒழுங்கா சொல்லு!" என்று அவள் மேலும் அதட்ட,

"இப்படி எல்லாம் மிரட்டினா சொல்ல மாட்டேன்!" என்று அவன் அலட்டிக் கொண்டான்.

"சொல்லாட்டி போயேன்!" என்று எழுந்து கை கழுவி விட்டு வந்து, தன் லேப் டாப்பை திறந்து வைத்து வேலையைப் பார்க்க ஆரம்பித்தவளுக்கு இருப்பு கொள்ளவில்லை.

"அது யாரு சொர்ணா அக்கா?" என்பதிலேயே மனம் உழன்று கொண்டிருந்தது.

ஓரக்கண்ணால், ஆகாஷைப் பார்த்தாள்.

அவன் தொலைக் காட்சியில் எதையோ பார்த்து கொண் டிருந்தான்.

மெதுவாக எழுந்து வந்து அவன் அருகில் வந்து அமர்ந்தவள், ''உன்னை மாதிரி ஒரு கல்லுளி மங்கனை நான் பார்த்ததே இல்லை!'' என்று குற்றப் பத்திரிகை வாசிக்க ஆரம்பிக்க,

அவளை ஆச்சரியத்துடன் திரும்பி பார்த்து, ''வாட்?'' என்றான் அவன்.

''ஒரு விஷயம் சொல்ல வந்துட்டு அதை சொல்லலைன்னா கூட அதை சொல்லாமல் இருக்கவங்களுக்கு மண்டை வெடிச்சுடும்... தெரியுமா?'' என்று அவள் வினவ,

மீண்டும், ''வாட்?'' என்றான் அவன்.

''இந்த வாட் வாட் கேட்டு என்னை வாட்டினது போதும்! அந்த சொர்ணா அக்கா விஷயத்தை சொல்லு!'' என்று அதட்ட வந்தவள், அவன் முன்பு சொன்னதை நினைவில் கொண்டு வந்து, ''ப்ளீஸ்...'' என்று வார்த்தையுடன் முடித்தாள்.

''சொல்றேன்! ஆனால். நீ அதைக் கேட்டுட்டு திரும்ப என் மேல் கோபப்படக் கூடாது!'' என்ற பீடிகை போட்டவன், ஒரு தமிழ் திரைப் படத்தின் பெயரைச் சொல்லி ''அதில வில்லியா வர பெண் ரௌடி பேர்தான் சொர்ணா அக்கா! டெர்ரரா இருக்கிற பொண்ணுங்களை அப்படி கூப்பிட்டு கிண்டல் செய்வாங்க. அதைத்தான் உங்க காலேஜ் பசங்க செஞ்சுருக்காங்க!'' என்று விளக்கம் தர,

''அடப் பாவிகளா!'' என்று அதிர்ந்த ப்ரியா, ''அப்படியா சொல்றே? என் பிரண்ட்ஸ் கூட இதை சொல்லனதே இல்லையே!'' என்று குறை பட்டாள்.

''உன் ப்ரண்ட்சும் உன் கராத்தே ஸ்ட்ரோக்கைப் பார்த்து பயந்து போயிருப்பாங்களா இருக்கும்!'' என்றவன், ''என்ன ப்ரியா நீ? இது கூட தெரியாமல்! உனக்கு ஜெனரல் நாலேட்ஜ் ரொம்ப குறைச்சலா இருக்கு!'' என்று உதட்டைப் பிதுக்க,

''இது... இது ஜெனரல் நாலேட்ஜா?'' என்று புருவம் உயர்த்தியவள், ''எனக்காவது ஜெனரல் நாலேட்ஜ் மட்டும்தான் குறைச்சலா இருக்க! உனக்கு ஜெனரலாவே நாலெட்ஜ் குறைச்சல்தானே?'' என்று அவனை வழக்கம் போல வார,

''ஹா ஹா... உனக்கும் ஜோக் எல்லாம் வருது ப்ரியா!'' என்று சிரித்தவன், ''சரி வா... வந்து படு!'' என்று அவள் போட வேண்டிய மாத்திரையை நினைவு படுத்தி விட்டு, தானும் வந்து படுத்தான்.

அடுத்த இரண்டு நாட்களில், கால் சரியாகிப் ப்ரியா வேலைக்கு செல்ல, வழக்கம் போல இருவரது குடும்ப வாழ்க்கையும் அடுத்த ஒரு மாதம் எந்த வித சலசலப்பும் இல்லாமல் சென்றது!

* * *

ஆகாஷ். ஒரு கவர் ஸ்டோரிக்காக நான் மூன்று நாள் வெளியூர் போக வேண்டி இருக்கு!''

அன்று மாலை வீட்டுக்கு வந்தவனிடம் ப்ரியா கூற, ''ஓ! எங்கே?'' என்று விவரம் கேட்டு அறிந்தவன், ''போய் சேர்ந்ததும் எனக்கு போன் செய்!'' என்று சொல்ல, ''ம்... அங்கே இருக்கிற மூன்று நாள் செல்லில் சிக்னல் கிடைக்குமான்னு தெரியலை! முடியும்போது போன் செய்யறேன்!'' என்று விடை பெற்று கொண்டு ப்ரியா கிளம்ப,

''இரு நான் கொண்டு வந்து விடறேன்!'' என்று அவளை அவளது குழுவினருடன் அனுப்பி விட்டு வீட்டுக்கு வந்த ஆகாஷுக்கு, வீடே வெறிச்சோடி இருப்பதைப் போலத் தோன்றியது.

அந்த விசித்திரமான உணர்வு ஆச்சரியத்தைத் தர, அதை ஒதுக்கி விட்டு, தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தவனுக்கு வீடே நிசப்தமாக இருப்பதாகத் தோன்ற தொலைக் காட்சியை உயிர்ப்பித்தான். எந்த நிகழ்ச்சியிலுமே மனம் செல்லவில்லை! சரி படுக்கலாம் என்று படுக்கை அறைக்கு வந்தவனுக்கு, ப்ரியா இல்லாதது ஏதோ போலிருந்தது.

எப்போதுமே படுத்த ஐந்து நிமிடத்தில், ஆழ்ந்த உறக்கத்துக்கு சென்று விடுபவனுக்கு என்று எளிதாக உறக்கம் வருவதாக இல்லை!

இரவில் வெகு நேரம் புரண்டு புரண்டு படுத்திருந்து விட்டு, நேரம் கழித்து உறங்கி இருந்தாலும், காலையில் வழக்கம் போல ஐந்தரை மணிக்கு விழிப்பு வந்து விட்டது.

பக்கத்தில் ப்ரியா இல்லாமல் போகவே, ''இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டாளா?'' என்று தோன்ற,

''நீயும் வாயேன் ப்ரியா... ஜாகிங் போனால் நல்லதுதானே?'' என்று இவன் அழைத்தாலும், ''ம்ஹூம்! தூக்கத்தை கெடுத்துட்டு என்னால் வர முடியாதுப்பா! நான் ஆறு மணி எழுந்து யோகா செய்யறதே போதும்!'' என்று சொல்பவள், இவ்வளவு சீக்கிரம் எழுந்து என்ன செய்கிறாள் என்று ஆச்சரியமாகி விட, எழுந்து வந்து அவளைத் தேடினான்.

வீடு முழுக்க தேடிய பிறகு, அவள் எங்கும் இல்லை என்பது உரைக்க, எங்கே போயிருப்பாள் என்று பதட்டம் தோன்றி, அது முழுமை அடையும் முன்பே, அவள் நேற்று இரவு வேலை விஷயமாக வெளியூர் சென்றது நினைவு வர, பதட்டம் தணிந்து சோபாவில் அமர்ந்த வனுக்கு, எப்படி இதை மறந்தோம் என்ற ஆச்சரியம் தோன்றியது.

எதற்கு இந்த மறதியும்? பதட்டமும்? தலையைக் குலுக்கிக் கொண்டு, ஜாகிங் சென்று வந்து வீட்டில் இருந்து கிளம்பும் நேரம் வரையிலும் நிலவிய அமைதி, ப்ரியா வீட்டில் இல்லை என்ற உணர்வை அவனுக்கு நினைவு படுத்திக் கொண்டே இருந்தது.

ஐந்து மாதங்களாக ஒன்றாகவே இருந்து பழகியதில் இவ்வாறு இருக்கிறதோ, என்று அவளைப் பற்றிய நினைவை ஒதுக்கி வேலைக்கு சென்றவன், மீண்டும் மாலை வீட்டுக்கு கிளம்பியபோது, வீட்டில் சென்று தனியாகத்தானே இருக்க வேண்டும் என்ற அலுப்பு தோன்ற, அன்னையைப் பார்க்க கிளம்பினான்.

''வா ஆகாஷ்... வா... நேற்று ப்ரியா டோன் செஞ்சு வெளியூர் போறதைப் பற்றி சொல்லி இருந்தாள். நானே உன்னை இங்கே சாப்பிட கூப்பிடலாம்னு இருந்தேன்!'' என்று வரவேற்ற அன்னையிடம் கூட எப்போதும் போல, கலகலப்பாக பேச இயலவில்லை.

பேச்சின் இடையில், ப்ரியாவைப் பற்றியே பேச்சு வர, உடனே அவளிடம் பேச வேண்டும் போல கிளர்ந்த ஆவலைக் கட்டுப் படுத்த முடியாமல் திணறியவன், அம்மாவிடம் சொல்லி விட்டு தங்கள் வீட்டுக்கு கிளம்பி னான்.

காலையில் அவளிடம் இருந்து நல்லபடியாக போய் சேர்ந்ததாக ஒரு குறுஞ்செய்தி வந்ததோடு சரி! எப் போதுமே, இருவரும் தேவைப் பட்டால் ஒழிய கைப்பேசியில் அழைத்து பேசியதில்லை!

இப்போதோ, ஒவ்வொரு முறை கைப்பேசி அழைப்பு வந்ததன் அறிகுறியாக ஓசை எழுப்பும்போதும், ப்ரியா தான் அழைக்கிறாளோ என்று ஆர்வமாக எடுத்து பார்த்து விட்டு, அவளிடம் அழைப்பு வரவில்லை என்றதும் சோர்ந்து போனான் இவன். அவளது எண்ணுக்கு முயன் றாலும் அவளது அலைபேசி தொடர்பு எல்லைக்கு அப்பால் இருப்பதாகவே வந்தது.

இன்று முதல் நாள், இப்படி இருக்கிறது. நாளை சரி யாகி விடும் என்று ஆகாஷ் எண்ணி இருந்ததற்கு மாறாக, அடுத்து வந்த நாள் முதல் நாளை விட கொடுமை யாக நகர, தான் அனுபவிக்கும் இந்த உணர்வுக்கு என்ன பெயர் என்று புரியாமல், வாழ்வில் முதன் முறையாக ஆகாஷ் குழம்பித் தவித்தான்.

இவன் தொடர்ந்து அனுப்பிய குறுஞ்செய்திகளுக்கு பதிலாக, ''ஐம் ஃபைன்!'' என்று இரு முறை பதில் வந் ததைத் தவிர அவளிடம் இருந்து வேறு எந்த தகவலும் வராமல் போகவே அவனுடைய மண்டை காய்ந்தது.

சமையல் அறையில் நின்றால், அவள் முதன் முதலில் தோசை வார்த்து விட்டு அசடு வழிந்த அழகே மனக் கண்ணில் தோன்றியது.

சோபாவில் வந்து அமர்ந்தால், ''இந்த சோபாவில் படுத் துட்டே டீவி பார்க்கிறது நல்லா இருக்கு இல்ல? அம்மா தான் எப்பவும் திட்டிட்டே இருப்பாங்க!'' என்று அவள் சலித்து கொள்வது செவியில் ரீங்காரமிட்டது!

பார்க்கும் கேட்கும் பொருள் எல்லாம், ப்ரியாவின் நினைப்பையே உண்டு செய்ய, ஒரு புறம் அந்த நினைவுகள் அவனுக்கு சந்தோஷத்தையும், மற்றொரு புறம் அவள் அருகில் இல்லையே என்ற ஏக்கத்தையும் தர, ஆகாஷ் அதிர்ந்து நின்றான்.

அவளைக் காணாததால் தனக்கு ஏக்கமா? என்ற கேள்வி அடுத்த நாள், ஒவ்வொரு நொடிக்கும் பெரிதாகி, தன்னையே விழுங்குவது போலத் தோன்ற, அவனது அதிர்ச்சி கூடியதே தவிர குறையவில்லை!

ஒரே வீட்டில் இருக்கிறார்கள் எனும்போது, ஒருவர் இல்லை என்றால், மனம் அவர்களைத் தேடுவது இயல் பான விஷயம்தான்! ஆனால், இந்த ஏக்கம்?

இது கூட தங்கி இருக்கும் ஒரு நட்பைத் தேடுவதாக தோன்றவில்லையே? என்ற எண்ணம் தோன்ற, மேலே யோசிக்காமல், தொலைக்காட்சியை உயிர்ப்பித்து, இலக் கில்லாமல் அதை வெறித்துக் கொண்டிருந்தவன், திரை யில் ஒரு காதல் காட்சி வந்ததும் நிமிர்ந்து அமர்ந்தான்.

கதாநாயகி விழ கதாநாயகன் தாங்கி பிடிக்க, இரு வரும் தங்களை மறந்து கனவுலகத்தில் பயணிக்க, அன்று ப்ரியா, அவளைத் தூக்கி வரும்போது இவனுக்கு எப்படி இருந்தது என்று கேள்வி எழுப்பியது நினைவு வந்து, ஆகாஷுக்கு மூச்சடைத்தது!

கடைசியில் தனக்கும் காதல் உணர்வு வந்து விட் டதோ என்று தோன்ற, ஏனோ முகமெங்கும் வியர்த்து கொட்டியது.

''பிப்ரவரி மாதத்தில் முப்பதாம் தேதி வந்தால், எனக்கும் காதல் வரலாம்!'' என்று தான் தான் சொன்ன

வார்த்தைகள் தன் முன்னே நின்று கைகொட்டி சிரிப்
பதைப் போலத் தோன்ற, ''ச்சே ச்சே... அப்படி எல்லாம்
இருக்காது!'' என்று தனக்கு தானே வாய் விட்டு சொல்லிக்
கொண்டவன், அடுத்த நாள் முழுக்க அவளைப் பற்றி
நினைக்கவே கூடாது என்று தன் மனதுக்கு தடையுத்
தரவு போட்டான்!

எதை நினைக்கக் கூடாது என்று நினைக்கிறோமோ,
அதைத் தான் நம் மனம் அதிகமாக நினைக்க துவங்கும்?
அந்த உலக நியதி அவனையும் ஆட்கொள்ள, ஒரு
நிலைக்கு மேல் அவளைப் பற்றிய எண்ணங்களைத்
தடுக்க முயலாமல், அவளை முதன் முதலில் சந்தித்
ததில் இருந்து நடந்தவற்றை, அசை போட்டு, அவளது
நினைவிலேயே மூழ்கிப் போனான்.

சந்தேகமே இல்லாமல், தனக்கு ப்ரியா மேல்
வந்திருப்பது நேசம்தான் என்று உறுதியாகி விட, உள்ளம்
சிறகின்றி பறக்க ஆரம்பித்த வேளையில், ''எனக்கு
ஃபீலிங்க்ஸ் வந்தாலும் உன்கிட்ட சொல்ல மாட்டேன்,
ஓகேவா?'' என்று தான் அவளிடம் உறுதியாகச் சொல்
னது நினைவில் நிழலாட, மனம் சோர்ந்து போனது.

அப்படி எல்லாம் சொல்லி விட்டு, இப்போது போய்
காதல் என்று சொன்னால், ப்ரியா அவனைப் பற்றி என்ன
நினைப்பாள் என்று தோன்ற, தான் சொன்னதைப்
போலவே, அவளிடம் எதுவும் சொல்லக் கூடாது என்ற
வேதனையுடன் முடிவெடுத்தவனுக்கு, அது அவ்வளவு
எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை என்பது
அப்போது தெரிந்திருக்கவில்லை!

தன் நேசத்தை அவளிடம் சொல்லக் கூடாது என்று
முடிவெடுத்தாலும், புதிதாக பூத்திருக்கும் அந்த நேசம்

அவனது நெஞ்சை தன் வாசத்தால் நிரப்பி, அகத்தோடு
முகத்தையும் மலரச் செய்தது!

புன்னகையோடு அன்றைய இரவு உறங்கியவனுக்கு
காலையில் எழும்போதே, இன்று ப்ரியா வந்து விடுவாள்
என்பதே முதலில் நினைவுக்கு வர, மூன்று நாட்களாக
இருந்த ஏக்கம் நீங்க, உடலிலும் மனதிலும் புத்துணர்வு
பாய்ந்தது!

ப்ரியா மாலைதான் வருவாள் என்று தெரிந்தாலும்,
அன்று வெளியே முக்கியமான வேலை இருந்தாலும்,
வீட்டில் இருந்து கிளம்பவே ஆகாஷுக்கு மனம்
வரவில்லை!

அவள் வரும் நேரம் வீட்டில் இருக்க வேண்டும்
என்று மனம் துடித்தது.

'இந்த ஓவர் துடிப்பு உடம்புக்கு நல்லதில்லைடா
தம்பி!' என்று மனசாட்சி அறிவுறுத்த, மனமே இல்
லாமல் கிளம்பிச் சென்றவனுக்கு மாலை நான்கு
மணிக்கு மேல் இருப்பு கொள்ளவில்லை!

மூன்று நாட்களாக ஒழுங்காக உண்டாளோ என்
னோமோ? என்று எண்ணியவன், அவளுக்கு பிடித்த
மாதிரி உணவு தயாரிக்கலாம் என்று ஐந்து மணிக்கே
வீட்டுக்கு வந்து கதவைத் திறக்க, காலணிகள் வைக்கும்
இடத்தில் ப்ரியாவின் காலணி கண்ணில் பட்டு, அவள்
ஏற்கனவே வந்திருப்பதைத் தெரிவித்தது.

உள்ளம் துள்ள, வேகமாக நடந்து வந்தவன், சட்
டென்று நிதானித்தாள்.

'எப்போதும் போல இரு! அதிகப் படியான உற்
சாகத்தை காட்டிக் கொள்ளாதே!' என்று தனக்குதானே

அறிவுறுத்திக் கொண்டே மெல்ல படுக்கை அறையில் எட்டிப் பார்த்தவன் கண்களில், ப்ரியா கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது.

''இந்த நேரத்தில் ஏன் படுத்திருக்கிறாள்? உடம்புக்கு ஏதாவது?' என்ற நினைப்பே பதட்டத்தைத் தர, ''ப்ரியா...'' என்ற அழைப்புடன் உள்ளே நுழைந்தவனைக் கண்டதும், வேகமாக எழுந்து கட்டிலை விட்டு இறங்கிய ப்ரியா, அதே வேகத்துடன் ஓடி வந்து அவனை அணைத்து கொண்டாள்.

ப்ரியாவே ஓடி வந்து தன்னை அணைத்துக் கொண்டதும், தான் காண்பது கனவா? இல்லை நனவா? என்ற திகைப்புடன், ஆகாஷ் ஆனந்தமாய் அதிர்ந்து நின்றான்.



12

ப்ரியா ஓடி வந்து தன்னை அணைத்துக் கொண்டதும், ஆகாஷ் சந்தோஷப்பட்டு நின்றது ஒரு கணமே!

அடுத்த கணமே ப்ரியா அழுது கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தவன், அதிர்ந்து போனான்.

இதுவரை, ப்ரியா அழுது அவன் கண்டதில்லை!

அவன் அவளிடம் கண்டதெல்லாம், நிமிர்வு, தன்னம்பிக்கை, தைரியம்! சில நேரம் கோபம்! சில நேரங்களில் குழந்தைத் தனம்! ஆனால், கண்ணீர் அவளிடம் அவன் கண்டறியாதது!

அவளது கண்ணீர் அவனது உள்ளத்தைக் கலங்க வைத்தது!

''ப்ரியா... என்ன ஆச்சு? என்னம்மா? என்னடா?''

அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமல், அவள் கண்ணீர் சொரிய, அவளது அழுகைக்கான காரணம் புரியாமல், காதல் கொண்ட ஆகாஷின் உள்ளம் பரிதவித்தது!

''ப்ளீஸ்... அழாதடா... ப்ளீஸ்டா!'' என்ற அவனது கெஞ்சல் காதில் விழவே இல்லை என்பதாக, அவளது கண்ணீர் மேலும் பெருகவும், என்ன செய்வதென்று புரியாமல், அவளது முதுகை ஆறுதலாக வருட ஆரம்பித்தான் அவன்!

வெகு நேரம் அழுது களைத்து போனாளோ? இல்லை அவனது மென்மையான வருடல் இனம் புரியாத ஆறுதலை தந்ததோ? ப்ரியாவின் கண்ணீர் மெல்ல மெல்ல குறைந்தது.

''சாரி...'' என்று அவள் அவனிடமிருந்து விலக முயல, அவளைப் பற்றி நிறுத்தியவன், ''என்ன ஆச்சு... ப்ரியா? எதுக்கு இவ்வளவு அழுகை?'' என்று கனிவுடன் விசாரித்தான்.

அவனது கனிவான குரலில் மீண்டும் கண்கள் கரிக்க ஆரம்பிக்க, அதை உணர்ந்தவனாக, ''சரி... நீ இப்போ எதுவும் சொல்ல வேண்டாம்!'' என்று அவளை கைப்பிடித்து அழைத்து வந்து... சோபாவில் அமர வைத்து விட்டு, வேகமாக சென்று தண்ணீர் எடுத்து வந்து அவளை பருக வைத்தான்.

கொஞ்ச நேரத்தில், அவன் தேநீரோடு வர, ப்ரியாவுக்குமே அந்த நேரம் ஏதாவது சூடாக குடித்தால் தேவலாம் போலிருந்தது.

நன்றியுடன் அவன் கொடுத்ததைப் பருகியவள், "சாரி... கொஞ்சம் எமோஷனல் ஆகிட்டேன்!" என்று மீண்டும் சாரி சொல்ல, அவள் அருகில் வந்து அமர்ந்தவன், "என்ன என்று சொல்லலாம் என்றால் என்கிட்டே சொல்லு ப்ரியா... மனசு லேசாகும்!" என்று மென்மையாக வினவினான்.

"நான் எதுக்கு இந்த மூன்று நாள் ட்ரிப் போனேன் என்று உனக்கு தெரியும்தானே?"

"தெரியும்! பெண் சிசு கொலைகள் அதிகம் நடக்கிற இடங்களுக்கு சென்று, அதைப் பற்றி ஒரு விரிவான கவர் ஸ்டோரி எழுதணும் என்று சொல்லி இருந்தே!"

"அங்கே போய் நடக்கிற கொடுமைகளைப் பார்த்த பிறகு மனசுக்கு ரொம்ப கஷ்டமா போயிடுச்சு ஆகாஷ். அடிக்கடி கேள்வி படுகிற விஷயம்தான். ஆனால், நேரில் பார்க்க..." என்றவளுக்கு மீண்டும் கண்ணீர் வர, ஆகாஷ் ஆறுதலாக அவளது கையைப் பற்றினான்.

"ஒரு உயிரைக் கொல்கிறோம் என்று குற்ற உணர்வு கொஞ்சம் கூட இல்லாமல் நினைக்கவே மனசு நடுங்குது!" என்றவள் குரலோடு சேர்ந்து தேகமும் லேசாக நடுங்க, ஆகாஷ் பற்றியிருந்த அவளது கையில் லேசான அழுத்தம் கொடுத்து ஆறுதல் தர முனைந்தான்.

"எங்க அம்மாகிட்ட நான் எத்தனை முறை சண்டை போட்டிருக்கேன் தெரியுமா? நான் பெண்ணாக பிறந்ததால், நான் ஆசைப் படற விஷயங்கள் நியாயமா இருந்தாலும் மறுக்கறீங்க... அப்படி இப்படின்னு!"

"ஆனால்... அங்கே... அங்கே..." என்று தடுமாறியவள், "பெண்ணாக பிறந்த ஒரே காரணத்துக்காக இந்த

பூமியில் வாழற உரிமை கூட மறுக்கப் படுது என்று நினைக்க நினைக்க... எனக்கு மனசே ஆற மாட்டேங்குது!" என்றவள் கண்களில் கட்டுப்பாடின்றி கண்ணீர் நிறைந்து வழிந்தது.

முகம் அறியாத அந்த பிஞ்சு குழந்தைகளுக்கு நிகழும் கொடுமை, மனதைத் தைக்க ஆகாஷின் கண்களும் கலங்கின.

இரக்கமற்ற கொலைகள்! ஆனால்... குற்றமாக கருதப் படுவதும் இல்லை! அதற்கு தண்டனையும் இல்லை!

"குழந்தையைப் பெற்ற தாய்க்கு கூட, அந்த குழந்தையின் மேல் எந்த உரிமையும் இல்லை! சில இடங்களில் அந்த தாயுமே, இந்த மாதிரி செயலுக்கு உடந்தை!"

"அடிப்படை வசதிகள் தேவையான அளவு இல்லாத அந்த ஊர்களில் கூட ஒரு லேப் இருக்க! எந்த போர்டும் பெயரும் இல்லாமல். எதுக்கு தெரியுமா?" என்றவள் குரலில் கண்ணீரோடு சீற்றமும் கலந்திருந்தது.

"கருவிலேயே என்ன குழந்தை என்று பார்த்து சொல்றதுக்காக! ஐநூறு ரூபாய் செலவு செய்யுங்கள்! ஐம்பதாயிரத்துக்கு மேல் சேமியுங்கள்! என்று விளம்பரம் செய்யறாங்க..."

அதிர்ச்சியுடன் விழி விரித்த ஆகாஷின் உதடுகள், "ராஸ்கல்ஸ்!" என்று முணுமுணுத்தன!

"மனசாட்சி இல்லாதவர்கள்! இந்த மாதிரி செய்யறது சட்ட விரோதம் என்று தெரிஞ்சும் செய்யறாங்க!"

"அவங்களை சும்மாவா விட்டீங்க?" என்று கேட்ட ஆகாஷின் முகமும் சீற்றம்!

"இல்ல... என் கூட வந்த இன்னொரு பெண்ணின் மாமா போலீசில் இருக்கார். அவர்கிட்ட சொல்லி அந்த லேபுக்கு சீல் வைச்சாச்சு!" என்றவள் குரலில் ஒரு சின்ன திருப்தி இருந்தாலும்,

"அது... அது மட்டும் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு இல்லையே, ஆகாஷ்! கருவில் தப்பிச்சாலும், பிறந்த பிறகு அந்தக் குழந்தைகளுக்கு, செய்யாத குற்றத்துக்கு தண்டனை அளிக்கப் படுதே!" என்றபோது குரலில் சோர்வு மிகுந்திருந்தது.

"இது ஒரு தனிப்பட்ட பிரச்சனை இல்லை ப்ரியா... சமூகம் சார்ந்த விஷயம்! கொஞ்சம் கொஞ்சமாதான் மாறணும்!" மாறும் என்ற நம்பிக்கையோடு நாமும் நம் மால் முடிந்த சில விஷயங்கள் செய்யணும்!" என்ற வனை ஆர்வமாக பார்த்தவள்.

"இந்த நிலை மாறும்தானே ஆகாஷ்?" என்றாள் ஏக்கத்துடன்.

"கண்டிப்பா மாறும்! அந்த கிராமங்களில் முடிந்த அளவு விழிப்புணர்வை ஏற்படுத்தணும்! பெண் குழந்தை களுக்கென்று அரசாங்கத்தில் நிறைய சலுகைகள் இருக்கு... அதைப் பற்றின அடிப்படை விவரங்கள் கூட தெரியாமல் இருக்கிறவங்களுக்கு அதைப் பற்றி சொல்லி புரிய வைக்கலாம். ஒரு நாளில் எ.தையும் மாற்ற முடியாது குறைந்த பட்சம்... ஒரு சிலரையாவது மாற்றலாம்!" என்றவன்.

"நானும், எனக்கு தெரிந்த சமூக சேவை நிறுவனங்கள் கிட்ட பேசறேன்! ஏதாவது செய்யலாம்!" என்று நம்பிக்கையுடன் உரைக்க, ப்ரியாவுக்கும் மனம் லேசாக அமைதியாயிற்று.

"சாரி... ஆகாஷ்... ரொம்ப எமோஷனல் ஆகிட்டேன் இல்ல? எனக்கே ரொம்ப புதுசா இருக்கு?"

ப்ரியா மெல்ல சொல்ல, அவளை இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று எண்ணியவனாக, "ம்ம்... நான் கூட கிராமத்துக்கு போயிட்டு வந்தியே! அங்கே ஏதாவது வேப்ப மரத்து பேய் உன்னை அடிச்சு போட்டுட்டு உள்ளே பூந்துடுச்சோ என்று நினைச்சேன்!" என்று வம்பிழுத்தான்.

"வேப்ப மர உச்சியில் நின்னு பேயொண்ணு ஆடு துன்னு சொல்றவங்க மூடர்கள் என்று அந்த காலத்தி லேயே ஒரு பாட்டு இருக்கு! ஆனாலும் உன்னை மாதிரி ஆளுங்க இன்னும் திருந்த மாட்டீங்கிறீங்க!" என்று கேலியுடன் அவள் திருப்பிக் கொடுத்ததும் தான், அவனுக்கு மனம் லேசானது!

"சரி... நீ ரெஸ்ட் எடு! நான் போய் ஏதாவது சமைக் கிறேன்!" என்று அவன் எழ,

"இல்ல... நானும் வரேன்! சேர்ந்தே சமைக்கலாம்!" என்று எழுந்தவள்,

"இந்த மூணு நாளா நான் உன்னை ரொம்ப மிஸ் செஞ்சேன் தெரியுமா?" என்று சொல்லி அவனை மூச் சடைக்க செய்தாள்.

"நீ நல்லா ஜாலியா இருந்திருப்பே இல்ல?" என்று அவள் அவனை நோக்கி திரும்ப, "ஹான்... நான்... நானும்தான் உன்னை மிஸ் செஞ்சேன்!" என்றவனிடம்,

"அப்படியா?" என்று ஆச்சரியமாக கேட்டவள், "என்னை [illegible] நினைச்சே சொல்லு?"

என்று வினவ, ஆகாஷ் என்ன சொல்வதென்று தடு மாறிப் போனான்.

தான் நினைத்ததை, உணர்ந்ததை எல்லாம் இவளிடம் சொல்லி விட முடியுமா என்ன?

அவன் தன் யோசனையில் இருக்க, ''அதானே பார்த்தேன்! நான் மிஸ் செஞ்சேன் என்று சொன்னதும், நீயும் 'நானும் நானும்' என்று சொல்லிட்டதானே?'' என்று கேலி செய்தவாறே அவள் வேலை செய்ய, அவள் தன்னைத் தேடினாள் என்பதே மனதில் சந்தோஷப் பூவை போக்க செய்தது.

''நீ என்னைப் பற்றி என்ன நினைச்சே?'' ஆர்வத்துடன் கேட்டவனிடம்,

''ம்... சாப்பிடற நேரம் எல்லாம் உன்னைத்தான் நினைச்சேன். நாம இங்கே சரியான சாப்பாடு இல்லாமல் இருக்கோம், அங்கே அவன் நல்லா மொக்கிட்டு இருப்பானே என்று நினைச்சேன்!''

கண்கள் பளபளக்க அவள் சொன்னதும், ''சரியான சாப்பாட்டு ராமி!'' என்றதோடு அவன் பேச்சு குறைந்தது, அவளது அருகாமையினால்!''

அவள் அவனை அணைத்துக் கொண்டு அழுத போது தோன்றாத உணர்வெல்லாம், இப்போது லேசாக அவளது கை உரசும் போது தோன்றியது!

ஓர் அளவுக்கு மேல் தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்த முடியாமல் ''நீ... நீ போயேன் ப்ரியா... டயர்டா இருக்கே இல்ல'' என்று அவளை அனுப்ப முயன்றவனுக்கு தோல்வியே மிஞ்சியது.

''ம்ஹூம்... எனக்கு ரொம்ப பசிக்குது! சேர்ந்து சமைத்தால் சீக்கிரம் முடிஞ்சுடும் இல்ல?'' என்றவள், அங்கிருந்து நகராமல் அவனை அவஸ்தைக்குள்ளாக்கினாள்.

தன் உள்ளம் கவர்ந்தவளின் முகத்தை, அவள் அறியாத வண்ணம் அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஆகாஷின் கவனம் சுத்தமாக சமையலில் இல்லை!

''ஹே... ஆகாஷ்... என்ன ஆச்சு? இப்போதானே இதில உப்பு போட்டே?'' என்று ப்ரியா அவள் கரம் பிடித்து தடுத்த போதும், அவனுக்கு ஏற்கனவே உப்பு போட்டது நினைவுக்கு வரவில்லை!

''ஆகாஷ்! குருமாவுக்கு தேங்காயில் சோம்புதானே அரைச்சு விடுவோம். இதென்ன சீரகம் போடறே? புது ரெசிபியா?'' என்று இன்னொரு முறை அவள் கேலியாக சொன்னபோது, ஆகாஷுக்கு, 'கடவுளே இவளிடம் தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டு எப்படி மீதி நாளைக் கடத்தப் போகிறோம்?'' என்ற மலைப்பு தோன்றியது.

''என்ன ஆச்சு? மூணு நாளும் அம்மா வீட்டில் போய் சாப்பிட்டாயா? சமையல் மறந்து போச்சா? கவலைப் படாதே... நான் கற்று தரேன்!'' என்ற படி, ப்ரியா சப்பாத்தியை சுட்டு எடுக்க, தன்னை சமாளித்துக் கொண்டவனாக.

''எல்லாம் என் நேரம்!'' என்று கேலியாக சொல்லி விட்டு, அவளிடம் பதிந்திருந்த கவனத்தை வேலையில் திருப்பிய ஆகாஷ், குருமாவை எடுத்துக் கொண்டு உணவு மேஜைக்கு வந்தான்.

சப்பாத்தியும் தட்டும் எடுத்துக் கொண்டு ப்ரியா அவனைப் பின் தொடர, இருவரும் எப்போதும் போலப் பேசிக் கொண்டே உணவருந்தி முடித்தனர்.

பாத்திரங்களை சுத்தம் செய்யப் போனவளைத் தடுத்த ஆகாஷ், ''நாளைக்கு லீவ் தானே? நாளைக்கு பார்த்துக் கலாம்! நீ வந்து ரெஸ்ட் எடு... வா!'' என்று அழைக்க,

''ஆமாம்... நாளைக்கு சன்டேதானே?'' என்றபடி அவன் அருகில் வந்து அமர்ந்தவள், ''என்ன ஆச்சு? நீ ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று விசாரித்தாள்.

''நான்... நான் நல்லாதானே இருக்கேன்?'' சாதாரண மான குரலில் ஆகாஷ் சொல்ல,

''இல்ல... சாப்பிடும்போது நான் உன்னை செஞ்ச கேலிக் கெல்லாம் பதிலடி கொடுக்கவே இல்ல! அமைதியாவே இருந்தே! நான் அழுததைப் பார்த்து அப்செட் ஆகிட் டியா என்ன?'' என்று குற்ற உணர்வுடன் அவள் வினவ,

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. மூணு நாள் கழிச்ச பாவம் பொண்ணு இன்னைக்குதான் வந்திருக்கே... டயர்டா வேற இருக்கே... அதான் கொஞ்சம் விட்டு பிடிக்கலாம்னு!'' என்று அவளுக்கு பாவம் பார்ப்பது போல சொல்லியவன், ''நீ போய் படு!'' என்று மீண்டும் சொல்ல, ''நீ வரலை?'' என்றாள் அவள்.

''இல்ல... நீ போ... நான் கொஞ்ச நேரம் கழிச்சு வரேன்!'' என்று சொல்லி விட்டு அவன் தன் மடி கணினியை உயிர்ப்பிக்க, ''ஓகே! குட் நைட்!'' என்று சொல்லி விட்டு அவள் நகர்ந்ததும், மெல்லியப் பெருமூச்சை வெளி யிட்டவனுக்கு, எவ்வளவு நாள் தன் நேசத்தை மறைத்து வைக்க முடியும் என்ற கேள்வி எழுந்தது.

இன்று ஒரு நாள் தன்னிடம் தெரியும் மாற்றத்துக்கே இத்தனை கேள்வி கேட்கிறாளே என்று தோன்றியது!

திருமணம் வேண்டாம் என்று இருந்தவளை, எந்த பந்தத்துக்குள்ளும் உன்னை இழுக்க மாட்டேன் என்று உறுதி மொழி தந்து, திருமணத்துக்கு சம்மதிக்க வைத்து விட்டு, இப்போது தானே காதல் என்று போய் நிற்பது, சரியாக வருமா?

அவளுக்கு இதில் எல்லாம் விருப்பம் இல்லாத போது, தன் நேசத்தை சொல்லி, இருவருக்கும் இடையில் இருக் கும் சுமுகமான உறவை இழக்க அவனால் முடியுமா?

அவனது மனதை அறிந்த பிறகு, அவளால் எப் போதும் போல் இயல்பாக தன்னிடம் பழக முடியுமா?

அவளுக்கு மன சங்கடத்தைத் தந்து விட்டு, தன் னால்தான் நிம்மதியாக இருக்க முடியுமா?

கேள்விகள்! கேள்விகள்! விடை புலப் படாத கேள் விகள் மனதை அழுத்த, தலையை அழுந்தக் கோதிய வனுக்கு, தனக்கு அவள் மேல் நேசம் உண்டானதைப் போல, அவளுக்கும் வருமா என்று மற்றொரு கேள்வி பிறந்தது!

காதல், திருமணம் என்பதில் எல்லாம் சற்றும் விருப்பம் இல்லாதவளுக்கு அதெப்படி நேசம் பிறக்கும்? என்று மனசாட்சி கேள்வி எழுப்பும்போதே,

''ஏன்? எனக்கும்தான் இதில் எல்லாம விருப்பம் இருந்ததில்லை! இப்போது நேசம் பிறக்கவில்லையா? அதே போல், அவளுக்கும் கட்டாயம் ஒரு நாள் வரும்!'' என்ற பதிலும் கூடவே வர,

''உனக்கு நேசம் வந்தால், அவளுக்கும் நேசம் வர வேண்டும் என்று கட்டாயமா என்ன?'' என்று (அ)நியாய மாக கேள்வி கேட்ட அறிவை, மண்டையில் தட்டி

அடக்கியவன், "பாசிட்டிவா யோசி!" என்று கட்டளை இட்டு, படுக்கையில் வந்து படுத்தான்.

விடிவிளக்கின் மெல்லிய வெளிச்சத்தில், மனைவியின் முகத்தை ரசித்தவனுக்கு, அவனுடைய அந்த செயல் அவனுக்கே விசித்திரமாக இருந்தது.

ஐந்து மாதங்களாக பார்த்து பழகிய அதே முகம் தான்! இப்போது பார்க்கும் போது மட்டும் தோன்றும் உணர்வுகள் ஆச்சரியத்தோடு, ஒரு வித சந்தோஷத்தையும் அளிக்க, அவளையே பார்த்த வண்ணம் இருந்தவன், மெல்ல கண்ணயர்ந்தான்.

தன் உணர்வுகளை மறைத்து மனைவியின் மனம் மாறும் வரை காத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தாலும், சூழ்நிலை அவனுக்கு சாதகமாக அமையவில்லை!

ஞாயிறு என்பதால் எப்போதும் எழும் நேரத்துக்கு எழாமல், ப்ரியா சற்று தாமதமாகவே எழுந்தாள்.

இன்னும் ஆகாஷ் எழுவில்லை என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது! அவனுக்கு விடுமுறை தினம் என்றெல்லாம் தாமதமாக உறங்கி பழக்கமில்லை! எப்போதும் ஐந்தரை மணிக்கு எழுந்து ஜாகிங் சென்று விட்டுத்தான் வருவான்!

நேற்று ரொம்ப நேரம் வேலை செய்து விட்டு வந்து படுத்தானோ? என்று எண்ணிக் கொண்டே, குளியல் அறைக்குள் சென்று விட்டு வந்தவள், சமையல் அறைக்குள் வந்து தேநீர் போட ஆரம்பித்தாள்.

வேலைகளை இருவருமாக பகிர்ந்து செய்தாலும், காலையில் முதலில் எழுவது ஆகாஷ் தான் என்பதால், எப்போதும் அவன்தான் தேநீர் தயாரிப்பான்!

இன்னைக்கு நாம போட்டு கொடுக்கலாம்!' என்று எண்ணியவள், 'பாவம்... ரொம்ப அசதியா இருக்கோ என்னமோ? எதுக்கு எழுப்பணும்? அவன் எழுந்த பிறகு அவனுக்கு போட்டுக் கொள்ளலாம்!" என்று எண்ணி, தனக்கு மட்டுமாக போட்டு குடித்து விட்டு, செய்தித் தாளை புரட்டிக் கொண்டிருந்தவளுக்கு, ஆகாஷ் எழுந்து குளியல் அறைக்குள் செல்வது கண்ணில் பட, எழுந்து சென்ற அவனுக்காக தேநீர் தயாரிக்க ஆரம்பித்தாள்.

குளியல் அறையில் இருந்து வெளியே வந்த ஆகாஷை, புன்னகையோடு "குட் மார்னிங்!" சொன்ன படி, கையில் தேநீருடன் ப்ரியா வாழ்த்த, அவளது புன்னகை நிறைந்த முகம் மனதில் சந்தோஷத்தை நிறைக்க, புன்னகையுடன்"குட் மார்னிங்!" என்று பதில் வாழ்த்து தெரிவித்தவனிடம்,

"என்ன ஆச்சு? இன்னைக்கு லேட்டா எழுந்து இருக்கே? நைட் ரொம்ப நேரம் வேலை பார்த்தியா? இந்தா... இன்னைக்கு நான் போட்ட டீ-யை குடி! ம்!" என்று தேநீரை அவனிடம் நீட்ட, மனைவியின் கையால் தயாரிக்கப்பட்ட தேநீர் எப்போதையும் விட வெகு ருசியாக இருந்ததாக தோன்றியது அவனுக்கு!

வழக்கம் போல, இருவருமாக சேர்ந்து சமைத்து காலை உணவை உண்ட பிறகு, "ஆகாஷ்! வா... தலைக்கு மசாஜ் செஞ்சு விடு!" என்று ப்ரியா அழைத்ததுமே. அவனுக்கு அவஸ்தை ஆரம்பமானது!

எப்போதும் போல, காலை நீட்டி கீழே ப்ரியா அமர்ந்திருக்க, ஆகாஷ் சோபாவில் அமர்ந்த படி அவளது தலையில் மசாஜ் செய்து விட ஆரம்பித்தான். எப்போதும்

இயல்பாக செய்யும் வேலை, இன்று அத்தனை எளிதாக வரவில்லை!

கண்ணை மூடி ரசித்த வண்ணம் ப்ரியா அமர்ந்திருக்க, ஆகாஷின் நிலைதான் பரிதாபமாக இருந்தது.

மனைவியின் ஸ்பரிசம் உடலிலும் மனதிலும் மாற்றத்தை உண்டு செய்ய, தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேக வேகமாக மசாஜ் செய்து விட்டு விலக முயன்றாலும், கைகள் கட்டுப்பாடின்றி அவளது கூந்தலை மீறி, அவளது பிறை நெற்றியையும். கன்னங்களையும் தீண்ட விழைந்ததைக் கண்டு பயமேற்பட முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவன், அவசரமாக முடித்து விட்டு, வேகமாக எழுந்து நகர்ந்தான்.

"வாவ்! சூப்பர் மேன்! எவ்வளவு இதமா இருக்கு தெரியுமா? உன் வக்கீல் தொழில் படுத்துவிட்டாலும், கைவசம் உனக்கு இன்னொரு தொழில் இருக்கு?" என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தவள் அடுத்த பிரச்சனையை ஆரம்பித்தாள்.

"வா... கையை காட்டு!" என்று விரல் நகங்களை வெட்ட அழைத்தவளிடம், "இல்லை... வேண்டாம்!" என்று அவன் வேகமாக மறுக்க, அவள் அவனை விசித்திரமாக நோக்கினாள்.

"இல்லை... நீயே டயர்டா இருக்கே? அதான்..." என்று காரணம் சொன்னவனிடம், "நீ மசாஜ் செஞ்ச பிறகு, களைப்பு எல்லாம் போயே போச்சு! போயிந்தி இட்ஸ் கான்! நீ வா..." என்று வம்படியாக கையைப் பற்றி இழுத்தவளிடம், அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

எப்போதும் போல், வளவளவென்று பேசிக்கொண்டே அவனது விரல் நகங்களை சுத்தம் செய்து கொண்டிருந்தவளை, கண் இமைக்காமல் பார்த்தபடி, சத்தம் செய்யாமல் ரசித்துக் கொண்டிருந்தான் அவன்.

நடுவில் அவள் அவனை நிமிர்ந்து நோக்க, சட்டென்று பார்வையைத் திருப்பியவனிடம், "என்ன ஆச்சு? ஏன் எதுவும் பேச மாட்டேங்கிறே? ரொம்ப டயர்டா இருக்கியா? இல்ல... நான் ரொம்ப போர் அடிக்கிறேனா?" என்று வரிசையாக கேள்விகளை அடுக்கியவளிடம், என்னவென்று சொல்வான் அவன்?

அவள் செய்து முடித்ததும், "அதெல்லாம் ஒண்ணுமில்லை ப்ரியா! ஐ ஆம் ஆல் ரைட்!" என்றவன், "எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு!" என்று மடி கணினியுடன் அமர்ந்து விட, விசித்திரமாக அவனை நோக்கி விட்ட, ப்ரியா குளிக்க சென்றாள்.

அவள் நகர்ந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட ஆகாஷுக்கு. இந்த காதல் தான் எவ்வளவு விசித்திரமானது என்று தோன்றியது.

இது நாள் வரை, அவளது அருகாமை அவனை எந்த விதத்திலும் பாதித்ததில்லை! ஆனால், காதல் உதித்த பிறகு, அவளது சின்ன ஸ்பரிசம் கூட அவனை நிலை இழக்க வைக்கிறது!

தனக்கிருக்கும் இந்த சலனம், அவளுக்கு கொஞ்சம் கூட இல்லை என்பது புரிய, அவன் மனதில் ஒரு ஏக்கம் எழுந்தது! அவளுக்கும் எப்போதாவது தன் மேல் நேசம் வருமா? என்ற கேள்வி எழுந்த நேரம், 'பார் ஆகாஷ்' காதல் என்று வந்ததும் உனக்கும் எதிர்பார்ப்புகள் வந்து விட்டதே என்று கேலி செய்தது.

அவன் யோசனையில் ஆழ்ந்திருந்த நேரம், ப்ரியாவின் கைப்பேசி அழைத்தது நேஹாதான் அழைத்திருந்தாள். ப்ரியா வந்து பேசிக் கொள்வாள் என்று அவன் அழைப்பை எடுக்காமல் விட, மீண்டும் நேஹாவிடம் இருந்து அழைப்பு வந்தது.

"ப்ரியா... நேஹாவோட கால்... ரெண்டு முறை அடிச்சுட்டாங்க!" என்று ஆகாஷ் குரல் கொடுக்க, "எடுத்து என்ன விஷயம்னு கேளு ஆகாஷ் நான் கொஞ்ச நேரம் கழிச்சு கூப்பிடறேன் என்று சொல்லு!" என்று ப்ரியா பதில் தர, ஆகாஷ் அழைப்பை எடுத்த ஆகாஷ்,

"ஹலோ நேஹா! எப்படி இருக்கீங்க?" என்று விசாரித்தான். இதற்கு முன் இரு முறை நேரில் சந்தித்து பேசி இருந்ததில், இருவருக்கும் ஒருவரை ஒருவர் பழக்கமே!

"ஹாய் ஆகாஷ் நான் நல்லா இருக்கேன்! நீங்க எப்படி இருக்கீங்க?" என்று பதிலுக்கு விசாரித்த நேஹாவிடம் பதில் சொன்னவன், "ப்ரியா இப்போ குளிச்சுட்டு இருக்கா! வந்ததும் கூப்பிடுவாள்!" என்று சொல்லி விட்டு அழைப்பைத் துண்டிக்க முயல, நேஹா, "ஆகாஷ்! ப்ரியா இப்போ எப்படி இருக்கா?" என்று விசாரித்தாள்.

"ப்ரியா நல்லா இருக்கா! என்ன விஷயம்? நீங்க இந்த மூணு நாளும் ஒண்ணாத்தானே இருந்தீங்க?" என்று ஆகாஷ் ஆச்சரியத்துடன் வினவினான்.

"ம்... ஒண்ணா தான் இருந்தோம்! நாங்க எல்லாருமே அங்கே நடக்கிறதைப் பார்த்து ரொம்ப அப்செட் ஆகிட்டோம்! நான் தாங்க முடியாமல் அழவே செஞ்சுட்டேன்! ப்ரியாவும் பயங்கர அப்செட்! ஆனால்... உங்களுக்கே தெரிஞ்சுருக்கும்! அவளுக்கு அழுகையே பிடிக்காது!

அதுவும் மற்றவங்க எதிரில் சான்சே இல்லை! மனம் விட்டு அழுததாலோ என்னமோ நாங்க எல்லாம் கொஞ்சம் சகஜமாயிட்டோம்! பட், அவள் இந்த மூணு நாளும் பயங்கர இறுக்கமாவே இருந்தாள். யார் கிட்டயும் சரியா பேசக் கூட இல்லை! அதான்... இப்போ எப்படி இருக்கா என்று விசாரிக்க போன் செஞ்சேன்!"

நேஹாவின் அக்கறையான விசாரிப்புக்கு, "ம்... நேற்று கொஞ்சம் அப்செட்டாதான் இருந்தாள் பட்... இப்போ ஓகே! நார்மல் ஆகிட்டா! நீங்க கவலைப் படாதீங்க!" என்று பதில் உரைத்து விட்டு, அழைப்பைத் துண்டித்த ஆகாஷின் உள்ளம் உற்சாகத்தில் பறந்தது.

யாரிடமும் தன் வேதனையை, கண்ணீரை வெளிக் காட்டாத ப்ரியா, தன்னிடம் அவளது கண்ணீரை வெளிப் படுத்தி ஆறுதல் தேடி இருக்கிறாள் என்றால், அவள் தன்னை மனதுக்கு நெருக்கமானவனாக எண்ணி இருக்கிறாள் என்பதுதானே அர்த்தம்? என்ற எண்ணமே அவனது உற்சாகத்துக்கு காரணம்!

அந்த உற்சாகம், தன்னைப் போலவே அவளுக்கும் நேசம் பிறக்கும் என்ற நம்பிக்கையைத் தர, அதுவரை இருந்த சோர்வும் ஏக்கமும் நீங்கி, ஆகாஷின் அகத்தோடு முகமும் மலர்ந்தது.

ப்ரியா குளித்து விட்டு வந்த பிறகும், அவன் தன் யோசனையில் ஆழ்ந்திருக்க, "என்ன ஆச்சு இவனுக்கு? எப்பவும் லொட லொட என்று பேசிட்டு இருப்பானே?" என்று எண்ணிய ப்ரியா, தோளைக் குலுக்கிக் கொண்டு, மதிய சமையலுக்கு தேவையானதை எடுத்து வைத்தாலும், பார்வை என்னவோ அடிக்கடி அவன் புறம் பாய்ந்த வண்ணம் இருந்தது!

ஓரக் கண்ணால், அவளைப் பார்த்துக் கொண்டிருந்த வனுக்கும் அவளது பார்வையும், அதில் இருந்த கேள் வியும் புரிய, கொஞ்ச நேரத்தில் எழுந்து வந்து அவ ளோடு சமையல் வேலையில் இறங்கியவன் எப்போதும் போல் இயல்பாக பேசி சிரிக்க,

''ஹப்பாடா! உனக்கு மூட் சரி இல்லையோன்னு எனக்கு கவலையா இருந்தது! இப்போதான் நிம்மதியா இருக்கு!'' என்று அவள் சொன்னதும், அவனது மௌனம் அவளைப் பாதிக்கிறது என்ற எண்ணம் அவன் மனதை மழைச்சாரலாய் இனிமையாக நனைத்தது!

மாலை ஐந்து மணிக்கு, ''ப்ரியா இன்னைக்கு எங்கே யாவது வெளியில் போகலாமா?'' என்ற கேள்வியுடன் எதிர்கொண்டவனிடம், ''ம்ம்... போகலாமே? எங்கே?'' என்றவளிடம், ''சஸ்பென்ஸ்... வா!'' என்று அவன் அழைத்து சென்ற இடம், சில சமூக ஆர்வலர்கள் சேர்ந்து நடத்தும் ஒரு சமூக சேவை நிறுவனம்.

நேற்று பெண் சிசுக் கொலைகள் நடக்கும் இடங் களுக்கு சென்று, விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கலாம் என்று அவன் சொல்லி இருந்த திட்டத்தைப் பற்றி பேசவே, ஆகாஷ் அவளை அங்கே அழைத்து வந்திருந்தான்.

அங்கே இருந்த நிறுவனர். ஆகாஷை நல்ல படியாக வரவேற்று பேசியதே, அவன் அவர்களுக்கு நிறைய உதவி கள் செய்திருக்கிறான் என்பதை உணர்த்த, ஆகாஷைப் பார்த்த ப்ரியாவின் கண்களில் பெருமிதம் இருந்தது.

ப்ரியா சொன்ன முழு விவரங்களையும் பொறுமை யாக காது கொடுத்து கேட்டவர், ''எப்போ இந்த

வேலையைத் தொடங்கலாம் என்று இங்கே இருக்கிற வாலண்டியர்ஸ் கிட்ட கேட்டு சீக்கிரமே சொல்றோம் சார்!'' என்று சொல்ல, இருவரும் மன நிறைவுடன் வெளியே வந்தனர்.

''இது நம்மால் முடியற வேலை இல்ல, ப்ரியா. இங்கே இருக்கிற வாலண்டியர்ஸ் எதை, யார் கிட்ட எப்படி பேசி விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று பயிற்சி எடுத்தவங்க! இவங்க கூட நாமும் போகலாமே தவிர, அவங்களுக்கு இருக்கிற அந்த திறமை நமக்கு வராது!'' என்று ஆகாஷ் பேசிக் கொண்டே வர,

''சூப்பர் ஆகாஷ்! நேற்று சொன்னதை இன்னைக்கே செயல்படுத்துவே என்று நான் நினைச்சு கூட பார்க்கலை. ஐ அம் சோ ஹேப்பி!'' என்று ப்ரியா தன் சந்தோஷத் தைப் பகிர்ந்தாள்.

''நன்றே செய்க! அதை இன்றே செய்க! அதான் என் பாலிசி என்று நான் சொல்லித்தான் உனக்கு தெரியுமா?'' என்று காலரைத் தூக்கியவனிடம்,

''சரியான செல்ஃப் டப்பா!'' என்று கேலி செய்தாலும், அவன் எடுத்துக் கொண்ட முயற்சி அவள் உள்ளம் நிறைந்திருந்தது.

வந்த வேலை, விரைவிலேயே முடிந்து விட, இருவரும் வேறு எங்காவது போகலாமா என்று நினைத்த நேரம், ப்ரியாவின் கைப்பேசியில் அவளது அன்னையிடம் இருந்து அழைப்பு வந்தது.

''பானு... ஊரில் இருந்து வந்துட்டியா? நைட் டின் னருக்கு இங்கே வாயேன்! ரேகாவும் மாப்பிள்ளையும் கூட வரேன் என்று சொல்லி இருக்காங்க!'' என்று

அன்னை அழைப்பு விடுக்க, ''அப்படியா... இருங்கம்மா ஆகாஷ் கிட்ட கேட்டு சொல்றேன்!'' என்றவள், அவனிடம் விஷயத்தைச் சொல்ல, அவனும் ஆமோதிக்க, இருவரும் ப்ரியாவின் வீட்டுக்கு சென்றார்கள்.

நலம் விசாரிப்புகள் முடிந்து, உணவு முடிந்ததும், ரேகாவிடம் ஒரு புடவைப் பையை நீட்டிய வசந்தி, ''ரேகா... அடுத்த வாரம் உங்க ரெண்டு பேருக்கும் பிறந்த நாள் வருது இல்ல? அதான் உனக்கு பிடிச்ச கலர்ல புடவை எடுத்திருக்கேன். பிடிச்சிருக்கா பாரு!'' என்று நீட்ட,

''நீங்க எடுத்தா எப்பவும் நல்லாத்தான் இருக்கும்மா...'' என்று சொன்னபடி புடவையைப் பார்த்த ரேகாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''சூப்பர் மா... ரொம்ப அழகா இருக்க! நான் போயிருந்தால் கூட இப்படி எடுத்திருப்பேனா தெரியாது!'' என்று ரேகா தன் மகிழ்ச்சியைப் பகிர,

''இந்தா பானு... உனக்கு பிடிச்ச மாதிரி பிறந்த நாளுக்கு ஏதாவது வாங்கிக்கோ'' என்று ஒரு கவரில் பணத்தை வைத்து ப்ரியாவிடம் நீட்டி விட்டு, ''ஒரே டிசைனில் வேற வேற கலர்ல அழகா ரெண்டு புடவை பார்த்ததும், உங்க ரெண்டு பேருக்கும் எடுக்கணும் என்று தோணுச்சு! அதுவும் உனக்கு பிடிச்ச ஆகாய நீலம்! ம்... உனக்குத்தான் புடவையும் பிடிக்காது... ஒரே மாதிரி எடுக்கிறதும் பிடிக்காதே...'' என்று புலம்ப,

அம்மாவின் அருகில் வந்து அவரைக் கட்டிக் கொண்ட ப்ரியா, ''இந்த பிறந்த நாளுக்கு நீங்க என்ன எடுத்து கொடுக்கறீங்களோ அதையே தூக்கிறேன்!'' என்று கூற, வியப்பில் விழி விரித்தவர், ''உண்மையாவா?'' என்று வினவ.

''என்னம்மா இது? இப்படி கேட்டுட்டீங்க? நான் என்னைக்கு பொய் சொல்லி இருக்கேன்? என்று கண்ணை விரித்து, குரலில் உருக்கம் சேர்த்து, அளவுக்கு அதிகமாக உணர்ச்சி வசப்பட்டவளிடம்,

''ஆமாமா! நீ பெரிய அரிச்சந்திரிதான்! சரியான வாலு!'' என்று கேலியுடன் சொல்லி விட்டு உள்ளே சென்ற வசந்தி, மீண்டும் வந்த போது, அவர் கைகளில் மற்றுமொரு சேலை பார்சல் இருந்தது.

''ஹே... ஏற்கனவே எடுத்துட்டு வந்துதான் அப்படி மூக்கை சிந்தி டயலாக் பேசிட்டு இருந்தீங்களா?'' என்று அன்னையைக் கலாய்த்தவள்,

''நான் வேண்டாம் என்று சொல்லி இருந்தால் என்ன செஞ்சுருப்பீங்க?'' என்று விசாரிக்க, ''என்னமோ தோணுச்சு! நீ வாங்கிப்பேன்னு!'' என்று புடவையை அவளது கையில் கொடுத்தவர், ''பிடிச்சுருக்கா பாரு!'' என்று ஆர்வத்துடன் வினவ,

''ம்... நல்லா இருக்கும்மா! எனக்கு பிடிச்ச கலர் வேற! முக்கியமா லைட் வெயிட்டா இருக்கு!'' என்று முகமலர்ச்சியுடன் சொன்னவளின் காதில், ரேகா எதையோ சொல்ல, ப்ரியா வாய் விட்டு சிரிக்க, ஆகாஷுக்கு மனைவியின் முகத்தில் இருந்து பார்வையை விலக்கவே இயலவில்லை.

வரும் வழி எல்லாம். மனைவியின் பிறந்த நாளுக்கு என்ன பரிசு வாங்குவது என்று யோசித்துக் கொண்டே வந்தவன், ''என்ன ஆச்சு? நான் பாட்டுக்கு பேசிட்டே

வரேன்! நீ எதுவும் சொல்லாமல் வரே?'' என்று ப்ரியா விசாரித்ததுதான். தன்னிலைக்கு வந்தான்.

''சாரி... ஏதோ யோசனை! என்ன சொல்லிட்டு இருந்தே?'' என்றவனிடம்,

''கிழிஞ்சது போ!'' என்று அவள் சொல்ல, எப்போதும் போல, ''கிழிஞ்சா தைக்க வேண்டியதுதானே!'' என்று அவன் மொக்கை போடுவான் என்று அவள் எண்ணி யிருக்க, ''சாரி ப்ரியா... என்ன சொல்லிட்டு இருந்தே?'' என்றான் அவன்.

''அம்மா எனக்கு எடுத்து கொடுத்த புடவையின் கலர் எனக்கு ரொம்ப பிடிச்ச கலர் ஸ்கை ப்ளூ. அந்த கலர் பற்றி ரேகா ஒண்ணு சொன்னாளா... எனக்கு பயங்கர சிரிப்பு வந்துடுச்சு!''

''அப்படி என்ன பயங்கர சிரிப்பு வர அளவுக்கு சொன் னாங்க?''

''ம்ம்ம்... உன் பேர் ஆகாஷ் இல்லையா? ஆகாஷ் என் றால் வானமாம்! அதான் எனக்கு அந்த கலர் முன்னா டியே பிடிச்சிருந்துதாம்! ஹௌ ஃபன்னி!'' என்று அவள் கேலியாக சொல்லி சிரிக்க, என்னமோ ரேகாவுக்கு நன்றி சொல்ல வேண்டும் போல ஆகாஷுக்கு தோன் றியது.

ரேகா சொன்ன வழியிலேயே தன் பெயரையும் பானுப் பிரியாவின் பெயரையும் சேர்த்து யோசித்தவனுக்கு, தான் வானம் என்றால், பானு சூரியன் என்று தோன்ற, புன்னகை மலர்ந்தது!

''என்ன ஆச்சு? திரும்பவும் யோசனையில் ஆழ்ந் துட்டியா?'' என்று கேலியாக

சொன்னாலும், ''ஹௌ ஃபன்னி!'' என்று சொல்லி விடுவாளோ என்று அஞ்சியவனாக, ''ம்ம்... அவங்க சொன்னது ஃபன்னியாதான் இருக்கு!'' என்று சொல்லி விட்டு, பேச்சை வேறு திசையில் மாற்றியவன் மனதில், விரைவில் மனைவியின் மனதிலும் மாற்றம் வர வேண் டும் என்ற பிரார்த்தனை வலுவடைந்தது.



13

காலையில் எப்போதும் போல் ஆகாஷுக்கு விழிப்பு வந்து விட்டது.

நேற்று இரவு பன்னிரண்டு மணிக்கு ப்ரியாவை எழுப்பி பிறந்த நாள் வாழ்த்து சொல்ல வேண்டும் என்று கட்டுக்கடங்காமல் தோன்றிய உந்துதலை, மிகவும் பிரயத்தனப்பட்டு அடக்கி கொண்டிருந்தவனுக்கு, தான்தான் அவளுக்கு இன்று முதல் வாழ்த்து சொல்ல வேண்டும் என்ற ஆசை உள்ளம் முழுக்க இருந்ததால், ஜாகிங் கூட செல்லாமல், பல் தேய்த்து விட்டு வந்து படுக்கையில் வந்து அமர்ந்தான்.

மனைவி உறங்கும் நேரம் மட்டுமே, அவளை எந்த தடையுமின்றி ரசிப்பது சாத்தியம் என்பதால், அன்றும் அதையே செய்து கொண்டிருந்தான்.

புரண்டு படுத்த ப்ரியாவின் நெற்றியில், அவளது முழுக்கம் கலையாத வண்ணம்,

மென்மையாக அதை ஒதுக்கி விட்டவனுக்கு, அவளது பிறை நெற்றியில் இதழ் பதிக்கும் ஆசை எழுந்தது. தன்னையும் மீறி அவள் முகம் நோக்கி குனிந்தவன், சட்டென்று தன்னிலைக்கு வந்தவனாக, எழுந்து நின்று தன் தலையை அழுந்தக் கோதிக் கொண்டு, அறையில் இருந்து வெளியேறினான்.

மனைவியின் மனதிலும் மாற்றம் வரும் என்று காத்துக் கொண்டிருப்பவனுக்கு, மனதில் இருந்த காதலை மறைத்துக் கொண்டு இயல்பாக இருப்பது போல நடிப்பது கடினமாக இருந்தது ஒவ்வொரு நேரம், சொல்லி விட்டால் என்ன என்று கூட தோன்றுவதுண்டு!

'திருமணத்தில் நம்பிக்கையும் விருப்பமும் இல்லாத தன்னை, இந்த காதல்தான் எவ்வளவு மாற்றி விட்டது?' என்று எண்ணியவனுக்கு, திருமணம் வேண்டாம் என்று தான் சொன்னதற்கான காரணங்கள் எல்லாம் இப்போது அர்த்தமற்றவையாக தோன்றின. எப்போது மனைவியுடன் மனம் ஒருமித்து. இயல்பான திருமண வாழ்க்கை வாழப் போகிறோம் என்ற ஏக்கம் மட்டுமே நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது.

அவன் தன் யோசனையில் இருக்க, ப்ரியா எழும் அரவம் கேட்டது. சமையல் அறைக்கு சென்று இருவருக்குமாக தேநீர் தயாரித்தவன், அவள் வெளியே வந்ததும், "பிறந்த நாள் வாழ்த்துக்கள்!" என்று வாழ்த்தியபடி தேநீரை நீட்ட, "நன்றி!" என்று புன்னகையோடு பெற்றுக் கொண்டு, ஒரு வாய் குடித்து விட்டு, "வாவ்! ஏலக்காய் எல்லாம் போட்டு டீ மணக்குதே!" என்று வியக்க,

"பர்த்டே ஸ்பெஷல்!" என்று கண்சிமிட்டியவன், "சொல்லு ப்ரியா! என்ன

பொதுவா பிறந்த நாள் அன்னைக்கு என்ன செய்வே?" என்று விசாரித்தான்.

"ம்... பெரிசா எதுவும் இல்லை. அம்மா ஏதாவது ஸ்வீட் செய்வாங்க. ரேகாவும் நானும் அம்மா அப்பா காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவோம்! கோவிலுக்கு போவோம்! அவ்வளவுதான்! அப்புறம் அவங்க அவங்க வேலையைப் பார்க்க கிளம்பிடுவோம்! இன்னைக்கு சன்டே என்பதால், அம்மாவும் ஆன்ட்டியும் வர சொல்லி இருக்காங்க! சோ. அங்கே போகணும்!"

"ஓகே... சீக்கிரம் தயாராகி வா... கோவிலுக்கு கிளம்பலாம்!" என்றவன், அவள் தயங்கி நிற்கவும், என்ன வென்று விசாரித்தான்.

"அம்மா சின்ன வயசில் எனக்கும் ரேகாவுக்கும் எல்லா பண்டிகை, பிறந்த நாளுக்கும், ஒரே மாதிரி டிரஸ்தான் எடுத்து கொடுப்பாங்க. கொஞ்சம் பெரியவள் ஆனதும், இதென்ன யூனிபார்ம் மாதிரி ஒரே டிரஸ் என்று அடம் பிடிச்சு, எனக்கு பிடிச்ச மாதிரி டிரஸ் எடுத்துக்க ஆரம்பிச்சேன்! புடவை கட்டுற அளவுக்கு வந்ததும், அம்மா எப்பவும் ரெண்டு புடவை ஒரே மாதிரி வேற வேற கலர்ல எடுத்துட்டு வருவாங்க. நான் கட்ட மாட்டேன். பணம் வாங்கிட்டு எனக்கு பிடிச்ச மாதிரியே எடுத்துப்பேன்."

"ஓ! அதான் அத்தை பணம் கொடுத்தாங்களா?"

"ம்... என்னமோ இந்த முறை அம்மா கையால் டிரஸ் வாங்கிக்கணும் என்று தோணுச்சு! அதான் வாங்கிட்டேன். பட், அதை கட்டணும் என்று நினைச்சால் கொஞ்சம் கடுப்பாதான் இருக்கு!" சின்ன சலிப்புடன்

"உனக்கு கம்பர்டபிளா இருக்கிறதா போட்டுக்கோ. உங்க வீட்டுக்கு ஆசீர்வாதம் வாங்க போகும்போது மட்டும் அந்த புடவையைக் கட்டிக்கோ!" என்று ஆகாஷ் எளிதான தீர்வு கூற,

"இல்ல இன்னைக்கு அம்மா காலையில் வரச் சொல்லி இருக்காங்க. அங்கே கொஞ்ச நேரம் இருந்துட்டு மதியம் லஞ்சுக்கு ஆன்ட்டி வரச் சொன்னாங்க. சோ, முழுநாளும் புடவைதான்! சரி, நான் குளிச்சிட்டு வரேன்! காலையில் கோவிலுக்கு கிளம்பலாம்!" என்று அவள் குளிக்க சென்று விட, தான் வாங்கி வைத்திருக்கும் பரிசை எப்போது கொடுப்பது என்று புரியாமல் ஆகாஷ் குழம்பிக் கொண்டிருந்தான்.

அவளுக்கு பிடிக்குமோ பிடிக்காதோ? அதை அணிவாளோ மாட்டாளோ? தன் பரிசென்று சொல்லி கொடுத்த பிறகு, அவளுக்கு பிடிக்கவில்லை என்றால்?

இவன் யோசனையில் இருந்த நேரம், ப்ரியா குளித்து விட்டு வர, இவனும் குளிக்க சென்றான்.

அவன் குளித்து முடித்து வரும்போது, ப்ரியா ஆகாய நீல நிற புடவை உடுத்தி, கூடுதலாக எந்த அணிகலன்களும், அலங்காரமும் இல்லாமலே அவன் கண்களுக்கு தேவதையாக தெரிந்தாள்.

அழகு என்பது பார்ப்பவர் கண்களில்தான் இருக்கிறது என்பதை, அனுபவப் பூர்வமாக உணர்ந்தவனுக்கு, தான் வாங்கி வந்ததை அணிந்தால், அவளது அழகுக்கு அழகு சேர்க்கும் என்று தோன்றியது.

அதை எப்படிக் கொடுப்பது என்ற தயக்கத்தில் இருந்தவனுக்கு, ப்ரியா "இந்த புடவை எனக்கு நல்லா

இருக்கா ஆகாஷ்?" என்று கேட்டதும், ஒரு யோசனை தோன்றியது!

"ரொம்ப நல்லா இருக்கு! பட், இதுக்கு மேட்சிங்கா கையில் கழுத்தில் ஏதாவது போட்டால், இன்னும் நல்லா இருக்கும் என்று தோணுது!" என்று சொல்லி விட்டு, அவளது பதிலை எதிர்பார்த்து அவன் எதிர்பார்ப்புடன் காத்திருக்க,

"ம்... எனக்கும் அப்படித்தான் தோணுது பட், என்கிட்டே அந்த மாதிரி எதுவும் இல்லையே எனக்கு அதில் எல்லாம் பெரிசா விருப்பம் இல்லை என்பதால், நான் அதிகம் வைத்துக் கொள்வதில்லை! நகை எல்லாம் கூட அம்மாகிட்டதான் இருக்கு. அப்படியே இருந்தாலும், அதெல்லாம் இந்த சேலைக்கு செட்டாகுமா என்று தெரியலை!" என்று அவள் சொன்னதும்,

இதைச் சொல்லவே காத்திருந்தவன் போல உள்ளே சென்றவன், ஒரு சின்ன நகைப் பெட்டியோடு வெளியே வந்தான்.

"ஹே... என்ன இது?"

"அம்மாக்காக இதை வாங்கினேன். அவங்க. இதெல்லாம் சின்ன பொண்ணுங்க போடற மாதிரி இருக்குன்னு சொல்லி வேண்டாம் என்று சொல்லிட்டாங்க பாரு... உனக்கு இந்த சேலைக்கு செட் ஆகும் என்று தோணுச் சுன்னா போட்டுக்கோ!"

மனதில் இருந்த ஆர்வத்தை சிறிதும் குரலில் காட்டாமல் சொல்லி விட்டு, அவன் நகர பெட்டியைத் திறந்து [illegible]

இந்த மாதிரி அணிகலன், ஆபரணங்களில் அதிகம் ஆர்வம் காட்டாத அவளையே, வெள்ளியில் முத்துக்கள் பதித்து வடிவமைக்கப்பட்டிருந்த அந்த கழுத்தாரமும், கை வளையும், தோடும் மிகவும் கவர்ந்தன.

சேலைக்கு மட்டுமில்லாமல், நவீன ஆடைகளுக்கும் பொருந்தும் வண்ணம் இருந்த அந்த வடிவமைப்பு மனத்தைக் கொள்ளை கொண்டதோடு, அவள் அணிந்திருந்த முத்தும் வெள்ளை கற்களும் பதித்து வடிவமைக்கப்பட்டிருந்த சேலைக்கு, வெகு பொருத்தமாக இருக்க, சந்தோஷத்துடன் ஆகாஷை நோக்கியவள்,

''வாவ்! ரொம்ப ரொம்ப அழகா இருக்கு ஆகாஷ்! இந்த சேலைக்கே செஞ்சது போல அவ்வளவு பொருத்தமா இருக்கு!'' என்று வியக்க,

'பின்னே! கடை கடையா ஏறி இறங்கி, நீ கட்டப் போகும் சேலைக்கு பொருத்தமாக தேர்ந்து எடுத்தாயிற்றே!' என்று மனதுக்குள் எண்ணியவனுக்கு, அவளுக்கு பிடித்திருக்கிறது என்று சொன்னதும் உள்ளம் துள்ளியது!

''அப்ப போட்டுக்கோ. ப்ரியா! டைம் ஆகுது பாரு!'' தன் சந்தோஷத்தை வெளிக்காட்டாமல், அவன் இயல்பாக சொல்ல,

தோட்டையும், வளையல்களையும் அணிந்தவள், கழுத்தாரத்தை அணிந்து கொண்டு வளையத்தை மாட்ட முயல, சரியாக மாட்ட வரவில்லை.

''ஆகாஷ், இந்த வளையத்தைக் கொஞ்சம் மாட்டேன்... சரியா வர மாட்டேங்குது! ப்ளீஸ்!'' என்று அழைக்க, எழுந்து வந்து வளையத்தை மாட்டியவன் பார்வை, பக்கவாட்டில் தெரிந்த மனைவியின் செழுமையான கன்னத்தில் படிந்தது.

அடக்கி வைத்திருந்த ஆசை அந்த கணத்தில் வெளியேறத் துடிக்க, அவனையும் அறியாமல், மனைவியின் ஆப்பிள் கன்னத்தில், இதழ்களைப் பதித்தவன், அவள் விழி விரித்து அதிர்ச்சியுடன் நோக்கியதும், ''ப்ளீஸ் டா... என்னால கட்டுப்படுத்த முடியலை!'' என்று சொல்லியவாறே, அடுத்த கன்னத்திலும் இதழ் பதிக்க, அவள் முகம் செவ்வானமாக மாறிப்போனதை ரசனையுடன் நோக்கி, அவள் இதழ் நோக்கி குனிந்தவனை.

''என்ன ஆகாஷ்? ஒரு வளையல் மாட்டுவதற்கு இவ்வளவு நேரமா?'' என்ற ப்ரியாவின் தன்னிலைக்கு மீட்டு வந்தது.

'சுத்தம்! நின்று கொண்டே கனவா?'

''இதோ முடிஞ்சுடுச்சு!'' என்று வேகமாக வளையத்தை சரி செய்து விட்டு, விலகி நின்றவனுக்கு, வியர்த்து வழிந்தது!

அதை கவனிக்காமல், ''கிளம்பலாமா?'' என்று அவள் முன்னே செல்ல, வியர்வையைத் துடைத்தவன், அவளறியாமல், ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

கோவிலுக்கு சென்று விட்டு, ப்ரியாவின் அம்மா வீட்டுக்கு சென்றவர்களை, முத்துக்குமரனும் வசந்தியும் பாசத்துடன் வரவேற்று, மகளுக்கு வாழ்த்து சொல்ல, இருவரும் பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள, ரேகாவும் ஆனந்தும் வந்து சேர்ந்தனர்.

சகோதரிகள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்து சொல்லி பரிசைப் பரிமாறிக் கொள்ள, ''பானு... அதெப்படி ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் சர்ப்ரைசா,

அதே சமயம் எனக்கு பிடிச்ச பொருளாவே கொடுக்க முடியுதி உன்னாலே?'' என்று ஆச்சரியப் பட்ட படியே. ரேகா ப்ரியா கொடுத்த பரிசை வாங்கிக் கொள்ள.

''பிடிச்சவங்களுக்கு பரிசு வாங்க போனால், அதெல் லாம் தான் அமையும்!'' என்று ப்ரியா பதில் சொல்ல, கலகலப்பான பேச்சுடன் காலை உணவு முடிந்தது.

''பானு! இந்த பேல் செட் ரொம்ப அழகா இருக்கு! எங்கே வாங்கினே?'' ஆர்வத்துடன், ரேகா வினவ, ''தெரியலை, ஆகாஷ்தான் வாங்கிட்டு வந்தார்'' என்று ப்ரியா சொல்ல.

''வாவ்! ஆத்துக்காரர் கிஃப்டா? சர்ப்ரைசா கொடுத் தாரா? கலக்கிறார் போ!'' என்ற ரேகாவிடம், ஆகாஷ் தனக் காக வாங்கி வந்ததில்லை என்று சொல்ல ப்ரியாவுக்கு ஏனோ மனம் வரவில்லை!

ரேகா, ''பாருங்க உங்க தம்பி சர்ப்ரைசா சூப்பரா பரிசு கொடுத்திருக்கார். நீங்களும் இருக்கீங்களே?'' என்று கணவனை வம்பிழுக்க.

''ஹே! இதெல்லாம் உனக்கே அநியாயமா தெரியலை! உன் கூட கடையா ஏறி இறங்கி, உனக்கு பிடிச்ச மாதிரி கிஃப்ட் வாங்கி கொடுத்ததை மறந்துட்டு பேசுறே?'' என்று ஆனந்த் அங்கலாய்த்தான்.

''விடுங்க மாமா... எங்க ரேகா இப்போதான் கொஞ்சம் கொஞ்சம் பேச ஆரம்பிச்சிருக்கா... கிண்டல் செய்ய ஆரம்பிச்சிருக்கா'' என்று பாசத்துடன் ப்ரியா சொன்னதும்,

''அதெல்லாம் என்னை கிண்டல் செய்யறதுன்னா, உங்க அக்காவுக்கு அல்வா சாப்பிடுகிற மாதிரி! கல் யாணத்துக்கு முன்னாடி அமைதி

நான்தான் ஏமாந்து போயிட்டேன்!'' என்று ஆனந்தும் போலியாக வருத்தப் பட,

''ஓ! இந்த மாதிரி வருத்தம் எல்லாம் வேற உங்களுக்கு இருக்கா? எங்க அக்காதான் பாவம்... வெளுத்ததெல்லாம் பாலு என்று நினைக்கிறவ அதான் ஏமாந்து போய் உங்களை கல்யாணம் செஞ்சிருக்கா!'' என்று ப்ரியா விடாமல் கேலியில் இறங்க,

''அதென்னமோ உண்மைதான்! அன்னைக்கு கூட பாலுன்னு நினைச்சு பினாயிலில் காபி போட்டு கொடுத் துட்டா!'' என்று ஆனந்த் வார, ரேகா முறைக்க மற்ற வர்கள் சிரித்தனர்.

''இருங்க... இனிமேல் உங்களுக்கு பினாயிலில்தான் காபி போட்டு கொடுக்கப் போறேன்!'' என்று ரேகா முறைக்க, ''என்னடா செல்லம்? சும்மா கேலிதானே? பிறந்த நாள் அதுவுமா இப்படி எல்லாம் முறைக்கக் கூடாது!'' என்ற ஆனந்த மனைவியின் காதில் எதையோ சொல்ல, அவள் முகம் சிவக்க, அதை ரசித்து அவன் அவளது கன்னத்தை லேசாக வருட,

''மாமா... பப்ளிக்... பப்ளிக்...'' என்று ப்ரியா சத்தமிட, அந்த இடமே கலகலத்தது!

கூட சேர்ந்து சிரித்தாலும், ஆகாஷுக்கு மனதில் இருந்த ஏக்கம் கூடிப் போனது.

மேலும் சிறிது நேரம் அன்னையிடம் சீராடி விட்டு, நால்வரும் தேவகியையும் ரவிச்சந்திரனையும் சந்திக்க சென்றனர்.

தம்பதி சமேதராக பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கியவர்களை வாழ்த்தி விட்டு, தேவகி, இரு

மருமகள்களுக்கும் ஒரே மாதிரியான, அழகான சல்வா
செட்டைப் பரிசளித்தார்.

ப்ரியா அணிந்திருந்த முத்தாலான அணிகலன்களை
கண்ட தேவகி, "ரொம்ப அழகா இருக்கு! எங்கே..." என்று
ஆரம்பிக்க, "அம்மா ரொம்ப பசிக்குதும்மா! இன்னைக்கு
என்ன மெனு!" என்று ஆகாஷ் இடைப் புகுந்தான்.

பிள்ளை பசி என்றதும், தேவகி உணவை கவனிக்க
நகர்ந்து விட, "ஹப்பா... அத்தை சொல்ல சொல்ல
கேட்காமல் நிறைய வைச்சிட்டாங்க. நானும் நல்லா
இருக்கு என்று நிறைய சாப்பிட்டு விட்டேன். வயிறு
டொம்முன்னு இருக்கு!" என்று வரும் வழியெல்லாம்
புலம்பிக் கொண்டிருந்தவனுக்கு. திடீர் என்று பசி எங்கே
இருந்து வந்தது? என்ற வியப்புடன் ப்ரியா ஆகாஷை
நோக்க, அவன் அதைக் கண்டு கொள்ளாமல் தந்தை
யுடன் பேசிக் கொண்டிருந்தான்.

ஒரு தோள் குலுக்கலுடன், தமக்கையுடன் சேர்ந்து
ப்ரியா மாமியாருக்கு உதவ சென்று விட, ஆகாஷ்
பெருமூச்சு விட்டான்.

இன்று காலையில் இருந்து எத்தனை முறை பெரு
மூச்சு விட்டிருக்கிறான் என்று சொல்லச் சொன்னால்
அவனுக்குத் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

'இந்த நாள், பெருமூச்சு நாள் போல!' என்று எண்
ணியவனுக்கு புன்னகை மலர்ந்தது.

இடையில் யாரும் கவனிக்காத நேரத்தில், "ப்ரியா
போட்டிருக்கிற செட் நல்லா இருக்காம்மா? உங்களுக்கு
பிடிச்சிருந்தா உங்களுக்கும் அதே மாதிரி வாங்கிட்டு
வரவா?" என்று அன்னையிடம்

"நீயே போய் வாங்கினாயாடா? ம்ம்... கல்யாணத்
துக்கு அப்புறம் தனியே போய் கிஃப்ட் எல்லாம் வாங்கு
கிற அளவுக்கு முன்னேறி விட்டாயேடா கண்ணா!"
என்று கேலி செய்தாலும், மகனின் திருமண வாழ்க்கை
சந்தோஷமாக சென்று கொண்டிருக்கிறது என்ற
எண்ணத்தில் தேவகியின் முகம் பூரிப்படைந்தது!

"கேலி செய்யறது இருக்கட்டும்! சொல்லுங்க, உங்
களுக்கும் அதே மாதிரி வாங்கட்டுமா?" என்று வினவிய
ஆகாஷுக்கு, உண்மையிலேயே அன்னைக்கு பிடித்த
மாதிரி ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம்
வலுத்திருந்தது!

அவரது பிடிவாதத்தால் அல்லவோ, ப்ரியா அவனது
மனைவியானாள்!

"அதெல்லாம் வயசு பொண்ணுங்க போட்டால்தான்
நல்லா இருக்கும்! எனக்கு நீயும் ஆனந்தும் சந்தோஷமா
வாழறதுதான் பெரிய பரிசு!"

ஆத்மார்த்தமாக சொன்ன அன்னையைக் கட்டிக்
கொண்ட ஆகாஷின் மனதில், ஏனென்றே தெரியாமல்,
அவனும் ப்ரியாவும் மனமொத்த தம்பதியராக வாழப்
போவது நிச்சயம் என்ற நம்பிக்கை தோன்றியது!

மாலை நான்கு மணிக்கு ஆனந்தும் ரேகாவும் விடை
பெற முயல, "இருங்களேன் ஆனந்த் டின்னர் சாப்பிட்டு
விட்டு போலாமே?" என்று ரவிச்சந்திரன் தடுக்க,
ஆனந்த் முகத்தில் தயக்கத்தைக் கண்டதும்,

"அவங்களுக்கு வேற ஏதாவது ப்ளான் இருக்கும்!
கிளம்பட்டும்!" என்று தேவகி சொல்ல, "யூ ஆர் சோ
ஸ்வீட் மா!" என்று அன்னையின் கன்னம் பிடித்து

கொஞ்சி விட்டு ஆனந்த் மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பி விட,

''இன்னைக்கு கேண்டில் லைட் டின்னருக்கு போறோம்டா!'' என்று அண்ணன் சொல்லி இருந்ததை நினைவு கூர்ந்து ''என்ஜாய்!'' என்று சொல்லி வழி அனுப்பி வைத்தான் ஆகாஷ்.

''நீயும் ப்ரியாவை எங்கேயாவது கூட்டிட்டு போயேண்டா!'' என்று தேவகி சொல்ல, ஆகாஷின் பார்வை ஆர்வத்துடன் மனைவியின் மேல் படிந்தது, அவளோ சுவாரசியமாக மாமனாரிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''ம்... போகணும்... நாங்களும் கிளம்பறோம்மா!'' என்று கிளம்பிய ஆகாஷ், ''வரீங்களா பர்த்டே பேபி? கிளம்பலாம்!'' என்று வினவ, ப்ரியாவும் கிளம்பினாள்.

வீட்டுக்கு வந்ததும், ''பாரு... எங்க அம்மா புடவை கொடுத்தாங்க. ஆன்ட்டி சல்வார் கொடுத்தாங்க! ரேகா எனக்கு ஹேண்ட் பேக் கொடுத்தாள். நீதான் எனக்கு கிஃப்டே கொடுக்கலை!'' என்று ப்ரியா குறைபட.

''ஹே! நான்தான் உனக்கு பேர்ல் செட் கொடுத்தேனே?'' என்று வேகமாக சொன்னவனிடம்,

''அது... நீ ஆன்ட்டிக்கு வாங்கினதுதானே? அவங்க வேண்டாம் என்றதால் எனக்கு கொடுத்தே! அது எப்படி கிஃப்ட் ஆகுமாம்?'' என்று அவள் வினவ, அவன் என்ன சொல்வதென்று புரியாமல் விழித்ததைக் கண்டு, ''இப்போ தான் உண்மையிலேயே ஆடு திருடிட்டு முழிக்கிறவன் மாதிரியே இருக்கே!'' என்று விட்டு கலகலவென்று நகைத்தவள்.

''எனக்குத்தானே வாங்கிட்டு வந்தே? அதை சொல்றதுக்கென்ன?, எதுக்கு பொய் சொன்னே? ம்?'' என்று புருவம் உயர்த்தி வினவ,

அவனுக்கே தான் ஏன் அவளுக்குத்தான் வாங்கி வந்ததாக சொல்ல அவ்வளவு தயங்கினோம் என்று புரியவில்லை.

காதல் என்ற கள்ளத்தனம் புகாமல் இருந்திருந்தால், அவளுக்கு பரிசு வாங்கி கொடுப்பதைக் கூட சாதாரணமாக செய்திருப்பானோ என்னமோ?

தன் பதிலுக்காக ப்ரியா காத்திருப்பதை உணர்ந்ததும், தன் யோசனையில் இருந்து மீண்டவன், ''அது... உனக்கு பிடிக்குமோ பிடிக்காதோ என்று நினைச்சேன்... அதான்...'' என்று சம்மந்தமில்லாமல் உளற,

அவனது தடுமாற்றத்தை விசித்திரமாக நோக்கிய ப்ரியா, ''எனிவே! தேங்க்ஸ் ஃபார் யுவர் கிஃப்ட்! எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது!'' என்று புன்னகையுடன் சொல்லி விட்டு விட்டு, உடை மாற்ற கிளம்ப,

''ப்ரியா... எங்கேயாவது வெளியே போகலாமா?'' என்று தனது தயக்கத்தை உதறி கேட்ட ஆகாஷிடம், ''ம்... போகலாம்! நீயே எங்கேன்னு முடிவு செய்!'' என்று சொல்லி விட்டு வந்தவள், வரும்போது தேவகி கொடுத்திருந்த சல்வாரை அணிந்து கொண்டு வந்தாள்.

''ஆன்ட்டிக்கு நல்ல ரசனை இல்ல? எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!'' என்ற மனைவியைக் கண்டு, அன்றைய நூறாவது பெருமூச்சை வெளியேற்றினான் ஆகாஷ்.

கடற்கரைக்கு சென்று விட்டு, இருவரும் அவர்களுக்கு பிடித்த உணவகத்தில் இரவு உணவை உண்டு விட்டு

ப்ரியா சொன்னதும், ''என்ன விஷயம் பானு? இந்த நேரத்தில் லீவ் போடறே?'' என்று நேஹா ஆச்சரியத்துடன் விசாரித்தாள்.

''நாளைக்கு ஆகாஷுக்கு பிறந்த நாள்! அவனுக்கு லீவ்! நாளைக்கு அவனுடைய பிறந்த நாளுக்கு நிறைய சர்ப்ரைஸ் கொடுக்கணும் என்று நினைச்சேன்! அதான் லீவ்!''

உற்சாகத்துடன் ப்ரியா சொல்ல, ''ஓ... ஆத்துக் காரருக்கு பிறந்த நாளா? கண்டிப்பா லீவ் போட வேண்டியதுதான்!'' என்று நேஹா ராகமிட்ட படி சொல்ல,

''லூசு! லூசு! நான் ஆகாஷுக்கு பிறந்த நாள் என்று சொன்னேன்!'' என்றாள் ப்ரியா.

''நீதாண்டி லூசு! நான் சரியாத்தான் சொன்னேன்!''

''வேண்டாம்! இந்தப் பேச்சை விடு!'' என்று ப்ரியா சலித்துக் கொள்ள, நேஹாவோ ''பானு... நீ இதையே போன மாசம் சொல்லி இருந்தேன்னு வை! நானும் விட்டிருப்பேன்! ஆனால்... இப்போ விட முடியாதும்மா!'' என்றாள்.

''அப்படியா? போன மாசத்துக்கும் இந்த மாசத்துக்கும் நடுவில் அப்படி என்ன மாற்றம் வந்துடுச்சாம்?''

ப்ரியா கேலியாக கேள்வி எழுப்ப, ''என்னால் ஆறு வித்தியாசங்கள் மட்டும் இல்ல... அறுபது வித்தியாசங்கள் சொல்ல முடியுமாக்கும்?'' என்று நேஹா பெருமிதத்துடன் பதில் சொல்ல, ப்ரியா புருவம் உயர்த்தினாள்.

''அடேங்கப்பா! சரி... சாம்பிளுக்கு ஒரு வித்தியாசம் சொல்லு பார்ப்போம்!''

''சொல்றேன்! சொல்றேன்! உன்கிட்ட தானே சொல்லணும்! நீ என் கேள்விக்கு பதில்

வரும் போது, ''நாளையில் இருந்து எனக்கு ஒரு முக்கியமான வேலை தொடங்குது ஆகாஷ். கொஞ்ச நாளைக்கு சீக்கிரம் கிளம்ப வேண்டி இருக்கும்! இரவு வர லேட் ஆகலாம்!'' என்று ப்ரியா சொல்ல,

மனைவியுடன் இருக்கப் போகும் நேரம் குறையப் போகிறதே என்ற கவலை தோன்றினாலும், அவளது குரலில் தெரிந்த ஆர்வமும் படபடப்பும், மிகவும் சவாலான வேலை என்பதை உணர்த்த, ''அப்படி என்ன ப்ராஜெக்ட்?'' என்று வினவினான்!

''ம்... சஸ்பென்ஸ் கான்பிடன்ஷியலும் கூட!'' என்று அவள் விவரம் கூற மறுக்க, ''ஓகே!... ஆல் த பெஸ்ட்!'' என்று வாழ்த்தியதோடு, ஆகாஷும் மேற்கொண்டு விவரம் கேட்டு அவளைத் துருவவில்லை!

அடுத்து வந்த பத்து நாட்கள். ஆகாஷ் பயந்தது போலவே. ப்ரியா வீட்டில் இருக்கும் நேரம் வெகுவாக குறைந்து, இருவரும் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்வதே அரிதாகி, ஆகாஷின் நிலையை மோசமாக்கியது! ஆனால்... அதன் விளைவு ஒரு நல்ல மாற்றத்துக்கான விதையாகவும் ஆனது!

14

''நேஹா... நாளைக்கு நான் லீவ்! நமக்கு நாளைக்கு வெளியே வேலை இல்லைதானே? இது வரைக்கும் சேகரித்த விஷயங்களை

சொல்லு! ஆகாஷின் பிறந்த நாளுக்கு ஏன் நீ லீவ் போட போறே?''

''இப்பதானடி சொன்னேன்? அவனுக்கு நிறைய சர்ப்ரைஸ் கொடுக்கணும்! வேலைக்கு வந்தால் அதெல்லாம் முடியாது!''

''ஓ! எதுக்கு நீ ஆகாஷுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க இவ்வளவு ஆசைப் படறே?'' என்று நேஹா அடுத்த கேள்வியைத் தொடுக்க,

''நீ கண்டிப்பா என்கிட்டே உதை வாங்கப் போறே! எனக்கு பிடிச்சவங்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கிறது... கிஃப்ட் கொடுக்கிறது இதெல்லாம் எனக்கு ரொம்ப பிடிக்கும் என்று உனக்கு நல்லாவே தெரியும்!'' என்று ப்ரியா பதில் உரைத்தாள்.

''அப்படி வா வழிக்கு! சோ, உனக்கு ஆகாஷை பிடிக்கும்னு ஒத்துக்கறே?''

''அட லூசே! நான் எப்போ இதுவரை ஆகாஷை பிடிக்காது என்று சொல்லி இருக்கேன்?''

நேஹாவின் கேள்விக்கு ப்ரியா பதில் கேள்வி கேட்க, அதைக் கண்டு கொள்ளாமல், ''பிடிக்கும்னா எந்த அளவுக்கு பிடிக்கும்?'' என்று நேஹா தனது கேள்விக் கணையை வீசினாள்.

இடுப்பில் கை வைத்து நேஹாவை முறைத்த ப்ரியா, ''இப்போ எதுக்குடி என்னை பேட்டி எடுத்துட்டு இருக்கே?'' என்று எரிச்சலுடன் வினவினாள்.

''அப்புறம் முறைக்கலாம்! நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு!''

''நீ விட மாட்டே!'' என்று சலித்துக் கொண்டாலும் ''ம்... எனக்கு ஆ

எவ்வளவு பிடிக்குமோ அவ்வளவு பிடிக்கும்! ஓகேவா?'' என்றாள்.

''நாட் ஓகே!'' என்ற நேஹா, ''பானு! நீ இந்த மாதிரி விஷயங்களில் ட்யூப் லைட் என்று எனக்கு தெரியும்! இருந்தாலும் இவ்வளவு ட்யூப் லைட்டா இருப்பே என்று நினைக்கவே இல்லை!'' என்று சலித்துக் கொண்டாள்.

''வேண்டாம் நேஹா! நீ இப்படி சொல்ல வந்ததை சொல்லாமல், உளறி கொட்டிட்டு இருந்தால், நான் உன் தலையிலேயே கொட்டிடுவேன்! ஜாக்கிரதை!'' என்று ப்ரியா மிரட்டினாள்.

''இந்த வெட்டி மிரட்டலை எல்லாம் விடு!'' என்ற நேஹா, ''பானு! உன் மனசில், ஆகாஷ் நண்பன் என்ற ஸ்தானத்தில் இருந்து எப்பவோ ப்ரோமோஷன் வாங்கி மேலே போனதை நீ உணரவே இல்லையா?'' என்று தணிந்த குரலில் வினவ, அவளது கேள்வியில் ப்ரியா திகைத்து நின்றாள்.

ஆனால், அவள் திகைத்து நின்றது ஒரு கணமே!

''நேஹா! நீ நிறைய சினிமா பார்த்து ரொம்ப கெட்டுப் போயிருக்கே!'' என்று அடுத்த கணம் நேஹாவை கேலி செய்யத் துவங்கினாள்.

''ப்ச்... என்னை விமர்சனம் செய்யறது இருக்கட்டும்! நான் கேட்டதுக்கு பதில் சொல்லு.''

''உன் யூகத்தின் அடிப்படையில் கேட்கப் படுகிற கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது!''

பட்டென்று ப்ரியா சொன்னதும், ''என் யூகம் உண்மையானது என்று நான் நிரூபித்தால்?'' என்று நேஹா கேள்வி எழுப்பினாள்.

''பெரிய வக்கீல் கேள்வி மாதிரி சொல்றதைப் பாரு! உன் பக்கத்தை நிரூபிக்க ஒரு பாயிண்ட் எடுத்து விடு பார்க்கலாம்!''

''ம்... நான் சொல்ற முதல் பாயிண்ட்லேயே நீ அவுட் ஆகப் போற பாரு!'' என்ற நேஹா, ''போன மாச கடைசியில் நாம் கவர் ஸ்டோரிக்காக சில கிராமங்களுக்கு போயிருந்தோம் இல்ல?'' என்று ஆரம்பிக்க, அந்தக் குழந்தைகளின் நினைவில் ப்ரியாவின் முகம் வாடியது.

அவளது கையைப் பற்றி ஆறுதலாக அழுத்திய நேஹா, ''அப்போ நீ பயங்கர அப்செட்டா இருந்தே! போன்ல சிக்னல் கிடைக்கும்போதெல்லாம். ஆகாஷ் நம்பரை எடுத்து போன் செய்ய நினைக்கிறதும், மெசேஜ் செய்ய நினைக்கிறதும், அப்புறம் செய்யாமல் விடறதுமா அல்லாடிட்டு இருந்தே!'' என்று சொல்ல,

''ஆமாம்! அதுக்கென்ன? எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது! அதான் அவன்கிட்ட ஷேர் செய்யலாம்னு நினைச்சேன்! அப்புறம்... அவனையும் எதுக்கு அப்செட் செய்யணும் என்று பேசாமல் விட்டுட்டேன்!'' படபட வென்று ப்ரியா பொரிய,

புன்னகையுடன் அவளை நோக்கிய நேஹா, ''ஏன்? ஆகாஷ் கிட்ட ஷேர் செய்ய நினைச்சே?'' என்றாள்.

''ஹீ இஸ் மை பெஸ்ட் ப்ரண்ட்!''

சட்டென்று ப்ரியா பதிலிருக்க, ''நான் உன் பெஸ்ட் ப்ரண்ட் இல்லையா?'' என்றாள் நேஹா.

நேஹா என்னமோ சாதாரணமாகத்தான் கேட்டாள். ஆனால், ப்ரியாவுக்கு அவளது கேள்வி வருத்தத்தை விளைவித்தது.

''நேஹா... இதெல்லாம் கேள்வி? நீ எப்பவும் என்னோட பெஸ்ட் ப்ரண்ட் இன் ஃபேக்ட் ஆகாஷுக்கு முன்னாடி இருந்தே நீதான் எனக்கு ப்ரண்ட்!''

''யூ ஆர் ரைட்! நான் உன்னோட பெஸ்ட் ப்ரண்ட்! எனக்கும் அது தெரியும்! நீ அந்த நேரத்துல ரொம்ப அப்செட்டா இருந்தே! உன் பெஸ்ட் ப்ரண்டான நான் உன் பக்கத்திலேயே இருந்தேன்! இருந்தாலும், நீ உன் மன வருத்தத்தை பகிர்ந்து கொள்ள ஆகாஷைத்தான் தேடினே! அதுல இருந்து உனக்கு புரியலையா? ஆகாஷ் உன் மனசில் எந்த இடத்தில இருக்கார்னு?''

நேஹா தெளிவாக தான் சொல்ல வந்ததைச் சொன்ன பிறகு, ப்ரியா மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்றாள்.

சட்டென்று, அன்று வீட்டுக்கு வந்து தான் ஆகாஷைக் கட்டிக் கொண்டு அழுதது நினைவுக்கு வந்து, அவளது மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

மிகுந்த மன வருத்தத்தில் இருந்த போது அவள் மனம் ஆகாஷைத் தேடியது உண்மைதான்! ஆனால்... ஆனால் எல்லாம் அவள் அவனைக் காதலிக்கிறாள் என்று ஆகி விடுமா என்ன? என்ற கேள்வி பிறக்க, 'காதலா? நானா?' என்ற கேள்வி அதை விட பெரிதாக விஸ்வரூபம் எடுத்து அவளை மிரட்ட, அவளது கண்கள் அதிர்ச்சியில் அகன்று விரிந்தன.

ப்ரியாவையே பார்த்து கொண்டு இருந்த நேஹாவுக்கு, அவளது எண்ண ஓட்டம் புரிந்தது.

மென்மையாக தோழியின் கரத்தைப் பற்றியவள், ''பானு நீ உனக்குள்ள, திருமணத்தில் விருப்பம்

இல்லாத காரணத்தால் உனக்கு காதலே வராது என்று அழுத்தமாக பதிச்சு வைச்சிருக்கே! அதான்... உன்னாலேயே உன் உணர்வுகளை சரியா புரிந்து கொள்ள முடியலை! நீ முதலில் அந்த எண்ணத்தில் இருந்து வெளியே வா... அப்புறம் உனக்கே எல்லாம் புரியும்!'' அதே மென்மையுடன் தோழிக்கு அவளது மனதைப் புரிய வைக்க முயன்றாள்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரம், பொறுப்பாசிரியர் நேஹாவை அழைப்பதாக, ஆபீஸ் பையன் வந்து சொல்ல, நேஹா அங்கிருந்து கிளம்பினாள்.

தனிமையில் விடப் பட்ட ப்ரியாவை நேஹா சொல்லி இருந்த வார்த்தைகள் குழப்பி அடித்தன.

ஆகாஷை சந்தித்த நாளில் இருந்து நடந்தவை எல்லாம், மனதில் காட்சிகளாக விரிய, நாளுக்கு நாள் அவனுக்கும் அவளுக்கும் இடையே இருந்த உறவு பலப் பட்டுக் கொண்டிருந்ததை அவளால் தெளிவாக உணர முடிந்தது.

ஆனால்... அது காதலா? திருமணம் என்ற முழுமையான உறவை. அவனுடன் ஏற்றுக் கொள்ளும் அளவு பலம் வாய்ந்ததா என்றெல்லாம் அவளால் உறுதியாக சொல்ல இயலவில்லை.

நேஹா திரும்பி வந்த போது. ப்ரியா யோசனை கலந்த குழப்பத்தில் இருப்பதைக் கண்டு. ''பானு! நீ யோசிக்க ஆரம்பிச்சது எனக்கு சந்தோஷம் தான்! ஆனால், இப்போதைக்கு ரொம்ப குழப்பிக்காமல், நாளைக்கு ஆகாஷின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மட்டும் கவனம் செலுத்து!'' என்று சொல்ல,

ப்ரியாவுக்குமே இப்போதைக்கு அதுதான் சரி என்று தோன்றியது!

* * *

ப்ரியா ஒரு பக்கம் யோசனையில் இருக்க. ஆகாஷ் ஒரு பக்கம் அவனது யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

ப்ரியாவின் பிறந்த நாளின் போது. பேச்சுவாக்கில் அவனது பிறந்த நாள் இன்னும் பத்து நாட்களில் வரப் போகிறது என்பது அவளுக்கு தெரிந்ததுதான்! ஆனால் இந்தப் பத்து நாட்களாக மூச்சு விடக் கூட நேரமின்றி. தன் வேலையில் ஆழ்ந்திருப்பவளுக்கு நாளை அவனது பிறந்த நாள் என்பது நினைவிருக்குமா என்பதே ஆவனுக்கு சந்தேகமாக இருந்தது.

இத்தனை வருடங்களில், அவன் தன்னுடைய பிறந்த நாளுக்கு என்று எந்த முக்கியத்துவமும் கொடுத்த தில்லை! அதுவும் இன்னொரு நாள் என்ற கணக்கில் தான் எடுத்துக் கொள்வான்! ஆனால், இப்போது பிறந்த நாள் அன்று மனைவி தன்னை வாழ்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அதே சமயம், எனக்கு பிறந்த நாள் என்று அவளிடம் சொல்லவும் தோன்றவில்லை! அவளாகவே தெரிந்து கொண்டு தன்னை வாழ்த்த வேண்டும் என்ற எதிர் பார்ப்பு தோன்றி இருந்தது. மனதுக்கு பிடித்தவர்களுக்கு, இனிய ஆச்சரியங்கள் கொடுத்து சந்தோஷப்படும் மனைவி, தன் பிறந்த நாளுக்கு என்ன செய்யப் போகி றாள் என்ற எதிர்பார்ப்பு அவன் மனதை அலைக்கழித்தது.

காதல் என்று வந்து விட்டால், கூடவே எதிர்பார்ப்பும் வந்து விடும் போல!

ஒரு வேளை, அவளுக்கு அவனது பிறந்த நாள் என்று நினைவு இல்லாமல் இருந்தால்? வாழ்த்தவில்லை என்றால்? என்ற எண்ணமே மனதில் சோர்வைத் தோற்றுவித்தது!

அன்று இரவு, ப்ரியா இந்தப் பத்து நாட்களில் வந்ததை விட சற்று முன்னதாக ஒன்பது மணி அளவில் வந்து, "சாரி ஆகாஷ்! எப்பவும் நீயே சமைக்கிற மாதிரி ஆகுது! இந்த வேலை முடியட்டும்! அப்புறம் அடுத்த ஒரு மாசத்துக்கு நானே சமையலுக்கு சார்ஜ் எடுத்துக்கறேன்! ஓகே?" என்று சொன்ன போது,

"இருக்கட்டும்! இந்த பத்து நாளாதான் தினமும் நல்ல சமையல் சாப்பிடறேன்!" என்று வழக்கம் போல அவளைக் கேலி செய்தாலும், தன் பிறந்த நாளைப் பற்றி ஏதாவது பேசுவாளோ என்ற எதிர்பார்ப்புடன் இருந்தவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது!

"சரி... நான் போய் தூங்கறேன்! காலையில் சீக்கிரமே கிளம்பணும்!" என்று சொல்லி விட்டு மனைவி படுக்கச் சென்றதும், "பச்! அவளுக்கு என் பிறந்த நாள் என்பது நினைவே இல்லை!" என்ற வருத்ததுடன் அவனும் வந்து படுத்தான்.

* * *

"இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!"

காலையில் எழுந்ததும், புன்னகையோடு வாழ்த்திய மனைவியைக் கண்டதும் விழிகள் விரிய வேகமாக எழுந்து அமர்ந்த ஆகாஷுக்கு தான் காண்பது கனவோ என்று தோன்ற, விழிகளைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தான்.

"என்ன ஆச்சு? இன்னும் தூக்கம் கலையலையா?" என்று கேட்ட படியே அருகில் வந்த ப்ரியா, அவனது கையைப் பிடித்து எழுப்பி, "போ... சீக்கிரம் போய் குளிச்சிட்டு வா கோயிலுக்கு போகலாம்!" என்று அவனை குளியல் அறைக்குள் தள்ள, ஆச்சரியத்துடன் உள்ளே போனவன், குளித்து விட்டு வந்த போது, மேலும் ஆச்சரியம் காத்திருந்தது!

அவனுக்கு மிகவும் பிடித்த வண்ணத்தில் புதிய சட்டை, பேண்ட் என்று கையில் வைத்துக் கொண்டு நின்றவளைக் கண்டதும், வாயைப் பிளந்தவனைப் பார்த்து,

"பார்த்து! நீ வாயைத் திறக்கிற ரேஞ்சுக்கு, உள்ளே டைனோசரே போகலாம் போலிருக்கு!" என்று அவள் கேலி செய்தாள்.

"எனக்காக வாங்கினாயா ப்ரியா?" என்றவன் குரல் நெகிழ்ந்து போயிருந்தது.

"இல்லை! எங்க அப்பாக்கு வாங்கினேன்! இந்த மாதிரி ஜீன்ஸ், ஷர்ட் எல்லாம் நான் போடமாட்டேன்மா என்று அவர் சொல்லிட்டாரா! அதான் உனக்கு கொடுத்துடலாம்னு நினைச்சேன்!"

தான் அவளது பிறந்த நாளுக்கு பரிசு வாங்கியதை, நேரிடையாக சொல்லாமல் இருந்ததை கேலி செய்கிறாள் என்று புரிந்து அவனுக்கும் புன்னகை மலர்ந்தது!

"பிடிச்சிருக்கா?" என்று ஆர்வத்துடன் வினவியவளைக் கண்டதும், அவனுக்கு ஆனந்தக் கண்ணீரே துளிர்க்கும் போலிருந்தது!

வெறும் வாழ்த்தே அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்க, இப்போது இந்தப் பரிசு, அவனை மகிழ்ச்சி கடலில் மூழ்கி முத்தெடுக்க வைத்தது!

ப்ரியா அவசரப் படுத்த வேகமாக அவள் கொடுத்த உடையை அணிந்து கொண்டு வந்தவன், ''தேங்க்ஸ் ப்ரியா!'' என்று நன்றி சொல்லி விட்டு உடை மாற்றிக் கொண்டு வந்தவன், ''நல்லா இருக்கா ப்ரியா?'' என்று ஆவலுடன் வினவ, ஏறிட்டு அவனைப் பார்த்தவளுக்கு அவள் வாங்கி வந்திருந்த அடர் நீல நிற ஜீன்சும், சிவப்பும், நீல நிறமும் கலந்த டீ-ஷர்ட்டும், அவனது வசீகரத்தை மேலும் அதிகப்படுத்தி இருந்ததைக் கண்டு ஒரு கணம் மனம் தடுமாறித் தான் போனாள்.

தன்னை மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, 'இதென்ன? இத்தனை நாள் பார்த்த முகம் தானே? இப்போது மட்டும் ஏன் இப்படி பார்த்துக் கொண்டு நிற்கிறேன்?' என்று தோன்ற தடுமாறும் மனதுக்கு கடிவாளமிட்டு, ''நான் வாங்கினதாச்சே! நல்லாத்தான் இருக்கும்!'' என்று இல்லாத காலரைத் தூக்கி காட்டி, இயல்பாக சொல்வது போல சொல்லி விட்டு, அவனிடம் இருந்து பார்வையைத் திருப்பினாள்.

''கிளம்பலாமா? கோவில் போயிட்டு வந்து நீ ஆபீஸ் கிளம்ப சரியா இருக்கும், ப்ரியா!''

''இன்னைக்கு நான் லீவ்! கோவிலுக்கு போயிட்டு உங்க வீட்டுக்கு போயிட்டு, அப்படியே எங்க வீட்டுக்கு போயிட்டு, மத்தியானம் வந்துடலாம். சாயந்திரம் நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் நம்ம வீட்டில் விருந்து!''

மனைவி அன்றைய நிகழ்ச்சி நிரலை பட்டியலிட, ஆகாஷ் மேலும் வாயைப் பிளந்தான்!

''முக்கியமான வேலை நடந்துட்டு இருக்கிற நேரத்தில் லீவ் போடறயா?''

ஆச்சரியத்துடன் வினவியதும், ''பத்து நாளா உட்கார கூட நேரம் இல்லாமல் ஓடியாச்சு! அதான் இன்னைக்கு ஒரு நாள் லீவு எடுத்துட்டேன்! என்ன நீ? உன் பிறந்த நாளுக்காக உன் கூட டைம் ஸ்பெண்ட் செய்யணும் என்று லீவ் போட்டால், கேள்வி கேட்டுட்டு இருக்கே?'' என்று புகார் படித்தவள், ரேகாவுக்கும் ஆனந்துக்கும் மாலை விருந்துக்கு, கைப்பேசியில் அழைப்பு விடுத்தாள்.

கோவிலுக்கு சென்று, இரு அன்னைமார் வீட்டுக்கும் சென்று விட்டு, வீட்டுக்கு வந்து அரை மணி நேரம் ஓய்வு எடுத்த பிறகு, மூன்று மணி அளவில் சமையலைப் பார்க்க கிளம்பியவளிடம், ''வெளியில் ஆர்டர் செஞ்சுக்கலாம் ப்ரியா. உனக்கு ரொம்ப நாளா ஓய்வே இல்லை! இன்னைக்கு ஒரு நாள் ரெஸ்ட் எடு!'' என்று ஆகாஷ் வற்புறுத்தினான்.

''ரெஸ்ட் என்றால், வேலை செய்யாமல் இருக்கணும் என்பதில்லை எப்பவும் செய்யற வேலையில் இருந்து மாறுபட்டு ஏதாவது செய்யறதுதான்!''

''நம்ம ரெண்டு பேர் வீட்டிலுமே, எல்லாருக்கும் வீட்டில் செய்யற உணவுதான் பிடிக்கும்!''

''அதுவும் இல்லாமல், இந்த அம்மாவும் ரேகாவும் நான் என்னதான் சொன்னாலும், நான் நல்லா சமைக்கிறேன் என்பதை நம்பவே மாட்டேங்கிறாங்க. இன்னைக்கு அவங்களுக்கு என் சமையல் திறமையை நிரூபிச்சே ஆகணும் என்று கங்கணம் கட்டி இருக்கேன்!''

''நீ பயப்படாதே! நா எப்படி கில்லி மாதிரி சமைக்கிறேன் என்று மட்டும் பாரு!''

வளவளவென பேசியபடியே, சமையலுக்குத் தேவையான பொருட்களை எடுத்து வைத்து கொண்டிருந்தவள் அருகில் "சரி... இரு... நானும் வரேன்! எப்போதும் போல சேர்ந்தே சமைக்கலாம்!" என்று சொல்லிக் கொண்டே வந்தவன், சட்டென்று அவள் திரும்பியதும், அவள் மேல் மோதி நின்றான்.

மனைவியின் ஸ்பரிசம் எப்போதும் போல உடலோடு மனதையும் சிலிர்க்க செய்ய, ப்ரியாவுக்குள்ளும் அதே சிலிர்ப்பு ஓடி, அவளை நின்ற இடத்திலேயே உறைய வைத்தது.

சற்று நேரம் கழித்து, "சாரி..." இருவரும் ஒரே சமயத்தில் சொல்லி, விலகி நின்றனர்.

இது நாள் வரை, சேர்ந்து சமையல் செய்வதென்பது, அவர்களுக்குள் வழக்கம்தான் என்றாலும், ப்ரியாவின் மனதில் புதிதாக தோன்றி இருந்த சலனம், அவளை அவன் உதவியை மறுக்க வைத்தது.

இன்று வேறு எந்த குழப்பமும் சலனமும் இல்லாமல், இனிமையாக நாளை கழிக்க வேண்டும் என்று எண்ணி இருந்ததை மனதில் நிறுத்தி, "நோ... இந்த அம்மா எப்ப பாரு நான் சமைச்சேன் என்று சொன்னால் கூட, ஆகாஷ் தம்பியும் நீயும் சேர்ந்துதானே சமைச்சீங்க? என்று கேட்டு கேட்டே என்னை டென்ஷன் செய்யறாங்க! சோ, இன்னைக்கு எல்லாமே நானேதான் செய்ய போறேன்!" என்று கண்டிப்புடன் மறுத்தவளிடம்.

"ப்ரியா... இது வரைக்கும் நம்ம ரெண்டு பேருக்கு சமைச்சுருக்கே! இப்போ எட்டு பேருக்கு சமைக்கணும்! நேரம் ஆகும்! நானும் வரேன், இல்லைன்னா வீட்டில்

சமைக்க வேண்டாம்! வெளியில் ஆர்டர் கொடுத்துக் கலாம்!" அவனும் சற்றே கண்டிப்பாக சொல்லவும்.

"தனியா பேர் வாங்க விட மாட்டாயே!" என்று அலுத்துக் கொண்டாலும், அவளும் சரியென்று சம்மதித்தாள்.

"என்ன மெனு?"

"சிம்பிள் மெனுதான்! வெஜ் புலாவ் ஆனியன் ராய்தா, சப்பாத்தி, பாலக் பனீர் காலி ப்ளவர் மஞ்சூரியன்! ஸ்வீட்! அவ்வளவுதான்!"

"இது சிம்பிளா உனக்கு? வர வர உன் லொள்ளு தாங்கலை..." என்று அலுத்துக் கொண்டாலும், இருவரும் சேர்ந்து சுவாரசியமாக பேசியபடி, அடுத்தவரது அருகாமையை ரகசியமாக ரசித்து கொண்டு உற்சாகத்துடன் சமைக்க ஆரம்பித்ததில், வேலை எளிதாகவே முடிந்தது!

எல்லாவற்றையும் செய்து ஹாட் பேக்கில் எடுத்து வைத்ததும், கடைசியாக சப்பாத்திக்கு மாவைப் பிசைந்து கொண்டிருந்த ப்ரியாவைக் கண்ட ஆகாஷ், "ப்ரியா, இங்கே எதோ இருக்கு!" என்று அவளது கன்னத்தைச் சுட்டிக் காட்டி சொல்ல,

"என்ன?" என்றபடி, ப்ரியா தனது இடது கன்னத்தைத் தடவிப் பார்க்க,

"அங்கே இல்ல, இந்த பக்கம்!"

அவள் வலது கன்னத்தை தடவியதும், ஆகாஷ் முகத்தில் புன்னகை மலர்ந்தது!

"ஹே! என்ன? ஒரு மாதிரி சிரிக்கிறே?" என்று சந்தேகத்துடன் கேட்ட ப்ரியாவைக் கண்டதும், அவனது

அவன் என்ன செய்தான் என்பது புரிந்து, ''ஹே... உன்னை... வேணும்னே செஞ்சாயா?'' என்று செல்லமாக முறைத்தவளிடம்,

''இல்ல ப்ரியா! நீ சமைக்க ஆரம்பிச்ச புதிசில், நீ சமைக்கிறே என்பதற்கு அடையாளமா உன் முகத்தில், கையில் என்று ஏதாவது இருந்து கொண்டே இருக்கும் பழைய ப்ரியாவை பார்க்கணும் என்ற ஆசையில் அப்படி சொன்னேன்!'' என்று ஆகாஷ் கண் சிமிட்டினான்.

''ரொம்பத்தான்!'' என்று முறைத்தாலும், ''பிறந்த நாள் அதுவுமா திட்ட வேண்டாம் என்று பார்க்கிறேன். பிழைச்சு போ! ஒழுங்கா துடைச்சு விடு!'' என்றவள், அடுத்து வந்த நொடிகளில், 'ஏண்டா அவனைத் துடைத்து விடச் சொன்னோம்?' என்று தவித்துப் போனாள்.

அவன் அருகில் வந்து மெதுவாக துடைத்து விட ஆரம்பித்ததும், அவனது ஸ்பரிசம் தந்த தடுமாற்றம், நேற்று வரை அவள் அறியாதது!

இதற்கு முன் அவன், அவளைத் தொட்டுப் பேசியதே இல்லையா என்ன? அப்போதெல்லாம் தோன்றாத தடுமாற்றம். இப்போது மட்டும் என்ன? அவன் அருகாமை, தனக்கு சந்தோஷத்தையும், சங்கடத்தையும் ஒரு சேரத் தருவதை ஆச்சரியத்துடன் உணர்ந்து, தன் தடுமாற்றத்தை மறைத்துக் கொள்ள வெகுவாக முயன்றவளது கண்கள் தாமாக மூடியது.

மனைவியின் தடுமாற்றத்தை உணராமல், வெகு அருகில் தெரிந்த மனைவியின் முகத்தை ரசித்த படி ஆகாஷ் அதிக நேரம் எடுத்து மெதுவாக துடைத்து விட, ''அட... நீ கண்ணைத்

துடைக்கிற நேரத்தில், நான் மாவைப் பிசைந்து சப்பாத்தி இட்டே முடிச்சிடுவேன் போல!'' என்று தடுமாறிய தன் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு, அலுப்பாக சொல்வது போல, ப்ரியா குரல் கொடுத்தும் தான் அவசரமாக, தன் நிலைக்கு வந்து அவன் விலக, ப்ரியாவுக்கும் இயல்பாக மூச்சு விட முடிந்தது.

கொஞ்ச நேரத்தில் மீதி இருந்த வேலையும் முடிந்து விட, ''எல்லாம் முடிஞ்சுது நான் போய் ஸ்வீட் மட்டும் வாங்கிட்டு வந்துடறேன்!'' என்று ஆகாஷ் கிளம்ப,

''இரு... இரு...'' என்று அவனைத் தடுத்தவள், ''என்ன ஸ்வீட் வாங்க போறே?'' என்று விசாரிக்க,

''எனக்கு பிடிச்ச ரசமலாய்! உனக்கு பிடிச்ச காஜூ கத்திலி! நம்ம வீட்டில் எல்லாருக்கும் இந்த ஸ்வீட் பிடிக்கும்!'' என்றவனிடம்.

''நீ கண்ணை மூடிட்டு இங்கேயே நில்லு! நான் வந்து சொல்லும்போதுதான் திறக்கணும்!'' என்று கட்டளை இட்டு விட்டு உள்ளே சென்றாள்.

அவள் சொன்னபடி உடனே கண்ணை மூடிக் கொண்டாலும், ''ப்ரியா... எதுக்கு கண்ணை மூட சொன்னே?'' என்று வினவ.

''வந்து சொல்றேன்! நீ அப்படியே இரு!'' என்று பதில் சொன்னவள், கையில் ஒரு சிறிய கிண்ணத்துடன் திரும்பி வந்தாள்.

கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும். ஆவல் நிறைந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தவனின் அருகில் வந்தவள், ''வாயைத் திற!'' என்று சொல்ல, ''என்ன ப்ரியா? சொல்லேன்!'' என்று சொல்ல முயன்றவனின் வாயில் இனிப்பு ஊட்டப்பட்டது.

பட்டென்று கண்ணைத் திறந்தவன் கண்களில், ப்ரியாவின் கையில் இருந்த கிண்ணத்தில் இருந்த ரசமலாய் பட, ஹே... நீ ஏற்கனவே வாங்கிட்டு வந்துட்டியா? சொல்லவே இல்ல?'' என்று ஆச்சரியப்பட்டான்.

''வாங்கிட்டு வந்ததா? நானே செஞ்சேனாக்கும்!''

''ஜோக் அடிக்காதே ப்ரியா!''

ஆகாஷின் புன்னகை, தான் சொன்னதை அவன் நம்பவில்லை என்பதை உணர்ந்த, ''சத்தியமா ஆகாஷ்! நானே தான் செஞ்சேன்!'' என்று அவள், அவனது தலையில் கை வைக்க,

''அடிப்பாவி! பிறந்த நாள் அதுவுமா என் தலை மேல் சத்தியம் அடிச்சு, என்னை காலி பண்ண பார்க்கிறே பார்த்தியா!'' என்று பயப்படுவது போல, அவன் ஓரடி பின்னே நகர்ந்தான்.

''சரி! என் மேல் சத்தியம்! போதுமா!'' என்று ப்ரியா தன் தலையில் கை வைத்ததும், ''ப்ரியா!? எதுக்கு தலையில் அடிச்சு சத்தியம் எல்லாம்?'' என்று வேகமாக அவளது கையை தலையில் இருந்து நகர்த்தியவன், அவளது கையில் இருந்த கிண்ணத்தை வாங்கி மேலும் ஒரு ரசமலாயைக் காலி செய்தான்!

தான் செய்த இனிப்பை, அவன் ரசித்து ருசித்து உண்பதைக் கண்டதும், அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

''சூப்பரா இருக்கு ப்ரியா? எப்போ செஞ்சே?''

ஆச்சரியம் விலகாமல் கேட்டவனைப் பெருமிதமாக பார்த்துக் கொண்டே, ''நேற்று நைட் நீ தூங்கின பிறகு!'' என்று கண்ணை சிமிட்டினாள்.

''ஓ! அதான் காலையில் இருந்து என்னை ஃபிரிட்ஜ் பக்கமே போக விடலையா நீ?'' என்றவனுக்கு உண்ட இனிப்பின் சுவை நாக்கில் தித்தித்ததை விட, மனைவி தனக்காக தனக்கு பிடித்த இனிப்பை சிரமம் பார்க்காமல் செய்திருக்கிறாள் என்ற நினைப்பு உள்ளத்தில் இனிமையாக தித்தித்தது!

'நல்லா இருக்கா? நானே இப்போதான் சாப்டுடறேன்!'' என்று அவன் கையில் இருந்த கிண்ணத்தைப் பிடுங்கி, ஒரு ரசமலாயை எடுத்து உண்டு கொண்டே வினவியவள்.

''காலையிலேயே கொடுத்திருப்பேன்! ஈவ்னிங் பார்ட்டி அப்போ சர்ப்ரைசா இருக்கணும் என்று விட்டுட்டேன். எப்படியும் காலையில் ஆன்ட்டி உனக்காக ஏதாவது ஸ்வீட் செஞ்சு கொடுப்பாங்கன்னு தெரியும். இப்போ திடீர்னு ஒரு டவுட்! நல்லா வந்திருக்கோ என்னமோ என்று! அதான் உன்னை வைச்சு டெஸ்ட் செஞ்சிடலாம்னு'' என்று சொல்லிக் கொண்டே வர,

ஆகாஷ் இன்னும் தன் உள்ளப் பூரிப்பில் இருந்து வெளியே வரவில்லை.

''அடிப்பாவி! நான்தான் பலிகடாவா? என்னை வச்சு டெஸ்ட் செய்ய பார்த்தியா?'' என்று அலறுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்க, கண்களில் கனவு மிதக்க மந்தகாச புன்னகையுடன் ஆகாஷ் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும்,

இவனுக்கென்ன வந்தது! தனக்குத்தான் நேற்றில் இருந்து குழப்பம் எல்லாம்! என்று யோசித்தவள்.

அவன் முகம் எதிரே தன் கை விரல்களால் சொடக்கு போட்டு, ''வேற என்ன? நான் செஞ்ச இனிப்பை

சாப்பிட்டு அப்படியே மயங்கி நின்னுட்டியா?'' என்று கேலியுடன் வினவ,

அவளது கேள்வியில் தன் நிலைக்கு மீண்டும் வந்த ஆகாஷ், ''உண்மையிலேயே மயங்கித்தான் போயிட்டேன்!'' என்று மனைவியின் மதி முகத்தை ரசித்து பார்த்த படி சொல்ல, அவனையும் மீறி குரலில் மென்மையும் மயக்கமும் படர்ந்திருந்ததை ப்ரியா உணரும் முன், வாயில் மணி ஒலித்தது!

''ஆன்ட்டி வந்துட்டாங்க என்று நினைக்கிறேன்!''

ஓடிச்சென்று கதவைத் திறந்தவள், தேவகியையும் ரவிச்சந்திரனையும் உற்சாகத்தோடு வரவேற்றாள்.

ப்ரியா செய்திருந்த ஏற்பாட்டை எல்லாம் கண்ட தேவகி, ''ப்ரியா... உணவு வெளியே ஆர்டர் செஞ்சிருப்பீங்க என்று நினைச்சேனே?'' என,

''பயப்படாதீங்க ஆன்ட்டி என் சமையல் நல்லாவே இருக்கும்! இந்த டிஷஸ் எல்லாம் ஏற்கனவே சில முறை செஞ்சு, ஆகாஷை வைச்சு டெஸ்ட் செஞ்சிருக்கேனாக்கும்!'' என்று கண் சிமிட்டினாள்.

''வாலு! நீ செஞ்சது எப்படி இருந்தாலும் நாங்க சாப்பிடுவோம்! நீ இவ்வளவு செய்யறே என்று சொல்லி இருந்தால், நானும் வந்து உதவி செஞ்சிருப்பேன் இல்ல? தனியா எதுக்கு கஷ்டப்படணும்?'' என்று அக்கறையாக வினவியவரிடம்,

''கஷ்டமெல்லாம் இல்ல ஆன்ட்டி! இஷ்டப்பட்டுதான் செஞ்சேன்! அதுவுமில்லாமல், எனக்குதான் அசிஸ்டென்ட் இருக்காரே!'' என்று ஆகாஷை சுட்டிக் காட்ட,

அன்னையையும் தந்தையையும் வரவேற்ற ஆகாஷ், ''எல்லாம் என் நேரம்! இவளுக்கு சமையல் சொல்லித் தந்ததே நான்தான்! இப்ப பாருங்க நான் அவளுக்கு அசிஸ்டென்டாம்!'' என்று ஆகாஷ் அலுத்துக் கொள்ள, அவனைப் பெற்றவர்கள் இருவரும் சிரித்தனர்.

''என்னடா செய்யறது இவங்க எல்லாம் குருவை மிஞ்சுகிற சிஷ்யைகளாக இருக்காங்களே?''

ரவிச்சந்திரன் அங்கலாய்க்க, ''நீங்க எதுக்கு நடுவில பூந்து சலிச்சுக்கறீங்க? பச்சை தண்ணீர் பச்சை கலர்ல இருக்கும்! சுடு தண்ணீர் எந்த கலர்ல இருக்கும்னு கேட்கிற அளவுதானே உங்க சமையல் திறமை!'' என்று தேவகி அவரது காலை வாரினார்.

''அங்கிள்! உங்களுக்கு இது தேவையா?'' என்று ப்ரியா கலகலவென நகைக்க, ஆகாஷின் பார்வை மீண்டும் மனைவியிடம் பதிந்தது.

'சும்மா இருந்தாலே, நான் விடுகிற ஏக்க பெரு மூச்சின் சூட்டில் ஜுரம் வந்துடும் போல! இவள் வேற இப்படி சிரிச்சு சிரிச்சே என்னை கொல்றாளே!' என்று மனதில் புலம்பிக் கொண்டவன், பிரயத்தனப் பட்டு தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினான்.

''ஆன்ட்டி, நீங்க இங்கே உட்காருங்க! நான் போய் டிரஸ் மாற்றி விட்டு வந்துடறேன்!''

ப்ரியா உள்ளறைக்கு செல்ல, தேவகியின் முகம் மருமகள், தன் பிள்ளையின் பிறந்த நாளுக்காக செய்திருந்த ஏற்பாட்டை எல்லாம் பார்த்து பெருமிதத்தில் ஒளிர்ந்தது.

அந்த ஏற்பாட்டை விட, மகனின் முகத்தில் இருந்த பூரிப்பு, அன்னையாய் அவரை மகிழ்ச்சி கொள்ள

கொஞ்ச நேரத்தில், முத்துக்குமரனும் - வசந்தியும் வந்து விட, அவர்களைத் தொடர்ந்து ஆனந்தும் ரேகாவும் வந்து சேர்ந்தனர்.

இள மஞ்சள் நிற ஷிபான் புடவை அணிந்து, அவளது பிறந்த நாளுக்கு தான் வாங்கி கொடுத்த முத்துக்கள் பதித்த அணிகலன்களை அணிந்து வந்த மனைவியைக் கண்ட ஆகாஷுக்கு மூச்சடைத்தது. கண்கள் அவளை விட்டு அங்கே இங்கே நகர மாட்டேன் என்று அடம் பிடித்தது!

தன் அலங்காரத்துக்கு ஆகாஷின் எதிரொலி எப்படி இருக்கும் என்று யோசித்தபடியே வரவேற்பறைக்கு வந்த ப்ரியாவை, ''என்னடி? புடவை எல்லாம் கட்டி இருக்கே?'' என்று ஆச்சரியத்துடன் ரேகா வினவ,

ஆகாஷ் பக்கம் திரும்பத் துடித்த விழிகளை அடக்கியபடி, ''ஆகாஷ் வாங்கி கொடுத்த இந்த பேர்ல் செட் எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது! அதான், இதுக்கு மேட்ச் ஆகற மாதிரி இந்த புடவையை எடுத்து இன்னைக்கு கட்டிக்கலாம்னு தோணுச்சு!'' என்று ப்ரியா பதில் சொன்னதைக் கேட்டவனுக்கு, ஏற்கனவே இருந்த மயக்கம் மேலும் அதிகமாகி, கால் தரையில் பட மறுத்தது!

''டேய்! நீ வாங்கி தந்த நகைதானே பிடிச்சிருக்குன்னு சொன்னாள். என்னமோ உன்கிட்ட ஐ லவ் யூ சொல்லிட்ட மாதிரி ஃபீல் ஆகறே?'' என்று கேள்வி கேட்ட மனசாட்சியை அவன் கண்டு கொள்ளவே இல்லை!

ரேகாவிடம் பதில் சொல்லி விட்டு ப்ரியா தன் பார்வையைத் திருப்பிய போது, ''போதுண்டா... உன் பொண்டாட்டி மேல் ஃபெவிகால் போட்டு ஒட்டி இருக்க

கண்ணை, கொஞ்சம் பிச்சு எடுத்து எங்க மேலயும் வை!'' என்று ஆனந்த் மெல்லியக் குரலில் கேலியாக சொன்னதால், ஆகாஷும் பார்வையை மனைவியின் மீதிருந்து திரும்பி இருந்தான். ப்ரியாவின் மனதில் ஏமாற்றத்தில் சூழ்ந்தது.

ஆனால், அதிலேயே மூழ்கி இருக்க விடாமல், வாயில் மணி ஒலித்தது!

கதவைத் திறக்க சென்ற ஆகாஷைத் தடுத்து விட்டு ப்ரியா போக, திரும்பி வரும்போது அவள் கையில் இருந்த பெட்டியைக் கண்டதும், அது கேக் என்று புரிய, ஆகாஷ் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனான்.

''இன்னும் வேற ஏதாவது சர்ப்ரைஸ் இருக்கா ப்ரியா?''

''ம்... ரொம்ப ஆசைப் படாதே! இதோட இன்றைய ஆச்சரியங்கள் முடிந்தது!''

அமர்த்தலாக அறிவித்து விட்டு, கேக்கை மேஜையில் வைத்தவள், அவனைக் கூப்பிட்டு வெட்டச் சொல்ல, குடும்பத்தினரின் வாழ்த்துக்களோடு ஆகாஷ் கேக்கை வெட்டினான்.

கேக்கை வெட்டியவனுக்கு முதலில் மனைவிக்கு ஊட்ட வேண்டும் என்பதுதான் ஆசை!

தயக்கமாக இருக்கவே, அன்னைக்கு கொடுக்க முயன்றவனை, ''முதல்ல ப்ரியாவுக்கு கொடுடா!'' என்று தேவகி சொல்லி விட, மகிழ்ச்சியுடன் மனைவி புறம் திரும்பியவன், ஊட்ட வந்த பின்பு தயங்கி கையில் கொடுக்க முயல,

''நோ... ஊட்டி விடு!'' என்று ஆனந்த குரல் கொடுக்க, அப்போதும் அவன் தயங்கி நிற்கவே, ''மனசு வருதா

பாரு!'' என்று செல்ல முறைப்புடன் அவனது கையைத் தன் வாயருகே இட்டுச் சென்று ஊட்ட வைத்த ப்ரியா, தான் கொஞ்சமாக கேக்கை கடித்து விட்டு, அவளையும் அறியாமல், அவனுக்கும் அதையே ஊட்ட, அதை சுவைத்த ஆகாஷுக்கு, அமிர்தத்தின் சுவை கூட இப்படி இருக்காது என்று தோன்றியது.

சிறிது நேர கலகலப்பான பேச்சுக்கு பிறகு, உணவு மேஜைக்கு ரேகாவும் ப்ரியாவும் உணவை எடுத்து வர, ''எல்லாம் ப்ரியாவே செஞ்சுருக்கா!'' என்று தேவகி பெருமிதமாக சொல்ல, வசந்திக்கு ஆச்சரியத்தில் வாயடைத்து போனாலும்,

''ஆகாஷ் தம்பியும் கூட செஞ்சிருக்கும்!'' என்று கூற,

''அவன்...'' என்று தொடங்கியவள், தொண்டையைச் செருமிக் கொண்டு, ''அவர் சும்மா எடுபிடி வேலை மட்டும் தான் செஞ்சார். நான் தான் எல்லாம் செஞ்சேன்!'' என்று ரோஷத்துடன் சொன்ன ப்ரியா, ''சொல்லேன் ஆகாஷ்!'' என்று மிரட்ட,

பயந்த பாவனையுடன், ''ஆமா... ஆமா... ப்ரியாதான் எல்லாம் அவளே செஞ்சதா சொல்ல சொன்னாள்!'' என்று ஆகாஷ் சொன்ன பாவனையில் அனைவரும் கலகலத்து சிரிக்க,

''இதுக்கு நீ சொல்லியே இருக்க வேண்டாம்!'' என்று உரிமையுடன் அவன் விலாவில் தன் கையை வைத்து லேசாக குத்தியவளைக் கண்டு புன்னகைத்தவள், வசந்தியிடம் திரும்பி,

''நீங்க அவள் சமையல் செஞ்சதா சொன்னால் நம்ப மாட்டேங்கறீங்க என்று

அதான், இன்னைக்கு உங்களுக்கு நிரூபிக்கணும் என்று அவளே எல்லாத்தையும் செஞ்சுருக்கா!'' என்று உண்மையாகக் கூற, வசந்திக்கும் முத்துக்குமரனுக்கும் தங்கள் பெண்ணை நினைத்து ஒரே பெருமை!

''எல்லாரும் வேண்டியதை எடுத்து போட்டுட்டு சாப்பிட்டுக்கலாம்! நீயும் ரேகாவும் கூட உட்காருங்க!'' என்று பரிமாற வந்த ரேகாவையும் ப்ரியாவையும் தேவகி அமரச் சொல்ல, ப்ரியா ஆகாஷின் அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்த சமயம், அவளது அலைபேசி அழைத்தது,

அழைப்பை எடுக்க போனவளை, ''உட்கார் பானு சாப்பிட்டு விட்டு பேசு!'' என்று வசந்தி தடுக்க, ''இல்லைம்மா... பார்த்துட்டு வந்துடறேன்!'' என்று எழுந்து போய் பேசிய ப்ரியாவின் முகம் மாறியது.

அவளது முக மாற்றத்தைக் கண்டதும், வேகமாக ஆகாஷ் அவள் அருகில் வர, ''நான் உடனே கிளம்பி வரேன்!'' என்று கைப்பேசியில் சொன்ன ப்ரியா, ''சாரி... வெரி சாரி ஆகாஷ்... நான் உடனே போகணும்... நாங்க இப்போ பார்த்துட்டு இருக்கிற முக்கியமான வேலையில் ஒரு முக்கிய தடயம் கிடைச்சிருக்கு, உடனே போகணும்!'' என,

''போகலாம் ப்ரியா... நான் வந்து விடறேன்... வா!'' என்று ஆகாஷ் அழைத்தான்.

''இல்ல... எல்லாரையும் கூப்பிட்டுட்டு நாம ரெண்டு பேரும் கிளம்பிட்டா சரியா இருக்காது. நேஹா பக்கத்தில்தான் இருக்கா. அவளோட போயிக்கறேன். நீ இரு!'' என்று அவனைத் தடுத்தவள், மற்றவர்களிடம் விவரம்

சொல்ல, எல்லாருக்குமே அது வரை இருந்த மகிழ்ச்சியான மனநிலை மாறியது.

"அப்படி என்ன தலை போற வேலை? நாளைக்கு பார்த்துக்கலாம்!" என்று அவளது வேலையின் முக்கியத்துவம் புரியாமல், வசந்தி கோபத்தை அடக்கிக் கொண்டு மகளை அதட்ட, ஆகாஷ்தான் உதவிக்கு வந்தான்.

"கொஞ்ச நேரத்தில் வந்துடுவா அத்தை ரொம்ப முக்கியமான வேலை!" என்று சொல்லி விட்டு, அவளைக் கிளம்பச் செய்தான்.

அனைவரும் உணவை முடித்து கொண்டு கிளம்பி விட, தேவகி மட்டும் மகனோடு அமர்ந்திருந்தார்.

மருமகளின் வேலை பற்றிய நேரத்தை அறிந்திருந்தாலும், இவ்வளவையும் செய்து விட்டு முக்கியமான நேரத்தில் அவள் கிளம்ப நேர்ந்தது அவருக்கும் வருத்தமாக இருந்தது.

இரவு பத்தரை மணி ஆகியும், ப்ரியா வரவில்லை!

"போன் செஞ்சு விசாரி, ஆகாஷ்!" என்றவரின் பேச்சுக்கு இணங்கி ஆகாஷ் ப்ரியாவுக்கு அழைக்க, அவளது கைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

"சரி! அவள் வரும்போது வரட்டும்! நீ சாப்பிடுடா!" என்று மகனிடம் சொன்னவர், "என்னதான் அவள் தைரியமான பெண்ணா இருந்தாலும், நைட் இந்த நேரத்துக்கு வெளியே இருக்கிறதை நினைச்சால் கொஞ்சம் பயமாத்தான் இருக்கு! பாரு... இன்னைக்கு எல்லாம் செஞ்ச எல்லாரையும் சந்தோஷப்பட வைச்சிட்டு, முக்கியமான நேரத்தில் கிளம்பிப் போக வேண்டியதா இருக்கு! கொஞ்சம், நேரத்தோடு பார்க்கிற [illegible]யை

மாற்றிக்க முடியாதாடா? என்னதான் இருந்தாலும் இந்த நேரத்துக்கு மேல் ஒரு பொண்ணு..."

ஒரு அன்னையின் ஆதங்கத்தோடு தேவகி வினவ, "அம்மா... ப்ளீஸ்.. பொண்ணு என்ற ஒரு காரணத்துக்காக அவளுக்கு பிடிக்கிறதை செய்யக் கூடாது என்று சொல்றது எனக்கு ரொம்ப அபத்தமா தெரியுது. அவளுக்கு தன்னை பாதுகாத்து கொள்ள தெரியும்! வெளியே போனாதான் பிரச்சனையா? வீட்டில் இருந்தா கூட பிரச்சனை வருது" என்றவன்.

அன்னையின் கவலை படிந்த முகத்தைக் கண்டதும், அவர் அருகில் வந்து அவரது கையைப் பற்றிக் கொண்டு,

"ப்ரியா ரொம்ப தைரியசாலிம்மா... வேகம் இருக்கிற அளவுக்கு அவள்கிட்ட விவேகமும் இருக்கு. அதனால், நீங்க ரொம்ப கவலைப் படாதீங்க," என்று ஆறுதலாகக் கூற,

"என்னமோப்பா... உங்க ரெண்டு பேர் மேல் இருக்கிற அக்கறையில்தான் சொன்னேன். மற்ற படி அவள் வீட்டிலேயே அடைஞ்சு கிடைக்கணும் என்று நானும் நினைக்கலை!" என்று தேவகியும் ஆகாஷும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த ப்ரியாவுக்கு, ஆகாஷ் தனக்காக அன்னையிடம் பேசிய வார்த்தைகளைக் கேட்டு மனம் நெகிழ்ந்து போனது.

ஓடிப் போய், ஆகாஷை அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றிய உந்துதலை உணர்ந்து, அதிர்ந்து போய் நின்றவள், அந்த ஆவலை வெகு பிரயத்தனப் பட்டு அடக்கினாள்.

இதற்கு முன்பு ஒரு முறை, அவனை தான் அணைத்தது நினைவுக்கு வந்தது. அப்போது தாய் மடி தேடும் கன்றின் மன நிலை மட்டுமே இருந்தது! மனதில் வேறு எந்த எண்ணமும் இல்லை! அதனால், அதை எந்த உறுத்தலும் இன்றி அவளது மனதை வெளியிட முடிந்தது!

ஆனால் இப்போது? அவள் மனதில் குழப்பமும் சலனமும் நிறைந்திருக்க, தானே தன் மனதை முழுமையாக உணர முடியாத நிலையில் இருக்கிறாளே!

அவள் உள்ளே செல்லாமல் யோசனையுடன் நின்றிருக்க, ஆகாஷ்தான் முதலில் ப்ரியாவைப் பார்த்தான்.

"வா ப்ரியா வா... போன வேலை முடிஞ்சுதா?"

அவள் வார்த்தையேதும் இல்லாமல் தலையாட்ட, "வா... ரொம்ப டயர்டா இருக்கே! சாப்பிடலாம்!" என்று அழைத்தவனிடம்,

"நீ சாப்பிடலையா?" என்றாள்.

"இல்ல, எனக்கு அப்போ பசிக்கலை. அதான் உன் கூட சாப்பிடலாம்னு காத்திருந்தேன்!" என்றான்.

தேவகியும், "நீங்க சாப்பிடுங்க நாங்க கிளம்பறோம்!" என்று சோபாவில் அமர்ந்த படியே உறங்கி கொண்டிருந்த ரவிச்சந்திரனை எழுப்பப் போனார்.

ப்ரியா, "இருங்க ஆன்ட்டி! லேட் ஆகிடுச்சே! நாளைக்கு போங்களேன்!" எனத் தடுக்க முயன்றாள்.

"இல்ல ப்ரியா ஆட்டோவில் போனால் பத்து நிமிஷம் தானே, நாங்க கிளம்பறோம்!" என்று இருவருக்கும் தனிமை கொடுக்க எண்ணி கிளம்பினார்.

அவர்கள் சென்றதும் இருவரும் அமைதியாக உண்டு முடித்தனர்.

"சாரி ஆகாஷ் ரொம்ப முக்கியமான வேலை... அதான்!" என்று ப்ரியா மன்னிப்பு வேண்ட,

"ஹே! ப்ரியா! என்ன ஆச்சு? எதுக்கு இப்போ சாரி எல்லாம் கேட்கிறே?" என்ற ஆகாஷுக்கு அவள் வருந்துவது வருத்தம் தர,

"இன்றைக்கு மாதிரி எந்த பிறந்த நாளும் நான் கொண்டாடினதே இல்ல தெரியுமா? நிறைய சர்ப்ரைசஸ்! நிறைய சந்தோஷம்! இதுக்கெல்லாம் நான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும் என்று நினைச்சிட்டு இருந்தா, நீ சாரி கேட்கிறே! வா... இன்றைக்கு உனக்கு நிறைய வேலை. வந்து படு!" என்று அவளை அழைத்தவன்,

"ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் ப்ரியா!" என்றான்.

"எத்தனை முறை சொல்லுவ? எனக்கும் இந்த மாதிரி செஞ்சது எல்லாம் ரொம்ப பிடிச்சுது தெரியுமா? கடைசியில்தான் சொதப்பிடுச்சு!" என்றவள் மீண்டும் வருந்த,

"ப்ச் அதையே திரும்ப திரும்ப சொல்லி வருத்திக்காதே! நம்ம குடும்பத்தில் உள்ளவங்க மட்டும்தானே. அவங்களுக்கு புரியும்!" என்று சொல்லி அவளைத் தேற்ற,

"தேங்க்ஸ் ஆகாஷ்!" என்பது அவள் முறை ஆயிற்று.

"எதுக்கு? நீ மோசமா செஞ்ச ஸ்வீட்டை கூட சூப்பரா இருக்குன்னு சொன்னதுக்கா?" என்று அவளது மன நிலையை மாற்ற எண்ணியவன் அவளைச் சீண்ட,

புன்னகையுடன், ''எல்லாத்துக்கும்!'' என்று விட்டு கண்களை மூடியவள், அடுத்த நொடியே களைப்பில் உறங்கிப் போனாள்.

அவள் உறங்கியதும், எப்போதும் போல் விடிவிளக்கின் வெளிச்சத்தில் மனைவியை ரசித்துக் கொண்டிருந்த ஆகாஷின் மனதில், அவள் மனதிலும் மாற்றம் வரும் என்ற நம்பிக்கை வலுக்க, அந்த நம்பிக்கை தந்த மகிழ்ச்சியில் அவனும் புன்னகையுடன் உறங்கினான்.



15

நேற்று ஆகாஷ் தனக்காக அவனது அன்னையிடம் பேசியதைக் கேட்டதும், அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றிய உந்துதலை அப் போதைக்கு அடக்கிக் கொண்டாலும், அந்த ஆவல் காலையில் எழுந்ததில் இருந்தே நொடிக்கு நொடி கட்டுக்கடங்காமல் பெருகுவதை உணர்ந்த ப்ரியாவுக்கு தன் மனம் ஆகாஷின் பால் சாய்ந்து விட்டது என்பதைத் தெளிவாக உணர முடிந்தது.

ஆனால்... தன் காதலை உணர்ந்த பிறகும், ப்ரியா தன் மனதை அவனிடத்தில் வெளிப்படுத்துவதில் அவசரம் காட்டவில்லை!

தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கத் துவங்கிய காலத்தில் இருந்தே, திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது அவள் மனதில்

ஆகாஷ் மேல் தான் கொண்டிருக்கும் காதல் மட்டும், அவர்களது ஒப்பந்த திருமணத்தை, உண்மையான திருமணமாக மாற்ற போதுமா? என்பதுதான் அவளது மனதில் புதிதாக முளைத்திருக்கும் சந்தேகம்!

எந்த வேலையைச் செய்தாலும், அதற்கு தன்னுடைய 100 சதவீதத்தைத் தர வேண்டும் என்று எண்ணுபவள் அவள்!

திருமணத்தில் இவ்வளவு நாட்கள் நம்பிக்கையும் விருப்பமும் இல்லாதிருந்த தன்னால், திருமண வாழ்க்கைக்கு உரிய கடமையையும் பொறுப்பையும் ஏற்பதில் 100 சதவீத அர்ப்பணிப்பைத் தர முடியுமா?

திருமண வாழ்க்கையில், சில பல தியாகங்கள் செய்ய வேண்டி இருக்கும்! அதை முழு மனதோடு தன்னால் செய்ய முடியுமா? என்று அவளுக்குள்ளே ஏகப் பட்ட கேள்விகள் எழுந்தன.

இந்தக் கேள்விகளுக்கு முழுமையாக பதில்கள் கிடைத்தது. தன் மனம் தெளிவடையாத வரை, தன் மனதில் இருக்கும் காதலை வெளிப்படுத்துவதில் அர்த்தம் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது!

சில சமயங்களில், நமக்கு தோன்றும் சில சந்தேகங்களைப் அதிகம் யோசிக்காமல் விட்டு விட்டாலே, ஏதோ ஒரு கணத்தில் அதற்கான விடை கிடைத்து விடும் என்பது ப்ரியாவின் அனுபவம்! எனவே... தன் மனதில் முளைத்திருக்கும் சந்தேகத்தையும், அதிகம் யோசிக் காமல் விட்டு விட முடிவு செய்தாள். அவள் பொறுப் பேற்றிருந்த அந்த முக்கியமான வேலையும் அவளை அதிகம் யோசிக்க விடவில்லை!

என்னதான் முடிவெடுத்து விட்டாலும், அவளையும் அறியாமல், அடுத்து வந்த நாட்களில் ஆகாஷிடம் அவள் அதிகப் படியான நெருக்கம் காட்ட ஆரம்பித்ததை, அவளாலேயே தடுக்க இயலவில்லை!

* * *

ப்ரியா ஒரு புறம் தன் கேள்விகளுக்கு பதில் தேடி காத்திருக்க, ஆகாஷுக்கு கொஞ்ச நாட்களாகவே ப்ரியாவிடம் தன் மனதில் உள்ளே நேசத்தைச் சொல்லி விட வேண்டும் என்ற எண்ணம் வலுத்துக் கொண்டே இருந்தது.

அவளது மனதிலும் மாற்றம் ஏற்படும் வரை காத்திருக்கலாம் என்று ஒரோர் சமயம் எடுக்கும் முடிவுகள் எல்லாம், சில சமயம் காற்றில் இட்ட கற்பூரமாய் கரைந்து போனது. அவனது இந்த மாற்றத்துக்கு காரணம் இல்லாமல் இல்லை!

அவனது பிறந்த நாளுக்கு பிறகு, ப்ரியாவின் நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

பேச்சிலும் செயலிலும் ஒரு நெருக்கம் தென்பட்டது!

எதிலும் அவனது கருத்தைக் கேட்பது முன்பே, இது மாதிரி சில சமயம் நடப்பதுதான் என்றாலும். இப்போது அவனது கருத்து அவளுக்கு ரொம்பவே முக்கியம் என்ற பாவனையும் வெளிப்பட, இதெல்லாம் ஆகாஷுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி அளித்தாலும், மறு புறம் அவனுக்கு எப்போதும் போல அவளது நெருக்கம் அவஸ்தையைத் தந்தது.

மனைவி விலகி இருந்தாலே தன் உணர்வுகளை அவள் முன்னே அடக்கிக் கொண்டு இருப்பது கடினமாக

இருக்க, அவள் காட்டும் அதிகப்படி நெருக்கம், அவனது மன உறுதியைச் சற்றே ஆட்டம் காண வைத்தது.

அவள் ஏற்றிருந்த முக்கியமான வேலைக்கு நடுவில், அவளிடம் எதையாவது பேசி குழப்ப வேண்டாம் என்று முடிவு செய்தவன், அவள் அந்த வேலையை முடிக்கும் வரை காத்திருக்க எண்ணினான்.

நேற்று, அவளது அந்த வேலை முடிந்து விட்டதை அறிந்ததும், தன் மனதில் இருப்பதை அவளிடம் சொல்லி விடலாமா வேண்டாமா என்று மனதுக்குள் ஒரு பட்டி மன்றம் நடத்தி முடித்து, முதலில் அவளிடம் திருமண வாழ்க்கை பற்றிய அவளது எண்ணத்தில் மாற்றம் வந்து விட்டதா என்று பேச்சு வாக்கில் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தது கொண்டு வர, வீட்டில் நிலைமை அவன் நினைத்ததற்கு மாறாக இருந்தது.

ப்ரியா வந்ததும். எப்படி பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த ஆகாஷ், ப்ரியா உள்ளே நுழைந்து தன் கைப்பையைக் கோபத்துடன் சோபாவில் வீசி எறிய, தன் யோசனையில் இருந்த ஆகாஷ் ஆச்சரியத்துடன் அவளை நோக்கினான்.

அவள் இப்படி நடந்து கொள்வது இதுவே முதல் முறை!

வேகமாக வந்து சோபாவில் அமர்ந்தவள், தன் கரங்களால் தலையைத் தாங்கியபடி இருக்க, "ப்ரியா? என்ன ஆச்சு? தலை வலிக்குதா?" என்று கனிவுடன் வினவிய வனின் அக்கறை, அவளது மன உளைச்சலைக் குறைக்க வில்லை!

"ஏன் ஆகாஷ் எங்க எடிட்டர் இப்படி இருக்கார்?"

ஆதங்கத்துடன் ப்ரியா கேட்ட கேள்வி ஆகாஷுக்கு சற்றும் புரியவில்லை!

"வாக்கு என்று ஒண்ணு கொடுத்தால், அதைக் காப்பாற்றணும்! அது முடியலைன்னா எதுக்கு வாக்கு கொடுக்கணும்?"

வேகத்துடன் அவள் கேள்விகளை அடுக்க, "ப்ரியா... காம் டவுன்! முதல்ல கொஞ்சம் அமைதியா இரு!" என்று அவளை அமைதிப் படுத்த முயன்றவன், அவள் ஆழ்ந்த மூச்சு எடுத்து தன்னை நிலைப் படுத்திக் கொள்வதைக் கண்டதும், உள்ளே சென்று தேநீர் எடுத்து வந்தான்.

மறுக்காமல் வாங்கி குடித்தவளுக்கு, மனம் சற்றே இயல்பு நிலைக்கு மீண்டிருந்தது!

அவளது முகத்தில் இருந்தே அவளது மனத்தைக் கணித்தவன், "இப்போ சொல்லு ப்ரியா? என்ன ஆச்சு? எதுக்கு இவ்வளவு டென்ஷன்?" என்று அக்கறையுடன் விசாரித்தான்.

"உனக்கு தெரியும் இல்ல. ஆகாஷ்? இந்த இருபது நாளா ஒரு முக்கியமான விஷயத்தை இன்வெஸ்டிகேட் செஞ்சுட்டு இருக்கோம்! ரொம்ப முக்கியமான ஒரு புள்ளியுடைய தில்லு முல்லை அம்பலத்துக்கு கொண்டு வர முயற்சி! எங்க எடிட்டர் கிட்ட அதைப் பற்றி சொன்ன போது ரொம்பவே ஆர்வம் காட்டினார்.

"அவர் அந்த வேலையைச் செய்யச் சொன்ன போதே, நாங்க முழுசா விவரங்களை சேகரித்த பிறகு, அதைக் கண்டிப்பாக பத்திரிகையில் [illegible]

இருந்தால், ரிஸ்க் எடுத்து அந்த வேலையைச் செய்ய றோம் என்று சொல்லி இருந்தோம்! அவரும், சாட் சியங்கள் உறுதியாக இருக்க பட்சத்தில், கண்டிப்பா போடறதா சொல்லி இருந்தார். இப்போ நாங்க எல்லா விவரங்களையும் அக்கு வேறா ஆணி வேறா அலசி எடுத்து தந்த பிறகு, போட முடியாதுன்னு சொல்லிட்டார்!"

குறைந்திருந்த கோபம் மீண்டும் வலுப்பெற, ப்ரியா வில் குரலில் சீற்றம் மிகுந்திருந்தது.

"இவ்வளவு தயங்கறவர், எதுக்கு எங்களை அந்த வேலை செய்யச் சொல்லணும்? எவ்வளவு ரிஸ்க் எடுத் தோம் தெரியுமா? தூங்காம சரியான நேரத்துக்கு சாப் பிடாம, உன் பிறந்த நாள் அன்றைக்குக்கூட முக்கிய மான விஷயம் என்று போய், இவ்வளவு சேகரித்து, சே... எல்லாம் வேஸ்ட்!"

"பத்திரிகை பேர் மட்டும் 'உண்மை' என்று வெச் சிருந்தால் போதுமா?"

தன் மன ஆதங்கத்தைக் கோபத்துடன் கொட்டிக் கொண்டிருந்தவளின் கையைப் பற்றி ஆதரவுடன் அழுத்தியவன், "உங்க எடிட்டர் பற்றி எனக்கும் தெரி யும்! உண்மை என்று தெரிஞ்சால், யாரைப் பற்றியும் கவலைப் படாமல் பயப்படாமல் செய்திகளைப் போட றவர் அவர்! அவர் அப்படி தயங்குவதில் ஏதாவது விஷயம் இருக்கும்!" என்று தான் அறிந்ததை உரைக்க,

"எனக்கும் தெரியும்! அதனால்தான் இத்தனை நாளா அவர்கிட்ட தொடர்ந்து வேலை செஞ்சுட்டு இருக்கேன்!" என்ற ப்ரியா,

"இப்போ மட்டும் என்ன வந்ததோ தெரியலை! அப்படி பயப்படறார்! அதுவும் நாங்க சேகரித்த எல்லா

விஷயங்களுக்கும் ஆதாரமும் இருக்கு!'' என்று எரிச்சல் அடைய,

''ப்ரியா என்கிட்டே சொல்லலாம் என்றால், அது யாரைப் பற்றிய விஷயம் என்று சொல்லேன்!''

அவளுக்கு இந்த விஷயத்தில் தன்னால் ஏதாவது உதவக் கூடுமோ என்ற அக்கறையில் கேட்டாலும், ஆகாஷின் குரலில் தயக்கமும் இருந்தது.

''ஹும்! ரொம்பவே கான்பிடன்ஷியல்! ஆனால்... விஷயம் வெளி வரப் போவதில்லை என்ற பிறகு சொல்வதற்கென்ன?'' என்றவள், சொன்ன பெயரைக் கேட்டதும் ஆகாஷுக்குமே முகம் வெளிறியது.

அரசியல், ஆன்மிகம், காவல்துறை என்று எல்லாவற்றிலும் அளவுக்கு மீறிய செல்வாக்கு மிக்க மனிதரைப் பற்றி, ப்ரியா விஷயம் சேகரிக்க சென்றிருந்தாள் என்ற விஷயம், அவனது உடலைப் பயத்தில் சிலிர்க்க வைத்தது.

அவரைப் பற்றிய சில அவதூறுகள் அவ்வப்போது பத்திரிகையில் அடிபட்டாலும், அவை எல்லாமே வெறும் வதந்தி என்றுதான் இதுவரை முடிவு செய்யப்பட்டிருந்தது.

உண்மை பத்திரிகையின் ஆசிரியர் தயங்குவது ஏன் என்று புரிந்தது.

ஆகாஷின் வெளிறிய முகத்தைக் கண்ட ப்ரியா, ''ஹே... ஆகாஷ்? என்ன ஆச்சு? ஏன் உன் முகம் இப்படி இருக்கு?'' என்று அவனை லேசாக உலுக்க,

''ப்ரியா... அப்படி என்ன என்ன விவரங்கள் சேகரிச்சு

அவள் சொன்ன விவரங்கள் அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பசுத்தோல் போர்த்திய புலி மாதிரி, அந்த ஆள் என்ன என்ன அக்கிரமங்கள் செய்து கொண்டிருக்கிறான்?

மக்கள் நல்லவன் என்று நம்பிக் கொண்டிருப்பவன் முகத்திரையைக் கிழிக்க, போதுமான சாட்சியங்கள் இருந்தும், அதை வெளியிட முடியாத இயலாமையே ப்ரியாவின் கோபத்துக்கு காரணம் என்று அறிய முடிந்தது.

''பாரு! நீயே இப்படி திகைச்சு போயிட்டே! நீயே சொல்லு! இவ்வளவு ஆதாரத்தைக் கையில் வைச்சுட்டு அதை வெளியிட முடியாதுன்னு சொல்லும்போது எனக்கு எப்படி இருக்கும்? எவ்வளவு கஷ்டப் பட்டு நாங்க மூன்று பேரும் இதை எல்லாம் சேகரிச்சோம் தெரியுமா?''

அவள் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாள் என்று ஆகாஷுக்கு புரிந்தே இருந்தது. தன் மனைவி என்ன மாதிரியான வேலை செய்திருக்கிறாள் என்பதில் அவன் மனதில் ஒரு புறம் பெருமிதம் அடைந்தாலும், இந்த வேலையைச் செய்யும்போது அவளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால்? என்ற எண்ணம் அவனைப் பதறச் செய்தது.

அந்த ஆளின் செல்வாக்குக்கு முன்னால், இவளது பத்திரிகை எந்த மூலை?

''ப்ரியா, உன் கோபம் எனக்கு புரியுது! உனக்கும் அந்த ஆளோட செல்வாக்கு பற்றி தெரியும் இல்ல? செய்தி வந்த மறுநாள், உங்க பத்திரிகை இருந்த இடமே தெரியாமல் போகறதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு!''

''எனக்கும் தெரியும்! ஆனால். இவ்வளவு ஆதாரங்களை வைத்துக் கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும்?''

''ப்ச் ப்ரியா புரிஞ்சுக்கோ. இந்த செய்தி வெளி வந்தால், உங்கள் பத்திரிகைக்கு மட்டுமில்லை இந்த செய்தியை சேகரித்த உங்க மூன்று பேருக்கும் கூட ஆபத்து வரலாம்!''

இதைச் சொல்லும்போது ஆகாஷுக்கு என்ன முயன்றும், தன் குரலில் இருந்த நடுக்கத்தை மறைக்க இயலவில்லை!

''தெரியும்! ஆனால், இதுக்கெல்லாம் பயந்தால், பத்திரிகையில் வெறும் வானிலை அறிக்கையை மட்டும் தான் வெளியிட முடியும்!''

''ப்ச் விடு! எல்லாம் எங்க எடிட்டரை சொல்லணும்! அவர் ஆதாரம் உறுதியா இருந்தால், கண்டிப்பா போட நேன் என்று வாக்கு கொடுத்ததால்தான் நான் இந்த 'வேலையில் இறங்கினேன்! எல்லாம் தெரிஞ்ச பிறகு சும்மா இருக்க முடியலை என்ன செய்யறது? பத்திரிகை அவரோடது!''

கோபம் கலந்த சலிப்புடன் சொல்லி விட்டு, ப்ரியா எழுந்து சென்று விட. இவ்வளவு சிரமப் பட்டு ப்ரியா செய்த வேலை வீணாகிப் போகக் கூடாது என்று தோன்றியது. அதே சமயம் அவளுக்கும் எந்த ஆபத்தும் வரக் கூடாது.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தவன். ''ப்ரியா கொஞ்சம் வேலை இருக்கு! வெளியே போயிட்டு வரேன்!'' என்று சொல்லி விட்டு விஸ்வநாதனைக் காண புறப்பட்டான்.

அவரிடம் பேசியதும். எப்போதும் போல, பிரச்சனையைக் கையாள வழி கிடைத்த திருப்தியோடு வீட்டுக்கு வந்தவனை, உணவோடு ப்ரியா வரவேற்றாள்.

''சமைச்சுட்டியா? கோபத்தில இருப்பே, சமைச்சிருக்க மாட்டே, நேரமாகிடுச்சே வெளியே போய் சாப்பிடலாம் என்று நினைச்சேன்.''

''கோபம் தான்! அதுக்காக அப்படியே உட்கார்ந்திருக்க முடியுமா?'' என்றபடி உணவை எடுத்து வைத்தவள்.

''எங்க உழைப்பு வீணாகிப் போனதை விட, இந்த மாதிரி ஒரு ஆளோட உண்மையான முகத்தை வெளியில் கட்ட முடியலை என்றுதான் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு! போலீஸ் கிட்ட போனால் கூட அந்த ஆளுக்கு இருக்கிற செல்வாக்கில, இதை எல்லாம் ஒண்ணும் இல்லாமல் செஞ்சுடுவான் இல்ல?'' என்று மீண்டும் அந்தப் பேச்சையே பேச.

''ப்ரியா... விடு! இன்னைக்கு இல்லைன்னாலும் ஒரு நாள் தப்பு செய்யறவன் மாட்டியே தீருவான்! நீ சேகரித்த விஷயங்கள் சீக்கிரமே வெளியே வரும்!'' என்று ஆறுதலாக சொல்லி விட்டு,

''உரிமைகள் நிறுவனர் இன்றைக்கு பேசினார். அந்த சிசு கொலை நடக்கிற கிராமங்களுக்கு கவுன்சிலிங் போறதைப் பற்றி சொல்லி இருந்தோம் இல்லை? அடுத்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்கலாம் என்று சொல்லி இருக்கார்!'' என்று பேச்சை மாற்ற ப்ரியாவும் ஆர்வத்துடன் அந்தப் பேச்சில் இணைந்தாள்.

* * *

அடுத்த இரண்டு வாரங்கள். ஆகாஷ் வீட்டில் இருக்கும் நோம் வெகுவாக குறைந்து போனது! ப்ரியாவுக்கு அவனில்லாமல் வீட்டில் தனித்திருக்கவே பிடிக்கவில்லை!

வீட்டுக்கு வந்ததும், அவன் இன்னும் வரவில்லை என்றதும், மனம் சோர்வடைவதும், அவன் எப்போது வருவான் என்று ஏங்கிக் கொண்டிருப்பதும் வாடிக்கையானது!

"ரொம்ப முக்கியமான வேலை!" என்று சொன்ன தோடு அவனும் அவளிடம் வேறு எந்த விவரமும் தெரிவிக்கவில்லை!

அது அப்படி என்ன முக்கியமான வேலை என்று, அன்று பொறுப்பாசிரியர், விவரம் கூறிய போது, தெரிந்து கொண்டவளுக்கு அதன் பிறகு அலுவலகத்தில் இருப்பே கொள்ளவில்லை!

வீட்டுக்கு சென்று ஆகாஷுக்காக காத்திருந்தவள், அவன் வந்ததும், ஆரவாரமாக நன்றி சொல்லி வரவேற்றாள்.

"தேங்க்ஸ்! தேங்க்ஸ்! தேங்க்ஸ்!"

"எதுக்கு?"

"நீ சொல்ல வேண்டாம் என்று நினைச்சால் எனக்கு தெரியாதுன்னு நினைச்சாயா?" நான் ஒரு இன்வெஸ்டி கேடிவ் ஜர்னலிஸ்ட்! என்கிட்டே எதையும் மறைக்க முடியாது!"

"சரிங்க மேடம்! எனக்கும் அது தெரியும் மேடம்! இப்போ மேடம் என்ன கண்டு பிடிச்சீங்க என்று சொன் னால், நல்லா இருக்கும் மேடம்!"

வார்த்தைக்கு வார்த்தை மேடம் போட்டவனை, "படவா!" என்று முதுகில் ஒன்று போட்டவள், "உனக்கு இவ்வளவு இன்ப்ளூயன்ஸ் இருக்கு என்று எனக்கு தெரியாமல் போச்சே!" என்று வியக்கவும் செய்தாள்

"என்ன விஷயம் ப்ரியா? அதைச் சொல்லாமல் என்ன என்னவோ சொல்லிட்டு இருக்கே?"

"ம்க்கும்! உனக்கு உண்மையிலேயே தெரியாதா?ம்?" என்று புருவம் உயர்த்தியவளைக் கண்டு புன்னகைத் தவன்.

"நாளைக்கு உங்க பத்திரிகையில் அந்த நியூஸ் வரப் போகுதா?" என்றான்.

"திருடா! தெரிஞ்சுகிட்டே இவ்வளவு நேரம் நடிச்சியா?" என்று அவனது தோளில் தட்டியவள், "என்கிட்டே சொல்லவே இல்ல? அந்த நியூசை சேகரிச்சதே நான் தான். தெரியுமில்ல?" என்று அதட்ட,

"அதனால்தான் சொல்லலை! ஏற்கனவே நீ அப் செட்டா இருந்தே! நாங்க எடுக்கிற முயற்சி எந்த தூரத் துக்கு வொர்க் அவுட் ஆகும் என்று தெரியாமல் எப்படி சொல்றது?" என்று அவளது கேள்விக்கான விடையை உரைத்தவன்.

"எப்படியோ! நீ நினைச்சதை சாதிச்சுட்டே! கங்கி ராட்ஸ்!" என்று வாழ்த்தினான்.

"தேங்க்ஸ்! ஆனால். நீ முயற்சி செய்ததால் தான் இது சாத்தியமாச்சு என்று எடிட்டர் சொன்னார்! அதனால் பாதி கிரெடிட் உனக்கும் போகணும்!" அமர்த்தலாக மனைவி சொன்னதும்,

"உங்க பெரிய மனசுக்கு நன்றிங்க மேடம்!" என்று ஆகாஷ் சிரிக்க, ப்ரியாவும் சந்தோஷமாக அந்தச் சிரிப்பில் இணைந்தாள்.

"எடிட்டர் எல்லாம் சொன்னார். ஆனால்... உனக்கு தோன்றிய இந்த ஐடியா ஏன் அவருக்கு தோணவே இல்லை...?" என்று தன் பத்திரிகையின் ஆசிரியரிடம் நேரிடையாக கேட்க இயலாத கேள்வியை ஆகாஷிடம் கேட்டாள்.

"சிம்பிள் ப்ரியா! அவர் பிரச்சனையை மட்டும் பெரிசா

முடிந்த அளவுக்கு உண்மை செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அவர் தைரியமா செயல்படுகிற வர்தான். ஆனாலும். இந்த விஷயம் ரொம்பவே சிக்க லானது எந்தப் பக்கத்தில் இருந்து பிரச்சனை வரும் என்று சொல்ல முடியாது. அவர் உங்களுக்காகவும் பார்த்தார்.''

''ஆனால், எனக்கு இதில் இருக்கும் உபரி பிரச்சனை களை தீர்த்துட்டால், மெயின் மேட்டர் கிளியர் ஆகி விடும் என்று தோனுச்சு அதான் விஸ்வநாதன் சார் கிட்ட பேசினேன். அவர்தான் ஜீனியஸ் ஆச்சே. அவரோட கைடன்ஸ் ரொம்பவே உதவியா இருந்தது கூடவே. விஸ்வநாதன் சாருக்கு, கமிஷனர் ரொம்பவே வேண் டியவர் உங்க நியூஸ் வெளியாகிற அதே நாள். அந்த ஆள் கைது செய்யப்படுகிற மாதிரி பார்த்துகிட்டோம் சோ. அந்த ஆள் வெளியில் இருந்து பிரச்சனை செய்யறதுக் கான வாய்ப்புகள் குறைவு! அப்படியே செய்தாலும், அந்த ஆள்தான் காரணம் என்று எல்லாருக்குமே தெரிஞ் சுடும்! சோ. அடக்கி வாசிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று ப்ளான் செஞ்சோம். இப்போ அதுக்கு வெற்றி கிடைச்சிருக்கு?''

ஆகாஷ் நடந்ததை விளக்கமாக கூற, கேட்டிருந்த ப்ரியாவுக்கு பிரமிப்பாக இருந்தது.

இவள் செய்தியைச் சேகரித்ததை விட, அவன் அதை வெளியிட எடுத்த முயற்சிகள் பெரிதாகத் தோன்றியது.

அவள், செய்தியைச் சேகரித்தது பெரிய விஷயம் என்றால், யாருக்கும் எந்தப் பிரச்னையும் இல்லாமல் அது வெளி வருவதற்கு, ஆகாஷின் முயற்சிதானே காரணம்!

இவ்வளவு வேலைகளையும் செய்து விட்டு, அதை வெளியில் கூட சொல்லாமல் இருந்திருக்கிறானே?

அவன் செய்த முயற்சிகள் அனைத்தும், தனக்காகத் தான் என்று புரிய மனதுக்குள் மழைச்சாரல் அடித்தது போன்ற இனிமையான உணர்வு தோன்ற, மந்தகாசப் புன்னகையுடன் கணவனை நோக்கினாள்.

''இதெல்லாம் எனக்காகத்தானே செஞ்சே?'' என்ற வள் குரலில், அவளையும் மீறி ஒரு நெருக்கம் தென்பட, எப்போதும் போல அந்த நெருக்கத்தில் மயங்கி நின்ற வன், முயன்று தன்னை சமாளித்துக் கொண்டு,

''எங்களுக்கும் சமூக அக்கறை எல்லாம் இருக்குங்க மேடம்!'' என்று கேலியாக சொல்லி, அந்த மயக்கத்தை வெளிக் காட்டாமல் மறைத்தான்.

''சரிங்க சார்! நம்பிட்டேன்!'' என்று கலகலவென நகைத்தவளின் ஒளிர்ந்த முகத்தைக் கண்டு அவன் மயங்கி நிற்க. தன்னையும் மீறி ஆசையுடன் அவள், அவனது கையைப் பற்றப் போன சமயம். அவனது கைப்பேசி ஒலித்தது.

எடுத்துப் பேசியவன், ''ப்ரியா... விஸ்வநாதன் சார் கூப்பிடறார். இதோ வந்து விடுகிறேன்!'' என்று சொல்லி விட்டு வெளியே செல்ல, தலை அசைத்து விட்டு சோபாவில் வந்து அமர்ந்தவளின் மனம் சந்தோஷத்தில் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது.

இதற்கு முன்னும் ஆகாஷ். அவளுக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறான். அப்போதெல்லாம் அவனது உதவிக்காக, அவளது மனதில் நன்றி உணர்வு தோன்றி இருக்கிறது. இதற்கு பதிலாக தானும் அவனுக்கு ஏதாவது

செய்து விட வேண்டும் என்று உணர்வுதான் மேலோங்கி இருக்கும்.

இப்போது, நன்றி உணர்வு பதிலுக்கு பதில் செய்து விட வேண்டும் என்ற உணர்வெல்லாம் துளியும் தோன்றாமல், என் கணவன் எனக்காக செய்திருக்கிறான் என்ற பெருமித உணர்வு மட்டுமே நிறைந்திருந்தது!

அந்தப் பெருமிதம் தனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்த ப்ரியா. தன் எண்ணப் போக்கில் திகைத்து நின்றாள்.

என் கணவன்!

ஆகாஷைப் பற்றி நினைக்கும்போது. இது நாள் வரையில் இந்த வார்த்தை அவளுக்குத் தோன்றிய தில்லை! அவளது காதலை உணர்ந்த பிறகு கூட! இப் போது மட்டும் எப்படி?

'முட்டாள்! உன் மனம் எப்போதோ அவனைக் கண வனாக ஏற்க ஆரம்பித்து விட்டது! நீதான் அதை உண ரவே இல்லை!' என்று அவளது மனசாட்சி அவளைக் கேலி செய்ய, அவள் தன் திகைப்பில் இருந்து மீளும் முன், அவளது கைபேசி அழைத்தது.

கைப்பேசி எழுப்பிய ஒலியில், தன் யோசனையில் இருந்து மீண்டவள், அவசரமாக அழைப்பை எடுக்க ரேகாதான் அழைத்திருந்தாள்.

"பானு..." என்ற ரேகாவின் அழைப்பே, அவள் அதீத சந்தோஷத்தில் இருக்கிறாள் என்பதை உணர்த்த,

"ரேகா... என்ன குரல்ல இவ்வளவு சந்தோஷம்? ஏதா வது ப்ரோமோஷன் கிடைச்சுடுச்சா?" என்று ஆர்வத் துடன் வினவிய தங்கைக்கு

"கரெக்டா சொல்லிட்ட பானு! ப்ரோமோஷன்தான்... ஆனால் ஆபீஸ்ல இல்லை... அம்மா என்கிற ப்ரோ மோஷன் கிடைக்க போகுது!" என்று குதூகலத்துடன் ரேகா மொழிந்ததும்.

"ஹே... சூப்பர் கங்கிராட்ஸ் ரேகா... ஐ அம் சோ ஹேப்பி! இப்பவே உன்னை பார்க்க வரேன்!" என்றவள் அடுத்த நொடியே, வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

கடைக்கு சென்று ரேகாவுக்கு பிடித்தது என்று கண் ணில் பட்டதை எல்லாம் வாங்கிக் கொண்டு தமக்கை யின் வீட்டுக்கு செல்ல, அங்கே தேவகியும் வசந்தியும் கூட வந்திருந்தனர்.

தமக்கையைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டு வாழ்த்து சொல்லி, தான் வாங்கி வந்ததை எல்லாம் கொடுத்து மகிழ்ந்தவளிடம்,

"நீயும் இதே மாதிரி சீக்கிரம் நல்ல செய்தி சொல் லணும்!" என்று அன்னை வசந்தியை அணைத்துக் கொண்டு, "கண்டிப்பா அம்மா!" என்று சொல்லி முடித்ததும் தான் ப்ரியாவுக்கு தான் என்ன சொன்னோம் என்று உரைத்தது.

கணவன்... குழந்தை...

திருமண வாழ்க்கையை. முழு மனதோடு தன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று மனதில் இருந்த சந் தேகம் எல்லாம். அந்த நொடியில், மழை நீரால் அடித்து செல்லப் பட்ட கசடாக மறைந்து போனது.

உடனே தன் கணவனைப் பார்க்க வேண்டும் என்று தோன்றி விட, மூவரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

தமக்கையின் சந்தோஷத்தோடு, தன் மனமும் தெளிந்து விட்ட சந்தோஷமும் சேர்ந்து கொள்ள, வரும் வழி எல்லாம் தன்னை யாரும் பார்க்கிறார்களோ என்ற எண்ணம் கூட இல்லாமல் சிரித்த முகமாய் நடந்து வந்து கொண்டிருந்தவள் மீது ஒரு அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறு குழந்தை மோதி விட நிதானித்து நின்றாள்.

"சாரி!"

தன் சொப்பு வாய் திறந்து குழந்தை சாரி கேட்க, குழந்தைக்கு முன் மண்டியிட்டு அமர்ந்தவள், "சாரி எல்லாம் வேண்டாம்... ஆனால், இனிமேல் பார்த்து விளையாடுங்க!" என்று கனிவுடன் சொல்ல...

அந்தக் குழந்தை, "ம்..." என்று அழகாக தலை யாட்டிய பாவனையில் மனம் கொள்ளைப் போக, ரேகாவைப் பார்க்கச் சென்ற போது அன்னை கொடுத் திருந்த சாக்லேட்டை தன் கைப்பையில் இருந்து எடுத்து, குழந்தையிடம் நீட்டினாள்.

சாக்லேட்டைக் கண்டதும் கண்கள் பளபளத்தாலும், உடனே வாங்கிக் கொள்ளாமல், தன் அருகில் நின்ற தன் அன்னையிடம் கண்களால் அனுமதி கேட்டது அக் குழந்தை.

"ஒரே குடியிருப்பில் உள்ளவர்கள் என்ற முறையில் ப்ரியா அவரைப் பார்த்து புன்னகை செய்ய, பதிலுக்கு புன்னகைத்தவாறே, "வாங்கிக்கோ!" என்று அவர் தன் குழந்தையிடம் சொல்ல, சாக்லேட்டை வாங்கிக் கொண்ட குழந்தை, "தேங்க் யூ... ஆன்ட்டி!" என்று அவளது கன்னத்தில் ஒரு முத்தம் வைத்து விட்டு, தன் விளை யாட்டைத் தொ

"எவ்வளவு அழகா சொன்ன உடனே சரி சொல்லிச்சு அந்தக் குழந்தை?" என்று எண்ணிக் கொண்டே நடந்த வளின் மனதில், தனக்கு குழந்தை பிறந்தால், அது எப்படி இருக்கும் என்ற சிந்தனை எழ, மனம் தன்னியல் பாக ஆகாஷின் ஜாடையில் ஒரு குழந்தையை கற்பனை செய்து பார்த்து மகிழ, அவளது கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன.

ஆகாஷ்! ஆகாஷ்! ஆகாஷ்!

அவனைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாமல், மனதில் அவனைப் பற்றிய எண்ணங்களே நிறைந் திருந்தது!

அந்த நேரம், அவளது மனதில் திடீர் என்று ஒரு கேள்வி எழ, ஊசி குத்தப்பட்ட பலூனாக அவளது உற்சாகம் எல்லாம் உடைந்து போனது.



16

"பானு! யூ ஆர் சோ லக்கி! எத்தனை கணவன் மார்களுக்கு, தன் மனைவியின் வேலை பற்றிய அக்கறை யும், அவளது முன்னேற்றமும் முக்கியமான விஷயமா இருக்கும்? நான் கூட நாம அவ்வளவு கஷ்டப்பட்டு செய்த வேலை, வீணா போயிடுச்சேன்னு எவ்வளவு கவலையா இருந்ததேன் தெரியுமா? உன் ஹப்பியின்

வந்து, நம்ம பத்திரிகைக்கு இன்னும் நல்ல பெயர் கிடைச்சிருக்கு!''

தோழி நேஹா சொல்வதைச் செவிகள் கேட்டுக் கொண்டிருந்தாலும், ப்ரியாவின் மனம் முழுக்க கணவனைப் பற்றிய எண்ணமே நிறைந்திருந்தது.

''பானு அன்றைக்கு உன்கிட்ட ஆகாஷைப் பற்றி பேசினதுக்கு பிறகு, நான் அதைப் பற்றி எதுவும் பேசலை! நீயே யோசிச்சு முடிவெடுக்கணும் என்று நினைச்சேன்! நீ அதைப் பற்றி ஏதாவது யோசிச்சாயா?''

அக்கறையுடன் நேஹா கேட்ட கேள்விக்கு, ப்ரியா பதிலேதும் சொல்லாமல் அமைதியாக இருக்க... நேஹாவுக்கு எரிச்சல் மூண்டது.

''உன் பெர்சனல் வாழ்க்கையில். ஒரு அளவுக்கு மேல் நான் தலையிடக் கூடாது! அது எனக்கும் புரியது! ஆனாலும்... என்னால் சும்மா இருக்க முடியலை! இப்போ உனக்கென்னதான் பிரச்சனை?'' என்றவள்.

''நீ கல்யாணம் வேண்டாம் என்று சொன்னதற்கு முக்கிய காரணம் என்ன? உன்னுடைய கேரியர் பாதிக்கக் கூடாது! தேவை இல்லாமல் எல்லாத்துக்கும் விட்டு கொடுக்க ஆரம்பிச்சு, உன் தனித் தன்மையை இழந்து விடக் கூடாது என்பதுதானே? அந்த மாதிரியான கவலைக்கெல்லாம் அவசியமே இல்லை என்று ஆகாஷ் இப்போ நிருபிச்சிட்டார் இல்ல? வீட்டு வேலை ஆரம்பிச்சு. உன்னோட ஆபீஸ் வேலை வர. எல்லாத்துக்கும் சப்போர்ட் செய்யறார் அப்புறம் என்னடி? ஆகாஷ் மாதிரி ஒரு கணவன் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கணும்! இன்னமும் நீ

வை அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது!'' என்று கோபமாக மொழிய, தன் மேல் தன் தோழிக்கும் இருக்கும் அக்கறையில் மனம் நெகிழ்ந்தாலும்,

''நான் மட்டும் ஆசைப் பட்டா போதுமா? ஆகாஷுக்கும் விருப்பம் இருக்கணும் இல்ல?'' என்று நேற்றில் இருந்து தன் மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்வியை ப்ரியா கேட்டு விட, நேஹாவின் விழிகள் ஆச்சரியத்தில் அகன்றன.

''ஹே... பானு... இந்த மாற்றம் எப்போடி வந்தது?''

சந்தோஷமாக நேஹா வினவியதும். ''நீ அன்னைக்கு சுவிட்ச் போட்ட உடனே எரிய ஆரம்பிச்சுடுச்ச! நேற்றில் இருந்து இன்னமும் பிரகாசமா எரியுது!'' என்று ப்ரியா தன் மனதைத் தன் தோழியிடம் பகிர்ந்து கொண்டாள்.

''கள்ளி! அப்புறம் எதுக்கு இப்போ என்னை மூச்சு வாங்க பேச வைச்சே!'' என்று நேஹா அலுத்துக் கொள்ள,

''இல்ல நேஹா... நீ ஆகாஷைப் பற்றி நல்ல விதமா சொல்றதைக் கேட்க ரொம்ப சந்தோஷமா இருந்ததா... அதான் கேட்டுட்டு இருந்தேன்!'' என்று ப்ரியா கண் சிமிட்டினாள்.

''அடிப்பாவி! என்னை வைச்சு உன் வீட்டுக்காரருக்கு ஒசியில் விளம்பரம் ஓட்டிட்டு இருக்கியா? நல்லா வருவடி நீ!'' என்று கேலி செய்தாலும், நேஹாவுக்கும் தோழியின் மன மாற்றத்தில் சந்தோஷமே!

''அதென்ன? ஆகாஷுக்கு விருப்பம் இல்லை என்கிற மாதிரி சொல்லிட்டு இருக்கே?''

''இத்தனை நாள் என் மனசைப் பற்றியே யோசிச்சுட்டு இருந்ததில், ஆகாஷ் மனதில் என்ன இருக்குன்னு நான்

யோசிக்கவே இல்ல நேஹா... என் மனசு மாறிட்டால் மட்டும் போதுமா?'' என்ற ப்ரியாவின் குரலில் கவலை தெரிய,

''உனக்கு அந்த கவலையே வேண்டாம் பானு! அவர் ஆல்ரெடி ஃப்ளாட்!''

உறுதியான குரலில் நேஹா சொல்ல, ப்ரியா விழி விரித்து தன் வியப்பைக் காட்டினாலும், ''ப்ச்... அப்படியே எல்லார் மனசிலும் பூந்து பார்த்த மாதிரி அளந்து விடுவியே!'' என்று சலித்துக் கொண்டாள்.

''ம்க்கும்! எல்லாரையும் உன்னை மாதிரியே தன் மனதில் இருக்கிறது கூட தெரியாமல் இருப்பாங்கன்னு நினைச்சியா?'' என்று தோழிக்கு ஒரு குட்டு வைத்த நேஹா.

''போன வாரம் உன்னையும் ஆகாஷையும் ஷாப்பிங் மாலில் பார்த்தேன் இல்லை? எனக்கு அப்பவே 'ஆகாஷ் மனசில ப்ரியா' என்று தெரிஞ்சு போச்சு! என்றாள்.

''எவ்வளவு அழகான பொண்ணுங்க. ஸ்டைலா ட்ரஸ் செஞ்சுட்டு அந்த ஷாப்பிங் மாலில் போயிட்டு வந்துட்டு இருந்தாங்க. உன் ஆளோட கண்ணுல, அவங்களில் ஒருத்தர் கூட படவே இல்லையே! என்னமோ, கண்ணை சிமிட்டினால், பொண்டாட்டி மாயமா மறைஞ்சு போயிடுவாளோ என்கிற மாதிரி, உன்னை உன்னை மட்டுமே பார்த்துட்டு இருந்ததிலேயே எனக்கு நிச்சயமா தெரிஞ்சு போச்சு!''

நேஹா கேலி கலந்த குரலில் சொல்லிக் கொண்டிருக்க. அவளது கையைப் பற்றிய ப்ரியா, ''நேஹா... உண்மையாவா சொல்றே?''

வினவி விட்டு, ''நீ ஏண்டி என்கிட்டே முன்னாடியே சொல்லலை?'' என்று குறை பட்டாள்.

''ஆமாண்டி... உன் புருஷன் உன்னை சைட் அடிக்கிறதை ஒண்ணு அவர் உன்கிட்ட சொல்லணும்... இல்லை நீ கண்டு பிடிச்சு தெரிஞ்சுக்கணும்! இதெல்லாம் சொல்றதுக்கு ஒரு ஆளைத் தேடுவாயா நீ? எனக்குன்னு வந்து வாய்ச்சே பாரு!'' என்று தலையில் கை வைத்து நேஹா சலித்துக் கொள்ள,

''ரொம்பத்தான் சலிச்சுக்காதடி!'' என்று விட்டு, ''நேஹா... உண்மையிலேயே ஆகாஷ் மனதில் நான் இருக்கேன் என்று சொல்றியா?'' என்று அவள் ஏக்கத்துடன் வினவிய போது, நேஹாவுக்கு உருகிப் போயிற்று.

''குதிரைக்கு கடிவாளத்தைக் கட்டி விட்ட மாதிரி... ஒரே எண்ணத்தில் உழன்று கொண்டு இல்லாமல், சுற்றி முற்றி பாரு... உனக்கே புரியும்!''

''அப்படியும் புரியலன்னா... நேரா ஆகாஷ் கிட்ட போய் உன் மனசை சொல்லிட்டு... அவர் மனசில் என்ன இருக்குன்னு பட்டுன்னு கேட்டுடு!''

எளிதான தீர்வு சொல்லும் பாவனையில் நேஹா சொல்ல, ''நான் எப்படிடி கேட்கிறது?'' என்று ப்ரியா தயக்கம் காட்ட,

''ஏன் நீயா போய் கேட்க உன் ஈகோ தடுக்குதோ?'' என்று நேஹா சட்டென்று கேட்டு விட,

''ச்சே... ச்சே... ஆகாஷ் கிட்ட எனக்கு என்ன ஈகோ? நான்தான் அவனுக்கு மாற்றம் வந்தாலும், என்கிட்டே சொல்லக் கூடாது. என்று பெரிசா ரூல் எல்லாம் போட்டேன்! ஆனால் கொஞ்சம் தயக்கமா இருக்கு! அத்தோட

ஒரு வேளை. அவனுக்கு விருப்பம் இல்லைன்னு சொல்லிட்டா...'' எனும்போ ப்ரியாவின் குரல் நடுங்கியது.

தோழியின் கரத்தைப் பற்றி ஆறுதலாக அழுத்திய நேஹா, ''எங்க பானுகிட்ட இவ்வளவு நாள் பழகி லவ் வரலன்னா தான் அதிசயம்!'' என்று தோழிக்கு நம்பிக்கை ஊட்ட முயன்றாள்.

''காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு மாதிரி. உன் தோழி உனக்கு உயர்வாத்தான் தெரிவேன்!'' என்ற ப்ரியாவின் குரலில், ஆகாஷ் எதிர்மறையாக எதுவும் சொல்லி விடக் கூடாதே என்ற கலக்கம் நிறைந்து இருந்தது.

''அப்படியே விருப்பம் இல்லை என்று சொல்லிட்டா தான் என்ன? டேய் ஆகாஷ் நான் உன்னை விரும்ப றேண்டா... நீயும் என்னை விரும்பித்தான் ஆகணும்டா என்று புதுசா ரூல் போடு!'' என்று சொல்லி விட்டு நேஹா சிரிக்க, அவள் சொன்ன விதத்தில் ப்ரியாவுக்கும் சிரிப்பு வந்து விட, அவளோடு சேர்ந்து சிரித்தவளுக்கு மனம் லேசானது.

இந்த ஆறு மாதத்தில். ஒரே ஒரு முறை கூட ஏன் இந்த திருமணத்தைச் செய்து கொண்டோம் என்று அவள் எண்ணியதில்லை. அவள் எண்ணியதில்லை என்பதை விட, அவளை அந்த மாதிரி ஆகாஷ் எண்ண வைத்ததில்லை என்பதுதான் உண்மை!

அவளுக்காக அதை செய்தான்! இதை செய்தான்! என்பதை விட, அவளை எந்த நிலையிலும் அசௌகரிய மாக உணர வைத்ததில்லை என்று சொல்வதுதான் வெகு பொருத்தமாக இருக்கும்!

திருமணத்துக்கு முன்பு கூட, தன் வேலையின் காரணமாக அவளுக்கு தாய் தந்தையிடம் வாக்குவாதம் வந்ததுண்டு!

ஆனால்... திருமணத்துக்கு பிறகு, அவளால் அலுவலக வேலையில் முழு ஈடுபாட்டுடனும், முழு சுதந்திரத் துடனும் ஈடுபட முடிந்ததற்கு ஆகாஷ் ஒரு முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல!

தன் லட்சியங்களுக்கு திருமண பந்தம் ஒரு தடை யாக இருக்கும் என்ற எண்ணத்தை ஆகாஷ் தன் செயலி னால் உடைத்திருந்தான்.

அவன் செய்யும் செயல்கள், அவனுக்கு தன் மேல் அன்பு இருக்கிறது என்பதை உணர்த்த, அது நேஹா சொன்னது போல காதலாக மாறி இருக்கிறதா என்பதை இன்று உறுதியாக அறிந்தே ஆக வேண்டும் என்ற உறுதியோடு ப்ரியா அன்று வீடு வந்து சேர்ந்தாள்.

அவளைப் போலவே, மனைவியின் மனதில் இருப் பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத் தோடு, வீட்டுக்கு வந்த ஆகாஷ், ப்ரியாவின் வார்த்தை களின் மனம் உடைந்து போனான்.

''ஆகாஷ்... உன் கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்! டெல்லியில் ஒரு பிரபல பத்திரிகையில், எனக்கு சீப் ரிப்போர்ட் வேலை கிடைச்சிருக்கு! இந்த மாச கடைசியில் நான் போகணும்!''

கணவனின் முகத்தை கவனமாக ஆராய்ந்த படி, ப்ரியா சொல்ல, கொஞ்ச நாட்களாக, அவள் நடந்து கொண்ட விதத்தில், அவளுக்குள்ளும் மாற்றம் நடந்

பேச நினைத்திருந்த ஆகாஷின் செவிகளில், ப்ரியாவின் வார்த்தைகள் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதைப் போல வேதனை அளித்தன.

இப்போதும், அவள் அவனிடம் போகலாமா வேண்டாமா என்று ஆலோசனை கேட்கவில்லை! போகப் போகிறேன் என்று தகவல் சொல்கிறாள்! என்று தோன்ற, நெஞ்சம் வலித்தது! அகத்தின் வலியை முகமும் காட்டியது!

கணவன் முகத்தில் தெரிந்த வலி, மனதை இறக்கை இல்லாமல் பறக்க செய்ய, அவன் வேண்டாம் என்று மறுப்பான்! ஏன் என்று கேட்க வேண்டும்? அவன் மனதில் இருப்பது வெளி வரும்! என்று இனிய கற்பனைகளோடு ப்ரியா காத்திருக்க,

"என்ன ப்ரியா? திடீர்னு?" என்று சாதாரணமாக கேட்டு,அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

தன் எதிர்பார்ப்பு வீணான எரிச்சலில், "திடீர்னு எல்லல் இல்லை! முயற்சி செஞ்சிட்டு இருந்தேன். இப்போ கிடைச்சிருக்கு!" என்று பதில் தந்தவளிடம்.

"இங்கே... இங்கேயே உனக்கு நல்ல பேர்தானே?" என்று மெல்லியக் குரலில் வினவினான்.

மெயின் பாயிண்டுக்கு வராமல் இன்னும் எதுக்குடா சுத்தி வளைக்கிறே?" என்று மனதுக்குள் பொருமிக் கொண்டே, "ம்... நல்ல பேர்தான்! அங்கே போனால், இன்னும் முன்னேற்றம் இருக்கும்! இன்னும் சவாலான அசைன்மென்ட் கிடைக்கும்!" என்று பதில் உரைத்தாள்.

"அங்கே... அங்கே வேலை என்றால்... அங்கேதானே இருக்க வேண்டி இருக்கும்

என்னதான் தன் வலியை மறைத்துக் கொண்டு வினவினாலும், ஆகாஷின் குரல் லேசாக தடுமாற, 'போகாதே என்று சொல்லாமல் கேள்வி கேட்டுட்டு இருக்கான் பாரு!' என்று

மனதுக்குள் நொடித்தவள், "ம் ஆமாம். ரெண்டு மூணு வாரத்துக்கு ஒரு முறை சென்னை வர முடியும்!" என்று எரிச்சலை மறைத்துக் கொண்டு உரைத்தாள்.

அவ்வளவுதானா? அவளது முன்னேற்றத்தில் அவனுக்கும்தான் அக்கறை இருக்கிறது!

ஆனால் இப்படி பிரிந்து போவதில், அவளுக்கு ஒன்றுமே இல்லையா? அவள் விலகி போகிறாள் என்ற எண்ணமே தனக்கு மனதில் வலியைத் தரும்போது... இவளால் மட்டும் எப்படி அதை வெகு இயல்பாக சொல்ல முடிகிறது? என்று ஆகாஷின் மனம் அலைபாய்ந்தது!

உன் வேலை வாழ்க்கையிலோ, சொந்த வாழ்க்கையிலோ உன் விருப்பத்தை மீறி எதையும் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது! இந்த திருமணம் உன்னை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது!

தான் திருமணத்துக்கு முன்பு அவளிடம் கொடுத்த வாக்குறுதி, இப்போது தன்னைப் பார்த்து கைக்கொட்டி சிரிப்பதைப் போலத் தோன்ற கண்ணை இறுக மூடித் திறந்து.

"ஆல் த பெஸ்ட் ப்ரியா! அங்கே தங்குவதில் உனக்கு ஏதாவது உதவி தேவை என்றால் சொல்லு, அங்கே எனக்கு நிறைய ப்ரண்ட்ஸ் இருக்காங்க. பாதுகாப்பான இடமா ஏற்பாடு செய்யலாம்!" என்றவன்.

ப்ரியா திகைத்து நின்றதை கவனிக்காமல், "கொஞ்சம் வேலை இருக்கு! வெளியில் போயிட்டு வரேன்!" என்று

''அட கல்லுளி மங்கா! இங்கே இருந்து அங்கே வேலைக்கு போறவளுக்கு. அங்கே தங்க இடம் ஏற்பாடு செய்து கொள்ள முடியாதா? பெரிசா உதவி செய்ய வந்துட்டான்! மரமண்டை! மரமண்டை!' என்று மனதுக்குள் கணவனைத் திட்டித் தீர்த்தவளுக்கு, ஒரு வேளை, தான் எண்ணியதைப் போல அவனுக்குள் எந்த மாற்றமும் நிகழவில்லையோ என்று தோன்ற நெஞ்சம் அடைத்துக் கொண்டு, கண்கள் கரித்தக் கொண்டு வரப் பார்த்தது.

இல்லையே! தான் ஊரை விட்டு போக போவதாக சொன்னதும், அவன் கண்களில் தோன்றிய வலி பொய்யில்லையே!

'ப்ரியா இப்போ எதுக்கு எதிர்மறையா யோசிக்கறே? அவன் மனதைக் கண்டு பிடிக்க வேற வழி கண்டு பிடி! இல்லைன்னா நேஹா சொன்ன மாதிரி நேரிடையாகளத்தில் இறங்கிடு!' என்று அவளது அறிவு அறிவுரை வழங்கியது.

இரண்டு மணி நேரம் ஆகியும் ஆகாஷ் வீடு திரும்பாமல் இருக்க, ப்ரியா அவனது கைப்பேசிக்கு அழைத்தாள் அவனது கைப்பேசியின் சத்தம் கேட்டதும்தான், வீட்டிலேயே விட்டு விட்டு போய் விட்டான் என்று தெரிந்தது! அவனது கைப்பேசியை எடுத்து நோக்கிய வளின் கண்கள் தன் எண்ணோடு ஒளிர்ந்த பெயரையும், தன் புகைப் படத்தையும் கண்டு ஆச்சரியத்தில் விரிந்து, மனம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது.

இதற்கு முன் அவளது கைப்பேசியை எங்கேயாவது மறந்து வைத்து விட்டால், அதைக் கண்டு பிடிக்க ஆகாஷின் கைப்பேசியில் இருந்து தன் எண்ணுக்கு அழைப்பு விடுத்திருக்கிறான்.

தன் எண்ணை ப்ரியா என்று பதிவு செய்து வைத்திருப்பதையும் கண்டிருக்கிறாள்.

இப்போது வெறும் ப்ரியா என்பதற்கு பதிலாக, அவன் தன் எண்ணை 'என் ப்ரிய சூரியன்!' என்ற பெயரில் பதிவு செய்திருப்பதைக் கண்டு கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

இவ்வளவு காதலை வைத்துக் கொண்டு ஏன் தான் டெல்லிக்கு போகிறேன் என்று சொன்னதும் அமைதியாக இருந்தான்?

திருமணத்துக்கு முன்பு உன் விருப்பு வெறுப்பு களுக்கு எந்த விதத்திலும் கணவன் என்று உரிமை எடுத்துக் கொண்டு, குறுக்கே நிற்க மாட்டேன் ஏன்று கொடுத்த வாக்கை காப்பாற்றுகிறான் போல! மடையன்! மாங்கா மடையன்!

''இந்த மாங்கா மடையனே வந்து காதலைச் சொல்லணும் என்று நினைத்தால், வேலைக்கு ஆகாது ப்ரியா நீயேதான் ஸ்டெப் எடுக்கணும்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், அவனிடம் காதலைச் சொல்லும்போது, அவனுக்கு ஆச்சரியங்கள் கொடுத்து அசத்த வேண்டும் என்று முடிவு செய்தாள்.

அகமும் முகமும் மலர, தன் கணவனுக்கு பிடித்ததை சமைக்கும் வேலையில் இறங்கியவள் மனம், தன் கணவனைக் கொஞ்சிக் கொண்டிருந்தது.

தன் காதலைச் சொல்லும்போது தான் கொடுக்கப் போகும் ஆச்சரியத்துக்கு. அவனது எதிரொலி எப்படி இருக்கும் என்ற இனிய கற்பனைகள், முகத்தை மேலும் மலரச் செய்ய, அவனது வருகைக்காக ஆவலுடன் காத்

மேலும் கொஞ்ச நேரம் சென்ற பிறகு, வீட்டுக்கு வந்த ஆகாஷின் முகம் தெளிவில்லாமல் இருந்தது.

'பாவம்... ரொம்ப பயந்துட்டானோ? தான் சொன்னது போய் என்று சொல்லிடலாமா?'' என்று முதலில் கணவனைப் பார்த்து பரிதாபப் பட்டவள்.

'போறேன் என்று சொன்னால், கொஞ்சம் கூட தயங்காமல் போ என்று சொன்னான் இல்ல? அனுபவிக்கட்டும்! அப்படி என்ன பொண்டாட்டி கிட்ட காதலைச் சொல்லக் கூட அவ்வளவு யோசனை?' என்று செல்லக் கோபம் கொண்டாள்.

'இந்த கண்ணாமூச்சி ஆட்டம் கூட நல்லாத்தான் இருக்கு! இன்னும் இரண்டு நாள்! எடிட்டர் சொல்லி இருக்கும் வேலையை முடித்து விட்டு, ஒரு பத்து நாள் லீவ் எடுத்துட்டு, இந்த மாங்காவை எங்கேயாவது தள்ளிட்டு போகணும்! அப்புறம் சொல்லிக்கலாம்!' என்று முடிவெடுத்தாள்.

மனைவியின் யோசனை, முடிவு எதைப் பற்றியும் தெரியாமல், தன் யோசனையில் ஆழ்ந்திருந்த ஆகாஷை, ''அவள்தான் கிளம்பறேன் என்று சொன்னால், போயிட்டு வா என்று டிக்கெட் எடுத்து கொடுத்து அனுப்பிடுவாயாடா மடையா? இங்கே இருக்கும்போதே இடைவெளி! இன்னும் வேறு ஊருக்கு போய்விட்டால், சுத்தம்!'' என்று அவனது மனசாட்சி அதட்டியது.

அவளிடம் அமைதியாக பேசி புரிய வைக்க வேண்டும்! தான் இப்போதிருக்கும் மன நிலையில் அது முடியாது என்பதால், எதுவானாலும், இன்னும் இரண்டு நாட்கள் கழித்து பேசிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

அமைதியாக பேசும் சந்தர்ப்பம் வாய்க்கப் போவதில்லை என்பதை, அவன் அப்போது அறியவில்லை!

17

அடுத்து வந்த இரண்டு நாட்களையும் கண்வனும் மனைவியும் தத்தம் யோசனையில் மூழ்கியபடி கடத்தினர்.

தாமதமாக வருவதாக, ப்ரியாவுக்கு குறுஞ்செய்தி அனுப்பி விட்டு, ப்ரியாவிடம் எப்படி பேச வேண்டும், என்னவெல்லாம் பேச வேண்டும் என்று தன் அலுவலக அறையிலேயே, வெகு நேரம் ஒத்திகை பார்த்திருந்து விட்டு, ஆகாஷ் வீடு வந்த போதே மணி ஒன்பது! அப்போதும் ப்ரியா வந்திருக்கவில்லை!

கை அனிச்சையாக கைப்பேசியை எடுத்து பார்க்க, ப்ரியாவிடம் இருந்து ஒன்பதரைக்குள் வந்து விடுவதாக ஒரு குறுஞ்செய்தி மட்டும் வந்திருந்தது.

மனைவியைப் பற்றி யோசனையில் ஆழ்ந்தவனுக்கு, அவள் சொல்லி இருந்த நேரத்துக்கு மேல் அரை மணி நேரம் ஆகியும், அவள் வரவில்லை என்றதும் பதட்டம் எழுந்தது.

அவளது கைப்பேசிக்கு அழைத்தான். அவளது கைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

சொன்ன நேரத்துக்கு மேல் ஆகியும், தகவல் கொடுக்காமல் இருந்திருக்கிறாள் என்றால், முக்கியமான

வேலையாயிருக்கும் வந்து விடுவாள் என்று பதறிய மனதை சமாதானப் படுத்திக் கொண்டு, பத்தரை மணி வரை அமைதியாக இருக்க முயன்றவனுக்கு, அதற்கு மேல் இருப்பு கொள்ளவில்லை!

மீண்டும் மீண்டும் அவளது கைப்பேசிக்கு அழைத்து கை வலித்ததுதான் மிச்சம்!

பெரும்பான்மையான வேலைகளை ப்ரியாவும் - நேஹாவும் சேர்ந்து செய்வதுதான் வழக்கம் என்பதால், அவளது தோழி நேஹாவை அழைத்தான்.

''ஹலோ?'' தூக்க கலக்கத்தோடு வந்த குரலைக் கேட்டதுமே, ப்ரியா அவளோடு இல்லை என்பது புரிய, அவனது பதட்டம் அதிகமானது!

''நேஹா... நான் ஆகாஷ் பேசறேன்! ப்ரியா இன்னும் வீட்டுக்கு வரலை! அவள் போன் வேற ஆஃப்ல இருக்கு!''

பதட்டமான குரலில் ஆகாஷ் வினவ, நேஹாவுக்கு உறக்கம் முற்றிலம் தொலைந்து போனது!

''இன்னும் வரலையா? ஒன்பது மணிக்கே வேலை முடிஞ்சுடுச்சு என்று போன் செஞ்சாளே? இன்னுமா வரலை? ஓ மை காட்! அங்கே யார்கிட்டயாவது மாட்டிக் கிட்டாளா?''

நேஹாவின் குரலில் இருந்த பதட்டம் மனதைக் கலங்கச் செய்ய, ''எங்கே? எங்கே போயிருந்தா?'' என்ற வனுக்கு குரல் நடுங்கியது.

நேஹா சொன்ன விவரத்தைக் கேட்டதும், மனமும் தேகமும் ஒருங்கே நடுங்க, அதிர்ச்சியில் சமைந்து நின்றான்.

ஒரு பிரபலமான விடுதியில், கொஞ்ச நாட்களாகவே கல்லூரி மாணவர்களுக்கு போதை மருந்து விற்கப் படுவதாக தகவல் வந்து கொண்டிருந்தது.

அதைப் பற்றி விசாரிதது ஆதாரம் சேர்க்க என்று, அந்த விடுதிக்குத் தன் சக ஊழியர் பீட்டருடன் சென்ற ப்ரியா, தேவையான விவரங்களை சேகரித்து விட்டு வெளி வந்து, உடல் நிலை சரி இல்லாததால் தன்னுடன் அன்று வர முடியாத நேஹாவுக்கு அழைத்து விவரத்தைச் சொல்லி விட்டு கிளம்பும்போதுதான், தன் பர்சை உள்ளேயே தவற விட்டு வந்திருப்பதை உணர்ந்தாள்.

அந்தப் பர்சில் அவளது அலுவலக அட்டை இருக் கின்றது யாராவது பார்த்து எடுத்து விட்டால், பத்திரி கையில் செய்தி வருவதற்கு முன்பே சுதாரித்து விட வாய்ப்பு இருக்கிறது என்பதை உணர்ந்தவள், ''பீட்டர். நீங்க கிளம்புங்க. திரும்பவும் ரெண்டு பேரும் சேர்ந்து போனால், அங்கே இருக்கிறவங்களுக்கு சந்தேகம் வர வாய்ப்பு இருக்கு. நான் வேகமா போய் என் பர்சை எடுத்துட்டு வந்துடறேன்!'' என்று மீண்டும் விடுதியின் உள்ளே சென்றாள்.

* * *

கடவுளே! நேஹா சொன்னது ஒன்பது மணிக்கு வேலையை முடித்திருந்தால், அவள் சொன்ன இடத்தில் இருந்து அரை மணி நேரத்தில் வீட்டுக்கு வந்திருக்க முடியுமே? பதினோரு மணி வரை வரவில்லையே! என்ற பயத்துடன், மீண்டும் நேஹாவுக்கு அழைத்தவன், ப்ரியாவுடன் சென்றவர் யார் என்று விசாரித்து, அவரது எண்ணை வாங்கி பீட்டரை அழைத்தான்.

அவன் முகமும் குரலும் இறுகி இருப்பதைக் கண்ட வளுக்கு, தான் வர தாமதம் ஆகும் என்று அவனுக்கு, தகவல் சொல்லவில்லை என்பதால் வந்த கோபம் என்று புரிந்தது.

''என் போன் சார்ஜ் முழுக்க இறங்கிடுச்சு! அதான் உனக்கு போன் செய்ய முடியலை! சாரி ஆகாஷ்.''

அவள் கேட்ட மன்னிப்புக்கும் அவனிடம் எந்த பதிலும் இல்லை!

தங்கள் வீட்டுக்கு வந்த பிறகும் அவன் பேசாமலே இருக்க, ''அதான் சாரி சொல்லிட்டேன் இல்ல? வேண்டும்னு செய்யலை ஆகாஷ். சீக்கிரம் வேலை முடிஞ்சுடுச்சு! நேஹாவுக்கு போன் செஞ்சு முடிக்கும்போதே என் போன் ஆஃப் ஆகிடுச்சு. என் பர்சை எடுக்க உள்ளே போனேனா? அதுக்குள்ளே அங்கே எங்களை மாதிரியே இன்னொரு பத்திரிகையில் ஆட்கள் வந்ததைக் கண்டு பிடித்து அங்கே ஒரே கலவரம். அப்படியும் என் பர்சை எடுத்துட்டு நான் வெளியே வரதுக்குள்ள, உள்ளே கதவை பூட்டிட்டாங்க. அதான் பின் பக்க வழியா யாருக்கும் தெரியாமல் வர லேட் ஆகிடுச்சு!'' என்று அவள் விளக்கம் சொல்ல, அவளை நிமிர்ந்து பார்த்தவன் முகம் வெளிறி இருந்தது.

''அங்கே... அங்கே ஏதாவது உனக்கு பிரச்சனை ஏற்பட்டிருந்தா?'' என்றவன் குரலில் கோபத்தை விட, கலக்கமே நிறைந்திருந்தது.

''இந்த மாதிரி இடத்துக்கு போறதுக்கு முன்னாடி, பாதுகாப்பா வெளியே வர வழி இருக்கா என்று தெரிந்து கொள்ளாமல் போக மாட்டோம், ஆகாஷ்'' என்றவள்.

''அவங்க பர்சை உள்ளே விட்டுட்டு வந்துட்டாங்க சார்! அதை எடுக்க போனாங்க. அவங்க போ என்று சொல்லியும் நான் போகாமல் இங்கேதான் காத்திட்டு இருக்கேன். அவங்க போனுக்கு முயற்சி செஞ்சாலும், ஸ்விட்ச் ஆஃப் என்றுதான் வருது! உள்ளே ஏதோ பிரச்சனை என்று நினைக்கிறேன் மெயின் கேட்டை வேற மூடி இருக்காங்க.''

பீட்டர் சொன்ன விவரத்தைக் கேட்டதும், கட்டுப் பாடின்றி பதறிய மனதை, முயன்று நிதானப் படுத்திக் கொண்டு, அதற்கு மேல் ஒரு நொடியும் தாமதிக்காது ஆகாஷ் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினான்.

'கடவுளே! என் ப்ரியாவுக்கு எதுவும் ஆகி இருக்க கூடாது!' என்ற வேண்டுதலைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இன்றி, மின் தூக்கியைக் கூட எதிர்பாராமல், இரண்டிரண்டு படிகளாக இறங்கி வந்தவனது கால்கள், தன் எதிரே வந்து கொண்டிருந்த ப்ரியாவைக் கண்டதும், நிற்க முடியாமல் தள்ளாடியது.

வேகமாக அவன் அருகில் வந்த ப்ரியா, ''ஹே... ஆகாஷ் இந்த நேரத்தில் எங்கே கிளம்பறே?'' என்று வினவ,

அதுவரை இருந்த பயம், தவிப்பெல்லாம் வடிந்து, படியிலேயே அமர்ந்தவன் மனதில் நிம்மதி படர்ந்தாலும், ஆகாஷால் இயல்பாக பேச இயலவில்லை.

''ஆகாஷ்? என்ன ஆச்சு?''

''சொல்றேன்! வா...!'' என்று இறுகிய குரலில் சொல்லி விட்டு, எழுந்து நடந்தவன் இதயம். இன்னும் சீராகத் துடிக்க ஆரம்பிக்கவில்லை!

அவன் அருகில் வந்து, அவனது கையைப் பற்றி, "ரொம்ப பயந்துட்டியா?" என்றாள்.

"பயமா? உன்னை... உன்னை முழுசா பார்க்கிற வரை, என் உயிர் என்கிட்டே இல்ல தெரியுமா...?" என்ற ஆகாஷின் குரல் நடுங்கியது!

அவள் விழிகள் விரிய ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஆகாஷ் மனைவியின் கைப்பற்றி இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்தான்.

அவன் பிடியில் இருந்து விலக முயன்றவளை, லேசாக நடுங்கி கொண்டிருந்த அவனது தேகமும், வெளியே வந்து துடிக்கிறதோ என்று எண்ணும்படியான அவனது வேகமான இதய துடிப்பும், அசைவற்று நிற்க வைத்தது.

அவளது கை, அவனது முதுகை ஆறுதலாக வருடியது.

அந்த வருடலில் இதம் கண்டு தன்னிலைக்கு வந்தவன், மெல்ல அவளைத் தன்னிடம் இருந்து விடுவித்து, "நீ பெரிய ஜான்சி ராணி என்று ஒத்துக்கறேன். ஆனால், இந்த மாதிரி ஆபத்தான இடத்துக்கு போறதுக்கு முன்னாடி, உரிய பாதுகாப்போடு போவேன்னு எனக்கு ப்ராமிஸ் பண்ணு!" என்று கண்டிப்புடன் கூறியபடி, அவள் எதிரே தன் கையை நீட்டினான்.

அவன் மீதிருந்த பார்வையை சற்றும் எடுக்காமல், ப்ரியா அவன் கை மேல் தன் கையை வைத்தாள்.

"இனிமேல், இந்த மாதிரி இடத்துக்கு போறதா இருந்தால், என்னையும் கூப்பிடு, நானும் வரேன்!"

அவனது அக்கறையில் நெகிழ்ந்தாலும், அவன் வீணாக பயப்படுவதாக தோன்ற, "என்னாச்சு ஆகாஷ்? நான் போற இடத்துக்கெல்லாம் நீ வந்துட்டு இருக்க முடியுமா? உன் வேலை உனக்கு முக்கியம் இல்லையா?"

ஆச்சரியமும் கேலியுமாக அவள் வினவ, "என் வேலை எனக்கு முக்கியம்தான்! ஆனால், உன்னை விட இல்லை!" என்றவன், அவள் விழிகள் விரிவதைக் கண்டதும், நெருங்கி வந்து,

"சொல்லப்போனால்... உன்னை விட முக்கியம் என்று, எனக்கு இந்த உலகத்தில வேற எதுவுமே இல்லை!" என்று அவளது கண்களை ஊடுருவி சொல்லி விட்டு அமைதியாகி விட, அவனது கண்களையே பார்த்து கொண்டு அவளும் பேசாமல் இருந்தாள்.

இத்தனை நாட்களாக அவர்கள் பேசாத அனைத்தையும், அவர்களது விழிகள் அப்போது பேசிக் கொண்டன!

சிறிது நேர அமைதிக்குப் பிறகு, நேஹாவுக்கும், பீட்டருக்கும் அழைத்து ப்ரியா பத்திரமாக வந்து விட்டதைச் சொன்னவன், ப்ரியாவின் கைப்பேசியை வாங்கி சார்ஜரில் போட்டு விட்டு வந்து, "சரி ஃப்ரஷ் செஞ்சுட்டு வா. சாப்பிடலாம்!" என்று விட்டு நகர, அவன் இத்தனையும் செய்து முடிக்கும் வரை, அதே இடத்திலேயே நின்று கொண்டிருந்த ப்ரியா, அவனது கையைப் பற்றி தடுத்தாள்.

"ஏன்?"

அவளது ஒற்றை கேள்வி. எதற்கென்று புரியாமல் அவன் அவளைக் கேள்வியாக நோக்க, பற்றிய அவனது கையைப் பற்றி தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டவள்.

அவன் ஆச்சரியமாக பார்க்கும்போதே, ''ஏன், என்னை விட உலகத்தில வேற எதுவுமே உனக்கு முக்கியம் இல்லைன்னு கேட்டேன்!'' என்றாள்.

அவளது கேள்வியும், அவளது குரலில் இருந்த நெருக்கமும், அவளது கண்களில் தெரிந்த காதலும், அவனைத் திக்கு முக்காடச் செய்தன. அவள் மனம் மாறி இருக்கிறது என்ற தன் நம்பிக்கை உண்மையே தானா?

அதுவரை இருந்த மன நிலை மாறி, அவன் மனம் சந்தோஷத்தில் பறக்க ஆரம்பித்தது.

''ப்ரியா?''

''சொல்லு... என் கேள்விக்கு பதில் சொல்லு!''

அதிகாரமாக அவள் சொன்னதும், ''உனக்கே பதில் தெரிஞ்சுருக்கணுமே!'' என்றான் அவன், முறுவலுடன்.

''நீ சொல்லு! உன் வாயால கேட்கணும்!''

அவளும் விடுவதாயில்லை.

''அப்படியா? என் வாயால கேட்கணுமா?'' என்றவன் குரலில் உல்லாசம் மிகுந்திருந்தது. அவன் மனைவியின் கண்களில் தெரிந்த காதலால்!

அவளது கன்னத்தில் இருந்த தனது கையை அவளிடம் இருந்து விலக்கி, அதை அவளது இடையில் பதித்து தன் பால் லேசாக இழுத்தான்.

அவனது இழுப்புக்கு ஆசையுடன் கட்டுப்பட்டு அருகில் வந்தவளது முகம், அவனது தோளில் பதிந்தது.

மெல்ல குனிந்து, அவளது செவியில் இதழ் பதித்து, ''சொல்லித்தான் ஆகணுமா?'' என்றவனது கிசுகிசுப்பான குரலில் மயங்கினாலும், ''ஆமாம்!'' என்பதாய் அவளது தலை மேலும் கீழும்

அவளது முகத்தைக் கையில் ஏந்தியவன், அவளது விழிகளை தனது காதல் நிறைந்திருந்த விழிகளால் ஊடுருவ, ஓரிரு நிமிடத்துக்கு மேல் தாக்கு பிடிக்க முடியாமல், அவளது கண்கள் தழைந்து, இதழ்கள் முறுவலில் மலர்ந்தன.

அவளது மலர்ந்த இதழ்களில் பதிந்த பார்வையில் தடுமாறிய ஆகாஷ், அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த இயலாதவனாக, ''ப்ரியா...'' என்ற கிறக்கமான அழைப்புடன், அவளது இதழ் நோக்கி குனிந்தான்.

அவனது நோக்கம் புரிந்து. அவனது நெஞ்சில் கை வைத்து லேசாக தள்ளி விட்டவள், ''நோ... முதல்ல என் கேள்விக்கு பதில்! அப்புறம் தான் எல்லாம்!'' என்றாள். லேசான அழுத்தம் கலந்த கொஞ்சல் குரலில்.

''ஓகே!'' என்றவன், ''பதில் சொன்ன பிறகு, எல்லாம் கிடைக்குமா?'' என்றான், 'எல்லாம்' என்பதில் அழுத்தம் கொடுத்து,

''ம்ம்ம்...'' என்றவள் குரல் மெலிந்து, கன்னங்களில் செம்மை படர்ந்தது.

''உன்னை விட முக்கியம் என்று எனக்கு உலகத்தில வேறு எதுவும் இல்லை! ஏன்னா?'' என்றவன், கொஞ்சம் இடைவெளி விட்டு,

''ஏன்னா... என்னோட இந்த செல்ல ராட்சசியை நான் அந்த அளவுக்கு காதலிக்கிறேன்!''

காதலுடன் அவன் சொல்லி முடித்ததும், ப்ரியா அவனை பாய்ந்து கட்டிக் கொண்டாள். அவனும் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

எவ்வளவு நேரம் அந்த அணைப்பு நீண்டதோ! தன் சட்டையில் ஈரம் உணர்ந்து, ஆகாஷ், மனைவியை வேகமாகத் தன்னிடம் இருந்து விலக்கினான்.

''ப்ரியா?? அழறியா? ஏன்?'' என்று அவன் பரிதவிக்க,

''தெரியலை ஆகாஷ். அழணும் போல இருக்கு... வாய் விட்டு சிரிக்கணும் போல இருக்கு... குதிக்கணும் போல இருக்கு!''

கண்ணீரும் புன்னகையும் போட்டி போட, அவள் சொல்ல,

''சிரி... குதி... ஆனால், அழ வேண்டாம்!'' என்றவன், மீண்டும் அவளைத் தன் அணைப்புக்குள் கொண்டு வந்தான்.

அவனது கழுத்தை சலுகையுடன் கட்டிக் கொண்டு, அவன் தோளில் முகம் புதைத்து, ''உண்மையிலேயே நீ என்னை அந்த அளவுக்கு விரும்பறயா?'' என்றவளது கேள்வியில் இருந்த ஆர்வம். புன்னகையை வரவழைக்க, பதில் சொல்லாமல் ''உனக்கெப்படி தோணுது?'' என்று பதில் கேள்வி எழுப்பினான் அவன்.

அவனது தோளில் சாய்ந்திருந்த தனது தலையை நிமிர்த்தி, அவள் அவனைக் கண்ணோடு கண் நோக்கி, ''உலகத்திலே வேற யாரும் உன் அளவுக்கு, அவங்க மனைவியை காதலிக்க மாட்டாங்கன்னு தோணுது!'' என்றவளது குரல் உணர்வுப் பூர்வமாக ஒலித்தது.

''ஹே! பயங்கரமா வசனம் எல்லாம் பேசறே?'' என்று அவளை கேலி செய்ய வாயெடுத்தவன், அவள் கண்

ணில் தெரிந்த எல்லையற்ற காதலில் வார்த்தைகளை மறந்தான்.

''ப்ரியா!'' என்று காதலுடன் அழைத்தவன், அதற்கு மேல் ஒரு கணமும் தாமதிக்காது. மனம் கவர்ந்தவளின் முகத்தை, தன் முத்தங்களால் நிறைத்தான். ப்ரியா, முதலில் அவனது வேகத்தில் திணறி, பின் மயங்கி, மன நிறைவோடு அவன் தந்த பரிசை ஏற்றுக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து, மனமில்லாமல் அவளிடம் இருந்து விலகியவனுக்கு, இளம் ரோஜாவாய் மலர்ந்திருந்த மனைவியின் வதனம், மோகன முறுவலை தோற்றுவித்தது.

மூடி இருந்த அவளது விழிகளில் மென்மையாக முத்தமிட்டவன், ''ப்ரியா...'' என்றழைக்க, மெல்ல கண்களைத் திறந்த அவனது மனையாள், மையலுடன் கணவனை நோக்கினாள்.

''நான் சொல்லிட்டேன்! இப்போ நீ சொல்லு!'' என்றான் அவன்.

''சொன்னால் தான் புரியுமா...?'' என்றவள் குரலே. அவள் மயக்கத்தில் இருந்து இன்னும் வெளி வர வில்லை என்பதை உணர்த்தினாலும்,

''உதை வாங்குவே! என்னை மட்டும் சொல்ல வைச்சே இல்ல? நீயும் சொல்லித்தான் ஆகணும். என்று அவனும் அவளைப் போலவே பிடிவாதம் செய்தான்.

''சரி...'' என்றவள், நிமிர்ந்து அவனது நெற்றியில், தன் இதழ்களைப் பதித்து விட்டு, அவன் முகம் நோக்கி னாள்.

''தேங்க்ஸ்...'' புன்னகையுடன் நன்றி சொன்னவன், ''சொல்லு!'' என்றான்.

அவள், அவனது வலது கன்னத்தில் இதழ் பதித்து விட்டு மீண்டும் அவனை நோக்க, ''தேங்க்ஸ்! சொல்லு!'' என்றான் அவன்.

அவள், அவனது இடது கன்னத்தில் இதழ் பதித்து விட்டு மீண்டும் அவனை நோக்க, அவன் ''தேங்க்ஸ்! ஆனாலும் சொல்லித்தான் ஆகணும்!'' என்றபோது எதிர்பார்ப்பிலும், குறும்பிலும் அவனது கண்கள் பளபளத்தன.

''போடா...'' என்றபடி, அவள் அவனது மார்பில் முகத்தைப் புதைக்க, ''ஹே! என் செல்லக்குட்டிக்கு வெட்கம் எல்லாம் வருதே!'' என்று கேலி செய்தவன்.

''ப்ரியா... என் செல்லகுட்டி இல்ல? பட்டுகுட்டி இல்ல? ஒரே ஒரு முறை சொல்லிடு ப்ளீஸ்... ப்ளீஸ்!'' என்று கொஞ்சலுடன் கெஞ்சினான்.

''ம்ஹூம்...'' என்று மறுப்பாய், அவனது மார்பில் பதிந்திருந்த அவளது தலைஅசைந்தது.

''ஓகே! நீ சொல்றவரை நாம இப்படியே தான் நின்னுட்டு இருக்க போறோம்! சொல்லிட்டேன்!'' என்று அவன் செல்லமாக மிரட்ட,

''சரி!'' என்று முனகி விட்டு அவள், மேலும் அவனுடன் ஒண்டிக் கொண்டாள்.

சிறிது நேரம் அமைதியாக கழிய, ''ஹே... செல்லம்... இது அநியாயம்... இத்தனை நாள் காக்க வைச்சது போறாதுன்னு, இந்த நேரத்தில இப்படி செய்யறது

நல்லாவா இருக்கு?'' என்று ஆகாஷ் ஏக்கத்துடன் வினவ, ப்ரியாவிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை.

''ப்ரியா...'' என்றபடியே அவன் அவளைத் தன்னிடம் இருந்து விலக்க, அவள் நின்று கொண்டே உறங்கி இருப்பது புரிந்தது.

''அடிப்பாவி... இப்படியுமா ஒருத்தி இருப்பா?'' என்று புலம்பியவன்,

''ஆகாஷ்... உன் வாயே உனக்கு எதிரிடா! இந்த நேரத்தில உனக்கு இந்த பிடிவாதம் தேவையா?'' என்று மனதுக்குள் நொந்து கொண்டு, அவளைக் கையில் ஏந்திக் கொண்டு படுக்கை அறைக்கு வர, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்ட ப்ரியா, ''ஒரு நாள் என்னை இப்படி தூக்கிட்டு வரும்போது, நான் பயங்கர வெய்ட்டா இருந்தேன்னு சொன்னே இல்ல?'' என்று கேள்வி எழுப்ப,

''ஹே... கள்ளி... நீ தூங்கலையா? நல்ல வேளை!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவன், ''ம்... அப்போ மனசில் காதல் இல்லை! அதனால் கனமா தெரிஞ்சே... இப்போ மனசில் காதல் வந்துடுச்சு! கனமே தெரியலை! 'கையில் மிதக்கும் கனவா நீ' என்று பாட்டு பாடத்தான் தோணுது!'' என்று அளவற்ற காதலுடன் சொல்ல, கணவனது கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்து, தன் சந்தோஷத்தைப் பகிர்ந்தவள்,

''நீ இப்படி தூக்கிட்டு வரணும் என்ற ஆசையில்தான், தூங்கின மாதிரி நடிச்சேன்!'' என்று கண் சிமிட்டினாள்.

அவளைப் படுக்கையில் கிடத்தி விட்டு, ''இரு... நான் போய் சாப்பாடு எடுத்துட்டு வரேன்!'' என்று அவன் எழுமுயல, ப்ரியாவின் கரம் அவனைத் தடுத்தது.

ஆர்வமாக திரும்பியவனிடம், ''ஆகாஷ்... இப்போ என்னை தூக்கிட்டு வந்த இல்ல? அப்போ உனக்கு ஃபீலிங்க்ஸ் வந்ததுதா? இல்லையா?'' என்று புருவம் உயர்த்தி குறும்புடன் கேட்டவள், அவன் கைப்பற்றி இழுக்க, பழைய நினைவில் முறுவல் விரிய, சந்தோஷமாக அவள் மேல் சாய்ந்தான் அந்த காதல் கணவன்.

ஃபீலிங்க்ஸ் வந்தது என்பதை வார்த்தையால் அன்றி செயலால் அவளுக்கு உணர்த்தி விட்டு நிமிர்ந்தவன், ''உனக்கு?'' என்று வினவ,

ப்ரியாவின் இதழ்கள் அவனது செவியில் பதிந்து, ''இந்த செல்ல ராட்சசியும், இந்த கிறுக்கு பையனை ரொம்பவே காதலிப்பதால், அவளுக்கும் ஃபீலிங்க்ஸ் வந்தது!'' என்று கிசுகிசுத்தது.

''ப்ரியா...''

கிறக்கத்துடன் அழைத்து, சந்தோஷத்துடன் திரும்பி படுத்த ஆகாஷ். மனைவியைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு, அதற்கு மேல் அவர்களிடையே பேச்சுக்கு வேலையில்லாமல் செய்தான்.



18

காதல் கடலில் மூழ்கி முத்தெடுத்த இருவரும், தங்கள் இல்வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தை

சிறப்புற எழுதி முடித்த நிறைவில், மௌனமாக படுத்திருந்தனர்.

கணவனின் மார்பில் சாய்ந்திருந்த மனைவியின் கூந்தலை, ஆகாஷின் கரம் மென்மையாக வருடிக் கொண்டிருந்தது.

சற்று நிமிர்ந்து கணவனின் முகம் பார்த்த ப்ரியா, ''உனக்கு என்கிட்டே என்னடா பிடிச்சிருக்கு?'' என்று வினவினாள்.

''இதுதான் என்று இல்ல ப்ரியா... எனக்கு உன்னை மொத்தமா பிடிச்சிருக்கு!'' என்றவன் கரம், மனைவியை இறுக்கியது.

அவனிடம் இருந்து விலகியவள், படுக்கையில் எழுந்து அமர்ந்தாள் ''ப்ச்... இதெல்லாம் செல்லாது! ஒழுங்கா சொல்லு! உனக்கு எப்போ பிப்ரவரி முப்பதாம் தேதி வந்தது? ஏன் வந்தது? இதெல்லாம் அப்பவே கேட்க நினைச்சேன்! நீ எங்கே கேட்க விட்டே?'' என்றவள் முகம் வெட்கத்தைப் பூசிக் கொள்ள,

''ப்ரியா! நீ இப்படி வெட்கப்படும்போது எனக்கு யாரையோ பார்க்கிற மாதிரி இருக்கு!'' என்று கேலி செய்தாலும், மனைவியின் குங்கும நிறம் கொண்ட முகம் மனதை மயக்க, தானும் எழுந்து அவள் அருகில் அமர்ந்தவன், அவளது தோளைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டான்.

''இந்த கதை எல்லாம் வேண்டாம்! நான் கேட்டதுக்கு பதில் சொல்லு! ஏன் என் மேல் காதல் வந்தது? எப்போ வந்தது?''

"ம்ம்ம்... ஏன்? எப்போ?" என்று யோசிப்பது போல அவன் நடிக்க ஆரம்பித்ததும், பட்டென்று அவன் தொடையில் ஒன்று போட்டாள்.

"ஸ்... சொல்றேன்! என்ன அவசரம்?" என்று விட்டு, "ஏன் என்று கேட்டால் எனக்கு பதில் சொல்லத் தெரியலை! எப்போ வந்தது என்றும் தெரியலை! ஆனால், நான் எப்போ என் காதலை உணர்ந்தேன் என்று வேணா சொல்லலாம்!" என்றவன், ஆர்வத்துடன் நோக்கியவள் பக்கம் திரும்பி அமர்ந்து கொண்டு சொல்லத் துவங்கினான்.

"நீ முதல்ல ஒரு ட்ரிப் போயிருந்தே இல்ல? அப்போ நான் உன்னை ரொம்ப மிஸ் செஞ்சேன்! முதல்ல. இரண்டு பேரும் ஒண்ணா இருக்கோம் திடீர்னு ஒருத்தர் இல்லை என்பதால், அப்படி இருக்குன்னு நினைச்சேன். பட், அடுத்த ரெண்டு நாள். பைத்தியம் பிடிச்ச மாதிரி இருந்தது. எங்கே பார்த்தாலும் நீ இருக்கிற மாதிரி, பேசற மாதிரியே ஒரு பிரமை! எப்ப பாரு உன்னை பற்றியே நினைச்சுட்டு இருந்தேன். நினைக்கக் கூடாது என்று நினைச்சு நினைச்சு, உன்னைப் பற்றி மட்டும்தான் நினைச்சுட்டு இருந்தேன்."

அவன் சொன்னதைக் கேட்டு விழிகளை விரித்த ப்ரியா, "அப்படவேவா? நீ கொஞ்சம் கூட காண்பிச்சுக் கவே இல்லையே?" என்று வியக்க,

"எங்கே காண்பிக்கறது? நீதான் ஸ்ட்ரிக்டா சொல்லி இருந்தாயே, ஃபீலிங்க்ஸ் வந்தாலும் சொல்லக் கூடாதுன்னு!" என்று அவன் அலுத்துக் கொண்டான்.

"நீ மட்டும் என்னவாம்? ஃபீலிங் வந்துட்டா என்ன செய்யறதுன்னு நான் கேட்டதுக்கு, எனக்கு ஓவர் கான்பிடன்ஸ் என்று கிண்டல் செய்யலை?" என்று அவனை வாரி விட்டு,

"பாரு! அப்பவே உன்னைப் பற்றி சரியா கணிச்சிருக்கேன்!" என்று பெருமிதத்துடன் உதட்டைச் சுழித்த மனைவியின் இதழ்களை நோக்கி குனிந்தவனின் உத்தேசம் புரிந்து, அவள் விலகும் முன், அவளது இதழ்களில் அழுந்த முத்தமிட்டான் ஆகாஷ்.

சற்று நேரம் கழித்து விலகியவனிடம், "திருடா... பேசிட்டு இருக்கும்போதே இது என்ன போங்காட்டம்!" என்று மிரட்டினாலும், அவன் தோளில் சலுகையுடன் சாய்ந்து கொண்டு,

"ஃபீலிங்க்ஸ்தான் வந்துடுச்சு இல்ல? அப்புறம் என்கிட்டே சொல்ல வேண்டியதுதானே? சொல்லத்தான் நினைக்கிறேன்.... சொல்லாமல் தவிக்கிறேன்... என்று ஏன் பாட்டு பாடிட்டு இருந்தே?" என்று கேலி செய்த வளின் மூக்கைப் பிடித்து செல்லமாக ஆட்டியவன்,

"உனக்கு கிண்டலா இருக்கா? தினமும் உன்கிட்ட சொல்லவும் முடியாமல்... சொல்லாமல் இருக்கவும் முடியாமல் நான் தவிச்ச தவிப்பு எனக்குதான் தெரியும்!" என்று குறைபட்டான்.

"எனக்கும் புரியுதுப்பா... ஏன்னா நானும் அந்த தவிப்பை அனுபவிச்சிருக்கேனே?" என்றவளை ஆச்சரியத்துடன் நோக்கியவன்,

"ஹே... செல்லக் குட்டி! நீ சொல்லு! உனக்கு எப்போ உன் மனசு புரிஞ்சுது?" என்று ஆர்வமாக வினவினான்.

"எனக்கும் உன்னை மாதிரியே எப்போ என் மனசு மாறுச்சு என்று சொல்லத் தெரியலை! என்னை உணர வைச்சது நேஹாதான்!" என்ற ப்ரியா, தனக்கும் நேஹாவுக்கும் நடந்த உரையாடலை சொல்ல,

"அதானே பார்த்தேன்! எங்கடா என் ஜான்சி ராணிக்கு தானே பல்ப் எரிஞ்சுடுச்சோ என்று, நான் கூட அப்படியே ஷாக் ஆகிட்டேன்!" என்று ஆகாஷ் கிண்டல் செய்தான்.

"கொழுப்புடா உனக்கு!" என்று அவன் காதைப் பிடித்து செல்லமாகத் திருகியவள், "நேஹா என்னதான் சொன்னாலும், நானேதானே என் மூளையை பயன் படுத்தி என் காதலையும் உன் காதலையும் கண்டு பிடிச்சேன்!" என்று பெருமிதமாகக் கூற,

"ஆமா... ஆமா... என் பொண்டாட்டிக்கு எம்புட்டு அறிவுன்னு எனக்கு தெரியாதா என்ன?" என்று கேலி யாக சொன்னாலும்,

"என் காதலையுமா? எப்படிடா கண்டுபிடிச்சே?" என்று கேள்வி கேட்டவன், அவள் பதில் சொல்லும் முன்னரே, தன் மனைவியின் அறிவை மெச்சி பரிசையும் கொடுத்தான்.

"அதுவா?" என்று ஆர்வத்துடன் தொடங்கியவள் முகம் அன்றைய நினைவில் மலர்ந்தது.

"நான் டெல்லிக்கு போக போறேன் என்று சொல்லி உன்னை பயமுறுத்தினேன் இல்ல?"

"அடிப்பாவி! அது டூப்பா? இரண்டு நாளா என் மண்டையைக் காய வைச்சுட்டாயே?" என்று ஆகாஷ்

அங்கலாய்க்க, "பார்த்தியா? என்னை ட்யூப் லைட் என்று சொன்னே இல்லை? நீ மட்டும் என்னவாம்?" என்று அவனை வாரி விட்டு,

"நீ சோகமா வெளியே போயிட்டியா? அப்போ உனக்கு போன் செஞ்சேனா? நீ போனை வீட்டிலேயே விட்டுட்டு போயிருந்தே! அதில் நீ என் நம்பரை சேவ் செஞ்சு வைச்சிருந்த விதத்தைப் பார்த்ததும் எனக்கு எல்லாம் தெளிவா புரிஞ்சுடுச்ச!" என்றவள் முகம், உலக மகா கண்டுபிடிப்பை கண்டுபிடித்த பெருமிதத்தைக் காட்ட,

"அடி என் செல்லமே!" என்று அவளுக்கு திருஷ்டி எடுத்த ஆகாஷின் முகமும், சந்தோஷத்தில் மலர்ந்தே இருந்தது.

"அதென்ன ப்ரிய சூரியன். எல்லாரும் பெண்களை நிலவுக்கு தானே ஒப்பிடுவாங்க?" என்று அவள் கேள்வி எழுப்ப,

"என்ன இருந்தாலும், என் பொண்டாட்டி ஸ்பெஷல் இல்லையா? அதான் சூரியன்!" என்று பதில் சொல்லி விட்டு, "அது உன் பேருடா! பானு என்றால் சூரியன் என்று அர்த்தம்... உனக்கு தெரியுமா தெரியாதா?" என்றான் அவன்.

"என் பெயரோட அர்த்தம் எனக்கு தெரியாமல் இருக் குமா? நான் ஸ்பெஷல் என்று நீ சொல்லி கேட்கிறதில் ஒரு சந்தோஷம்!" என்றவள்,

"என்னை உன் சூரியன் என்று சொல்ற நீதான் உண்மையிலேயே ஸ்பெஷல் ஆகாஷ்!" என்றாள் ஆத்மார்த்தமாக!

"ஏன்? ஆண்களைத்தான் சூரியன் என்று சொல்லணுமா என்ன? இந்த வானத்தில் இருக்கும் சூரியன், நிலவு எல்லாமே நீதாண்டா!" என்று தன்னையும் அவளையும் சுட்டிக் காட்டி சொல்லி விட்டு, அவளை அணைத்துக் கொண்டவன் குரலில் கொஞ்சமும் கேலி இல்லை!

அவன் ஆத்மார்த்தமாக சொன்னது மனதை நிறைக்க, ப்ரியா தான் குடி இருக்கும் அவனது நெஞ்சில், தன் இதழ்களைக் காதலுடன் ஒற்றி எடுத்து விட்டு, "அதைப் பார்த்ததும் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? உடனே உன்கிட்ட என் காதலைச் சொல்லிடணும் போல மனசு துடிச்சது! ஏன்னா நானும் உன் நம்பரை அப்படித்தான் ஸ்டோர் செஞ்சு வைச்சிருந்தேன்!!" என்றவள்.

தன் கைப்பேசியை எடுத்து அவன் கையில் கொடுத்து, "உன் நம்பருக்கு கால் செய்!" என்று சொன்னதும், மறு பேச்சின்றி அவள் சொன்னதைச் செய்தவன், அவளது கைப்பேசியின் திரையில் 'என் வானம்!' என்று ஒளிர்ந்ததைக் கண்டதும், "ப்ரியா..." என்று நெகிழ்வுடன் அழைத்து, அவளது பிறந்த நாள் அன்று தானும், இப்படி யோசித்ததை சொல்லி, அணைப்பை இறுக்கினான்.

ப்ரியா, "பாரு... நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லலை! ஏன் என்கிட்டே நீ உன் காதலை முதல்லையே சொல்லலை?" என்று மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"இல்ல ப்ரியா நான் உன்கிட்ட திருமணத்துக்கு உரிய எந்த கடமையையும், உரிமையையும் எதிர்பார்க்க

மாட்டேன் என்று சொல்லித்தான், உன்னை சம்மதிக்க வைத்தேன். அதனால் உன்கிட்ட சொல்ல எனக்கு தயக்கமா இருந்துச்சு. நான் என் காதலைச் சொல்லி, நமக்குள்ள இருக்கிற அழகான நட்பு கெட்டுட வேண்டாம்னு தோணுச்சு. இதெல்லாத்தையும் விட, உன்னை எந்த விதத்திலும் கஷ்டப்படுத்த கூடாதுன்னு. என் உணர்வை கட்டுப்படுத்த நினைச்சேன். உனக்குள்ளும் கொஞ்சமாவது மாற்றம் வந்த பிறகுதான். எதையும் பேசணும் என்று நினைச்சிருந்தேன். பட்... அது அவ்வளவு ஈசியா இருக்கலை. இப்போ எல்லாம் சரியாகி அப்படியே ஜிவ்வுன்னு பறக்கின்ற மாதிரி மனசு எவ்வளவு லேசா இருக்கு தெரியுமா?"

சந்தோஷமாக சொன்னவனது கன்னத்தில் இதழ் பதித்து, "யூ ஆர் சோ ஸ்வீட், அஸ் ஆல்வேஸ்!" என்று சொல்லி விட்டு,

"எனக்கு உன் மேல் காதல் வந்ததில் ஆச்சரியமே இல்லை ஆகாஷ்... ஏன்னா முதல்ல இருந்து நீ எனக்காக... என்னை கம்ஃபர்டபிளா வைக்கிறதுக்காக என்று நிறைய செஞ்சுருக்கே! ஆனால்... உனக்கு எப்படி என் மேல்..." என்றவளது உதட்டில் விரல் வைத்து அவளது பேச்சை நிறுத்தியவன்,

"இதென்ன பேச்சு ப்ரியா? காதல் என்ன பண்ட மாற்ற வியாபாரமா என்ன? அது ஒரு ஃபீலிங்! வந்த துன்னா அனுபவிக்கணும்! ஆராயக் கூடாது!" என்று கேலியாக சொன்னாலும்,

"உன்கிட்ட தைரியம், நிமிர்வு, தன்னம்பிக்கை இதெல்லாம் எனக்கு எப்பவும் பிடிக்கும்! காதல் வந்த பிறகு,

இவள் என் மனைவி என்று எனக்கு எப்பவும் உன்னை நினைச்சு பெருமைதான்!'' என்று தன் மனைவியிடம் தனக்கு பிடித்ததைப் பகர்ந்தவன்.

''சரி நீ சொல்லு! என்கிட்ட உனக்கு என்ன பிடிச்சுது? எப்போ பிடிச்சுது?'' என்று ஆர்வமாக வினவினான்.

அவனது ஆர்வத்தைக் கண்டு புன்னகைத்தவள், ''உன்கிட்ட எனக்கு என்ன பிடிக்கும்?'' என்று கன்னத்தில் விரல் தட்டி யோசிக்க ஆரம்பிக்க,

''ஏய் வாலு! ரொம்ப அலட்டிக்காமல் சொல்லுடி!'' என்று கொஞ்சினான்.

''ஏய் என்ன? சந்தடி சாக்கில டி போடறே?'' என்று அவள் செல்லமாக மிரட்ட,

''டீ போட்டு தரும்போது டி போடக் கூடாதா?'' என்று அவன் கண்சிமிட்டியவன், அவள் உதட்டைச் சுழிக்கவும், மீண்டும் அவள் புறம் குனிய எத்தனிக்க, சட்டென்று அவனைத் தள்ளி விட்டவள்,

''ஒரே நாள்ல ரொமான்ஸ் மன்னன் ஆகிட்டே! கொஞ்ச நேரம் சும்மா இரு!'' என்று அதட்டி விட்டு,

''உன்கிட்ட எனக்கு நிறைய விஷயங்கள் பிடிக்கும். ஆகாஷ்! ஆனால், ரொம்ப ரொம்ப பிடிச்சது என்ன தெரியுமா?'' என்ற கேள்வி கேட்டவளின் கண்களில் தெரிந்த பளபளப்பும், முகத்தில் தெரிந்த பூரிப்பும், அவனது ஆர்வம் கூடியது.

அவனது ஆர்வம் கலந்த பார்வையைக் கண்டு புன்னகைத்தவாறே, அவனது தோளில் சாய்ந்து, ''உன் கூட இருக்கும்போது நான். நானா இருக்கேன்! ஐ அம்

கம்ப்ளீட்லி மைசெல்ஃப், வென் ஐ ஆம் வித் யூ! எந்த வெளிப்பூச்சும் இல்லாமல், நான் என்ன நினைக்கிறேனோ அதை பேசறேன்! அதை செய்யறேன்! இந்த மாதிரி ஒரு முழுமையான சுதந்திரத்தை நான் எங்க அம்மா அப்பா கூட இருக்கும்போது கூட உணர்ந்ததில்லை!'' என்று ஆத்மார்த்தமாக கூறியவளின் குரல் நெகிழ்ந்திருந்தது.

மனைவியின் வார்த்தைகள் தந்த எல்லையற்ற சந்தோஷத்தை உணர்த்தும் வகையில், அவனது கரங்கள் மனைவியை இறுக அணைத்தன.

''நாம் ரெண்டு பேருமே கல்யாணம் என்ற கமிட்மெண்டில் சிக்கிக்க விரும்பாமல், மேரேஜ் ஆஃப் கன்வினியன்ஸ் என்ற முறையில்தான் கல்யாணம் செஞ்சுகிட்டோம். நான் கல்யாணத்துக்கு பிறகும் அப்படிப்பட்ட எண்ணத்தோடுதான் இருந்தேன். ஆனால்... நீ அப்படி இல்ல, ஆகாஷ். தெரிஞ்சோ தெரியாமலோ என்னை எப்பவும் சந்தோஷமா வைச்சிருக்க முயற்சி செஞ்சுட்டே இருந்தே! என்னையும் மாத்திட்டே!'' என்று செல்ல அலுப்புடன் சொன்னாலும், அவளது குரலே, அந்த மாற்றம் அவளுக்கு சந்தோஷம்தான் என்பதை பறைசாற்றியது.

''எங்க அம்மா அடிக்கடி சொல்வாங்க, அவங்க அறிவுரை என்று எது சொன்னாலும், நான் கேட்டுக்கறே மாதிரியே இருக்காது. ஆனால், தேவையான நேரத்தில் அவங்க சொன்னதை கடை பிடிப்பேன். அப்படின்னு! என் சீனியர் கல்யாண வாழ்க்கை வெற்றியடைய சொன்ன வார்த்தைகளும் அப்படித்தான்! அவர்

சொல்லும்போது நான் பெரிசா கண்டுக்கலை. பட், என்னையும் அறியாமல் அதை கடை பிடிச்சுருக்கேன் என்று நினைக்கிறேன்!'' என்ற ஆகாஷுக்குமே திரு மணத்துக்கு பிறகான தன் செயல்களுக்கான அர்த்தம் பிடிபட்டதைப் போலிருந்தது.

''சமத்துக்குட்டிடா நீ!'' என்று கணவனைக் கொஞ்சிக் கொண்டவள், ''எந்த நிலையிலும், நமக்கு துணையா நிற்க ஒருத்தர் இருக்காங்க என்ற நம்பிக்கை எவ்வளவு அற்புதமான உணர்வு இல்ல?'' என்று விஸ்வநாதன் சொன்னதாக ஆகாஷ் சொன்னதை நினைவு கூர்ந்து.

தன் மனதில், தங்கள் திருமண வாழ்க்கையை வெற்றிகரமாக அமைய, தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்று அந்த கணம் உறுதி பூண்டாள். அவளது எண்ண ஓட்டம் புரிந்தவனாக, ஆகாஷும் அவள் கைப்பற்றி மெல்ல அழுத்தி, தானும் அந்த வாக்குறுதியில் பங்கு எடுத்துக் கொள்ளப் போவதை அவளுக்கு உணர்த்தினான்.

அங்கே சிறிது நேரம், அர்த்தம் நிறைந்த மௌனம் ஆட்சி செய்தது.

''நம்ம ரெண்டு பேரும் செஞ்ச கூத்தை எல்லாம் பொறுத்துக்கிட்டு, நமக்கு கல்யாணம் செஞ்சு வைச்ச நம்ம குடும்பத்துக்கு நாம ரொம்ப நன்றி சொல்லணும்!'' என்ற ப்ரியாவின் குரலில் நன்றி உணர்வு வெளிப்பட,

''கண்டிப்பா! அப்போ, அவங்களை எப்படி எல்லாம் கரிச்சு கொட்டினோம் இல்ல?'' என்று பழையதை நினைவு கூர்ந்து ஆகாஷ் புன்னகைத்தான்.

''உனக்குத் தெரியுமா ப்ரியா? உங்க அம்மாதான் நமக்கு கல்யாணம் என்ற பேச்சை ஆரம்பிச்சு வைச் சாங்களாம்! ஒரு நாள் பேச்சு வாக்கில் அம்மா சொன் னாங்க!'' என்று ஆகாஷ் சொல்ல,

''அப்படியா? நான் கேட்ட போது கூட அப்பா பிடி வாதமா இருக்கார் என்று அப்பா மேல்தான் பழி போட் டாங்க! என்னையே ஏமாற்றி இருக்காங்க பாரு!'' என்று ப்ரியா ஆச்சரியப்பட்டாள்.

''ரெண்டு வீட்டிலும் அப்பாக்கள் நம்ம அம்மாக் களுக்கு ஆமாம் சாமி போட்டதுதான், நம்ம விஷயத்தில் அவங்க பங்களிப்பு! அம்மாக்களுக்குத்தான் ஸ்பெஷல் நன்றி சொல்லணும்!'' என்று ஆகாஷ் சிரிக்க,

அவனோடு தானும் சிரிப்பில் இணைந்து, ''நாம நன்றி சொல்ல வேண்டியது. நம்ம குடும்பத்தில் இருக்கிற எல்லாருக்குமேதான்! ரேகாவும் உங்க அண்ணனும் காதலிக்காமல் இருந்திருந்தால், நாம எப்படி சேர்ந் திருப்போம்?'' என்று ப்ரியா சொல்ல, அதை ஆமோதித் தவன்,

''நன்றி சொல்ல வேண்டிய ஒரு முக்கியமான நபரை நீ மறந்துட்டே!'' என்றான்.

''யாரு? கடவுளுக்கு சொல்லணும் என்று சொல் றாயா? அது கண்டிப்பா சொல்லியே ஆகணும்!'' என்ற ப்ரியாவை நெருங்கி அமர்ந்தவன்,

''அவருக்கு நன்றி எல்லாத்துக்கும் சொல்லணும்! ஆனால்... நான் சொன்னது அவரைப் பற்றி இல்லை. கிட்டத்தட்ட கடவுள் மாதிரி இன்னொரு ஆளுக்கு!''

என்று அவன் கண் சிமிட்ட ப்ரியா ''யாருக்கு ஆகாஷ்?'' என்றாள் குழப்பத்துடன்!

''என் செல்ல ட்யூப் லைட்! கணவனே கண் கண்ட தெய்வம். என்று கேள்விப்பட்டதில்லை? அந்த தெய்வமான இந்த கணவனுக்குத்தான் நீ பெரிய தேங்க்ஸ் சொல்லணும்!'' என்றவன் குரல் குறும்பில் தோய்ந்திருக்க,

''ரொம்பத்தான்!'' என்று அழகு காட்டி விட்டு, ''அப்போ இருந்த நிலையில், நீயும் வேற வழி இல்லாமல் எடுத்த முடிவுதானே அது?'' என்றாள்.

''ப்ரியா... நல்லா யோசிச்சு பாரு! முதலில் நம்ம அம்மா அப்பா நமக்கு கல்யாணம் செய்து வைக்கிற ஆசையில் கட்டாயப் படுத்தினாங்கதான். அதற்கு பிறகு அவங்களே, நம்மை கட்டாயப் படுத்தக் கூடாது, நமக்கு பிடிச்சவங்களா பார்த்து கல்யாணம் செய்துக்க சொல்லி ஆறு மாசம் டைம் கொடுத்தாங்கதானே?''

ப்ரியா தலை ஆட்டி ஆமோதிக்க, ''ஒரு வேளை... நாம ஆறு மாதத்துக்கு பிறகும் மனம் மாறாமல் இருந்திருந்தால், ஆனந்த்-ரேகா கல்யாணத்தை முடிச்சுட்டு, நமக்கு இன்னும் டைம் கொடுத்திருப்பாங்களே தவிர, நம்மை கட்டாயப் படுத்தி இருக்க மாட்டாங்க!'' என்ற ஆகாஷ்.

''நமக்குள்ள அப்பவே ஏதோ ஒண்ணு இருந்திருக்கு! அதுதான் நம்ம ரெண்டு பேரையும் அப்போ சேர்த்து வைச்சிருக்கு! அதை அப்போ கண்டுபிடிக்கலை என்றாலும், பின்னாடி வரப் போறதை தீர்க்கதரிசியா உணர்ந்ததால் நான்தான் கல்யாணம் என்ற முடிவை

எடுத்திருக்கேன்! அதனால் நீ எனக்கு நன்றி சொல்லியே ஆகணும்!'' என்று முடித்தான்.

''அடப் பாவி! அப்போ இருந்த மன நிலையில் என்னை ஏமாற்றி, குழப்பி கல்யாணம் செய்ய வைச்சிருக்கே? அப்படித்தானே! உனக்கு நன்றி சொல்லக் கூடாது! தண்டனைதான் கொடுக்கணும்!'' என்று அவனை நெருங்கி அமர்ந்த ப்ரியா, அவன் கன்னத்தில் லேசாக கடித்து விட்டு, தன் இதழ்களால் அவனது இதழ்களில் தண்டனை என்ற பெயரில் பரிசை வழங்க,

கிடைத்த இடைவெளியில், ''பட்டுக்குட்டி! நீ இப்படி தண்டனை கொடுப்பே என்றால், நான் நிறைய தப்பு செய்வேண்டா!'' கிறக்கத்துடன் மொழிந்த ஆகாஷும், அவளது பரிசுக்கு இருமடங்காக பதில் அளிக்க, அங்கே கொஞ்ச நேரம், இருவரது இதழ்களும் வார்த்தைகள் இன்றி பேசிக் கொண்டன!

இளைப்பாற இருவரது இதழ்களும் கொஞ்சம் பிரிந்த நேரம், ''சரி... இப்பவே மணி மூணு. கொஞ்ச நேரமாவது படுக்கலாம்!'' என்று ப்ரியா சொல்ல,

''படுக்கலாம் படுக்கலாம்!'' என்று மனைவியை அணைத்தவனின் தோளில் ஒன்று போட்டவள், ''ஏதாச்சும் சில்மிஷம் செஞ்சே... உதை படுவே படவா! நாளைக்கு ஆபீஸ் போகணும்! கொஞ்ச நேரமாவது தூங்க விடு!'' என்று மிரட்டினாள்.

''சரிடா செல்லம் எதுவும் செய்யலை! ஆனால், சும்மா பிடிச்சுட்டு படுத்துக்கறேன்! ப்ளீஸ்...'' என்று கெஞ்சி கொஞ்சி அவளை அணைத்துக் கொண்டு,

''ப்ரியா... நாளைக்கு கண்டிப்பா ஆபீஸ் போக ணுமா?'' என்று வினவியவன் குரலில் போகாதே என்ற விண்ணப்பம் இருந்தது.

''நாளைக்கு ஒரு நாள் போயிட்டு வந்துடறேன்! அப்புறம் பத்து நாள் லீவ்!'' என்று அவள் அறிவிக்க, ''வாவ்! பத்து நாள் லீவா? ஹேய்... ஏதாவது சர்ப்ரைஸ் வைச்சுருக்காயா?'' என்று ஆர்வத்துடன் விசாரித்தான்.

''ம்...'' என்று தலை அசைத்தவள், ''இன்னைக்கு நைட் நாம கூர்க் போறோம்! பத்து நாள் அங்கே தான் நமக்கு ஹனிமூன்!'' என்று தான் செய்து வைத்திருந்த ஏற்பாட்டைச் சொல்ல.

துள்ளி எழுந்து அமர்ந்த ஆகாஷ், ''கள்ளி! இதெல் லாம் எப்போ செஞ்சே?'' என்று வியப்புடன் வினவி னான்.

''ம்க்கும்! நீயே வந்து காதல் சொல்லணும் என்று காத்திருந்தால், நாம அறுபது வயதில்தான் ஹனிமூன் போகணும் என்று எனக்கு தெரியும்! அதான் எல்லாம் நானே ஏற்பாடு செஞ்சுட்டேன்! இன்னைக்கு மனசு விட்டு பேசின பிறகு உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கணும் என்று இதெல்லாம் ஏற்பாடு செஞ்சிருந்தேன்!'' என்று ப்ரியா சொல்ல, அவனது ஆச்சரியம் கூடியதே தவிர குறையவில்லை.

அவளும் எழுந்து அமர்ந்து, அவன் முகத்தருகே விரலால் சொடக்கு போட, தன்னிலைக்கு வந்தவன், ''எனக்கு முக்கியமான வேலை இருந்திருந்தால் என்ன செஞ்சுருப்பே? எனக்கு வேறே எங்காவது போகணும் என்று விருப்பம் இருந்தால்?'' என்று அவளை மடக்க,

''ரெண்டு நாள் முன்னாடி, உன்னோட அடுத்த பதினைந்து நாள் ஷெட்யூல் என்ன என்று பேச்சு வாக்கில் கேட்டது எதுக்குன்னு நினைச்சியாம்? நீ ப்ரீயா இல்லையா என்று தெரிஞ்சுக்கத்தான்! உனக்கு கூர்க் போக பிடிக்கும்னு இத்தனை நாளில் எனக்கு தெரியாதா?'' என்று அவள் சர்வ சாதாரணமாக கூறினாள்.

அவள் சொன்னதை ஆச்சரியத்துடன் கேட்டிருந் தவன், தனது சந்தோஷத்தை கணவனுக்கே உரிய முறையில் வெளிப்படுத்த, அவளும் அதை மன நிறை வுடன் ஏற்றுக் கொண்டாள்.



காலை மூன்று மணிக்கு மேல்தான் இருவரும் உறங்க ஆரம்பித்து இருந்ததால், எப்போதும் போல ஐந்தரை மணிக்கு விழிப்பு வரவில்லை என்றாலும், ஏழு மணிக்கு ஆகாஷுக்கு விழிப்பு வந்து விட்டது. ஆனாலும் தன்னை அணைத்துக் கொண்டு உறங்கி கொண்டிருந்த மனைவியை, விலக்கி விட்டு விட்டு எழுந்து கொள்ள மனமில்லாமல் படுத்துக் கொண்டிருந்தான்.

நேற்று இருவரும் மனம் விட்டு பேசியதை அசை போட்டவன், புன்னகையோடு மனைவியின் மலர் முகத்தை நோக்க, எப்போதும் அவன் கண்களுக்கு

அழகாகத் தெரியும். அவளது முகம் இன்று மேலும் அழகாகத் தெரிய, அடக்க முடியாமல், ஆசையுடன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

''ப்ச்... ஆகாஷ்... திரும்ப ஆரம்பிக்காதடா... தூங்க விடு!'' என்று தூக்க கலக்கத்திலேயே கன்னத்தைத் துடைத்துக் கொண்டு அவள் உறக்கத்தைத் தொடர.

''ஹே! நான் ஆசையா முத்தம் கொடுத்தால், துடைச் சுட்டு தூங்கறயா நீ?'' என்று செல்லக் கோபம் கொண் டவன், தன் இதழ்களால் அவளது செவிமடலில் குறுகுறுப்பூட்டினான்.

''ஹேய்... என்ன செய்யறே? டேய்... விடுடா!'' என்று அவனிடம் இருந்து தன்னை விலக்கிக் கொண்டு எழுந்து அமர்ந்தவன் பார்வை கடிகாரத்தில் விழ, ''அச்சோ... ஏழு மணிக்கு மேல் ஆகிடுச்சா?'' என்று பதறியபடியே எழு முயன்றாள்.

அவளது கரம் பற்றி இழுத்து தன் மேல் சாய்த்துக் கொண்ட ஆகாஷ், ''இப்போ எதுக்கு இவளோ டென் ஷன் ஆகறே? இன்னைக்கு ஆபீஸ் போக போறயா என்ன?'' என்றான்.

''கண்டிப்பா போகணும்! நேற்றோட ரிப்போர்ட் எல்லாம் ஆர்கனைஸ் செஞ்சு கொடுக்கணும்!''

''ப்ரியா... இன்னைக்கு கண்டிப்பா போடணுமா?'' என்றவன் கண்களில் ''போகாதே!'' என்ற கெஞ்சல் தெரிய, அவனது தலையைச் செல்லமாக கலைத்து விளையாடியபடியே, ''கண்டிப்பா போகணும்! போயிட்டு சீக்கிரம் வர பார்க்கிறேன்!'' என்றவள் எழுமுன், அவளது கையைப் பற்றி நிறுத்திய ஆகாஷ்.

''சரி... கொஞ்சமா கவனிச்சுட்டு போ!'' என்றான், கண்களில் மையலுடன்!

''வேண்டாம் சாமி! இப்போ கொஞ்சமான்னு சொல்வே... அப்புறம் இன்னும் கொஞ்சம்னு சொல்வே! நான் வேலைக்கு போன மாதிரிதான்!'' என்று லாவகமாக அவனது கையை விலக்கி விட்டு குளியலறைக்கு சென்றவள், குளித்து விட்டு வந்ததும், ஆசையாய் அணைக்க வந்தவனை, வலுக்கட்டாயமாக குளிய லறைக்குள் தள்ளி விட்டு விட்டு, சமையல் அறைக்குள் வந்து காலை உணவை முடித்து, மேஜையில் வைத்த நேரம், வாயில் மணி ஒலித்தது.

''இந்த நேரத்தில் யாரு?'' என்று எண்ணியபடியே கதவைத் திறந்தவள், தன் பெற்றோர் நின்று கொண் டிருப்பதைக் கண்டதும், சந்தோஷத்துடன் வரவேற்றாள்.

''வாங்கம்மா... வாங்கப்பா... என்ன இது திடீர்னு. அதுவும் இவ்வளவு காலையில?'' என்று விசாரித்தாள்.

''இப்போ வந்தால்தான் உங்க ரெண்டு பேரையும் ஒன்றாக வீட்டில் பார்க்க முடியும்! இன்று ஆடி தொடங் குவது! அதான் உன்னை வீட்டுக்கு கூப்பிடணும் என்று வந்தோம்! நீ ஆபீஸ் முடிந்து சாயந்திரம் நம்ம வீட்டுக்கு வந்து விடு!'' என்று வசந்தி சொல்ல, ப்ரியாவும், அப்போதுதான் உடை மாற்றிக் கொண்டு வரவேற் பறைக்குள் வந்த ஆகாஷும், குழம்பி நின்றனர்.

''என்னடா அப்படி பார்க்கிறே? ஆடி மாசம் அம்மா வீட்டில் இருக்கிறதுதானே முறை!'' என்ற வசந்தி, ஆகாஷைக் கண்டதும், ''எப்படி இருக்கீங்க தம்பி?'' என்று முறையாக விசாரிக்க, ''நல்லா இருக்கேன்

ஆன்ட்டி! நீங்க இரண்டு பேரும் எப்படி இருக்கீங்க?'' என்று மாமனார்-மாமியார் இருவரையும் விசாரித்தான்.

''சொன்னது நினைவு இருக்கட்டும் பானு! சாயந்திரம் நம்ம வீட்டுக்கு வந்துடு!'' என்ற வசந்தி, மீண்டும் ஆகாஷிடம் தாங்கள் வந்த விவரத்தைச் சொல்லி விட்டு, தான் வாங்கி வந்திருந்த பூ, பழம், இனிப்புகளை மேஜை மேல் வைக்க, ப்ரியாவுக்கு இன்னும் அன்னை சொன்னது புரியவில்லை!

''என்னம்மா? என்ன விசேஷம்?'' என்று அவள் விசாரிக்க, ஆகாஷ் முத்துக்குமரனிடம் பேச ஆரம்பித்தான்.

''எதுவும் தெரியாது உனக்கு! ஆடி மாசம் எப்பவும் அம்மா வீட்டுக்கு வருவதுதான்! அதுதான் முறை!'' என்று வசந்தி சொல்ல, முத்துக்குமரனிடம் பேசிக் கொண்டிருந்தாலும், கவனம் முழுவதையும் மனைவியும் மாமியாரும் பேசுவதில் வைத்திருந்த ஆகாஷ், ப்ரியாவை பரிதாபமாக பார்த்தான்.

ப்ரியாவும் என்ன சொல்லி, அன்னையிடம் மறுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

அதை அறியாத வசந்தி, ''ஒரு மாசம் வீடு கலகலப்பா இருக்கப் போகுதுன்னு நினைக்கவே சந்தோஷமா இருக்கு!'' என்று தன் சந்தோஷத்தைப் பகிர, ப்ரியாவுக்கு தன் அன்னையின் சந்தோஷத்தைக் கெடுக்க மனம் வரவில்லை!

இவர்கள் இருவரும் வேலைக்கு கிளம்ப வேண்டும் என்று வசந்தியும் முத்துக்குமரனும் சீக்கிரம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட, ''ப்ரியா... இதெல்லாம் ரொம்ப கொடுமை! இப்ப போய் உன்னை கூட்டிட்டு

போறேன் என்று சொல்றாங்க! நீயும் எதுவும் சொல்ல மாட்டேங்கிறே?'' என்று புகார் வாசித்தான்.

ப்ரியா, ''நான் என்ன செய்யறது ஆகாஷ்! நான் வரேன் என்று அம்மா எவ்வளவு சந்தோஷமா பேசறாங்க. அதுவும் இதுதான் முறை என்று வேற சொல்றாங்க!'' என,

'ப்ச்... என்ன பெரிய முறை! உனக்கு கொஞ்சம்கூட ஃபீலிங்க்சே இல்லையாடி?'' என்று பரிதாபமாக சொன்னவனின் அருகில் வந்தவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டு, 'எனக்கும்தான் கஷ்டமா இருக்கு! ஆனால்... என்ன செய்யறது?'' என்றவள் குரலிலும் தவிப்பிருந்தது.

'ஹனிமூன் அது இது என்று ஆசை காட்டிட்டு இப்போ என்ன செய்யறதுன்னு கேட்கிறாயே? உனக்கே நியாயமா இருக்கா?''

''நியாயமா இல்லைதான்! என்ன செய்யறது? நீதான் சொல்லேன்!''

''நாம் ரெண்டு பேரும் ஓடிப் போயிடலாமா?''

''இந்த ஓடிப் போற ஐடியாவை நீ விடவே மாட்டியா?'' என்று கேலி செய்தாலும், அப்போது அவன் சொன்னதற்கும், இப்போது சொல்வதற்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணி அவளது முகத்தில் புன்னகை மலர,

''சிரிக்கறயா நீ? நீ சொல்லலைன்னா போ! நான் சொல்றேன், இதெல்லாம் அனுப்ப முடியாதுன்னு!'' என்று மாப்பிள்ளை கெத்து காட்டிட முயன்றவனை,

''நீ என்ன அனுப்பறது? நானே ஆபீஸ்ல இருந்து போயிருக்கறேன்!'' என்று அவள் உதட்டைச் சுழித்து

பழிப்பு காட்ட, சட்டென்று அவளது இதழில் முத்த மிட்டவன், சற்று நேரம் கழித்து விலகி, ''போயிடுவியா நீ?'' என்று கண்ணில் சவாலுடன் வினவினான்.

அவன் சற்று முன் தந்த இதழமுதம் மயக்கத்தைத் தவிர, ''எனக்கும் மனசில்லைதான்! ஆனால்...'' என்று அவள் இழுக்க,

''என்ன? ஆனால்... கீனால் என்று இழுத்துட்டு இருக்கே!'' என்று எரிச்சல் பட்டவனுக்கு, கைப்பேசியில் அண்ணனிடம் இருந்து அழைப்பு வரவும் அவளிடம் இருந்து விலகி பேச ஆரம்பித்தவன், பேசி முடிந்ததும் தன் மடிக் கணினியை எடுத்து வைத்து கொண்டு அமர்ந்தான்.

''ஆகாஷ்... இப்போ லேப்டாப் முன்னாடி உட்கார்ந் துட்டு என்ன செஞ்சுட்டு இருக்கே? வா சாப்பிட்டு கிளம்பலாம்!'' என்று ப்ரியா அழைத்தாள்.

''ம்ம்... ஒரே நாளில் மனைவியை ப்ரக்னன்ட் ஆக்கறது எப்படி என்று பார்த்துட்டு இருக்கேன்!''

தீவிரமான குரலில் சொன்னவனை, அவள் ''லூசாடா நீ!'' என்ற பார்வை பார்க்க, ''பாரு ப்ரியா இந்த அநியா யத்தை! அண்ணி ப்ரக்னன்டா இருக்கிறதால, ஆடி மாசம் அம்மா வீட்டுக்கு போக வேண்டிய அவசியம் இல்லையாம். சாஸ்திரத்துக்கு ரெண்டு நாள் போய் இருந்துட்டு வந்துடுவாங்களாம்! அதான்... நானும் ஏதாவது வழி இருக்கான்னு பார்க்கிறேன்!'' என்று சொன் னவன் அருகில் வந்து, அவன் தோளில் தட்டியவள்,

''ரொம்ப வழியுது! துடைச்சுட்டு வந்து சாப்பிடு! ஏற்கனவே டைம் ஆகிடுச்சு!'' என்று சாதாரணமாக சொன்

னாலும். அவளது கன்னம் சிவந்திருந்ததை ரசனையுடன் பார்த்து கொண்டே ஆகாஷ் எழுந்தான்.

''என் செல்ல ராட்சசி! உங்க வீட்டுக்கு போகாமல் இருக்க ஏதாவது வழி சொல்லுடி!'' என்று கொஞ்சியவன் கரம். அவளது இடையில் பதிந்து அவளை அருகில் இழுக்க, அவன் இதழ்களோ அவளது கழுத்து வளைவில் ஆசையுடன் பதிந்தன.

கணவனது ஸ்பரிசம், உடலோடு மனதையும் மயங்கச் செய்ய. தானாக மனைவியின் கரங்கள் கணவனின் கழுத்தை வளைத்தன.

இருவரும் தங்களை மறந்து நின்று கொண்டிருந்த நேரம். சுவர்க் கடிகாரம் பத்து மணி ஆனதை. அழகான ஒலி எழுப்பி அறிவித்தது.

அலுவலகம் செல்ல வேண்டிய அவசியம் உறைக்க, மனமின்றி கணவனிடம் இருந்து விலகிய ப்ரியா, ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த கணவனை, சீண்டும் பார்வையுடன் நோக்கி, ''நான் என்ன வழி சொல்றது? நீயேதான் சாமர்த்தியமா ஏதாவது கண்டு பிடிக்கணும்!'' என்று தோளைக் குலுக்க, ''கண்டுபிடிக் கிறேன்!'' என்று அவன் சவால் விட்டான்.

உணவை முடித்த பிறகு, அவள் வேலைக்கு கிளம் பும்போது கூட, ''ப்ரியா கண்டிப்பா நீ ஆபீசுக்கு போக ணுமா?'' என்று ஆகாஷ் இழுக்க, ''நீ உதை வாங்கப் போறே! நான் கிளம்பறேன்!'' என்று ப்ரியா கிளம்பி விட, ஆகாஷ், அவளை ஆடி மாதத்துக்கு அவளது தாய் வீட்டுக்கு அனுப்பாமல் இருக்க என்ன செய்வதென்று யோசிக்க ஆரம்பித்தான்.

* * *

மாலை சீக்கிரமே வேலையை முடித்து விட்டு தன் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த ப்ரியா. வாயிலில் ஆகாஷ் காத்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியத்தில் விழிகளை விரித்தாள்.

''ஹே... நீ எங்கே இங்கே? நான் இப்போ கிளம்பு வேன்னு உனக்கு எப்படி தெரியும்?''

''எனக்கு எல்லா இடத்திலும் ஆள் இருக்காங்க மேடம்!'' என்று பெருமிதமாக சொன்னவன், ''சரி... வா!'' என்று அவளது கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துப் போனான்.

அவன் கால் டாக்சியில் வந்திருப்பதைக் கண்டு, ''உன் பைக் எடுத்துட்டு வரலையா?'' என்று கேட்ட வளிடம், ''வா... வா... போகும்போது எல்லாம் சொல்றேன்!'' என்று அவளை அமர வைத்தவன், அவளருகில் வந்து அமர, ''எங்கே போறோம்?'' என்று வினவியவள், ''ஹே,,, இது என்ன பெட்டி?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தாள்.

''எங்கே போறோம்னு கேட்டே இல்ல? ஏர்போர்ட் போறோம்! அங்கே இருந்து ப்ளைட்ல பெங்களூரு போறோம்! பெங்களூருவில் இருந்து என் பிரண்ட் காரில் கூர்க் போறோம்! இந்தப் பெட்டியில் நம்ம ரெண்டு பேருக்கும் பத்து நாளுக்கான துணி இருக்கு!'' என்று ஆகாஷ் மடமடவென்று அவளது கேள்விகளுக்கு பதில் சொன்னதைக் கேட்டவள்,

''வாட்!?'' என்றாள்.

''என்ன வாட்? உன் ப்ளான் படி நாம கூர்குக்கு ஹனிமூன் போகிறோம்!

அவன் வெகு சாதாரணமாக சொல்ல, ''ஆகாஷ்? என்ன சொல்றே?'' என்று அவள் திகைத்தாள்.

''பின்னே... இந்த ஆடி மாச தள்ளுபடி கேள்வி பட்டிருக்கேன்! இதென்ன புருஷனையும் பொண்டாட்டியையும் தள்ளி வைக்கிறது? ஐ டோன்ட் லைக் இட்! அதான் உன்னை ஹனிமூனுக்கு தள்ளிட்டு போறேன்!''

''அடப்பாவி! பெரியவங்க பேச்சை கேட்காமல் இதென்ன?'' என்று அவள் அதட்ட,

''ப்ரியா... பெரியவங்க பேச்சை கேட்கிறதை விட, இப்போ நாம செய்யப் போறதில்தான் அவங்க பயங்கற ஹேப்பி ஆகப் போறாங்க பாரு!'' என்று நியாயம் பேசி குறும்புடன் கண் சிமிட்டியவன்,

''அவங்களுக்கு எல்லாம் தேங்க்ஸ் சொல்லணும் என்று சொல்லிட்டு இருந்தே இல்ல? அதான் இப்படி!'' என்று பெருமிதப் புன்னகை பூத்தான்.

''உனக்கு சாதகமா எல்லாம் செஞ்சுட்டு. இதில அவங்களுக்கு நன்றி காண்பிக்கறேன் என்று பெருமை வேறயா உனக்கு?'' என்ற ப்ரியா.

''பார்த்தியா? ஒரே நாளில் கணவன் என்ற அதிகாரத்தைக் காட்ட ஆரம்பிச்சுட்டே! என்கிட்டே கேட்கணும் என்று தோணலை இல்ல உனக்கு?'' என்று முகம் திருப்பியவளின் குரலில், வார்த்தைகளில் தென்பட்ட கோபம் ஒரு சதவீதம் கூட எட்டாமல் இருக்க, அவள் முகத்தைப் பற்றி தன் புறம் திருப்பியவன்.

''என் செல்ல ராட்சசி! இந்த முடிவை எடுக்க வைச்சவளே நீதான்! நீ உங்க வீட்டுக்கு போனதும், கூடவே

வந்து டோரா போட்டு, உங்க அம்மா வாயாலேயே 'பானு, நீ ஆகாஷோடு உன் வீட்டுக்கு கிளம்பு!' என்று சொல்ல வைக்கிற திட்டத்தில்தான் இருந்தேன்! இந்த திடீர் மாறுதலுக்கு காரணம் முழுக்க முழுக்க நீதான்!'' என்று அவன் அழுத்தமாகச் சொல்ல,

''நானா? நான் என்ன செஞ்சேன்?'' என்று அவள் விழி விரித்தாள்.

''உலக மகா நடிப்புடா... சாமி!' என்று கேலியாக சிலாகித்தவன், அவள் கையில் இருந்து கைப்பேசியை வாங்கி,

''இதில இருந்து ஒரு மேடம், எனக்கு காலையில் இருந்து, பத்து நிமிஷத்துக்கு ஒரு முறை 'ஐ லவ் யூ!' 'ஐ மிஸ் யூ' என்று மெசேஜ் அனுப்பிட்டே இருந்தாங்க! அது யாருன்னு உனக்கு தெரியுமா, ப்ரியா?'' என்று அப்பாவியாக விசாரித்தான்.

தன் சிவந்த முகத்தை கணவனிடம் இருந்து மறைக்காமல். அவனை நேருக்கு நேர் நோக்கிய ப்ரியா, ''நல்லா பாரு! அது பத்து நிமிஷத்துக்கு ஒரு முறை இல்ல எட்டு நிமிஷத்துக்கு ஒரு முறை!'' என்று சொல்லி விட்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அப்படி வா வழிக்கு!'' என்ற ஆகாஷ். ''இவ்வளவும் செஞ்சுட்டு, நான் உன்னை அபிப்ராயம் கேட்கலை என்று கோபம் வேறயா உனக்கு?'' என்று அவளைக் கேலி செய்தவன்.

''ப்ரியா... இப்ப கூட சொல்லு! உனக்கு விருப்பம் இல்லன்னா... இப்படியே உங்க வீட்டில் கொண்டு

போய் விடறேன்!'' என்று சொல்ல, அவனை முறைத்தவள்.

''அதெல்லாம் வேண்டாம்! நீ மட்டும் இப்போ வராமல் இருந்திருந்தால், நானே உன்னை கடத்த வந்திருப்பேன்!'' என்று வேகமாக சொல்லி விட்டாலும், பின் தான் சொன்னதை உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டு, அழகாய் முகம் சிவந்தாள்.

''ப்ரியா... நீ இப்படி அடிக்கடி அழகா முகம் சிவந்தேன்னு வை! என்னால் கூர்க் போற வரை காத்திருக்க முடியாது!'' கிறக்கமாக மொழிந்தவன், அவளது தோளைப் பற்றி மேலும் தன்னோடு இறுக்கிக் கொள்ள, ''ரொம்பத்தான்!'' என்றவள், ஓட்டுனரை கண்ணால் காட்டி, அவனிடம் இருந்து சற்று விலகி அமர்ந்தாள்.

''இருந்தாலும் ஆகாஷ்... நம்ம வீட்டில் எல்லாரும் தப்பா எடுத்துக்க மாட்டாங்களா? எங்க அம்மா வேற கொஞ்சம் இந்த சாஸ்திர சம்பிரதாயம் எல்லாம் பார்ப்பாங்க!''

கொஞ்சம் கவலையுடன் அவள் விசாரிக்க, ''கவலைப் படாதே ப்ரியா அம்மாகிட்ட அத்தையை சமாதானம் செய்ய சொல்லி இருக்கேன்!'' என்று அவன் ஆறுதலாக சொல்ல,

''அச்சச்சோ! ஆன்ட்டி கிட்ட என்ன சொன்னே?'' என்று அவள் அலற, ''இப்போ எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகறே? வீட்டில் யார்கிட்டயாவது சொல்லிட்டு தானே வரணும்! அதான் சொன்னேன்! அம்மாவும் வாழ்த்து சொல்லி அனுப்பிட்டாங்க!'' என்று சாதாரணமாகக் கூற,

''நடந்தது எல்லாத்தையும் சொல்லிட்டயா?'' என்று அவள் மேலும் கவலைப் பட, ''ச்சே ச்சே... நேற்று நைட் என்ன நடந்துச்சுன்னு சொல்லவே இல்ல ப்ரியா...!'' என்று சொல்லி விட்டு அவன் கண் சிமிட்ட,

''படவா! வாயைப் பாரு! ஒரே நாளில் பேட் பாய் ஆகிட்டே!''

மிரட்டலாக சொல்ல நினைத்தது. குழைவாகவே வர, அதை ஈடு கட்டும் வகையில், அவன் தொடையில் செல்லமாக கிள்ளினாள், அவன் மனம் கவர்ந்தவள்!

''ஸ்... ஆ... இரு இரு... இதுக்கெல்லாம் சேர்த்து வைச்சு உனக்கு கொடுக்கிறேன்!'' என்றவன் குரலில் உல்லாசம் மிகுவுற்று இருக்க, அவன் என்ன கொடுப்பான் என்பதை அறிந்ததால், ப்ரியாவின் இதழ்க் கடையில் ஒரு ரகசியப் புன்னகை மலர்ந்தது!

திருமணத்தில் விருப்பமும் நம்பிக்கையும் இல்லா திருந்த இவ்விருவருக்கும், நல்ல புரிதல் இருந்தால் திருமணம் ஓர் உன்னத பந்தம் என்பதை, அவர்களது காதல் உணர்த்தி விட்டது.

தங்கள் காதல் தந்த நம்பிக்கையோடு, இருவரும் தங்கள் இல்வாழ்க்கைப் பயணத்தை மகிழ்ச்சியோடு துவங்கி விட்டனர். அந்த நம்பிக்கையும், மகிழ்ச்சியும், என்றென்றும் அவர்கள் வாழ்வில் நிலைத்திருக்க, ஆண்டவன் அருள் புரியட்டும்!